வரு.74 இல. 47 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI தினகரன் වාරමන්ජරි

2022 நவம்பர் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை November 20 Sunday, 2022

24 பக்கங்கள் 100/-







05 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவதே காலத்தின் தேவை!



08 உலகத் தலைவராகிறார் பிரதமர் நரேந்திர மோடி



09 இலங்கையின் எதிர்கால இருப்பை உறுதிப்படுத்தும் பட்ஜட்!



FIFA உலகக் கிண்ணம் ஆரம்பம் 24


# காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மாகாண மட்டத்தில் 08 குழுக்கள்

## வடக்கின் காணி, வீடு, சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

**வவுனியாவில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு**



காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாகாண மட்டத்தில் 08 குழுக்களை நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதன்படி வடக்கு மற்றும் தெற்கில் நிலவும் காணிப்பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்படுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (19) முற்பகல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றதுடன், அந்த மாவட்டங்களின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

மாகாணத்தில் காணி, வீடு, சுகாதாரம், நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகள் தொடர்பில் இங்குவிரிவாக கலந்துரையாடப்பட்டது.

வடமாகாணத்தில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக வடமாகாணத்தின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கில் இதுவரையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேவையான தீர்வுகளை வழங்குவதற்கு அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

செட்டிக்குளம் பகுதியில் 1994 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு இதுவரை காணிகள் வழங்கப்படாமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இங்கு ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார். 06

---

**இலங்கை பணிப் பெண்கள் ஓமானில் விற்பனை;**

## உண்மை நிலையை கண்டறிய விசேட குழு ஓமான் விரைவு

**சபையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



இலங்கை பணிப் பெண்கள் ஓமானில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று ஓமானுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினையாக கருதப்படும் இவ்விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக எந்தவித 06

---

## சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை எந்த மொழியில்?

**நாளை சபையில் இறுதித் தீர்மானம் வெளியிடப்படும்**




*லோரன்ஸ் செல்வநாயகம்*

சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென்ற தீர்மானம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக முன்னெடுக்கப்படும் தீர்மானத்தை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நாளை பாராளுமன்றத்தில் அறிவிப்பாரென சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார். 06

---

**ஜனவரி முதல் இன்று வரை 54,083 நோயாளர் பதிவு**

## நாட்டில் டெங்கு நோய் பரவல் தீவிரமடைகிறது



**25 MOH பிரிவுகள் அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம்**

2022 ஜனவரி முதல் இன்று வரை டெங்கு நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 54,083 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டிலுள்ள 25 சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசங்கள், அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தகவல்களில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலிருந்து 06

---

**15 வயதை எட்டியதும் கட்டாயம்;**

## உரிய வயதில் NIC பெறாவிடின் அபராதம்



**ஒருவருட அவகாசம்; மீறினால் 2,500 தண்டம்**

உரிய வயது பூர்த்தியடைந்த பின்னரும் தேசிய அடையாள அட்டையை பெற்றுகொள்ளாத விண்ணப்பதாரர்களுக்கு 2,500 ரூபா அபராதம் விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆட்பதிவு திணைக்கள சட்டத்தின் கீழ் சில விடயதானங்களுக்கான அபராதத் தொகை திருத்தப் பட்டுள்ளதையடுத்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, 15 வயதை பூர்த்தி செய்த தினத்திலிருந்து 06

---

## பேருவளையில் இன்று முப்பெரும் விழா



*பேருவளை விசேட நிருபர்*

பேருவளை, சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் ஏற்பாட்டிலான முப்பெரும் விழா இன்று (20) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம். ஜாபிர் ஹாஜியார் மண்டபத்தில் நடைபெறும்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், சவூதி அரேபிய தூதரகத் தலைமை அதிகாரி கலாநிதி அஸ் ஸெய்யித் காலித் அல் மக்கி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். 06

---

**வடக்கு, கிழக்கு விசேட செயலணிக்கு வரவேற்பு**

## நீண்டகால பிரச்சினைகளை தீர்க்க அரசுடன் உறுதுணையாக இருப்போம்

**வவுனியாவில் ஜனாதிபதி முன்பாக சுமந்திரன் உரை**

*வவுனியா விசேட நிருபர்*
*கே.வசந்தரூபன்*



நீண்டகால பிரச்சினையை தீர்க்க நாம் உறுதுணையாக இருப்போமென ஜனாதிபதி முன்னிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்தி விசேட பிரிவு அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், 06

---

## வியட்நாமிலுள்ள இலங்கை அகதிகள் இருவர் தற்கொலை முயற்சி

வியட்நாமில் அகதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையரில் இருவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவரும் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த 06

---

**மோட்டார் சைக்கிள் பந்தய விபத்து;**

## ஸ்தலத்தில் இரு இளைஞர்கள் பலி



பண்டாரகம மொரன்துடுவயில் மோட்டார் சைக்கிள் பந்தயம் சென்றபோது இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் 06

---

## பாகிஸ்தானில் வான் விபத்து; ஒரே குடும்பத்தை சேர்ந்த 20 பேர் பலி



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நிகழ்ந்த வீதி விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 20 பேர் உயிரிழந்துள்ளனர். 06

---

## எங்கள் கருத்து...

### நெருக்கடியை மென்மேலும் சிக்கலாக்கும் முயற்சிகள்!

நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் இன்னுமே ஓயவில்லை. ஆனால் அந்த ஆர்ப்பாட்டங்களில் அன்றைய தீவிரம் இன்றில்லை என்பது அனைவருக்குமே புரிந்துள்ள உண்மை! இன்றைய ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்போரின் எண்ணிக்கையைப் பார்க்கின்ற எவருக்குமே அந்த உண்மை புரிந்து விடும்.

ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் அரசுக்கு எதிரான சக்திகள் உள்ளனவென்பது மக்களுக்குப் புரியாத ஒன்றல்ல!

எதிரணியிலுள்ள ஒருசில அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி, அக்கட்சிகளுக்குச் சார்பான சில தொழிற்சங்க முக்கியஸ்தர்களும் ஆர்ப்பாட்டங்களை வழிநடத்துவது தெளிவாகவே தெரிகின்றது.

அத்தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களான சாதாரண ஊழியர்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் சுவாரஸ்யம் இல்லாத விடயங்களாக இருக்கலாம். ஆனால் அத்தொழிற்சங்கங்களின் தலைவர்கள் போராட்டங்களைக் கைவிடுவதாக இல்லை. அத்தலைவர்களுக்கு அரசியல் பதவி குறித்த கனவுகள் உள்ளன. எதிர்காலத்தில் எதிர்க்கட்சிக்கு அதிகாரத்துக்கு வருகின்ற சந்தர்ப்பம் ஏற்படுமானால், தங்களுக்கும் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மற்றும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கலாமென அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் கனவு காண்கின்றனர்.

அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு எதிரணி கடும் பிரயத்தனப்படுகின்றது. அதற்கான துரும்பாக ஆர்ப்பாட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எதிர்கால பதவிகளை எதிர்பார்த்து ஒருசில தொழிற்சங்கங்களின் தலைவர்கள் ஆர்ப்பாட்டத்தின் முன்னணியில் நின்றபடி கோஷமிடுகின்றனர். 06

---




நூற்றுக்கு 40 முதல் 80 வீதவட்டி;
திலினி பாணியில் மேலும் ஒருவர் 2,000 கோடி மோசடி 06



விமான பயணச்சீட்டை முன்கூட்டியே எடுக்கவும்;
ஐயப்பன் பக்தர்களுக்கு பாபுசர்மா வேண்டுகோள் 06


---

## பெருந்தோட்ட மாணவர்களின் இடைவிலகலை தடுக்க ஏற்பாடு

**பொருளாதார சிந்தனைக் குழுவினால் புதிய யோசனை முன்வைப்பு**



பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த மாணவர்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார நெருக்கடியை தடுக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. 06

---

**சில ரயில் பாதைகள்,ரயில்கள் பழுதடைந்த நிலையில்;**

## பதினொரு மாதங்களில் 44 தடம்புரள்வுகள்



**நாளை முதல் கரையோர சேவைகள் வழமைக்கு**

இவ்வாண்டின் கடந்த 11 மாதங்களில் மட்டும் இதுவரை 44 ரயில்கள் தடம் புரண்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தில் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் இரண்டு ரயில்கள் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளன. பொத்துஹெர ரயில் நிலையமருகே 06

---

## குண்டும் குழியும், குளமுமாக மட்டு.-திருமலை பிரதான வீதி



**இலகுவாக செல்லக்கூடிய பாதை அவல நிலையில்**

*காரைதீவு குறூப் நிருபர்*

மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியின் அவலநிலை தொடர்பில் பொதுமக்கள் தங்கள் கவலையை வெ ளிப்படுத்தியுள்ளனர். தற்போது மழைகாலம் என்பதால் வாகரை பிரதான வீதி நீர் நிறைந்து குண்டும் குழியும், குளமுமாக 06

# பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 97ஆவது பிறந்த தினம்

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 97ஆவது பிறந்த தினம் கொழும்பிலுள்ள சத்தியசாயி மத்திய நிலையத்தில் கொண்டாடப்படவுள்ளது. இது ஒரு தொடர் நிகழ்வாக இடம்பெறவிருக்கின்றது.

இது தொடர்பான விசேட நிகழ்வு இம்மாதம் 23ஆம் திகதி காலை 5,00 மணி முதல் மாலை 8.00 மணிவரையும் மாலை நிகழ்வுகள் 6.00 மணிமுதல் 7.30 வரையும் கொழும்பு 07, சாயி மந்திரிலும் மற்றும் இல. 23 ருத்ரா மாவத்தை, கொழும்பு 06 இல் அமைந்துள்ள சிவானந்த நிலையத்தில் காலை 5.00 மணிமுதல் 6.00 மணிவரையும் மற்றும் மதியம் 11.00 மணிமுதல் 12.30 வரையும் இடம்பெறும்.


இது தொடர்பான பொதுநிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பு 06 இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பி.ப 4.30 முதல் 8.00மணிவரை இடம்பெறும்.




சாயி பாபாவின் 97ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தால் கண்சிகிச்சை முகாமொன்று பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகனின் தலைமையில் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட 306 B 1மாவட்ட ஆளுநர் டாக்டர். அனோமா விஜேசிங்க, முன்னாள் ஆளுநர் லக்ஷ்மன் விஜேசிங்க மங்கள விளக்கேற்றுவதையும் அவர்களுக்கான சீரடி சாயி ஆங்கில நூலை வழங்கி வைப்பதையும் கண் பரிசோதனையின் பின் எஸ். என். உதயநாயகம் மற்றும் சர்வகுணதேவி சண்முகநான் ஆகியோர் கண்ணாடி வழங்குவதையும் படங்களில் காணலாம்



# பற்றுதலே துன்பத்திற்குக் காரணம்



## எதிர்வரும் 23ம் திகதி ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஜனன தினம்

உலகில் நித்தியமான செல்வம் எது? அன்பில்லாமல் நீங்கள் எது செய்தாலும் அது வீண். எந்த உயர் பதவி வகித்தும் எவ்வளவோ படித்தும் எத்தனையோ செல்வங்களைச் சேர்த்தும் என்ன பயன்? இதயத்தில் இரக்கம் இன்றி வரண்டிருந்தால், அன்பின் மூலமாகத்தான் அன்பைச் சம்பாதிக்க முடியும். அன்பைவிட உலகில் விலை உயர்ந்தது வேறு எதுவும் கிடையாது.

மனித குலத்திற்கு அணி செய்வது கல்வியே. கல்வியே புகழ், செல்வம், சுகம், இந்த இளமை என்பது இடையில் வந்து போகும் மேகத்திற்கு ஒப்பானதாகும். இந்த இளமைப் பருவத்தை வீணடிக்காமல் தாய், தந்தையர் மற்றும் பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துங்கள். இறைவன் அருள் மட்டும் இருக்குமானால் உன்னால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை.

ஒவ்வொரு செயலுக்கும் பலன் நிச்சயம் ஏற்படும், என்றாலும் காலம் தான் வேறுபடுகிறது. விளைவுகள் இல்லை என்பது தவறு. ஒவ்வொரு செயலுக்கும் நிச்சயம் பிரதி விளைவு உண்டு. சிலவற்றுக்கு உடனே கிடைக்கிறது. மற்றவைக்கு சில காலம் காத்திருக்க வேண்டிவருகிறது. அகங்காரம் என்பது அரக்க குணம். பதவியாலும் பணத்தாலும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் அகங்காரத்தால் தம்மை மறந்து செயல்படுகிறார்கள். அகங்காரம் மனிதனை இழி நிலைக்குத் தள்ளிவிடும். நல்லதையும் கெட்டதையும் நீ உன்னுடன் சுமந்து செல்கிறாய். ஆகவே நீ நல்லதையே சம்பாதிக்க வேண்டும்.

உலகிலேயே சிறந்த அறுவைச் சிகிச்சை வைத்தியம் அளிக்கக் கூடிய அனைத்து வசதிகளும் நிறைந்த அதிவிஷேச மருத்துவமனைகள் புட்டபர்த்தியிலும், பெங்களூரிலும் உண்டு. இந்தியாவில் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வைத்தியர்கள் இலவசமாக சிகிச்சை செய்கின்றனர். எல்லோருக்கும் யாவும் இலவசம்.

இன்று உலகம் முழுவதுமே பயத்தினால் திகைத்துப் போயிருக்கின்றது. வீட்டிலும் சரி, வீதியிலும் சரி, அன்றிப் புகைவண்டி, ஊர்தி, ஆகாய விமானம் ஆகியவற்றிலும் பயணம் செய்யும் போது மக்கள் பயத்தினால் பீதியுற்றிருக்கின்றார்கள். எங்கும் உன்னைச் சுற்றி இருப்பவர் கடவுள் தான். அப்படிப்பட்ட கடவுளுடன் நட்பைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அவர் எல்லாப் பிரச்சினையும் தீர்த்து வைப்பார். உங்களிடம் சுயநம்பிக்கை இருந்தால் பிறர் கூறுவதால் நீங்கள் பாதிக்கப்பட மாட்டீர்கள். சுயநம்பிக்கை இல்லாதவன் தன்னைச் சுற்றி என்ன நடந்தாலும் அதனால் பாதிக்கப்படுவான். பற்றுதலே துன்பத்திற்குக் காரணம். இத்தகைய போதனைகளை கலியுக அவதாரம் ஸ்ரீசத்திய சாயிபாபா உலக மக்களுக்கு அருளியிருக்கிறார்.

சுவாமிநாதன் தர்மசீலம் JP






இலங்கை சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றம் நடத்திய வித்தக விழா 2022 உம் 54 வது ‘நீதி முரசு’ வெளியீடும் அண்மையில் சட்டக்கல்லூரி பிரதான மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. உயர் நீதிமன்ற நீதியரசரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சி. துரைராஜா பிரதம விருந்தினராகவும், சட்டத்தரணி ஜயந்தி வினோதன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் சட்டக்கல்லூரி தலைவர் கலாநிதி அதுல பத்திநாயக்க, ஜனாதிபதி சட்டத்தரணிகளான கனக ஈஸ்வரன், புவிதரன் மற்றும் திருமதி ராஜ குலேந்திரா உட்பட பலர் கலந்து கொண்டனர். சிரேஷ்ட சட்டத்தரணி கலாபூஷணம் ரஷீத் எம். இம்தியாஸ் சிறப்பு அதிதியாக பங்குபற்றி ‘நீதி முரசு’ இதழை ஆய்வு செய்தார். நிகழ்வின் சில படங்களை இங்கு காணலாம்.











மணவை அசோகனின் 60ஆவது பிறந்தநாள் மற்றும் அவரது மனைவியின் 50 ஆவது பிறந்த நாள் வைபவம் மட்டக்குளி அங்லோ கிராண்ட் மஹாலில் கடந்த வியாழனன்று நடைபெற்றது. முன்னாள் அமைச்சர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், இராதாகிருஷ்ணன், பிரபா கணேசன், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் கலைச்செல்வன் ரவூப், முனைவர் சதிஷ்குமார், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், உட்பட இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய முன்னாள் தூதுவர் எனப் பலரும் கலந்து கொண்டு மணவை அசோகன் தம்பதியினரை வாழ்த்தினர்.

அஷ்ரப் ஏ சமத்

# உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் பங்கேற்க ஆர்வம்காட்டும் இலங்கை தொழில்முனைவோர்







ஒன்பதாம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு ஜனவரி 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் இலங்கையர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் இலங்கைக்கு குறுகிய கால விஜயம் மேற்கொண்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் செயலாளர்களைச் சந்தித்தார். அயல்நாடுகளில் உள்ள சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோரின் முதலீட்டைப் பெற்று மலையகம் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொழில் துவங்க ஆலோசனை செய்தார்.

இலங்கையில் தொழில் துவங்க ஆர்வமுள்ளவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு தொழில் கண்காட்சி போன்றவை மூலம் வாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளது. இந்நிகழ்வில் இலங்கை வர்த்தக சங்கம், யாழ்ப்பாண வர்த்தக சங்கம் மற்றும் கொழும்பில் உள்ள தமிழ் தொழிலதிபர்கள் கலந்து கொள்ள ஆர்வம் தெரிவித்துள்ளனர். 60 நாடுகளைச் சேர்ந்த 1500பேரும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 3500 க்கும் மேற்பட்டவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர்.


இந்நிகழ்வில் தென்னிந்திய திரைத்துறை சார்ந்தோர் பங்கேற்கும் 15 ஆம் எடிசன் திரை விருதுகள் போன்ற நிகழ்வுகளும் நடைபெற உள்ளன. இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளை சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் மாணவர்களின் ஆவணப்படங்கள் திரையிடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப் படங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (22.11.2022) பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் திரையிடப்பட உள்ளன. இந்த ஆவணப்பட விழாவில் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகின்ற பதினான்கு ஆவணப்படங்கள் திரையிடப்படுகின்றன. இந்த ஆவணப்பட விழாவில் ஆனையிறவு உப்பளத்தின் தற்போதைய நிலையைச் சொல்லும் ‘கடல்விளை அமுதம்’, மலையகக் கிராமமொன்றின் விளையாட்டு மைதானத் தேவையைப் பற்றிப் பேசும் ‘மைதானம்’, நீர்வேலி வாழை உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கத்தின் செயற்பாடுகள் பற்றிப் பேசும் ‘வாழைக்குலைச் சங்கம்’, சூழல் மாசடைவதை ஏதோ ஒரு வகையில் குறைக்கும் வண்ணம் பழமையை வழமைக்கு கொண்டுவரும் சிறிய முயற்சி பற்றிப் பேசும் ‘மிதியுந்து’, சிற்பக்கலையில் அருகி வரும் உளிப்பயன்பாடு மற்றும் அதிகரித்து வரும் இயந்திரங்களின் பயன்பாடு பற்றிப் பேசும் ‘உளி தொடாக்கலை’, வழக்கொழிந்து போயிருக்கும் சூத்திரக் கிணறு நீர்ப்பாசன முறை பற்றிப் பேசும் ‘அழிவடைந்து போன பழமை’, ஆழக்கடலின் ஆபத்து அறியாது அதில் நீராடச்சென்று மரணித்துப்போன மூன்று சகோதரர்களின் கதை சொல்லும் ‘செம்மலையின் கண்ணீர்’, மரபு ரீதியான கால்நடை வளர்ப்பு மூலமான தற்கால தன்னிறைவுப் பொருளாதாரம் நோக்கிய நகர்வு பற்றிப் பேசும் ‘வன்னியின் ஆவுடையூர்’, பலவர்ண ‘பற்றிக்’ உள்ளூர் உற்பத்தி பற்றிப் பேசும் ‘வானவில்’, நந்திக் கடல் மீன்பிடியின் தற்போதைய நிலை பற்றிப் பேசும் ‘நந்திக்கடல் மீன்பிடி’, மலையகப் பெண்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் வாழ்வியற் சிக்கல்களைச் சொல்லும் ‘அம்மா’, வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக இருந்து இன்று சிதைவடைந்திருக்கும் கீரிமலை வெளவால் புறாக்குகையின் கதைசொல்லும் ‘மறைந்திருக்கும் தொன்மம்’, மாற்றுத்திறனாளிக் கலைஞர் ஒருவரின் கலைத்துறைப் பயணம் பற்றிப் பேசும் ‘இருளொளி’, தமிழர்களின் பாரம்பரிய இயந்திரப் பொறிமுறை பற்றிப் பேசும் ‘தூய மரச்செக்கு எண்ணெய்’ ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்பட உள்ளன.

## சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத்தின் ஏற்பாட்டில்

# 41வது வருட மீலாதுன் நபி விழா இன்று




வரலாற்று பிரசித்தி பெற்ற பேருவளை, சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் ஏற்பாட்டிலான முப்பெரும் விழா இன்று 20.11.2022 ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம் ஜாபிர் ஹாஜியார் மண்டபத்தில் நடைபெறும். சீனன் கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் நிகழ்வுக்கு தலைமை வகிப்பார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் அனுசரணையுடன் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் சீனன்கோட்டை குர்ஆன் மத்ரஸாக்களுக்கிடையிலான சன்மார்க்க போட்டிகளுடனான மீலாதுன் நபி விழா மற்றும் சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசலை, சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை), சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலை மற்றும் கல்லூரிகளில் இருந்து தேசிய பரீட்சைகளில் திறமைச் சித்தி பெற்றவர்கள், தேசிய ரீதியில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்த சீனன்கோட்டை மாணவ, மாணவிகள் 15வது வருடமாகவும் இவ் விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக வாலிபர் ஹழரா ஜமாஅத் தலைவர் பொறியியலாளர் இமாம் ஹஸன் முர்ஸி தெரிவித்தார்.

அத்தோடு சீனன்கோட்டை பள்ளிச் சங்க உபதலைவரும் களுத்துறை நீதிமன்றத்தில் சட்டத்துறையில் 50 வருடங்களை பூர்த்தி செய்தவருமான சிரேஷ்ட சட்டத்தரணி எம். ஸீ.எம் ஹம்ஸா, உப தலைவர் ஏ.ஆர். எம். ஸுலைமான் ஹாஜியார், பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் மற்றும் சீனன்கோட்டையைச் சேர்ந்த டாக்டர் அல்தாப் பாரூக், (எம்.பீ.பீ.எஸ்), டாக்டர் மிஷ்கா நிஸ்வர் (எம்.பீ.பீ.எஸ்), டாக்டர் ஸலாமத் ஸம்ஹா ஜெஸீல் (எம்.பீ.பீ.எஸ்), டாக்டர் பர்வின் பாரூக் (பீ.யூ.எம்.எஸ்) ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்கத் தலைவருமான மர்ஜான் பளீல், சவுதி அரேபிய தூதரகத் தலைமை அதிகாரி கலாநிதி அஸ் ஸெய்யித் காலித் அல் மக்கி ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், புத்தளம் விருதோடை அஸீஸிய்யா அரபுக் கல்லூரி ஸ்தாபகர் அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா, பலஸ்தீன முன்னாள் இலங்கைத் தூதுவர் பௌஸான் அன்வர், தரீக்காக்கள் உயர் கவுன்சில் தலைவர் அஸ் ஸெய்யித் நகீப் அலவி மௌலானா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி முஹம்மத் இக்ராம் (அல் பாஸி) சிறப்புச் பேச்சாளர்களாகவும் கலந்து கொள்வர்.

சதாத்மார்கள், உலமாக்கள், பள்ளிச்சங்க உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், அரபுக் கல்லூரி மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களின் அதிபர்கள், அரசியல்வாதிகள் உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவினை முன்னிட்டு சீனன் கோட்டை அல் ஹுமைஸரா பாடசாலை வளாகம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

நேற்று முன்தினம் 18ஆம் திகதியும், நேற்று 19ஆம் திகதி சனிக்கிழமையும் சீனன்கோட்டை குர்ஆன் மத்ரஸாக்களுக்கிடையில் சன்மார்க்க அறிவுப் போட்டிகள் அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையிலும் சீனன் கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பாஸிய்யா மண்டபத்திலும் நடைபெற்றன. அல் குர்ஆன் மனனம், கிராஅத், கஸீதா, இறைதூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பற்றிய பேச்சு, தரீக்கா பற்றிய பேச்சு, கேள்வி பதில் உட்பட பல்வேறு போட்டிகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பேருவளை பி.எம். முக்தார்

## விழாவின் பிரதம அதிதிகள்


மர்ஜான் பளீல் எம்.பி


கலாநிதி
அஸ்ஸெய்யித் காலித் அல்மக்கீ
(சவுதி அரேபிய தூதரகம்)

## விழாவின் கௌரவ அதிதிகள்


**அஸ்ஸெய்யித்**
**அப்துல் அஸீஸ் மௌலானா**
புத்தளம் அஸீஸியா அரபுக்கல்லூரி
ஸ்தாபகர்


**அஸ்ஸெய்யித்**
**நகீப் அலவி மௌலானா**
தரீக்காக்கள் உயர் கவுன்ஸில்
தலைவர்


**பவ்ஸான் அன்வர்**
முன்னாள் பலஸ்தீன தூதுவர்

## கௌரவிக்கப்படவுள்ள பிரமுகர்கள்


தினகரன், தினகரன் வாரமஞ்சரி
பிரதம ஆசிரியர்
**தே.செந்தில் வேலவர்**


சட்டத்துரையில் 50 வருடங்களைப்
பூர்த்தி செய்துள்ள சிரேஷ்ட
சட்டத்தரணி
**எம்.ஸீ.எம். ஹம்ஸா**


சீனன்கோட்டை பள்ளிச் சங்க
உப தலைவர்
**ஏ.ஆர்.எம். ஸுலைமான்**


சீனன் கோட்டை பள்ளிச் சங்க
இணைச் செயலாளர்
**எம்.எம்.எம். ஷிஹாப்**


2004ஆம் ஆண்டின் மீலாதுன்
நபி விழாவில் மர்ஹூம்
தேசபந்து நவ்பல்
எஸ்.ஜாபிர் பரிசு வழங்குவதையும்
அபுல் ஹஸன் மாஸ்டர் அருகில்
நிற்பதையும் படத்தில் காணலாம்.




**தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது**
**விமான பராமரிப்புக்கான அடிப்படை கற்கை (EASA பகுதி 66 B1.1/B2)**

**இப்போதே பதிவு செய்யுங்கள்!**

**கால அளவு: 2.5 ஆண்டுகள்**

**நுழைவிற்கான தகமைகள்**

- க.பொ.த சா/தரத்தில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் பாடங்களில் ‘C’ சித்தி உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த உ/தரத்தில் பொது ஆங்கிலம் தவிர்த்து கணிதம் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பிரிவுகளில் 2 S சித்தி அடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த உ/தரத்தில் கணிதம் அல்லது விஞ்ஞான பிரிவில் முடித்தவர்களுக்கு பௌதிகவியல் எளிய தேர்ச்சி (S) கட்டாயம்
- விமானப் பராமரிப்பு வகை A1 இல் அடிப்படைப் படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*இந்தப் பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.


மேலும் விவரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்: (+94) 71 021 2567 training@srilankan.com srilankanaviationcollege.com

விமானப் பராமரிப்புக்கான எங்கள் அடிப்படைப் பாடநெறி இவர்களால் அங்கீகரிக்கப்பட்டது:
EASA

ஒரு சிறந்த பிரசாதம்

SriLankan Training
SriLankan Aviation COLLEGE

# சாயி பிரசாந்தி நிலையம் ஒரு கைலாயம்



"ஒரு தம்ளர் தண்ணீருக்கு எந்த மதிப்பும் கிடையாது. ஆனால் அதையே பத்து தம்ளர் பாலுடன் சேர்த்து விட்டால் அதற்கு மதிப்பு வந்துவிடுகிறது. அது பாலாகவே கருதப்படுகிறது. அதற்கு மாறாக ஒரு தம்ளர் பாலை பத்து தம்ளர் தண்ணீரில் விட்டுவிடுங்கள். அதற்கு உள்ள மதிப்பும் போய்விடுகிறது. "பாலா இது? வெறும் தண்ணீர்" என்று இகழ்ந்து அதைத் தூரக் கொட்டிவிடுவார்கள். ஆகவே நாம் நாடும் சாயி சத்சங்கம் நம்மைவிட உயர்ந்ததாக உண்மையான சத்சங்கமாக அமையவேண்டும்." அப்படிக் கூறியவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா. இந்த உவமையானது உண்மை. பகவான் சமாதிநிலையில் வாழ்ந்து வந்தாலும், அவர் வாழ்ந்து வீற்றிருக்கும் பிரசாந்தி நிலையம் மட்டுமே எமக்கு ஒரு கைலாயம்.

நாம் வாழ்ந்த காலத்தில் தோன்றிய, கண்கண்ட ஒரு அவதார சித்தர், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா. இவரது 97வது ஜனனதினம் நவம்பர் 23ம் திகதி, புதன் கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது. மக்களை நல்வழிப்படுத்த உலகில் அவ்வப்போது ஞானிகளும், அவதார புருஷர்களும், சித்தர்களும், மகான்களும் தோன்றுவதுண்டு. மானிட உருவில் வருவார்கள். இவர்கள் தங்களது பிறப்பின் ரகசியம்! எங்கே? எப்போது? தோன்றுவது என்பது மட்டுமல்ல, தங்களது வாழ்வின் இறுதி நாளையும் அறிந்து வைத்திருப்பார்கள். தாங்கள் அவதரித்த நோக்கம் நிறைவேறியதுடன் மீண்டும் தாங்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த இடத்துக்கு மீண்டும் சென்று விடுவதுண்டு. பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் மகா சமாதிக்குப்பின், இன்று சீரடி சாயி பாபாவின் எழுச்சியைப் பார்க்கும் போது, அதுகூட உண்மையாக இருக்கலாம்.

சீரடி சாயி பாபாவின் மறு அவதாரம் ஸ்ரீ சத்ய சாயி பாபா. 3.9.1949 சென்னை கிண்டியில் சீரடி சாயி பாபாவின் கருங்கல் சிலையை பிரதிட்சை செய்துவிட்டு, "நான் இந்த சிலைக்கு உயிரோட்டம் கொடுக்கிறேன்" என்று தனது கைகளை தூக்கியபோது, அந்த சிலை மேலே எழுந்தது. அதுமட்டுமல்ல தனது காலை சந்தனக் குழம்பில் நனைத்து, "இதோ சீரடி சாயி பாபாவின் பாதங்கள்" என்று கூறி, தரையிலிருந்த துணியில் பதித்தபோது, பகவானின் இளவயதின் சிறிய கால் தடங்களுக்குப் பதிலாக அந்தத் துணியில் பெரியதான இரண்டு கால் தடங்கள் பதிந்திருந்தன. அதை இன்றும் கிண்டி சீரடி சாயி கோயிலில் பார்க்கலாம். இது சீரடிக்கும் பர்த்திக்கும் உள்ள ஆத்ம பாலம்.

கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம், சாயி சேவையாக வைத்தியசாலைகளுக்கும், பாடசாலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுண்டு. இங்கு செய்யப்படும் சேவைகள் சகோதரத்துவத்தை எற்படுத்தும். அதனால்தான் யாழ் பூநகரி வைத்திய சாலைக்கு வழங்கிய தண்ணீர் திட்டம், வத்தளை ஹெந்தலை கந்தானை வைத்தியசாலைகளுக்கு வழங்கிய சத்திர சிகிச்சை நாற்காலிகள் மற்றும் அறுவை சிகிச்சைக்கான கட்டில்கள், கட்டில் விரிப்புகள் தலையணை உறைகள் மருத்துவ உபகரணங்கள் என்பனவற்றை ஒரு சாயி சேவையாக செய்யமுடிந்தது. அதுபோன்று பல பாடசாலைகளுக்கும் மற்றும் கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு உதவிகளும் செய்ய முடிந்துள்ளது. மகரகம புற்றுநோயாளர்களுக்கும், ஹெந்தலை தொழுநோயாளர்களுக்கும் உதவிகள், அத்துடன் பிரித்திபுர ஆதரவற்ற குழந்தைகளுக்கு அன்னதானங்களும் தன்னலமற்ற சேவையாக செய்யப்படுகின்றது. இந்த வருடம் பகவானின் 97வது பிறந்த நாளை முன்னிட்டு, கடந்த வாரம் சாயிநிலையத்தில் வைத்து 100 பேருக்கு இலவச கண் சிகிச்சை செய்யப்பட்டு, 97 பேருக்கு கண்ணாடி வழங்கப்பட்டது. நவம்பர் 22ம் திகதியன்று காலை, கொழும்பு வடக்கு, மகா வித்தியாலய மாவத்தையிலுள்ள, கொழும்பு மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபரின் வேண்டுகோளின்படி, பாடசாலை மண்டபமொன்று புதுப்பிக்கப்பட்டு கையளிக்கப்படவுள்ளது.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலைய ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயிநிலையத்தில், பாபாவின் பிறந்தநாள் நிகழ்வாக, நவம்பர் 22 ம் திகதி, செவ்வாய்க்கிழமை, மாலை 5 மணிக்கு, பாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, சித்திரத்தேர் பவனி இடம் பெறும். மறுநாள் நவம்பர் 23ம் திகதி, புதன்கிழமை, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 97வது பிறந்தநாளன்று, பிரசாந்தி கொடி ஏற்றத்துடன் அனைத்து நிகழ்வுகளும் காலை 5 மணிக்கு ஆரம்பமாகும் . பகல் அன்னதானமும் வழங்கப்படும். சிறப்பு அம்சமாக பிறந்த நாள் கேக் வெட்டுதல், திருவூஞ்சல், திருமங்களாராத்தியும் இடம்பெறும்.

**எஸ் .என். உதயநாயகம்**
பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா
மத்திய நிலையம் கொழும்பு

# சிறுவர்களைக் குலுக்குவதும் துஷ்பிரயோகமே

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி நாம் அறிந்து வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகின்றது. ஒரு சிறுவனுக்கு, இன்னுமொரு சிறுவனால் அல்லது வயது வந்தவர்களால் வேண்டுமென்றே தீங்கு பயக்கும் செயற்பாடு சிறுவர் துஷ்பிரயோகமாக கருதப்படும் அதே வேளை, ஒரு செயலின் மூலமாகவோ அல்லது செயல்பட தவறுதலின் மூலமாகவோ ஒரு பிள்ளைக்கு காயம், இறப்பு, உணர்ச்சித் தாக்கம் அல்லது கடுமையான தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயற்பாடும் சிறுவர் துஷ்பிரயோகமாகவே கருதப்படும்.

இந்த துஷ்பிரயோகமானது வேறுபட்ட படி நிலைகளுக்குட்பட்டது. சிக்மண்ட் பிராய்ட் இன் பனிப்பாறை கோட்பாட்டின்படி, சிறுவர் துஷ்பிரயோகத்தின் படிநிலைகள் வேறுபட்டவை. சிறுவர் துஷ்பிரயோகமும் நீரில் மிதக்கும் பனிப்பாறை போன்றது. குறிப்பிட்ட ஒரு அளவே எம் கண்களுக்கு புலப்படும். அதன் தாக்கத்தை அளவிட முடியாது. அதன் ஆழம் பரந்து விரிந்தது. துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட பிள்ளையின் நிலைமையும் அவ்வாறானதே. அப் பிள்ளைக்கு உடல் ரீதியாக ஏற்படும் பாதிப்பு, அதனூடாக ஏற்படும் உள ரீதியான தாக்கம் மற்றும் வடுக்கள் போன்றவற்றை அப் பிள்ளையை தவிர வேறு யாராலும் பூரணமாக புரிந்துகொள்ள முடியாது.



துஷ்பிரயோகமானது பல்வேறு வடிவங்களில் நடைபெறுகின்றன. இவை, இன்று வரைக்கும், உடல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு என்று வகைப்பட்டுள்ளன. இத் துஷ்பிரயோகங்களுள் உடலியல் துஷ்பிரயோகமானது வெளிப்படையானது. இதை யாராலும் அறிந்து கொள்ள முடியும். இது ஒரு பிள்ளைக்கு ஏற்படும் தற்செயலற்ற உடல் ரீதியான காயம் அல்லது தாக்கம் என்று வரையறுக்கப்படுகின்றது. அதாவது, காயம் அல்லது ஆபத்து ஏற்படும் என்று நன்கு அறிந்திருந்தும் அவர்களை அடிப்பது, உதைப்பது, தீயினால் சுடுவது அல்லது ஒரு செயலின் விளைவாக அவர்களை முடக்கச் செய்வது போன்றவை உடல் ரீதியான துஷ்பிரயோகத்தினுள் அடங்கும்.

"அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்" என்று முன்னோர்களால் கூறப்பட்ட ஒரு விடயம், அது மருவி, இன்று சிறுவர்களுக்கு எதிராக வன்முறையை தோற்றுவிக்கும் ஒன்றாக திரிபடைந்துவிட்டது. இது சிறுவர்களுக்கு எதிரான உடல் ரீதியான துஷ்பிரயோகத்தை ஊக்குவிக்கும் ஓர் செயற்பாடாக காணப்படுகின்றது. இத் துஷ்பிரயோகமானது, பல்வேறு வடிவங்களில் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடைபெறுகின்றது. சில பெற்றோர்கள், பிள்ளைகளின் கல்வி, விளையாட்டு, பழக்கவழக்கம் போன்றவற்றை சீர் திருத்தும் நோக்கத்தில் கையாளுகிறார்கள். ஆனால் பிள்ளைகளோ, பெற்றோர்களை முன்னுதாரணமாகக் கொண்டு தான் வளர்கின்றார்கள். பெற்றோர்களின் நடை, உடை, பாவனை, பழக்கவழக்கம் போன்றவற்றை பிள்ளைகள் பின்பற்றுகிறார்கள். இருந்தும் அவர்களை சீர்திருத்தும் நோக்கில் பெற்றோர்கள் கண்டிக்கின்றனர். இங்கு உண்மையில் கண்டிக்கப்படவேண்டியவர்கள் பெற்றோர்களா? அல்லது பிள்ளைகளா?.

வீடுகளில் மட்டுமல்லாமல், பிள்ளைகள் சுதந்திரமாக நடமாடும் பாடசாலைகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், வீதிகள் போன்றவற்றிலும் இது நடைபெறுகின்றது. அது மட்டுமல்லாமல் சம்பிரதாய சடங்குகள் எனும் பேரில், சிறுவர்களுக்கு எதிராக நடத்தப்படும் செயற்பாடுகள் மூலமாக, அவர்கள் நிரந்தர செயல் முடக்கத்தை மட்டுமல்லாமல், மரணத்தையும் அனுபவிக்கிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக, படல்கமுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீடொன்றில் 10 வயது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டதை கூறலாம். பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி சிறுவனின் தொண்டையில் சளி சிக்கி சுகயீனம் அடைந்து இருந்த வேளை, பெற்றோர்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டதாகவும், அந் நேரம் சிறுவனின் உயிர் பிரிந்ததாகவும் கூறப்படுகின்றது.

**(தொடரும்)**



**விவேதா குணரெட்ணம்,**
திட்ட அலுவலர்,
எங்குமுள்ள சிறுவர்களையும்
சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு

# அரசியல் தலைவர்களை காவுகொண்ட 1990களின் முற்பொழுதுகள்

**அருள் சத்தியநாதன்**













## அடுத்தடுத்து மரணமடைந்த ராஜீவ், பிரேமதாச, காமினி, லலித், விஜேரத்ன, கொப்பேகடுவ...

ஒருநாட்டின் தலைவர் என்பவர் அந்நாட்டு குடிகளிடம் செல்வாக்கு கொண்டவராகவே இருப்பார். அவ்வாறு உண்மையாகவும் தொடர்ச்சியாகவும் செல்வாக்கு செலுத்தக் கூடிய தலைவர்கள்தான் தீர்த்துக் கட்டப்படுவதும் உண்டு. ஆபிரகாம் லிங்கன், பெட்ரிக் லுமும்பா, மகாத்மா காந்தி ஆகியோரை உதாரணமாகக் குறிப்பிடலாம். மாற்றங்களைக் கொண்டுவர நினைத்த ஜோன் கென்னடி, 'I have a dream' என இன சமத்துவம் பேசிய மார்டின் லூத்தர் கிங் என்போர் படுகொலை செய்யப்பட்டதும் அவர்களின் மக்கள் செல்வாக்கின் காரணமாகத்தான்.

1990களின் ஆரம்ப காலத்தை அரிதாக நிகழக்கூடிய ஒரு கொலைக்களமாகக் குறிப்பிட முடியும். இதன் ஆரம்பம் 1991மே மாதம் 21ம் திகதி இரவு 10.10 மணிக்கு தமிழகம் ஸ்ரீபெரும்புதூரில் நிகழ்ந்தது. பிரதமர் பதவியை இழந்திருந்த நிலையில் தேர்தல் பிரசாரத்துக்காக தமிழகம் வந்திருந்த ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளியான தனு என்ற பெண் தன்னையே வெடிகுண்டாக்கியதால் ராஜீவ் காந்தி உடல் சிதறி மரணமானார். விடுதலைப்புலிகள் ஏன் அவ்வாறான தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் ஒரு காரியத்தை செய்தார்கள் என்பதற்கான நியாயமான காரணத்தை இன்றளவும் எவராலுமே கண்டுபிடிக்க முடியவில்லை. அரசியல் இராஜதந்திரத்தில் அவ்வியக்கம் எவ்வளவு பலவீனமாக இருந்தது என்பதையே இப்படுகொலை அனைவருக்கும் உணர்த்தியது.

இப்படுகொலை, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு மனப்பான்மையைக் கொண்டிருந்த தமிழக மக்களை புரட்டிப் போட்டது. ஆதரவு தளமாக செயல்பட்டு வந்த கருணாநிதித் தலைமையிலான தி.மு.க அடுத்து வந்த சட்டசபைத் தேர்தலில் வரலாறு காணாத படுதோல்வியை சந்தித்தது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியா பின்பற்றி வந்த கொள்கை தடாலடியாக மாற்றம் கண்டது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு அச்சாரமாகவும் இப்படுகொலை அமைந்தது. நீண்டகால அடிப்படையில் காங்கிரசின் வீழ்ச்சிக்கும் தலைமைத்துவ ஆளுமையில் ஏற்பட்ட வெற்றிடம் இப்படுகொலைக்கு வழி வகுத்தது. இலங்கை அரசியலில் இந்திய அரசியலில் விடுதலைப் புலிகளின் எதிர்காலத்தில் மற்றும் இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் என பாதிப்புகளையும் பிரதிபலிப்புகளையும் ஏற்படுத்திய படுகொலை இது.

1992ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எட்டாம் திகதி இலங்கையின் வெற்றிகரமான இராணுவ அதிகாரியாகக் கருதப்பட்ட லெப்டினன் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஊர்காவற்றுறை அராலி சந்தியில் அவர் பயணித்த வாகனத்தில் வெடிகுண்டு வெடித்ததால் மரணமடைந்தார். இத்தாக்குதலின் பின்னணியில் விடுதலைப்புலிகள்தான் இருந்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அவரது மரணம் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பின்னடைவை ஏற்படுத்தியது என்பது உண்மை.

1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்தன தனது அமைச்சரவையில் திறமைசாலிகளை வைத்திருந்தார். காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி, ஆர், பிரேமதாச, ஏ.சி.எஸ். ஹமீத், ரொனி டி மெல், ரணில் விக்கிரமசிங்க, தொண்டமான், ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் என்போரை சிறப்பாகக் குறிப்பிடலாம். இத்தனை செயல் வீரர்களைக் கொண்ட ஒரு அமைச்சரவை பின்னர் அரிதானது.

1989இல் ஆர். பிரேமதாச ஜனாதிபதியாக பதவியேற்றதும் செல்வாக்கு மிக்க அமைச்சர்களான காமினியும் லலித்தும் அவருடன் முரண்பட ஆரம்பித்தனர். பிரேமதாசவுக்கு எதிராக குற்றப்பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவர முனைந்ததில் ஐ.தே.கவைவிட்டு இருவருமே வெளியேற்றப்பட்டனர். அதே ஆண்டில் 1991இல் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் அவர்கள் ஒரு கட்சியை ஆரம்பித்தனர். பிரேமதாச தலைமையிலான ஐ.தே.கவை வீழ்த்தி ஆட்சியை பிடிப்பதே அவர்கள் நோக்கமாக இருந்தது. கழுகை சின்னமாகக் கொண்ட அக் கட்சி மக்கள் மத்தியில் புகழ்பெறவும் செய்தது.

1993ம் ஆண்டு மேல் மாகாணத்துக்கான மாகாண சபைத் தேர்தல் நடைபெறவிருந்தது. இதன் பொருட்டு மேல் மாகாணத்தில் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்திருந்தன தேர்தலில் ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியும் கழுகு சின்னத்தில் போட்டியிட்டது. தேர்தல் நடைபெற நான்கு வாரங்கள் இருக்கையில் 1993 ஏப்ரல் மாதம் 23ம் திகதி இரவு இறுதி பிரசார கூட்டமாக கிருலப்பனை மைதானத்தில் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரவு பத்து மணியளவில் அக்கூட்டத்துக்கு லலித் வந்தார். அவர் உரையாற்றியபோது இலேசாக மழைபெய்யத் தொடங்கியிருந்ததால் சனத்திரள் மேடைக்கு அண்மையில் வந்து முண்டியடித்தது. உரையை அவர் முடிக்கும் தறுவாயில் மேடைக்கு அருகே நின்றிருந்த ஒருவர் துப்பாக்கியை உருவி லலித்தை நோக்கி சுட்டுவிட்டு ஓடினார். லலித்தின் பாதுகாவலர் திருப்பிச் சுட்டதில் ஓடியவரின் அடிவயிற்றில் ஒரு குண்டு பாய்ந்ததாக அவர் பின்னர் கூறினார். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி லலித் மரணமடைந்தார்.

விடுதலைப் புலிகளே லலித்தின் மரணத்துக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். அவரது மரணம் அவரது கட்சியை பலவீனப்படுத்தியது. கட்சி வேறுபாடுகள் எவ்வாறிருந்தாலும், கல்வித் துறைக்காக சேவையாற்றிய, மகாபொல புலமைப்பரிசலை உருவாக்கிய ஒரு சிறந்த அரசியல்வாதியை நாடு இழந்தது. ஊழல்வாதி என்ற கறை அவரில் என்றைக்குமே படிந்ததில்லை.

ஏப்ரல் 23இல் லலித் மறைந்தார் என்றால் அடுத்த எட்டாவது தினம் இலங்கையை உலுக்கிப் போட்ட மற்றொரு படுகொலை நிகழ்ந்தது. ஆர்.பிரேமதாச சாமானியரின் தோழனாகவே எப்போதும் தன்னை முன்னிலைப்படுத்தியவர். எனவே தொழிலாளர் தினமான மே தினம் அவருக்கு முக்கியமானது. மக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை தானே முன்னின்று ஏற்பாடு செய்வது அவருக்குப் பிடிக்கும். 1993மே தினத்தையும் அப்படித்தான் கிராண்ட்பாஸ் ஆர்மர் வீதிச் சந்தியில் நிறைபடி ஊர்வலத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தபோது பாபு என்ற பெயரால் அறியப்பட்ட, அவர் நன்கறிந்த நபர் நெருங்கி வந்து தற்கொலைத் தாக்குதல் நடத்தியதில் அவர் மரணமடைந்தார்.

91இல் ராஜீவ்காந்தி தற்கொலைத் தாக்குதலில் மரணமடைந்தார். 92இல் டென்சில் கொப்பேகடுவ ஜீப் குண்டுவெடிப்பில் பலியானார். இதே காலப்பகுதியில் இன்னொரு முக்கிய நபரும் குண்டு வெடிப்பில் மரணமடைந்தார். அவர் ரஞ்சன் விஜேரட்ன. அடிப்படையில் ரஞ்சன் விவசாயத் துறையில் அறிவும் ஆழ்ந்த அனுபவமும் கொண்டவர். தோட்ட முகாமையாளராக வாழ்க்கையை ஆரம்பித்து தேயிலைத் தோட்ட நிர்வாகத்துறையில் உச்சங்களைத் தொட்டவர். 1977ல் ஐ.தே.க பதவிக்கு வந்ததும் ஜே.ஆர்.ஜயவர்தனவின் அழைப்பின் பேரில் அரசியலுக்கு வந்தார். ஜே.ஆரின் விருப்பப்படி லேக் ஹவுஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தை சரி செய்து மீளமைக்கும் வகையில் நடவடிக்கைகளுக்காக பணிப்பாளராக பொறுப்பேற்றார். 1989இல் ஆர் பிரேமதாச ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும். பாதுகாப்பு பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அச் சமயத்தில் வடக்கில் தீவிரவாதிகள் ஆயுதமேந்தி போராடிக் கொண்டிருக்க, தெற்கில் ஜே.வி.பி. ஆயுதமேந்தியிருந்தது. ஜே.வி.பியை ஒடுக்க கடுமையான, சில சமயம் மோசமான நடவடிக்கைகளை அவர் எடுக்க நேர்ந்தது. ஜே.வி.பியியை அவர் வெற்றிகரமாக ஒடுக்கினார். ஜே.வி.பி தலைவர் விஜே வீரவை அவரால் வலப்பனை தேயிலைத் தோட்டத்தில் கைது செய்ய முடிந்தது.

ஐ.தே.க தலைவராகவும் அதன் பொதுச் செயலாளராகவும் பணியாற்றியிருந்த அவர், விவசாய அமைச்சர், வெளிவிவகார அமைச்சர், பிரதி பாதுகாப்பு அமைச்சர் என முக்கிய பதவிகளை வகித்ததோடல்லாமல் திறம்படவும் அந்த அமைச்சுகளை அவரால் நடத்த முடிந்திருந்தது. இதனால் நாடெங்கும் மக்களால் விரும்பப்படும் அரசியல் தலைவராக அவர் ஆகியுமிருந்தார். இந்த நிலையில் தான் ஜனாதிபதியாகவும் வரக்கூடும் என்ற ஒரு அபிப்பிராயத்தை கொண்டிருந்த நிலையில் 1991 மார்ச் இரண்டாம் திகதி தன் இல்லத்திலிருந்து புறப்பட்டு தன் அலுவலகத்துக்கு சென்று கொண்டிருந்தபோது, ஹெவ்லோக் வீதியில் பௌத்தாலோக மாவத்தை பம்பலப்பிட்டி சந்திக்கு அண்மித்ததாக அவர் பயணித்த கார் வெடித்தது. அந்த இடத்திலேயே அவர் மரணமானார். அனேகமாக காரினுள் வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டே வெடித்திருக்க வேண்டும். இச்சம்பவத்தில் 25 பொதுமக்களும் ஆறு அதிரடிப்படையினரும் கொல்லப்பட்டனர்.அக்கொலைக்கும் விடுதலைப் புலிகளே குற்றம்சாட்டப்பட்டனர்.

91இல் ராஜீவ் காந்தியும் விஜேரட்னவும் கொல்லப்பட்டனர். 92ல் டென்சில் கொப்பேகடுவ 93 ஏப்ரல் லலித் அத்துலத்முதலி. மே மாதம் முதலாம் திகதி அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாச 94ம் ஆண்டு அக்டோபர் 24ம் திகதி நாட்டின் ஜனாதிபதியாக வரக்கூடியவர் என நம்பப்பட்ட காமினி திசாநாயக்க படுகொலை செய்யப்பட்டார். இப்படி பல முக்கிய அரசியல் பிரமுகர்களைக் கொண்ட காலமாக 1991_ 94 காலப்பகுதியைக் குறிப்பிடலாம். இவர்கள் அடுத்தடுத்து மறைந்தால் இலங்கை மற்றும் இந்தியாவின் அரசியல் போக்குகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பல புதிய கட்சிகள் டில்லியிலும் மாநிலங்களிலும் தலையெடுக்க ராஜீவ் மரணம் கால்கோளிட்டது.

ராஜீவ் காந்தி படுகொலை சம்பவம் தொடர்பாக பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ரவிச்சந்திரன், ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த 2014ம் ஆண்டு பேரறிவாளன் உள்ளிட்ட நான்கு பேரின் கருணை மனு மீது ஜனாதிபதி எந்த முடிவும் எடுக்காமல் இருப்பதை சுட்டிக்காட்டிய உச்ச நீதிமன்றம், அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தது. பின்னர் தன்னை விடுதலை செய்யக் கோரி பேரறிவாளன் 2016ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கில் கடந்த மே மாதம் தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றம், 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்த பேரறிவாளனை விடுதலை செய்து உத்தரவிட்டது

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட நளினிக்கு முதலில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. ஏறக்குறைய 30 ஆண்டு காலம் சிறையில் கழித்த நளினி, வேலூர் சிறையில் நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்த பெண் கைதி ஆவார்.

ராஜீவ் கொலை வழக்கில் 1991 ஆம் ஆண்டு ஜுன் 14 ஆம் திகதியன்று நளினி, அவரின் கணவர் முருகனுடன் சேர்த்து கைது செய்யப்பட்டார். அப்போது நளினி இரண்டு மாத கர்ப்பமாக இருந்தார்.

சிறையிலேயே குழந்தையைப் பெற்று வளர்த்தார் நளினி. ஹரித்ரா எனப் பெயரிடப்பட்ட அந்த குழந்தை, ஐந்து வயதிற்கு பின்னர் நளினியின் சக சிறைவாசி ஒருவர் கோவைக்கு அழைத்து வந்து அவரை வளர்த்துப் படிக்க வைத்தார். பிறகு முருகனின் தாயாருடன் இலங்கைக்கு சென்ற அவர், பின்னர் அங்கிருந்து இங்கிலாந்திற்கு சென்றார். இப்போது அவருக்கு 29 வயதாகிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஏழு நபர்களில் நளினி ஒருவர் மட்டுமே குற்றம் நடைபெற்ற இடத்தில் இருந்தார். ராஜீவ் கொல்லப்பட்ட சில தினங்களில் நளினி, கொலை திட்டம் தீட்டியவர்களுடன் இருக்கும் புகைப்படங்கள் வெளியானது. கொலை நடைபெற்ற பிறகு நளினியும் முருகனும் சென்னையில் இருந்து சென்று பல்வேறு இடங்களில் மறைந்து வாழ்ந்தனர். ஒரு மாதம் கழித்து இருவரும் கைது செய்யப்பட்டனர்.

(06 ஆம் பக்கம் பார்க்க)






**"தமிழ் மக்களின் எண்ணங்கள், அபிலாசைகளை பொறுப்புடன் நிறைவேற்றுவதற்காக சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒற்றுமையாக இணைந்து செயலாற்ற வேண்டியது காலத்தின் தேவையாகும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் எமக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.**

# தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயலாற்றுவது இன்று காலத்தின் கட்டாயம்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசனுடன் நேர்காணல்

**கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் 15/11/2022 இல் நடைபெற்ற கூட்டத்திற்கு சகல தமிழ்த் தேசியக்கட்சிகளும் சுமந்திரன் எம்.பியினால் அழைக்கப்பட்டிருந்தன. அவற்றில் தமிழ் அரசுக் கட்சி மட்டுமே கலந்து கொண்டதாக அறியப்படுகிறது. அப்படியென்றால் அந்த அழைப்பை ஏனைய கட்சிகள் புறக்கணித்ததாகக் கொள்ளலாமா?**

பதில்: தமிழ்த் தேசியக் கட்சிகள் புறக்கணித்ததாகக் கூற முடியாது.அழைப்புக்கான அவகாசக் காலம் குறைவாக இருந்தமையும் தலைவர் சம்பந்தர் ஐயா அவர்கள் நேரடியாக அந்த அழைப்பை விடுக்காதமையும் காரணம் என்று தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களால் சுட்டிக் காட்டப்பட்டதாக அறிகின்றேன்.

**கே: அப்படியென்றால் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் விடுக்கப்படும் அறிவித்தல்களை ஏனைய தமிழ் தேசியக் கட்சிகள் புறக்கணிப்பதாகக் கொள்ளலாமா?**

பதில்: ஒட்டுமொத்தமாக அவ்வாறு கூற முடியாது.ஏனென்றால் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் அவர்கள் சுமந்திரன் அவர்களின் சமஷ்டிக் கோரிக்கை பற்றிய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏகோபித்த நிலைப்பாடு பற்றிய கருத்துக்கு மிகவும் ஆதரவான கருத்தினைப் பரிமாறியதோடு, விரைவில் தமது கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேசவுள்ளதாகவும் இணக்கமான கருத்தினைக் கூறியிருந்தார். அதேவேளை, ஏனைய சில தமிழ் தேசியக் கட்சிகள் சார்ந்தவர்கள் சுமந்திரனின் கருத்துகள் தன்னிச்சையானவை என்றும், அவரது கருத்துகள் தொடர்பாக தாம் திருப்தியடைவில்லை என்றும் கூறியுள்ளார்கள்.

**கே: அப்படியான கட்சிகளாக எவற்றைக் கூறலாம்?**

பதில்: ரெலோ, புளொட், ஈ.பி. ஆர்.எல். எவ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகளைக் கூற முடியும்.

**கே: அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் கூட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனின் தன்னிச்சையான கருத்துக்களை ஏற்க மாட்டோம் என்று கூறினாரே? ஏன் அப்படிக் கூறினார்?**

பதில்: 21 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் எதிர்வாதம் புரிந்த சுமந்திரன், அதனை எதிர்த்து வாக்களிக்கும் மனப்பாங்கில் இருந்தது போல் தெரிந்தது. ஆனால் கோட்டாபாயவின் விருப்பத்துக்கு அமைவாக மொட்டுக் கட்சியால் கொண்டுவரப்பட்ட 20 ஆவது திருத்தத்தை விட 21 ஆவது திருத்தத்தில் சில முன்னேற்றமான விடயங்கள் காணப்பட்டன. எனவே, 21ஐ எதிர்த்தால், 20 ஐ ஆதரிப்பதாக அமைந்து விடும். அவ்வாறாயின் மொட்டுக் கட்சியின் கடும் போக்கான நிலைக்குச் சாதகமாகி விடும்.எனவே, சுமந்திரனின் நிலைப்பாட்டுக்கு மாறாக, த.தே. கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் 21 ஆவது திருத்தத்தினை ஆதரித்தனர். அது சரியென்று தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும் நிலை காணப்பட்டது.இந்த நிலையில் தான், சிறிதரன் அவர்கள் சுமந்திரனின் சுயாதீனமான அல்லது சுயேச்சையான கருத்துகளை எதிர்க்கப் போவதாகக் கூறியிருந்தார்.

**கே: பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சுமந்திரன் ஆகியோரது கருத்து நிலைப்பாடுகள் தொடர்பாக உங்களது பார்வை எப்படி அமைகின்றது?**

பதில்: இருவரும் எமது தமிழரசுக் கட்சியின் பொறுப்பு மிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் இவர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. தமிழ் தேசியக் கட்சி தொடர்பான கருத்துக்கள் தன்னிச்சையாக அமையாமல் அங்குள்ள மூன்று கட்சிகளின் கலந்துரையாடலின் தீர்மானமான கருத்தாக அமைவதே சரியானதாகும்.

**கே: மீண்டும் தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்து ஏகோபித்த வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டிக் கோரிக்கையினை முன்வைக்கக் கூடிய சாத்தியப்பாடு உள்ளதா?**

பதில்: நிச்சயமாக உண்டு. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எதிர்வரும் வாரங்களில் சகல தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் காலஅவகாசத்துடன் முறையான அழைப்புகளை விடுத்து அந்த விடயத்தை கையாளவுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. இதில் பெரும்பாலும் பல தமிழ் தேசியக் கட்சிகள் கலந்து கொண்டு திடமான கோரிக்கையினை வெளியிட வாய்ப்பு உள்ளது.

**கே: தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஐக்கியத்திற்கும் ஏகோபித்த தீர்வுக் கோரிக்கைக்கும் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

பதில்: தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றுவதற்காக சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒற்றுமையாக இணைய வேண்டும். இதில் தன்முனைப்பான சிந்தனைகள், எழுந்தமானமான தன்னிச்சையான கருத்துகள் தவிர்க்கப்பட வேண்டும். ஒரே குரலில் வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டிக் கோரிக்கையினை அரசிடமும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்திடமும் முன்வைக்க வேண்டும்.தமிழ் மக்களின் பொதுவான பிரச்சினைகளின் போது சகல தமிழ்க் கட்சிகளும் கருத்தொருமைப்பாட்டுடன் செயற்பாட்டில் இறங்க வேண்டும். தனித்தனியான சுயநலமான நிகழ்ச்சி நிரல்களின்படி எந்தக் கட்சியோ கட்சி உறுப்பினரோ செயற்படக் கூடாது. துறைசார் வல்லுனர்களைக் கொண்ட ஆலோசனைச்சபையை அமைத்து, தேவையான ஆலோசனைகளை தமிழ்தேசியக் கட்சிகள் பெற்று செயலாற்ற வேண்டும். தமிழ்த் தேசியக் கட்சிகளது நிலைப்பாடு ஒற்றுமையாகவும் உறுதியாகவும் ஒரே குரலாகவும் அமைய வேண்டும்.

**கே: ரெலோ பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடுமையான வார்த்தைகளால் விமர்சித்துள்ளாரே... அது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெற்றி பெற்று அக்கட்சியிலேயே இருந்து கொண்டு, அக்கட்சியினை இவ்வாறு கூறுவது முறையல்ல. மரத்தின் மேல் இருந்து கொண்டு அந்த அடிமரத்தை வெட்டுவது சரியானதல்ல.

**இரா. சம்பந்தனின் இல்லத்தில் 15/11/2022 இல் நடைபெற்ற கூட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் சுமந்திரன் எம்.பியினால் அழைக்கப்பட்டிருந்த போதிலும், தமிழரசுக் கட்சி மாத்திரம் கலந்து கொண்டது ஏன்?**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எதிர்வரும் வாரங்களில் சகல தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் முறையான அழைப்பு**

நேர்காணல்:
செல்லையா பேரின்பராசா...
(துறைநீலாவணை நிருபர்)




# உலக மக்கள் தொகை உயர்வுக்கேற்றவாறு உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்

ஐக்கிய நாடுகள் சபையினால் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு தானியங்களை பிரபல்யப்படுத்துவதற்கான வருடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த பெயரிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிகமான உணவாக எடுத்துக் கொள்ளப்படும் குரக்கன், திணை, சோளம் உள்ளிட்ட தானியங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட 500 இற்கும் அதிகமான இனங்கள் தற்போது அறிந்து கொள்ளப்பட்டுள்ளன. அவற்றை உணவாகப் பயன்படுத்துவதற்கு மக்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். ஊட்டச்சத்து நிபுணர்கள் தானியங்களில் இருந்து தயாரிக்கக் கூடிய உணவு வகைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள்.

உலகில் மக்கள் தொகை அதிகரித்துச் செல்வதால் உணவுப் பாதுகாப்பு குறித்து கவனத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பயிர்ச்செய்கை மேற்கொள்ளக் கூடிய காணிகளின் அளவு குறைவாகும். விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது. மக்கள் தொகைக்குப் போதுமான உணவு உற்பத்தி குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கடந்த வருடம் 82 மில்லியன் மக்களுக்கு பசியை போக்கிக் கொள்வது பிரச்சினையாக காணப்பட்டதோடு, அது கடந்த வருடத்தை விட பல மில்லியன்கள் அதிகரித்த தன்மையாகும். ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு அண்மையில் மனித உணவாக உட்கொள்ளக் கூடிய பூச்சி வகைகள் பற்றிய அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளது. வேறுபட்ட பயிர்களை பயிரிடவும், உணவுக்காக பயன்படுத்தக் கூடிய பொருட்கள் மற்றும் முறைகளை பிரபல்யப்படுத்தவும் முயற்சி எடுத்து வருகின்றது. ஊட்டச்சத்தை அதிகமாகக் கொண்ட தானிய வகைகளை தெரிவு செய்து பயிரிடுவதற்கு ஊக்குவித்து வருகிறது.

இந்தியா தனது அதிகரித்த மக்கள் தொகைக்காக உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. பால், அரிசி, மரக்கறி மற்றும் பழங்களுடன் சரக்குப் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பிலும் இந்தியா உலகில் முதலிடத்தை வகிக்கின்றது. தெரிவு செய்த தானிய வகைகளை பிரபல்யப்படுத்துவது இந்தியாவின் புதிய இலக்காகும். குரக்கன், தினை, சோளம் உள்ளிட்ட பயிர்கள் அவற்றில் அடங்குகின்றன. ஹைதராபாத் பிராந்தியத்தின் தெலுங்கானாவில் இந்த மில்லெட்ஸ் (Millets) வகைகளுக்குரிய தானியங்கள் பற்றிய ஆய்வுகளை நடத்தும் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கம் மாத்திரமன்றி அரசாங்கம் அல்லாத பல அமைப்புகள் கூட நிகழ்காலத்துக்கு பொருத்தமான வகையில் தெரிவு செய்யப்பட்ட விசேட தானிய வகைகள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளன. பயிர் செய்கிற காலத்தைக் குறைத்து அதிகளவு அறுவடையைப் பெறுவதற்காக ஆய்வுகள் நடைபெறுகின்றன. உற்பத்தி செய்யப்படும் தானியங்களை உணவுக்காக பயன்படுத்தும் போது புதிய சுவையான பட்சண வகைகளை தயார் செய்கின்றார்கள். குரக்கனிலிருந்து களி மற்றும் கஞ்சி போன்ற உணவுகளைத் தயாரிப்பதற்கு பதிலாக யோகட் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவற்றையும் உற்பத்தி செய்கிறார்கள்.

நீர் முகாமைத்துவ பிரச்சினைக்கு மத்தியில் பயிர்செய்ய முடியாத கஷ்டப் பிரதேசங்களில் குறைந்த நீரின் மூலம் பயிர் செய்யக் கூடிய குரக்கன் மற்றும் தினை போன்ற தானியங்களை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதோடு, அவர்களின் அறுவடைக்கான நியாயமான விலையையும் வழங்குகிறார்கள். புதிய வகை உணவுகளை பிரபல்யப்படுத்தும் கொள்கைகளையும் பின்பற்றுகிறார்கள்.

குரக்கன் எமது சிறப்பான வாழ்வுக்கு பொருத்தமான ஊட்டச்சத்து அதிகம் உள்ள உணவாகும். நார்ச்சத்து அதிகம் உள்ள தானிய வகையான குரக்கனை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டுபவர்கள் மிகவும் குறைவு. குரக்கன் உணவு இலங்கை சமூக கலாசாரத்துடன் தொடர்புடையது.

எவ்வாறாயினும் இலங்கையில் குரக்கன், சோளம் மற்றும் தினை போன்ற தாவரங்களை பயிரிடுவது மிகவும் குறைவாகும். வருமானம் குறைவாகக் கிடைப்பதுடன், விளைச்சலை விற்பனை செய்வதும் சிரமமாகும். இலங்கைக்குத் தேவையான தானிய வகைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கின்றோம். விவசாயம் செய்யாத, நீர்வசதி குறைந்த காலங்களில் தானியங்களை எம்மால் உற்பத்தி செய்ய முடியும். தெரிவு செய்யப்பட்ட அருகி வரும் பயிர்களைப் பற்றி ஆராய்வது நல்லது. பயிர் செய்யக்கூடிய தானியங்கள், சந்தை வாய்ப்பு பற்றி ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். இலங்கையில் திறமையான விவசாய அதிகாரிகள் உள்ளார்கள்.

விவசாயிகள் பயிர் செய்தால் அவற்றை விற்பதிலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. விவசாயிகள் குரக்கன் உற்பத்திக்காக அதிகளவு பணத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளதாகக் கூறுகின்றார்கள். உணவுக்காக அதனை தயார்படுத்த அதிக அளவு சக்தி தேவைப்படுகின்றது. இயந்திரங்களை பயன்படுத்தும் அளவிற்கு உற்பத்தி இல்லை. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பாரியளவு உற்பத்தி செய்வதற்கு பெருமளவு செலவு செய்ய வேண்டி உள்ளதோடு, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வது இலாபம் என சந்தை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான சிக்கலான பக்கங்களை நோக்கும் போது இந்தியா பின்பற்றும் முறைகள் பற்றியும் அறிந்து கொள்வது நல்லது. அண்மையில் இந்தியாவின் விவசாயத் திணைக்களம், விவசாய நலன்புரி அமைப்பு மற்றும் தேசிய விவசாய கூட்டுறவு விற்பனை பிரிவுக்கு இடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதில் உலகில் இடம்பெறும் மாற்றத்தை கருத்தில் கொண்டு தானியங்களை உற்பத்தி செய்தல், அதற்காக விவசாயிகளை ஈடுபடுத்தல், விவசாய அமைப்புகளை உருவாக்கல் என்பவற்றிற்கு ஒப்புதல் அளித்துள்ளார்கள். இருதரப்பு வேலைத்திட்டங்களுக்கு அமைய உணவை பிரபல்யப்படுத்தல், சந்தை வாய்ப்பை உருவாக்கல் மற்றும் நாடு பூராவும் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக வலையமைப்பு ஒன்றை மேம்படுத்தல் போன்றன அதில் உள்ளடங்குகின்றன. இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே விவசாய ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொண்டால் ஆய்வுகள் மற்றும் விற்பனை பிரிவுகளில் பல மாற்றங்களை செய்யக் கூடியதாக இருக்கும். அடுத்த வருடத்துக்குள் தானியங்கள் தொடர்பில் ஏற்படும் மறுமலர்ச்சி மூலம் விவசாயிகளின் மறுவாழ்வுக்கு பங்களிப்பை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களை ஆராய வேண்டும்.

தமிழில்: வீ.ஆர்.வயலட் ...

விமான பயணச்சீட்டை முன்கூட்டியே எடுக்கவும்;

# ஐயப்பன் பக்தர்களுக்கு பாபுசர்மா வேண்டுகோள்



சபரிமலை ஐயப்பனை தரிசிக்க புறப்பட விருக்கும் அடியார்கள் தங்களது யாத்திரைக்குரிய ஏற்பாடுகளை செய்யும் அதேவேளை தமக்குரிய விமான பயணச்சீட்டை முன்கூட்டியே பதிவு செய்துகொள்வது சிறந்ததென சர்வதேச இந்து மத பீடம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

கொரோனா தொற்று காலத்தில் இலங்கையிலிருந்து சபரிமலை யாத்திரிகர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர். பலர் விரதமிருந்து, மாலை அணிந்தும் சபரிமலைக்கு செல்ல முடியாமல் உள்நாட்டிலே விரதத்தை முடித்துக் கொண்டனர்.

தற்போதைய சூழ்நிலை உகந்ததாக இருந்தபோதும் இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும். டொலரின் பெறுமதி வீழ்ச்சி காரணமாகவும் பயணச்சீட்டுக்களின் கட்டணம் அதிகரித்திருக்கின்றது.

இந்த பயணசீட்டு கட்டணம் எல்லோருக்கும் கொடுக்ககூடிய வசதி இல்லை என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே.

ஒரு சிலர் இறுதி வரை இருந்து விட்டு கடைசி நேரத்தில் விமான பயணச்சீட்டுக்காக அலையும்போது அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். அதேவேளையில் சில முகவர்கள் ஐயப்ப பக்தர்களை ஏமாற்றியதும் கடந்த காலத்தில் நிகழ்ந்ததும் தெரிந்ததே.

எனவே ஐயப்ப பக்தர்கள் இறுதி வரை காத்திருக்காது இப்போதே விமான கட்டணத்தை கருத்திற் கொண்டு முன்கூட்டியே பதிவு செய்தால் கடைசி நேரத்தில் அதிக விலை கொடுக்க நேரிடாது.

அதேவேளை விமான போக்குவரத்துகள் தனியார் நிறுவனங்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது. இந்த தனியார் விமானங்களை இயக்கும் தனியார் கம்பனிகள்தான் இந்த விமான சீட்டுக்கான விலை சம்பந்தமான ஒரு ஆக்கபூர்மான நடவடிக்கைககளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் அனைத்து ஐயப்ப பக்தர்களின் எதிர்பார்ப்பாகும் என்றார்.

நூற்றுக்கு 40 முதல் 80 வீதவட்டி;

# திலினி பாணியில் மேலும் ஒருவர் 2,000 கோடி மோசடி

## சுமார் 10,000 பேர் ஏமாற்றம்;CID விசாரணை



சமூகத்தில் பல்வேறு தரத்திலிருக்கும் சுமார் 10,000 க்கும் மேற்பட்ட நபர்களை தந்திரமான முறையில் ஏமாற்றி இணையத்தளம் வழியாக சுமார் 2,000 கோடி ரூபாவை மோசடி செய்த சம்பவம் தொடர்பாக குற்றவியல் விசாரணை திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நூற்றுக்கு 40 வீதம், 80 வீதம் வரை மிகப் பெரிய வட்டி வழங்கப்படுமென கூறி நாட்டின் பல பகுதிகளில் கருத்தரங்குகளை நடத்தி இரண்டு வருட காலத்தில் இந்த பண மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பண மோசடியில் பாடசாலை அதிபர்கள், பாதுகாப்பு தரப்பு பிரதானிகள், பௌத்த பிக்குகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள் உட்பட சுமார் 10,000 பேர் வரையில் சிக்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் நிலவும் நிதி நெருக்கடிக்கு மத்தியில் இணையத்தளம் வழியாக நடக்கும் நிதி மோசடிகள் துரித கதியில் அதிகரித்துள்ளது. சில நபர்கள் இலட்சக்கணக்கான பணத்தை வங்கிகளில் கடனாக பெற்று அதனை அதிகமான இலாபம் பெறும் நோக்கில் இணையத்தளத்தில் மோசடியில் ஈடுபடும் நபர்களுக்கு வழங்கியுள்ளனர்.

வட்ஸ் அப், முகநூல் உட்பட சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி மிகவும் தந்திரமான முறையில் இணையத்தளம் வழியாக மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் அந்த சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## பேருவளையில் இன்று முப்பெரும்...

விழாவில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்த சீனன்கோட்டை மாணவ, மாணவிகள் விருதுவழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஸீ.எம். ஹம்ஸா, ஏ.ஆர்.எம். சுலைமான், எம். எம்.எம். சிஹாப், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், டாக்டர்களான அல்தாப் பாரூக், மிஷ்கா நிஸ்வர், ஸலாமத் ஸம்ஹா ஜெஸீல், பர்வின் பாரூக் ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

## குண்டும் குழியும், குளமுமாக...

காட்சியளிக்கிறது.

கிழக்கு மாகாணத்தின் மிக முக்கிய தலைநகரான திருமலைக்கு மட்டக்களப்பிலிருந்து இலகுவாகச் செல்லும் ஒரேபாதையும் இதுவே.

அவசரமாக செல்வதாக இருந்தாலும் இப்பாதையூடாக பயணிக்க முடியாத நிலை இப்போது உருவாகியிருக்கிறது. இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் கார்பட் இடப்பட்ட வீதிக் கட்டமைப்பு இருக்கும்போது இப்படியும் ஒரு பிரதான பாதை இருப்பது வேதனைக்குரியதென மக்கள் தெரிவிக்கின்றனர்.

## நீண்டகால பிரச்சினைகளை தீர்க்க...

ஜனாதிபதி வடக்கு, கிழக்குகான இந்த செயலணியை திறந்து வைப்பதற்காக வருகை தந்தமைக்காக வடக்கிலிருந்து அவரை நாம் வரவேற்கின்றோம். வடக்கு, கிழக்குக்கு விசேடமான ஒரு நிதியை அவர் பிரதமராக இருந்த போது பனை நிதியம் என உருவாக்கியிருந்தார்.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் எழுச்சிக்காக அது உருவாக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் மீள் எழுச்சிக்காக அன்றே கவனம் செலுத்தியிருந்தார். தற்போது ஜனாதிபதியாக மிகவும் முக்கியமான இந்த நடவடிக்கையை முன்னெடுக்கும் போது நாம் வாழ்த்து கூறுகின்றோம். இந்த விடயத்தில் சேர்ந்து இயங்குவோமென உறுதியளிக்கிறோம்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்ட போது சமஸ்டி தீர்வை முன்வைத்து போட்டியிட்டார். அந்த நேரத்தில் வடமாகாணம் கால் தடம் போட்டு விழ வைத்தது.

தற்போது விழ வைத்தவர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார். மிக முக்கியமாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தற்போது அமைச்சரவையில் இருக்கிறார். அவர்களுடைய ஆதரவையும் கொண்டு ஜனாதிபதியாக இருக்கும் அவர், இந்த நீண்டகால பிரச்சினைக்கு ஒரு ஆக்க பூர்வ முடிவை எடுப்பதாக சொல்லியிருக்கிறார். அதனை தீர்ப்பதற்கும் நாம் உறுதுணையாக இருந்து செயற்படுவோம் எனத் தெரித்தார்.

## வியட்நாமிலுள்ள இலங்கை...

303 பேர் சட்டவிரோதமாக கப்பல் மூலம் கனடா செல்ல முயன்றபோது, கப்பல் பழுதடைந்ததால் நடுக்கடலில் தத்தளித்தனர்.

அவர்களை ஜப்பானிய கப்பல் அதிகாரிகள் மீட்டு வியட்நாமில் கரைச் சேர்த்தனர்.

காப்பாற்றப்பட்டவர்களை அனுப்புவதற்கான முயற்சிகளை வியட்நாம் அதிகாரிகள் மேற்கொண்டனர்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே 2 இலங்கை அகதிகள் தற்கொலைக்கு முயற்சித்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## ஸ்தலத்தில் இரு...

சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். வாத்துவ, பொதுப்பிட்டிய, பணாபிட்டிய வீதியை சேர்ந்த யசிரு சம்பத் பெர்னாண்டோ மற்றும் வாத்துவ தெல்துவ அரியகம பிரதேசத்தை சேர்ந்த சங்தேஷ் சுலோச்சன பியரத்ன ஆகிய 18 வயதுடைய இரு இளைஞர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞர்கள் இருவரும் களுத்துறை பண்டாரகம வீதியில் இளைஞர்கள் குழுவுடன் உல்லாசமாக மோட்டார் சைக்கிள்களில் பயணித்துக் கொண்டிருந்த போது, உயிரிழந்த இளைஞர்களின் மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இரு இளைஞர்களுடன் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த ஏனைய இளைஞர்கள் விபத்தின் பின்னர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மொரந்துடுவ பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று வீதியில் படுகாயமடைந்திருந்த இரு இளைஞர்களையும் மீட்டு மொரந்துடுவ கோனதுவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்க ப்பட்ட போதும் அவர்கள் ஏற்கன வே உயிரிழந்து விட்டதாக வைத்தி யசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் வான் விபத்து...

செஹ்வான் ஷெரீப்பிலுள்ள புனித சூஃபி ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேன், கைர்பூர் என்ற இடத்துக்கருகே சிந்து நெடுஞ்சாலைக்கு அருகேவுள்ள 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அண்மையில் அந்த பகுதியில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பால் அந்த பள்ளம் முழுவதும் வெள்ள நீர் தேங்கியிருந்தது. இந்த விபத்தில் 08 பெண்கள், 06 சிறுவர்கள் உட்பட 20 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

அவர்களது உடல்கள் மீட்கப்பட்டு சையத் அப்துல்லா ஷா மருத்துவ அறிவியல் நிறுவன மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது. சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென அந்த நிறுவனத் தலைவர் டாக்டர் மொயின் சித்திக் தெரிவித்தார். எனினும் அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களென்று அவர் குறிப்பிட்டார். கைர்பூர் மிர்ஸை சேர்ந்த அந்த வேன் சாரதி, வீதியின் நடுவே இருந்த தடுப்புகளை பார்க்க தவறியதால் இந்த விபத்து நிகழ்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## உரிய வயதில் NIC...

ஒரு வருடத்துக்குள் தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரர்களுக்கு அறவிடப்படும் அபராதத் தொகையையே 2,500 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்கள ரீதியான தாமதம் காரணமாக, முதல் விண்ணப்பத்துக்கு தேசிய அடையாள அட்டை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தினால் இரண்டாவது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களிடம் 250 ரூபா கட்டணம் அறவிடப் படவுள்ளது.

திணைக்கள ரீதியான தாமதம் இல்லாத சந்தர்ப்பங்களில் முதற் தடவையாக தேசிய அடையாள அட்டை பெறாத விண்ணப்பதாரர்களிடமே 2,500 ரூபா அறவிடப்படுமென ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்கள் நிறைவடைவதற்குள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத விண்ணப்பதாரர்களிடமிருந்து 2,500 ரூபா அபராதம் விதிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. போலி ஆவணங்கள் மற்றும் பிழையான தகவல்களை சமர்ப்பித்தல் உள்ளிட்ட, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய குற்றங்களுக்கும் 2,500 ரூபா அபராதம் விதிக்கப்படுமென ஆட்பதிவு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## பதினொரு மாதங்களில்...

ரயிலொன்றும் மற்றைய தடம் புரள்வு பிலிமத்தலாவ ரயில் நிலையத்துக்கருகில் இடம்பெற்றுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில ரயில் பாதைகள் மற்றும் ரயில்களும் பழுதடைந்து காணப்படுவதாக ரயில்வே தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இதற்குக் காரணம், நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாட்டால் ரயில்வே உதிரிப்பாகங்கள் மற்றும் ரயில்வேக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கொள்ளுப்பிட்டிக்கும் கொம்பனித் தெருவுக்குமிடையிலான பாலம் உடைந்துள்ளமையால் கரையோரப் பாதையில் புகையிரத தாமதம் தொடரலாமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து வெள்ளவத்தை வரை அனைத்து ரயில்களும் ஒரே ஒரு பாதையில் மட்டுமே இயக்கப்படுகின்றன.

பழுதடைந்த பாலத்தை சீரமைக்கும் பணி தொடங்கியுள்ளதால், நாளை திங்கட்கிழமை முதல் கடலோரப் பாதையில் ரயில் வழக்கம் போல் இயக்கப்படுமென ரயில்வே திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## பெருந்தோட்ட மாணவர்களின்...

கொள்கை ஆய்வுகள் நிறுவனம் (institute of policy studies) இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இதன்படி, பாடசாலை மாணவர்களை தவிர்த்து, வயது வந்தவர்களின் பணமீட்டும் திறனை விரிவுபடுத்தும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

கொள்கை ஆய்வுகள் நிறுவனக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், தாழ்த்தப்பட்ட பகுதிகளில் உள்ள பெரியவர்களின் வருமான ஆதாரங்களை அதிகரிக்க சிறப்பு திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் துறை மாணவர்களின் அவல நிலையை மையமாகக் கொண்ட ஆய்வுகள், தோட்டப் பகுதிகளில் பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது.

பெருந்தோட்டத் துறையில் சுமார்4 வீதமான ஆரம்பநிலை மாணவர்கள், 20 வீதமான இடைநிலை மாணவர்கள் மற்றும் 26 வீதமான கல்லூரி மாணவர்கள், தமது கல்வியை இடைநடுவில் நிறுத்தியுள்ளனர்.

இதற்கு நேர்மாறாக, நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் இந்த விகிதங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இது சமூகங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை பிரதிபலிக்கின்றன.

இந்தநிலையில் பெருந்தோட்டச் சமூகங்களில் மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு இலவச உணவு திட்டத்தை தொடர வசதி செய்வது, சிறுவர் தொழிலாளர்களைக் குறைப்பதற்கான மற்றொரு சாத்தியமான தீர்வாக இருக்கும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

## காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு...

செட்டிக்குளம் பிரதேசத்தின் காணிப்பிரச்சினை தொடர்பில் மத்தியஸ்தம் செய்து 03 மாதங்களுக்குள் தீர்வுகாணுமாறு வவுனியா மாவட்ட செயலாளருக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, இது தொடர்பில் நீதி அமைச்சு மற்றும் காணி அமைச்சிடம் விசாரணை செய்வதாகவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்ட சில விவசாய நிலங்கள் தொல்பொருள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளமையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

வடமாகாண மக்களின் வீட்டுப் பிரச்சினை தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், வடமாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலுமுள்ள மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் உள்ளதாகவும், அதற்கு மேலும் சுமார் 3,000 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நாடு முழுவதும் தற்போது பல வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், வடக்கு மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு விரைவான தீர்வுகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வவுனியா குளம் மற்றும் திருக்குளம் குளத்தை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் தேவைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இதன் போது ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

மாவட்டத்திலுள்ள குளங்களை புனரமைத்தல், உரப் பிரச்சினைக்கு தீர்வு காணல் மற்றும் விநியோக நடவடிக்கைகளை சீர்படுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

வடமாகாணத்தில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் வைத்தியர் பற்றாக்குறை குறித்தும் இதன் போதுகவனம்செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி தேவையான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்தலில் இடம்பெறும் பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுத்தீன் விளக்கமளித்ததுடன்,அது தொடர்பில் விரைவாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நகர அபிவிருத்தி வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், றிசாத் பதியுத்தீன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## நாட்டில் டெங்கு நோய் பரவல்...

42 வீத டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டம் 05 வீதம், கண்டி மாவட்டத்தில் இருந்து 10 வீதம், புத்தளம் மாவட்டத்தில் இருந்து 08 வீதம், பதுளை மாவட்டத்தில் இருந்து 04 வீத நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பிலியந்தலை, ஹோமாகம, பிடகோட்டே, கொத்தடுவ, பியகம, திவுலப்பிட்டிய, கட்டான, மஹர, மீரிகம, களுத்துறை, ஹாரிஸ்பத்துவ, வத்தேகம, மஹவெவ மற்றும் வரக்காபொல பிரதேசங்களில் உயர் அபாய நிலைகள் குறைந்துள்ளதுடன், நீர்கொழும்பு, பாணந்துறை, யட்டிநுவர, கரந்தெனிய, மன்னார், புத்தளம் உள்ளிட்ட பகுதிகள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதிகபட்ச நோயாளர்களின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தில் 11,364 ஆகவும், இரண்டாவது அதிக எண்ணிக்கையான நோயாளிகள் கம்பஹா மாவட்டத்திலிருந்து 7,803 ஆகவும் பதிவாகியுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 4,897 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 3,435 பேரும், காலி மாவட்டத்தில் 3,273 பேரும், கேகாலை மாவட்டத்தில் 2,704 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் 2,681 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 2,434 பேரும், புத்தளம் மாவட்டத்தில் 2,036 பேரும் ,ஏனைய மாவட்டங்களிலிருந்து 2,000க்கும் குறைவான நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

# எங்கள் கருத்து

## நெருக்கடியை மென்மேலும் சிக்கலாக்கும் முயற்சிகள்!

ஊழியர்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டிய தொழிற்சங்கத் தலைவர்கள், தங்களது பதவியை எவ்வாறெல்லாம் தவறாகப் பயன்படுத்துகின்றனரென்பது கவலைக்குரியது.

உண்மையில் தொழிலாளர்கள்தான் இங்கே பலிக்கடாக்கள் ஆவர். தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் மத்தியில் இப்போது அரசியல் எதிர்பார்ப்புகள் கிடையாது. இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு விரைவில் மீண்டெழ வேண்டுமென்பது மட்டுமே அவர்களது ஏக்கம். அரசியல் நோக்கங்களுக்காக ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்க வேண்டுமென்பது தொழிலாளர்களின் எண்ணமல்ல!

பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பிரிவினரும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்கின்றனர். அவர்கள் உளப்பக்குவம் குறைந்த இளவயதினராவர். நாட்டின் எதிர்காலம் குறித்த தெளிவான சிந்தனைகளை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. பொருளாதார மீட்சிக்கான பொருத்தமான திட்டங்களை முன்வைக்கக் கூடியவர்களாக அவர்கள் இல்லை. ஆனாலும் ஏதோவொரு எழுச்சியில் அவர்கள் போராடுகின்றனர்.

இவை அனைத்துக்கும் அப்பால் நாட்டின் புத்திஜீவிகள் சமூகத்தினர் தற்போது வெளிப்படையான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

'பொருளாதார மீட்சியென்பது உடனடியாக சாத்தியமாகக் கூடியதல்ல. அதற்கு நீண்ட காலம் தேவைப்படலாம். போராட்டங்கள் தொடருவதாலோ, சுற்றுலாத்துறையை முடக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைத் தடுக்கும் முயற்சிகளாலோ நன்மைகள் விளையப் போவதில்லை. மாறாக, பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடையவே செய்யும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீட்டெடுப்பதற்கான சீரான பாதையில் செல்கின்றார். இன்றைய நிலைமையில் நாட்டின் தலைமைப் பதவிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர ஆற்றல் மிகுந்தவர்கள் எவருமே இல்லை. எனவே நிலைமையை மேலும் சிக்கலாக்கும் வகையில் எதிரணியினர் செயற்படலாகாது' என்பதே புத்திஜீவிகள் சமூகத்தின் வேண்டுகோளாக உள்ளது.

## சட்டக் கல்லூரி நுழைவுப்...

இந்த விவகாரம் தொடர்பில் சட்ட ஆய்வு கவுன்சிலின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் நீதி அமைச்சர் நாளைய தினம் சபையில் அறிவிப்பாரென்றும் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் நேற்று மீண்டும் சபையில் வலியுறுத்தினர்.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் கூடியது. அதன் போது விசேட கூற்றை முன்வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சட்டக் கல்லூரி பரீட்சை விவகாரம் தொடர்பில் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

ஆங்கில மொழியில் மாணவர்கள் தேர்ச்சி பெற வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்,ஆனால் ஒரே முறையில் ஆங்கில மொழியில் மாத்திரம் தான் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாது அதற்கு ஆகக் குறைந்தது மூன்று வருட கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

## உண்மை நிலையை கண்டறிய...

பாரபட்சமுமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சபையில் தெரிவித்த பிரதமர், அது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழு ஒன்றை அரசாங்கம் ஓமான் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றும் இலங்கை பணிப்பெண்கள் ஓமான் நாட்டில் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் பல்வேறு கேள்விகளை எழுப்பினர். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். வெளிநாடுகளில் இலங்கையர் எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பில் ஆராயவும்,முறையற்ற வகையில் வெளிநாடுகளுக்கு செல்வதை தடுக்கவும் புதிய சட்டம் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

இலங்கை பணிப்பெண்கள் ஓமான் நாட்டில் நெருக்கடிக்குள்ளான விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பில் ஆராய விசேட குழுவொன்று ஓமான் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களில் ஒருசிலர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பணிப்பெண்கள் இவ்வாறான நெருக்கடிகளை எதிர்க்கொண்டுள்ள விவகாரம் தேசிய பிரச்சினையாக கருதப்படுவதுடன் அதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிரான விசாரணைகள் எந்தவித பாரபட்சமுமின்றி முன்னெடுக்கப்படும்.

சுமார் ஒன்பதரை இலட்சம் இலங்கை பணிப் பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து முறையாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொண்டுள்ளார்கள்,

## அரசியல் தலைவர்களை... (04 ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பாக முருகன், பல ஆண்டுகள் கழித்து தனது வழக்கறிஞர் மூலம் அளித்த பேட்டியில், "'சிவராசன் மாஸ்டரை ( ராஜீவ் கொலைக் குற்றவாளிகளில் முதன்மையானவர். பெங்களூரில் தலைமறைவாக இருந்தபோது சிபிஐ சுற்றிவளைத்ததால் தற்கொலை செய்துகொண்டவர்) ஒருநாள் பார்க்கப் போனேன். 'இந்திய ராணுவத்தோடு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஏற்பட்ட முரண்பாட்டால், இங்குள்ள அரசியல் தலைவர்கள் பலரை நாம் பகைத்துக்கொள்ளும்படி ஆனது. ஆகவே, நல்லெண்ணத்தை வளர்க்க அவர்கள் வரும்போது மாலை அணிவிக்க தமிழ்ப் பெண் ஒருவர் வேண்டும்' என்றார். எனக்கு தமிழகத்தில் தெரிந்த ஒரே பெண் நளினி மட்டும்தான். எங்கள் அமைப்பைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் சிவராசன் கேட்டார் என்று நளினியை அறிமுகம் செய்துவைத்தேன். எனக்கு அமைப்பால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலையும் மீறி, ஒரு மூத்த உறுப்பினரைச் சந்தித்து நளினியை அறிமுகம் செய்துவைத்தேன். நான் வாழ்க்கையில் செய்த ஒரே தவறு அதுதான்! என்றார்.

1999ம் ஆண்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், "கட்டளையை நிறைவேற்றும் அமைதியான பங்கேற்பாளராகவே நளினி இருந்தார். அவர் இந்த சதித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தார் என்று கூற ஆதாரங்கள் ஏதும் இல்லை. மிகவும் மோசமான சதித்திட்டத்திற்குள் சிக்கிக் கொண்டதால் நளினி போன்ற ஒரு பெண்ணால் துணிவாக பின் வாங்கி இருக்க முடியாது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

30 ஆண்டு கால சிறை வாழ்க்கையில், 2016 ஆம் ஆண்டில் நளினியின் தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அவருக்கு 12 மணி நேர அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் மகளின் திருமண ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக 2019 ஜுன் 25 அன்று 30 நாள்களுக்கு பரோலில் விடுவிக்கப்பட்டார். இது 51 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டு செப்டம்பர் 15 அன்று மீண்டும் சிறைக்கு சென்றார். தொடர்ந்து, கடந்த டிசம்பர் 2021 முதல் பரோலில் இருந்தவர் தற்போது உச்ச நீதிமன்ற உத்தரவால் விடுதலை ஆகியிருக்கிறார்.

## வரவு-செலவுத் திட்டம்;

# ஒரு பொருளாதார பார்வை!

**சுஜப் எம்.காசிம்**

ஐம்பது வருட அரசியலில், சகல பதவிகளையும் வகித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதற் தடவையாக சமர்ப்பித்த பட்ஜட் இது. பொருளாதாரத்தின் உச்ச நெருக்கடியில் இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்பார்ப்புக்களை ஒதுக்கிவிட்டு மீள எழுவதையே நாம் எதிர்பார்க்க வேண்டும். பெரும்பாலும் இந்த பட்ஜட் இதைத்தான் எதிர்பார்க்கிறது. அரசாங்கத்தால் வழங்கப்படும் கடன்கள் குறித்த நோக்கங்களை வெல்கிறதா? இல்லை, கடன் பெறுநர்கள் அடைந்த நஷ்டத்தையும் சேர்த்து அரசாங்கமே வழங்க நேரிடுகிறதா?

கரும்பு, கராம்பு, கறுவா, கோப்பி, ஏலம், உள்ளிட்ட மரபு உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் மானியம் வழங்குவதுடன், தேவை ஏற்படின் கடன்களையும் வழங்குகிறது. ஆனாலும், இத்துறைகள் எதிர்பார்த்த வருமானத்தை பெறவில்லை.

அதாவது, அந்நிய செலாவணிக்குப் பங்களிக்கவில்லை. இதனால், இவர்களுக்கு வழங்கிய கடன்களை மீளப்பெற முடியாதிருப்பதாக ஜனாதிபதி தனது பட்ஜட் உரையில் சுட்டிக்காட்டினார். இவ்வாறானவர்களுக்கு கடன் வழங்கும்போது, அவர்களது உற்பத்தித் திறன் மற்றும் மீளளிக்கும் இயலுமைகளை அடையாளம் கண்டுதான் கடன் வழங்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தி உள்ளார். விவசாயத்துறை விற்பன்னர்களை உள்ளடக்கிய புதிய சபையை அமைத்து, இவர்களது உற்பத்தி திறன், கடன்களை மீள வழங்கும் இயலுமைகளை அடையாளம் காணவும் இந்த பட்ஜட் ஆலோசிக்கிறது.



கைத்தொழில் துறையிலும் கூடிய அவதானம் செலுத்தியுள்ள இந்த பட்ஜட், இயன்றவரை உள்நாட்டில் கிடைக்கும் மூலப் பொருட்களிலிருந்து இவற்றை உற்பத்தி செய்ய வலியுறுத்துகிறது. அந்நியசெலாவணி (டொலர், ரியால், யூரோ, யுவான், ரூபிள்) வெளிப்பாய்ச்சலை தடுப்பதுதான் இதன் பிரதான நோக்கு. வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்படும் டொலர் உள்ளிட்ட சர்வதேச நாணயங்களின் இருப்புக்களை அல்லது வைப்புக்களை உள்நாட்டில் பேணுவது அவசியம். நாட்டிலுள்ள எந்த வங்கியானாலும் (வணிக வங்கிகள், அரச வங்கிகள், தனியார் வங்கிகள்) இந்த இருப்புக்களைப் பேணினால்தான் தற்போதைய நிதி நெருக்கடியைத் தீர்க்க முடியும்.

இவ்வாறுதான், சுற்றுலாத்துறையூடாகவும் அதிக அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள்வதற்கு இந்த பட்ஜட் ஆர்வம் செலுத்துகிறது. இதற்காக அரச வருமானத்தின் தொண்ணூறு வீதமானவற்றை வரியிலிருந்து பெறுவதற்கு அரசாங்கம் முயற்சித்துள்ளது. காரணம், வெளிநாட்டு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி, சர்வதேச நாணயங்களின் வெளிப்பாய்ச்சலை தடுப்பதோடு பணம் அச்சிடுவதைத் தவிர்த்து பணவீக்கத்தை ஒழிக்கவும் இதன் மூலம் முனைகின்றது. 2020இல் 2080 பில்லியன் டொலராக இருந்த அரசிறை 2023இல் 3400 பில்லியனாக உயர்த்தப்படுவது நல்லவிடயம்தான். ஆனால், மக்களை சுரண்டிய வருவாயாக அல்லவா உள்ளது! இவ்வாறு பல்வகைக் கோணங்களில் இந்த பட்ஜட் புரட்டிப் பார்க்கப்படுவது ஏன்?

ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளை, இன்னும் ஒரு தடவை நீடிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை. இதனால், தேர்தலை வலியுறுத்துகின்றன எதிர்க்கட்சிகள். சபைகள் எல்லாவற்றையும் ஆணையாளர்களின் கீழ் கொண்டுவந்தால் எண்ணாயிரம் உறுப்பினர்களின் சம்பளம் மீதமாகும்.

இதை, அரசாங்கத்தின் செலவினங்களுக்கு பயன்படுத்தினால் சில பொருட்களின் விலைகளையாவது குறைக்க முடியும். இது அதிகாரத்தைப் பற்றிச் சிந்திக்கும் காலமல்ல, வருமானத்துக்கு வியூகம் வகுக்கும் காலம்.

தேர்தலைக் கோருவோர் இது பற்றிச் சிந்திக்கட்டும். நிதியில்லாததால் உள்ளூராட்சி சபைகளில் உள்ளவர்களே எதையும் செய்யாதுள்ளனர். புதிதாக வருபவர்கள் இந்நிதி நெருக்கடிக்குள் எதையுமே செய்ய முடியாது. மாறாக, அவர்கள் உழைப்பதையும் சுருட்டிக்கொள்வதையும் தவிர.



நாட்டின் அந்நியசெலாவணிக்குப் பங்களிக்கும் தனி நபர் உழைப்பே இப்போது தேவை. மக்கள் செலுத்தும் வரியில் உழைப்போரும், உறிஞ்சுவோரும் தேவையில்லை. கடல்சார் உற்பத்திகள், கைத்தொழில் முதலீடுகள், விவசாய உற்பத்திகள், சுற்றுலாத்துறையைக் கவரும் நுகர்வுகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களைத்தான் இந்த பட்ஜட் ஊக்குவிக்கிறது. இதற்கான வாய்ப்புக்களை மக்களுக்கு வழங்க எதிர்பார்க்கும் இந்த பட்ஜட், சில விடயங்களில் வரிகளைக் குறைத்தும், சிலவற்றில் கூட்டியும் உள்ளது.

நாடு இப்போதுள்ள நிலையையும் கடந்த ஆறுமாதங்களுக்கு முன்னர் இருந்த சூழலையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் "காலமறிந்து காரியமாற்றின் ஞாலமும் கைகூடும்" என்ற திருக்குறள் ஞாபகத்துக்கு வருகிறது.

எனவே, இந்த பட்ஜட்டின் பிரதிபலன்கள் காலத்துக்கு கை கூடுமா? என்பதை களமறிந்து கணிப்போம்.

# போருக்குப் பிந்திய அரசியலுக்கான ஆரம்பப் புள்ளி கற்றுக் கொண்ட பாடங்கள் படிப்பினைகளின் அமுலாக்கமே

**கருணாகரன்**

"போருக்குப் பிந்திய அரசியல் என்கிறீர்களே! அது என்ன?" என்று கேட்டார் மூத்த அரசியல் தலைவர் ஒருவர்.

"அதைத்தானே சர்வதேச சமூகம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது" என்றேன்.

"சர்வதேச சமூகம் என்ன சொல்லுது?" என்று திருப்பிக் கேட்டார் தலைவர்.

"நான் உட்படப் பலர் அதைப் பற்றி எழுதி வருகிறோம். சிராஜ் மஷ்ஹூர் போன்றோரின் பேட்டிகளில் இதுபற்றி விரிவாக உரையாடப்பட்டுள்ளது. இதை விட ஊடகத்துறையினர், சமூகச் செயற்பாட்டியக்கத்தினர் போன்றோருக்கெல்லாம் பல கோடிக் கணக்கான பணத்தைச் செலவழித்து, போருக்குப் பிந்திய நிலைமாறு காலகட்ட நீதியைப் பற்றியும் போருக்குப் பிந்திய அரசியற் சூழமைவு பற்றியும் சர்வதேச சமூகத்தினர் விளக்கியிருக்கிறார்கள். வதிவிட கருத்தமர்வுகள் பல நடத்தப்பட்டன. போருக்குப் பிந்திய அரசியல் முன்னெடுப்புக்காக செயலணிகள் கூட உருவாக்கப்பட்டன. புத்திஜீவிகள், கலைஞர்கள் போன்றவர்களும் இதற்கான வேலைத்திட்டங்களில் இணைந்திருந்தனர். அரசியல் கட்சிகள், தலைவர்கள் என அரசியற் தரப்புக்கும் போருக்குப் பிந்திய அரசியல் பற்றி வலியுறுத்தப்பட்டது. ஏன், அரசாங்கத்துக்கும் தொடர்ச்சியாக இதைப்பற்றிய அறிவுரையைச் சர்வதேச சமூகம் சொல்லி வந்துள்ளதே. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் நாட்டில் ஜனநாயகச் சூழலை மேம்படுத்துவதற்குமாக அரசியலமைப்புத்திருத்தம் உட்பட பல வேலைத்திட்டங்களை வலியுறுத்தியதே இப்படியெல்லாம் இருந்தும் இதைப்பற்றி விளக்கம் கேட்கிறீர்களே! என்று கேட்டேன்.

"ஓ, அதுவா? அது ஏதோ என்.ஜி.ஓ வேலையாக்கும் எண்டெல்லோ நினைச்சன்" என்றார் தலைவர்.

இதற்கு என்ன பதிலைச் சொல்ல முடியும்?

"சரி, நீங்கள் சொல்கிற மாதிரி என்.ஜி.ஓ வேலைத்திட்டம் என்று வைத்துக் கொண்டாலும் அவர்கள் சொல்வதை இவர்கள் கேட்டார்கள் அல்லவா! இந்த வேலைத்திட்டத்தில் வழங்கிய கொடைகளைப் பெற்றிருக்கிறார்களே! மட்டுமல்ல, தென்னாபிரிக்கா உட்பட சில வெளிநாட்டுப் பயணங்களுக்கும் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இதெல்லாம் இலங்கைக்குச் சரிப்பட்டு வராது என்று யாராவது எப்போதாவது சொல்லியிருக்கிறார்களா?... அப்படிச் சொல்லி மறுத்திருந்தால் கொடைகள் கிடையாது. இதை அவர்கள் எப்படிப் பார்ப்பார்கள்?" என்று கேட்டேன்.

தலைவருக்கு ஒரு கணம் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. என்றாலும் அவர் தலைவரல்லவா! லேசில் விட்டு விடுவாரா என்ன?

"அப்பிடியெண்டால் நீங்கள் வெளிநாட்டுக்காரர் சொல்லிறதுக்கெல்லாம் தலையாட்டச் சொல்கிறீர்களா? இந்த வெளிநாட்டுச் சக்திகளை நம்ப முடியாது. அவர்களால்தான் இலங்கைக்கு வினை வந்ததே! இல்லையெண்டால் தமிழர்கள் தனியாகவும் சிங்களவர்கள் தனியாகவும் இருந்திருப்பம். இங்க வந்து எங்கட நாட்டைச் சுரண்டிக் கொண்டு போனது போதாதெண்டு, இனங்களுக்கிடையில் முரண்பாட்டை உருவாக்கி மோதவிட்டுப் போனார்கள். இப்ப சமாதானம் பேச வருகினமாம். ஆருக்கு விளையாட்டுக் காட்டுகினம்? அவையள் தார காசை வாங்குவம். அதில என்ன தப்பிருக்கு? உண்மையில அது எங்கட காசுதான். இஞ்ச, இந்த மண்ணில சுரண்டிக்கொண்டு போன காசு. அதை இப்ப செலவழிக்கினம். செலவழிக்கட்டும். நல்லாச் செலவழிக்கட்டும்" என்றார் தலைவர் சற்றுச் சூடாக.

எனக்கு நாக்கு எழவே இல்லை. மூச்சே நின்று விடும் போலிருந்தது. அதற்குள்ளும் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

இந்த மாதிரி அறிவாளித் தலைவர்கள் இருக்கும் வரையிலும் இலங்கைக்கு....... (கீறிட்ட இடத்தில் எதையாவது போட்டு நிரப்பிக் கொள்ளுங்கள்) இல்லை. இவர்களுக்கு எல்லாமே தெரியும். ஆனால், தெரியாததைப்போல நடிக்கிறார்கள். அல்லது இந்த மாதிரி ஏமாளிகளைப் போலிருந்து எல்லோரையும் ஏமாற்றிப் பிழைக்கிறார்கள்.

இவர்களைப் போலத்தான் ஊடகத்துறையினரும். போருக்குப் பிந்திய ஊடக அளிக்கை பற்றிய சில அமர்வுகளுக்கு நானும் சென்றிருந்தேன். ஊடகத்துறையினர் பலரும் பங்கெடுத்திருந்தனர். அங்கே வழங்கப்படுகின்ற கொடைகளைப் பெறுவதிலும் அளிக்கப்படும் விருந்தை ஆர்வத்தோடு ருசித்துக் களிப்பதிலுமே பெரும்பாலானோர் கரிசனை காட்டினர். அங்கே பேசப்பட்ட விடயங்களில் ஒரு பத்து வீதமானவற்றைக் கூடக் கவனத்திற் கொள்ளவில்லை. பின்னாளில் எழுதப்பட்ட, எழுதப்படுகின்ற செய்திகள், கட்டுரைகள் எல்லாவற்றிலும் எந்த விதமான மாற்றங்களும் இல்லாமல் போருக்கு முந்திய, போர்க்காலத்தைய இனவாதத்தையே அள்ளி இறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**ஆக, அத்தனை பிரச்சினைகளும் அப்படியே கொதித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் புதிய பிரச்சினைகள் வேறு உருவாகியுள்ளன. பிரச்சினைகள் கொதிக்கக் கொதிக்க சமூகங்களுக்கிடையிலான முரண்பாடு அதிகரிக்கும்**

சிலவேளை அரசியல்வாதிகளை விடவும் மோசமாக ஊடகத்துறையினர் நடந்து கொள்கின்றனர். உலகளாவிய அளவில் போருக்குப் பிந்திய சமூகங்கள் எப்படி தீர்வைக் கண்டிருக்கின்றன? அங்கெல்லாம் ஊடகத்துறை எப்படிச் செயற்பட்டிருக்கிறது? ஊடகவியலாளர்களின் பங்களிப்புகள் எப்படி இருந்தது? இங்கே எப்படி அந்தப் பங்களிப்பைச் செய்யலாம்? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதைக் காணவில்லை. வெளிநாட்டுப் பயணங்களில் அழைத்துச் செல்லப்பட்டு வந்தவர்கள் கூட அங்கே எதைப் பெற்றார்கள் என்று தெரியவில்லை.

இவர்களிடமும் என்.ஜி.ஓ மனநிலையே உள்ளது போலிருக்கிறது.

புத்திஜீவிகளின் கதையைச் சொல்ல வேண்டாம். அவர்களுக்கு இது மேலதிக உழைப்பு – மேலதிக வசதி. அப்படித்தான் நடந்து கொண்டனர். அதுவும் நல்லாட்சிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஒரு பெரிய கட்டமைப்பு மீளிணக்கச் செயற்பாடுகளுக்கென உருவாக்கப்பட்டிருந்தது. அதில் நூற்றுக்கணக்கான சமாதான மேதைகள் பங்கெடுத்திருந்தனர். ஏராளமான திட்டங்கள் உருவாக்கப்பட்டது. கடைசியில் மிஞ்சியது?

கலைஞர்கள் பாவம். அவர்களுக்கு இது ஒரு மேடை. எதிர்பாராத ஒரு சிறிய வாய்ப்பு. ஆடினார்கள், பாடினர்கள், ஓவியம் தீட்டினார்கள், சில ஒளிப்படங்களை எடுத்து காட்சிப்படுத்தினார்கள். சிலர் சில விவரணப் படங்களையும் குறும்படங்களையும் சமாதானத்துக்காக எடுத்தார்கள்.

சமாதான தேவதை மட்டும் இறங்கி வரவேயில்லை.

இவர்களே இப்படியென்றால், அரசும் கட்சிகளும் எப்படி நடந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். வழங்கப்பட்ட கொடைகளை எல்லாம் வாங்கிக் கொண்டு ஏமாற்றின.

இறுதியில் போருக்குப் பிந்திய அரசியல் காணாமலே போய் விட்டது, என்பதால்தான் இலங்கையில் எந்த மாற்றமும் நிகழவில்லை. சமாதானம் உருவாகவில்லை. சமூகங்களுக்கிடையிலான இணக்கம் ஏற்படவில்லை. புரிந்துணர்வு உருவாகவில்லை. பகை மறப்பு நிகழவில்லை. பொறுப்புக்கூறும் தன்மை ஏற்படவில்லை. நீதி வழங்கப்படவில்லை. நிவாரணம் அளிக்கப்படவில்லை. எதற்கும் எந்தப் பரிகாரமும் காணப்படவில்லை.

ஆக, அத்தனை பிரச்சினைகளும் அப்படியே கொதித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் புதிய பிரச்சினைகள் வேறு உருவாகியுள்ளன. பிரச்சினைகள் கொதிக்கக் கொதிக்க சமூகங்களுக்கிடையிலான முரண்பாடு அதிகரிக்கும். முரண்பாடு அதிகரிக்க மக்களின் வாழ்க்கை பாதிப்படையும். நாடு பின்னடையும். அதுவே நடந்தது – நடந்து கொண்டிருக்கிறது.

இன்று இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது என்றால் அதற்கு தனியே ராஜபக்ஷக்களின் ஊழல் மட்டும் காரணமில்லை. அல்லது அவர்களுடைய தவறான பொருளாதாரத் திட்டங்கள்தான் பிழைத்தன என்றில்லை. இனப்போரும் அது உண்டாக்கிய உற்பத்தித்துறை வீழ்ச்சியும் தொடரும் முரண்பாடும் காரணமாகும். அதிகரித்த படைத்துறைச் செலவு எதனால் ஏற்பட்டது?

**ஆளாளுக்குப் பழியுணர்ச்சியைப் பெருக்கிக் கொண்டு வென்றவர் ஒரு தரப்பிலும் தோற்றவர் இன்னொரு தரப்பிலுமாக நின்று அடிபடுகிறார்கள்**

உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடி இப்பொழுது அனைவரையும் பாதிக்கிறது என்றால், அதற்குக் காரணம் முழு இலங்கையர்களும்தான். அவர்கள் விட்ட தவறுகள்தான். இதில் யாரும் யாரையும் காரணம்காட்டி விட்டுத் தப்பி விட முடியாது.

ஆனால், இதைப்பற்றிப் பகிரங்க வெளியில் வெளிப்படையாகப் பேசுவதற்கு யாரும் முன்வருவதில்லை. கடந்த வாரம் விக்டர் ஐவன் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அதில் சிங்களத்தரப்பின் உளச்சிக்கல்களைப் பற்றியும் அநாகரிக தர்மபால உருவாக்கிய சிங்கள வரலாற்றுப் பெருமிதம் எப்படிச் சிங்கள மக்களைப் பிழையான சுழிக்குள் வீழ்த்தியது என்பதைப்பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களைப் பற்றி ஆராய்கின்ற ஐவன், இனப்பிரச்சினையும் அதன் விளைவான போரும் இன்னும் தொடருகின்ற இனவாதமும் செலுத்தும் தாக்கத்தைப்பற்றிப் பேசவேயில்லை. ஏன் யுத்தத்திற்குப் பின் அரசும் சிங்களச் சமூகத்தினரும் செய்திருக்க வேண்டிய பொறுப்பான வேலைகளைப் பற்றி ஒரு சொல் சொல்லவில்லை.

கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கை அரசுக்கும் இலங்கைச் சமூகங்களுக்கும் ஏராளம் நிதியை சர்வதேச சமூகம் அள்ளிக் கொடுத்தது. பல அறிவுரைகளைச் சொன்னது. சமாதானத்துக்கான வேலைத்திட்டங்களையும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் பரிந்துரைத்தது. சுருக்கமாகச் சொன்னால் நிறைய வீட்டுப்பாடங்கள் கொடுக்கப்பட்டன.

காசை வாங்கிக் கொண்டு அவ்வளவு பரிந்துரைகளும் அறிவுரைகளும் காற்றில் பறக்க விட்டன. அதற்கு வழங்கப்பட்ட தண்டனையே இப்போதுள்ள நெருக்கடி. இதைப்பற்றியெல்லாம் ஐவன் போன்றோருக்கு நன்றாகத் தெரியும். ஐவன் போன்ற சிங்கள புத்திஜீவிகள், ஊடகத்துறையினருக்கு மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம் தரப்பிலுள்ள புத்திஜீவிகள், ஊடகத்துறையினருக்கும் நன்றாகத் தெரியும்.

போரில் நாடு அழிந்ததும் வாழ்க்கை சுருங்கிக் கிடந்ததும் எல்லோருக்கும் மறந்து விட்டது.

பதிலாக ஆளாளுக்குப் பழியுணர்ச்சியைப் பெருக்கிக் கொண்டு வென்றவர் ஒரு தரப்பிலும் தோற்றவர் இன்னொரு தரப்பிலுமாக நின்று அடிபடுகிறார்கள். இனவாதம் முன்னரை விடப் பன்மடங்கு செழித்து வளர்ந்துள்ளது. இந்த இனவாதப் போக்கிற்குள் நின்று கொண்டு அமைதியைக் காண முடியாது. இனவாதத்தைப் பெருக்கிக் கொண்டு தீர்வையும் எட்டமுடியாது. இல்லை, இதற்குள் தீர்வைக் காண முடியும் என்றால், அது எப்படி என்று அவர்கள் சொல்ல வேண்டும். அதைச் செய்து காட்ட வேண்டும்.

இப்போதைய போக்கில் ஒரு போதுமே இலங்கையில் அமைதி கிட்டாது. அமைதி கிட்டவில்லை என்றால் நாட்டில் முன்னேற்றம் ஏற்படாது. என்ன வித்தைகளைச் செய்தாலும் நெருக்கடியைக் குறைக்க முடியாது.

ஆகவே போருக்குப் பிந்திய அரசியலை முன்னெடுத்தே தீர வேண்டும்.

போருக்குப் பிந்திய அரசியல் என்றால், எதன் பொருட்டுப் போர் உருவாகியதோ அந்தக் காரணங்களை இல்லாமலாக்குவது. இதற்கே கற்றுக்கொண்ட பாடங்கள், படிப்பினைகள். இதற்கே பகை மறப்பு. இதற்கே நல்லிணக்கம். இதற்கே நீதி பரிகாரம். இதற்கே பொறுப்புக் கூறல்.

இதைச் செய்வதாக இருந்தால் முதலில் நேர்மையான முறையில் தம்மை இதற்காக அர்ப்பணிக்க வேண்டும். இதில் வரும் சவால்களை ஏற்றுக்கொள்ளும் துணிவு வேண்டும். அர்ப்பணிப்பு உணர்வு வந்து விட்டால் அதற்கான துணிவும் பிறந்து விடும்.

சில சந்தர்ப்பங்களில் கட்சியை மீறி, அது பிரதிபலிக்கின்ற சமூகத்தை மீறிச் செயற்படவும் வேண்டும். தென்னாபிரிக்காவில் இதை மண்டேலா செய்தார். என்றபடியால்தான் அவரால் அங்கே நிறவெறியை – இன முரணை முடிவுக்குக் கொண்டு வரக்கூடியதாக இருந்தது. மண்டேலாவுக்கும் நெருக்கடிகள் ஏராளமாக இருந்தன. முதற்கட்டத்தில் அவர் வெள்ளையர்களின் நெருக்கடியைச் சந்தித்தார். இரண்டாம் கட்டத்தில் சொந்த இனத்தவர்களாகிய கறுப்பினத்தவர்களாலேயே நெருக்கடியைச் சந்தித்தார். ஆனால் உறுதியும் அர்ப்பணிப்பு மனநிலையும் மண்டேலாவுக்கு இருந்ததால் அதையெல்லாம் வென்றார்.

தலைமைத்துவம் என்பது அதுதான்.

இலங்கையின் மரபு நிலைப்பட்ட கட்சி அரசியல், தேர்தல் வெற்றிக்கான அரசியல் போன்றவற்றை மனதில் வைத்துக்கொண்டு இதையெல்லாம் செய்யவே முடியாது. அது வேறு. இது வேறு. இது நாட்டை மீட்பதற்கான முதலாம் கட்டப் பொறிமுறையாகும். நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்றே எல்லா ஆட்சியாளர்களும் பிரகடனங்களைச் செய்தனர். இந்தப் பிரகடனங்களை நம்பியே மக்களும் அவர்களுக்கு வாக்களித்தனர். ஆனால், சொன்னபடி நாடு கட்டியெழுப்பப்பட்டதா?

இதைப்பற்றி நாம் தெளிவாகச் சிந்திக்க வேண்டும்.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள தேசமல்ல. மாறாக இது ஒரு பல்லின நாடு. இங்கே ஒரு சுவாரசியமான முரணையும் அருமையான உண்மையையும் நாம் அறிய முடிகிறது. அநாகரிக தர்மபால தொடக்கம் இன்று வரையான பெரும்பாலான சிங்கள அறிஞர்களும் அரசியல்வாதிகளும் இலங்கையை பௌத்த சிங்கள தேசம் என்றே கட்டமைத்து வந்துள்ளனர். சிங்கள மக்களும் இந்த நம்பிக்கையோடுதான் உள்ளனர். இந்தப் பதட்டத்தில்தான் தொல் அடையாளங்களைத் தேடும் அவசரம் இந்த நெருக்கடிச் சூழலிலும் முடுக்கி விடப்பட்டிருக்கின்றது.

ஆனால் சிங்களவர் அல்லாத ஏனைய மக்களும் சர்வதேச சமூகத்தினரும் இலங்கையை ஒரு பல்லின மக்கள் வாழும் நாடு என்றே கருதுகின்றனர். பல்லினங்கள் வாழுகின்ற நாடு என்ற அடிப்படையில் பன்மைத்துவம் பேணப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். இதற்கு மாறாகச் சிந்திப்பது என்பது எவ்வளவு மடத்தனமானது! இதேவேளை தமிழ்த்தரப்பிலும் இனவாதச் சிந்தனை நிறைய உண்டு. அதையும் சிங்கள இனவாதத்தையும் ஒரே நிலையில் பார்க்க முடியாது. ஆனாலும் இரு தரப்பிற்கும் பொறுப்புகளும் கடப்பாடுகளும் அதிகமுண்டு.

ஆகவே முதலில் போருக்குப் பிந்திய அரசியலுக்கான ஆரம்பப் புள்ளிகளை உருவாக்க வேண்டும். அதற்கு ஆரம்பமாகத் தேவைப்படுவது நம்முடைய மனநிலையில் உண்டாக வேண்டிய சிந்தனை மாற்றமாகும். அந்தச் சிந்தனை மாற்றத்தை உருவாக்குவதே முதற்கட்டப்பணி. ஆம், முதற்கட்டப் பணி கற்றுக் கொண்ட பாடங்கள் – படிப்பினைகளாகும்.

# நெருக்கடி மீண்டும் தலைதூக்குவதற்கு இடமளிக்காத முன்னேற்பாடு அவசியம்!

## தேசியப் பேரவையின் செயற்பாடுகள் தீவிரம்!

**நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள நிலைமை போன்றதொரு காலகட்டம் மீண்டும் ஏற்படாது தவிர்க்கும் நோக்கில் பொதுவான கொள்கைகளைத் தயாரிப்பதற்காக பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் உள்ளடக்கியதாக ஏற்படுத்தப்பட்ட தேசியப் பேரவையின் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**



பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித் திட்டங்களை அடையாளம் காண்பதற்கான உபகுழு மற்றும் குறுகிய, நடுத்தர, நீண்ட கால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான உபகுழு என்பன நியமிக்கப்பட்டு இக்குழுக்கள் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றன.

பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித் திட்டங்களை அடையாளம் காண்பதற்கான உபகுழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவும், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான உபகுழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் செயற்பட்டு வருகின்றனர்.

இந்தக் குழுக்கள் போக்குவரத்து, சுகாதாரம், வங்கி மற்றும் நிதி, மருத்துவம், வர்த்தகம், அரசநிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த பிரதிநிதிகள், நிபுணர்கள் எனப் பலதரப்பினரையும் சந்தித்துக் கருத்துக்களைப் பெற்று வருகின்றன. இவ்வாறு பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையிலான பரிந்துரைகள் தேசிய பேரவைக்கு முன்வைக்கப்படவுள்ளன.

இதில் பொருளாதார ஸ்திரத்தன்மை குறித்த உபகுழுவின் முதலாவது அறிக்கை அண்மையில் தேசியப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் கடன் மீளமைப்பு, அரச நிதிக்கொள்கை, மருந்துகளுக்கான கட்டுப்பாடு சுகாதாரமும் உணவு, மருந்துகளுக்கான தட்டுப்பாடுகளும், சுகாதாரமும் போஷாக்கும், வலு சக்தி, போக்குவரத்து போன்ற துறைகளில் நடத்திய கலந்துரையாடல்களுக்கு அமைவாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.





## உபகுழுக்களால் பலதரப்பட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு அறிக்கைகள் தயாரிப்பு

ஒன்பது துறைகள் தொடர்பில் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தொழில்சார் மட்டத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள் உபகுழு முன்னிலையில் அழைக்கப்பட்டு நடத்தப்பட்ட கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டே இதனைத் தயாரித்திருப்பதாக உபகுழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

உபகுழுவின் முழுமையான அறிக்கையை டிசம்பர் மாதம் தேசிய பேரவையிடம் கையளிக்க இருப்பதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டில் நிதி ஸ்திரத்தன்மை இன்றியமையாததாக இருக்கின்றபோதும், இறுக்கமான நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் முயற்சியின் போது பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கான அபாயம் காணப்படுகிறது. எனவே நிதி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இடையில் சமநிலையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இந்த உபகுழு சுட்டிக்காட்டியுள்ளது. ஏற்பட்டுள்ள பொருளாதார வங்குரோத்து நிலை மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்காக நிதித்துறையில் பொறுப்பு மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றை ஏற்படுத்துவதற்காக வலுவிலுள்ள சட்டங்களைத் திருத்துவதும் புதிய சட்டங்களை இயற்றுவதும் அவசியம் என்பதும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச கடன் முகாமைத்துவத்திற்காக புதிய சுயாதீன நிறுவனமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும், ஊழலைத் தடுப்பதற்கான பலமான புதிய சட்டமொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்றும், அரசியல்வாதிகளினதும், அமைச்சு உயர் அதிகாரிகளினதும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அனைவரும் அறியக் கூடியவாறு பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு உள்ளிட்ட சுகாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வு முன்மொழிவுகளாக, கொவிட் தொற்றுநோய் பரவிய காலத்தைப் போன்று பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் சுகாதார அவசர நிலைமையைப் பிரகடனம் செய்து அரசதனியார்துறை ஆகிய இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் பொதுவான வேலைத் திட்டமொன்றை வகுக்குமாறும் குழு பரிந்துரைத்துள்ளது.

போஷாக்கு மற்றும் உணவுப் பிரச்சினைக்கான தீர்வுகளாக வறுமை மற்றும் தொழிலின்மை காரணமாகப் பாதிக்கப்படுகின்றவர்கள் தொடர்பில் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும், கலாசார ரீதியில் வயது வந்தோருக்கான போசாக்கானது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், சமூகப்பாதுகாப்பு வலையொன்றை ஏற்படுத்துவதற்காக தரவு மேடையொன்றையும், அனுகூல மேடையொன்றையும் ஏற்படுத்த வேண்டும் என்பதுடன், இதற்கான செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடன் இருக்க வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காகப் பல்வேறு வேலைத்திட்டங்கள் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அவை சரியான முறையில் மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை என்பதால் முறையான பொறிமுறையொன்று அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் உப குழு வலியுறுத்தியுள்ளது.

அதேநேரம், இராணுவத்தினர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்கான அதிக செலவீனம் குறித்தும் இக்குழு கவனம் செலுத்தியுள்ளது. இத்துறைக்கு செலவு செய்யப்படும் தொகையானது கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு செலவு செய்யப்படும் தொகைக்கு சமமானது என்ற கருத்துக் காணப்படுவதால், யுத்தம் இல்லாத நாட்டில் பெருந்தொகையானவர்கள் அவசியமா என்ற கேள்வியும் தோன்றியிருப்பதாக உபகுழுவின் தலைவர் பாட்டலி சம்பிகரணவக்க சுட்டிக்காட்டினார்.

எனவே, இந்தத் தரப்பினரை நாட்டின் பொருளாதாரத்துக்கு எவ்வாறு சாதகமான முறையில் பயன்படுத்தலாம் என்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடு போன்ற காரணிகளுடன் தொடர்புபட்டுள்ள போக்குவரத்துத் துறையை வினைத்திறனாக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான யோசனைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது தவிரவும் நிதித்துறை மற்றும் வங்கித்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றியும் உபகுழு விரிவாகக் கலந்துரையாடியிருந்தது. இக்கலந்துரையாடல்களுக்கு வர்த்தக சமூகத்தினரும் அழைக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களும் பெறப்பட்டிருந்தன.

இதேபோல, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான உபகுழுவும் பல்வேறு தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது.

விசேடமாக அரசாங்கத் துறையை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்குத் தேவையான முக்கிய செயற்திறன் சுட்டியை அறிமுகப்படுத்துவது தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அத்துடன், அரசாங்கத் துறையை டிஜிட்டல் மயப்படுத்துவதன் அவசியம் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த உபகுழுக்கள் நடத்தும் கலந்துரையாடல்களின் அடிப்படையில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அவை தேசிய பேரவையிடம் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் அவை பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சபையில் சமர்ப்பிக்கப்படும்.

**பி.ஹர்ஷன்...**

---

# உலகத் தலைவராகிறார் பிரதமர் நரேந்திர மோடி

**இந்தியா, அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட 19 நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றிணைந்துள்ள ஜி–20 நாடுகளின் இரண்டு நாள் உச்சிமாநாடு இந்தோனேசியாவின் பாலி தீவில் நடந்து முடிந்துள்ளது.**



இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சீன ஜனாதிபதி ஜின்பிங், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரான் உள்ளிட்ட 100 இற்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்றார்கள்.

இதேவேளை அடுத்த ஆண்டு டிசம்பர் 1ஆம் திகதி ஜி 20 மாநாட்டை இந்தியா நடத்துகிறது. ஜி 20 இற்கு இந்தியா தலைமை தாங்குவதையடுத்து அதற்கான செயல்முறைகளை பிரதமர் மோடியிடம் இந்தோனேசியா ஜனாதிபதி விடோடோ முறைப்படி வழங்கினார்.

கடந்த புதனன்று உச்சிமாநாட்டின் நிறைவு விழாவின் போது இந்தோனேசிய ஜனாதிபதி விடோடோ ஜி 20 தலைவர் பதவியை இந்தியாவிடம் ஒப்படைத்தார். இதன் மூலம் எதிர்வரும் டிசம்பர் 1ஆம் திகதி ஜி 20 தலைமைப் பதவியை இந்தியா அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் மூலம் பிரதமர் நரேந்திர மோடி உலகத் தலைவர்களின் தலைவராகின்றார். இதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யா உட்பட உலக நாடுகளை வழிநடத்தும் தலைவராக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மாறியுள்ளார்.

G20 INDONESIA 2022

## ஜி 20 நாடுகள் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பு இந்தியா வசம்!

உலக நாடுகள் தங்களின் வர்த்தகம், உள்நாட்டுப் பாதுகாப்பு உட்பட பல்வேறு விடயங்களுக்காக பிறநாடுகளுடன் கூட்டமைப்பை ஏற்படுத்தி உள்ளன. அந்த வகையில் உள்ள ஒரு கூட்டமைப்பே ஜி20 கூட்டமைப்பு ஆகும். இதில் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் என மொத்தம் 20 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

ஜி 20 கூட்டமைப்பில் ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, சவூதி அரேபியா, தென்னாபிரிக்கா, தென்கொரியா, துருக்கி, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை அங்கம் வகிக்கின்றன.

உலக பொருளாதாரத்தில் நிலவுகின்ற சிக்கல்கள் பற்றிப் பேசுவதற்காக தொடங்கப்பட்ட இந்த அமைப்பு காலநிலை மாற்றம், எரிசக்தித் துறை, நாட்டில் நிலவும் அசாதாரண சூழல் உட்பட பல்வேறு அம்சங்கள் பற்றியும் விவாதிக்கின்றது. மேலும் இருநாடுகளுக்கு இடையேயான உறவுகள் பற்றியும் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். இதற்காகவே ஆண்டுதோறும் ஜி 20 நாடுகளின் உச்சிமாநாடு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த மாநாட்டுக்கான தலைமைப் பொறுப்பு என்பது ஒவ்வொரு நாட்டுக்கும் சுழற்சி அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது இந்தோனேசியா தலைமை பொறுப்பு ஏற்று செயல்பட்டு வந்தது.



## மின்சார உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க சக்தியை நோக்கி வேகமாக நகர்கின்றது இந்தியா

அதன்படி பதினேழாவது ஜி20 உச்சிமாநாடு இந்தோனேசியாவின் பாலிதீவில் கடந்த செவ்வாயன்று தொடங்கி புதன்கிழமை வரை நடைபெற்றது. இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடியும் பங்கேற்றார். இதில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பங்கேற்கவில்லை. மாறாக அவரது அமைச்சர் பங்கேற்று இருந்தார்.

இந்த மாநாட்டில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் நடவடிக்கைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி உட்பட உலகத் தலைவர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

இந்நிலையில்தான் ஜி20 மாநாட்டின் 2 ஆவது நாளான புதன்கிழமை ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைமைப் பொறுப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தப் பொறுப்பு இந்தோனேசியாவிடம் இருந்தது. இந்தியாவிடம் தற்போது பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டாலும் கூட ஜி20 தலைமைத்துவ பொறுப்பை இந்தியா எதிர்வரும் டிசம்பர் 1ஆம் திகதிதான் அதிகாரபூர்வமாக ஏற்கிறது. அதனையடுத்து அடுத்த ஆண்டு தலைநகர் டெல்லியில் ஜி20 உச்சிமாநாடு நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே தொடங்கி விட்டன.

இந்தோனேசியாவின் பாலிநகரில் பிரதமர் மோடிக்கு இந்தியர்கள் உற்சாகமான வரவேற்பளித்தனர். அப்போது உற்சாக மிகுதியில் இந்தியர்கள் பாடல் பாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஜி20 கூட்டமைப்புக்கு தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்கும் நிலையில் அதன் லோகோ, கருப்பொருள் ஆகியவற்றை பிரதமர் மோடி வெளியிட்டிருந்தார். இது தொடர்பாக பிரதமர் மோடி கூறுகையில், "ஜி20 இலச்சினை என்பது வெறும் இலச்சினை. இது ஒரு செய்தி, இந்தியாவின் நரம்புகளில் ஓடும் உணர்வு. உலகளாவிய சகோதரத்துவத்தின் சிந்தனை ஜி20 இலச்சினை மூலம் பிரதிபலிக்கிறது. இலச்சினையில் உள்ள தாமரை இந்தியாவின் பண்டைய பாரம்பரியம், நம்பிக்கை மற்றும் சிந்தனையை குறிக்கிறது. அத்வைத்தின் தத்துவம், அனைத்து உயிரினங்களின் ஒற்றுமையை வலியுறுத்துகிறது. இந்த தத்துவம் இன்றைய மோதல்களைத் தீர்க்கும் ஊடகமாக இருக்கும்" எனக் கூறியிருந்தார்.

மாநாட்டுக்குச் சென்றிருந்த நரேந்திர மோடி சீன ஜனாதிபதி ஜின்பிங், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரான் ஆகியோரை சந்தித்து நலம் விசாரித்தார். பிரதமர் மோடி பாலி தீவில் உள்ள அலையாத்தி காடுகளையும் பார்வையிட்டார். கடலரிப்பைத் தடுப்பது, கரியமில வாயுவைக் கட்டுப்படுத்துவது ஆகியவற்றில் அலையாத்தி காடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் காரணமாக அந்தக் காடுகளை உலக நாடுகள் பராமரித்து அழிவில் இருந்து தடுக்க நடவடிக்கை எடுக்கும் வகையில் அலையாத்தி காடுகளை உலக நாடுகளின் தலைவர்கள் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜி20 மாநாட்டில் உலகத் தலைவர்களுக்கு பிரதமர் மோடி நினைவுப்பரிசுகள் வழங்கினார். அதன் அடிப்படையில் பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட அனைத்து தலைவர்களும் அலையாத்தி காடுகளைப் பார்வையிட்டனர். தமிழ்நாட்டில் சுனாமி ஏற்பட்ட போது அரணாக இருந்து பாதிப்பை குறைத்ததில் அலையாத்தி காடுகள் முக்கிய பங்கு வகித்தன. மாநாட்டின் கடைசி நாளன்று



## இந்தோனேசியாவில் நடைபெற்ற இருநாள் மாநாட்டில் உலகத்தலைவர்களின் கவனத்தை ஈர்த்த பிரதமர் மோடி

பிரதமர் மோடி பல்வேறு நாட்டுத் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ், சிங்கப்பூர் பிரதமர் லீ ஹசின் லூக், ஜெர்மனி ஜனாதிபதி ஒலப் ஸ்கோல்ஸ்,

(18ஆம் பக்கம் பார்க்க)

**எஸ்.சாரங்கன்...**

**கொவிட்–19 பெருந்தொற்று மற்றும் அதன் பின்னரான பொருளாதார பின்னடைவு–கள் போன்றவற்றால் இலங்கை பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில், பாரிய எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.**



# இலங்கையின் எதிர்கால இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் பட்ஜட்!




## பொருளாதார நெருக்கடி வேளையில், பொருத்தமான வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நிபுணர்கள் பாராட்டு

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவுசெலவுத் திட்டம் குறித்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதும், நாட்டின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளத் தேவையான நீண்டகாலத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட வரவுசெலவுத் திட்டம் இதுவென்று பொருளாதாரத் துறைசார் நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

'பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது நாட்டில் சரியான தீர்மானங்களுக்குப் பதிலாக பிரபல்யமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இன்றும் கூட பெரும்பாலானவர்கள் பிரபல்யமான தீர்மானங்களை எடுப்பதற்கே முயற்சிக்கின்றனர். இந்தப் பிரபல்யமான தீர்மான சம்பிரதாயத்தின் பிரதிபலனாக பொருளாதாரம், நிவாரண மனோநிலை நாடு பூராவும் குவிந்து கிடக்கின்றது.

மக்கள் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கே பழக்கப்பட்டு உள்ளனர். நிவாரணம் வழங்குவதற்கு மாத்திரமே அரசாங்கம் அல்ல. இந்தப் பிரபல்யமான பாதையில் நாம் தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்வதன் மூலம் நாட்டுக்கு எதிர்காலம் கிடையாது. எப்போதும் அடுத்தவர்களுக்கு கடனாளியாகி நிவாரணம் வழங்குவதால் சுபிட்சம் எதுவும் ஏற்படாது. எனவே நாம் தற்பொழுது உள்ள இந்த நிலைமையிலிருந்து மீளுவோம். எமது சிந்தனை வடிவங்களை மாற்றிக் கொள்வோம்' என ஜனாதிபதி வரவுசெலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றும் போது கூறியிருந்தார்.



ஜனாதிபதியின் இந்தக் கருத்து காலத்துக்குப் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது என்றே கூற வேண்டும். நாடு நெருக்கடிகளை எதிர்கொண்டிருப்பதால், மக்களுக்கு மானியங்களை அள்ளிக் குவிக்கக் கூடிய வரவுசெலவுத் திட்டமொன்றை எதிர்பார்க்க முடியாது. இருந்த போதும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மேலும் பாதிப்பு ஏற்படாதிருப்பதற்கும், நாட்டை படிப்படியாக முன்னேற்றப் பாதைக்குக் கொண்டுவரக் கூடிய வகையிலும் இந்த வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்பார்த்த நிவாரணங்களை வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக முன்வைக்க அரசாங்கம் தவறி விட்டது என்ற எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கள் பரவலாகக் காணப்பட்டாலும், துறைசார் வல்லுனர்கள் இந்த வரவுசெலவுத் திட்டத்தை சிறந்ததொரு யோசனையாகவே பார்க்கின்றனர்.

> ‘நாடு வீழ்ச்சிக்குச் சென்றுள்ள இவ்வேளையில், மக்களுக்கான மானியங்களை அள்ளிக் குவிப்பதற்கு பணத்துக்கு எங்கே போவது? பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதாயின் படிப்படியாகவே முன்னேற வேண்டியுள்ளது’

இந்த வரவுசெலவுத் திட்டம் சீர்திருத்தத்தை நோக்காகக் கொண்டது. பல தசாப்தங்களில் பார்த்தவற்றில் மிகச் சிறந்த வரவுசெலவுத் திட்டம் மாத்திரமல்ல, தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் சிறிமல் அபேரத்ன தெரிவித்தார்.

ஏற்றுமதியை வளர்ச்சியடையச் செய்வது மற்றும் அதற்கான கொள்கை ரீதியான சூழ்நிலையை அமைத்துக் கொடுப்பதே இந்த வரவுசெலவுத்திட்டத்தின் மையமாக உள்ளது. இதனாலேயே சீர்திருத்தத்துக்கான வரவுசெலவுத் திட்டம் என இதனை அழைப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

மக்கள் மத்தியில் ஜனரஞ்சகமான முறையில் இடம்பிடிக்கக் கூடிய வரவுசெலவுத் திட்டங்களைத் தயாரிப்பதிலேயே கடந்த காலங்களில் அதிக அக்கறை காட்டப்பட்டது. உண்மையில் பொருளாதார ரீதியான சீர்திருத்தங்கள் பற்றியோ, நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் பற்றியோ பெரிதாக அக்கறை காண்பிக்கப்படாமையே நாடு தற்பொழுது எதிர்கொள்ளும் நெருக்கடிக்குக் காரணமாகியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் நோக்கும் போது ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள முன்மொழிவுகள் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படுமாயின் அடுத்த வருடத்தில் 7 முதல் 8 வீதம் வரையான பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும் என்பதும் பேராசிரியர் சிறிமல் அபேரத்னவின் கருத்தாக உள்ளது.

இந்நாடு பொருளாதார ரீதியில் சவால்களை எதிர்கொள்வதற்கு மற்றுமொரு பிரதான காரணமாக உள்ளது வெளிநாட்டு முதலீடுகள் எதிர்பார்த்தளவு கொண்டுவரப்படாமையாகும்.

குறிப்பாக கடந்த 10, 12 வருடங்களாக அதிகளவான அந்நியச் செலாவணியை நாட்டுக்குள் கொண்டுவரக் கூடிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வரவில்லை.

கடந்த வருடத்தில் அரை பில்லியன் ரூபா முதலீடு கூட நாட்டுக்குள் வரவில்லை. மாறாக அயல்நாடான இந்தியா போன்ற நாடுகளில் கணிசமான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைத்துள்ளன. வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் அரசியல் ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் எடுக்கப்படும் தீர்மானங்கள் குறித்து முதலீட்டாளர்களிடம் நம்பிக்கை இல்லாமையும் காரணமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

குறிப்பாக ஆட்சி மாறும் போது மாறக் கூடிய கொள்கைகளை நடைமுறைப்படுத்தாமல் நீடித்து நிலைக்கக் கூடிய, நாட்டுக்கு நன்மை பயக்கும் கொள்கைகளைத் தயாரிக்க வேண்டும். இதற்கான அடித்தளம் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன சுட்டிக் காட்டுகின்றார்.

ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள வரவுசெலவுத் திட்டத்தில் வரிச்சுமை அதிகரிக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைக்கின்ற போதும், பொருளாதாரத்துறையின் பேராசிரியர் என்ற ரீதியில் வரிச் சீர்திருத்தங்கள் சரியான திசையில் இருப்பதாகக் கூறுகிறார் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன.


பேராசிரியர் சமிந்த ஹெட்டிகே


பேராசிரியர் சிறிமல் அபேரத்ன

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் சிறிமல் அபேரத்ன, பேராசிரியர் சமிந்த ஹெட்டிகே ஆகிய பொருளாதார ஆய்வாளர்களின் யதார்த்தமான கண்ணோட்டம்**

நேரடியான வரிகளை அதிகரிப்பதற்கான மாற்றங்கள் பற்றியே அவர் குறிப்பிடுகின்றார். இலங்கையைப் பொறுத்த வரையில் மறைமுகமான வரிகள் சிக்கலான வகையில் அறவிடப்படுகின்றன. இதனை எளிதுபடுத்தி நேரடியான வரிகளை அதிகரிக்க வேண்டும்.

குறிப்பாக வருமான வரிகளை மேம்படுத்துவதற்கு இந்த நாடு சிறந்ததாக இருக்க வேண்டும். 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தங்கள் வருமானம் மற்றும் செல்வத்தைப் புகாரளிக்கும் தரவுத்தளத்தில் இருக்க வேண்டும். அந்த திறமையான நிர்வாக முறைக்கு நாங்கள் வரவில்லை. அதைச் செய்வதே நல்ல விடயம். இதன் அடிப்படையில் பார்க்கும் போது வரி தொடர்பில் நாடு சரியான திசையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது என்றும் பேராசிரியர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் இருப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான முன்மொழிவுகளுடன் 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக பேராசிரியர் சமிந்த ஹெட்டிகே குறிப்பிடுகின்றார்.

இலங்கை தற்பொழுது எதிர்கொள்வதைப் போன்ற சூழ்நிலைகளை எதிர்கொண்ட ஏனைய நாடுகள் அதிலிருந்து மீள்வதற்கு கையாண்ட விடயங்களையும் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் காணக் கூடியதாக உள்ளது. அவ்வாறான நாடுகள் ஆரம்பத்தில் மிகவும் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டாலும், காலப்போக்கில் அந்நிலைமையிலிருந்து மீண்டெழுந்தன.

இதுபோன்று இந்த வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் கூடிய விரைவில் பிரச்சினைகளிலிருந்து மீட்சி பெற முடியும் என பேராசிரியர் சமிந்த ஹெட்டிகே சுட்டிக் காட்டுகின்றார்.

நலன்புரி என்பது பிரித்தானிய ஆட்சிக்காலத்திலிருந்து காணப்படும் ஒரு விடயமாக இருந்தாலும், அரசு வழங்கும் மானியங்கள் கிடைக்க வேண்டியவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட வேண்டும். உதாரணமாக நலிவடைந்தவர்களுக்காக அரசாங்கம் எரிபொருள் மானியத்தை வழங்கினாலும், ஓரளவுக்குப் பொருளாதார ரீதியில் பலமுள்ளவர்களும் இந்த மானியங்களைப் பெறுகின்றனர்.

கல்வி, சுகாதாரம் போன்ற சகல துறைகளிலும் இவ்வாறான முறைமையே காணப்படுகிறது. நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில் இதுபோன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்கு சரியான வழிகாட்டல்கள் பின்பற்றப்படுவது அவசியம் என்றும் பேராசிரியர் சமிந்த ஹெட்டிகே சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் கொள்கைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்தும் அதேநேரம், நாட்டு மக்களாகிய நமக்கும் இதற்கான பொறுப்பு இருப்பதாக அவர் தெரிவிக்கின்றார். நாடு எதிர்கொண்டுள்ள நிலைமையிலிருந்து மீட்சிபெற ஒவ்வொருவரும் தனித்தனியான முறையில் செயற்படுவது அவசியம் என்றும், தனிப்பட்ட ரீதியில் ஏற்படுகின்ற மாற்றம் சமூக ரீதியான மாற்றமாக விரிவடைந்து நாட்டுக்கு நன்மை ஏற்படுத்தும். நாட்டுக்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கூறப்படுகின்ற நிலையில், முதலீட்டாளர்கள் எவரும் விரும்பி வந்து நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளப் போவதில்லை. அதற்கான சூழல் நாட்டில் இருக்கின்றதா என்பதை நாமே எடுத்துக் கூற வேண்டும். இதற்கு ஒவ்வொரு நபர்களிலும் மாற்றம் வெளிப்படுத்தப்படுவது இதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றும் பேராசிரியர் தெரிவித்தார்.

இவ்வாறான அடிப்படையில் பார்க்கும் போது அரசாங்கம் முன்வைத்திருக்கும் இந்த வரவுசெலவுத் திட்டமானது மக்களுக்கு நேரடியான மானியங்களை வழங்காவிட்டாலும், நாட்டை பொருளாதார ரீதியில் ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வந்து, அதன் ஊடாக ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் சிறந்ததொரு எதிர்காலத்தை ஏற்படுத்தும் பல்வேறு யோசனைகளை உள்ளடக்கியுள்ளது என்பது தெளிவாகிறது.

அதேநேரம், எப்பொழுதும் எதிர்க்கும் சிந்தனையுடன் செயற்படும் அரசியல்வாதிகள் நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைத்து அரசாங்கத்தை வழிப்படுத்தி நாட்டை சவால்களிலிருந்து மீட்பதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

> ‘அரசு வழங்கும் மானியங்கள் உரியவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட வேண்டும். உதாரணமாக நலிவடைந்தவர்களுக்காக அரசாங்கம் எரிபொருள் மானியத்தை வழங்கினாலும், பொருளாதார ரீதியில் பலமுள்ளவர்களும் இந்த மானியங்களைப் பெறுகின்றனர்

# தமிழ்நாடு Tantea தோட்ட மக்களின் அவலங்களை உலகறிய செய்த இ.தொ.கா







இந்தியாவில் Tantea (TAMILNADU TEA PLANTATION CORPORATION LIMITED) தேயிலை தோட்டங்கில் அடிப்படை வசதியற்று சொல்லொணா துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த மக்களின் அவலம் இன்று உலகறிய செய்யப்பட்டுள்ளது. இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானின் சாணக்கிய காய் நகர்த்தலால் இன்று இம் மக்களுக்கு முதல் கட்ட தீர்வு கிட்டியுள்ளது. இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் நலிவுற்றிருக்கும் மலையக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பெரும் பங்காற்றும் தலைவராவார். இலங்கை, இந்தியாவில் அரசியல் தலைவர்களிடம் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள அவர் இவ்விடயம் தொடர்பாக அண்மையில் இந்தியா சென்று அம்மக்களை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டுள்ளார். பின்னர் தமிழக முதல்வர் மு.கா. ஸ்டாலினை சந்தித்து இம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் விளக்கிக்கூறியதன் மூலம் முதல் கட்டமாக 650 குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முதல்வர் சம்மதம் தெரிவித்துள்ளார். ஆனாலும் அவ்வீடுகளை பெற்றுக் கொள்ள தமிழ் நாடு அரசுக்கு ஒரு தொகை பணம் செலுத்த வேண்டும். அம்மக்கள் பெரும் பொருளாதார கஷ்டத்தில் வாழ்வதால் அப்பணத்தை அவர்களுக்கு செலுத்த முடியாது. என்பதை நன்கு புரிந்து கொண்ட யாதார்த்தத்திணங்க செந்தில் தொண்டமான், முதல்வருடன் பேசி எந்த தொகையும் அறவிடமால் வீடுகளை கட்டு கொடுக்க தமிழ்நாடு அரசு ஒத்துக்கொண்டுள்ளது.







## தலைவர் செந்தில் தொண்டமானின் முதல் கட்ட பணியில் 650 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்...

இவ்விடயம் தொடர்பாக அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு நாம் வினவிய போது, வீட்டுக்கு வாருங்கள் பேசுவோம் என்று அன்பாக அழைத்தார்.அவருடனான கலந்துரையாடலின் தொகுப்பு....

Tantea இன்று சர்வதேசம் அறிந்துகொண்டுள்ள பெயர்.Tantea தோட்டங்களில் வாழும் மக்களின் பிரச்சினைகளை தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் அறிந்து கொண்டிருந்தாலும் அங்குள்ள 07 கோடிக்கும் அதிகமாக மக்கள் தொகையில் இவை கவனிக்கப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் அம் மக்கள் இலங்கையிலுள்ள தேயிலை தோட்டங்களில் பணிபுரிந்த நிலையிலேயே நாடுகடத்தப்பட்டனர். அப் பிரச்சினை தொடர்பில் பேசுவதற்கு இ.தொ.காவுக்கு பொறுப்புள்ளது.

1823ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து ஆயிரக்கணக்காண மக்கள் விவசாயம் மற்றும் தேயிலை உற்பத்திக்காக பிரிட்டிஷ் காலனித்துவ அரசால் இலங்கைக்கு குடிபெயர்க்கப்பட்டனர் அவர்கள் மீண்டும் 1964 ஆம் ஆண்டு இந்திய இலங்கை அரசுகளின் ஒப்பந்தப்படி (SrimavoShastri Pact) ) இலங்கையில் இருந்து 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மலையக மக்கள் இந்திய அரசு மூலம் இந்தியாவின் பல்வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். அதில் பெரும்பாலானோர் தமிழகத்தில் உள்ளனர்.

மறைந்த பெருந்தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா, அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த C.N.அண்ணாதுரையிடம் இலங்கையில் இருந்து வந்த மலையக மக்களின் வாழ்வாதாரம் மேம்பட எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினார். அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணாதுரை, இலங்கை மலையக மக்களின் வாழ்வாதாரம் மேம்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவிடம் உறுதியளித்தார்.



## வனத்துறைக்கு வழங்கும் தோட்டங்களை தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்குமாறும் கோரிக்கை

இதன் அடிப்படையில் 1968 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு அரசு தேயிலை தோட்ட கழக நிறுவனத்தில் (TANTEA) இலங்கையில் இருந்து வந்த மலையக மக்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலைகள் மற்றும் வாழ்வாதாரத்துடன் புனர்வாழ்வளிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டின் வால்பாறை மற்றும் கூடலூரில் காடுகளாக இருந்த இடங்களை தங்களுடைய உழைப்பின் மூலம் தேயிலை தோட்டங்களாக மாற்றியவர்கள் இலங்கையில் இருந்து வந்த மலையக மக்கள். சுமார் 4311.04 ஹெக்டேயர் பரப்பளவில் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனத்தில் இலங்கையில் இருந்து திரும்பிய 2445 குடும்பங்களை சேர்ந்த சுமார் 6700 நிரந்தர தொழிலாளர்களும், ஆயிரக்கணக்கான தற்காலிக தொழிலாளர்களும் பணிபுரிந்து வந்தனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த உறுப்பினர்களும் தமிழ்நாட்டிற்கு திரும்பி தேயிலை தோட்டங்களில் தங்கள் குடும்பத்தோடு பணிபுரிந்தனர்.

கடந்த 3.10.2022 அன்று தமிழ்நாடு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் சார்பாக தமிழ் நாடு அரசு தேயிலை தோட்ட கழகத்தின் 2152 ஹெக்டேயர் தேயிலை தோட்டங்களை, TANTEA நிறுவனம் இலாபத்தில் இயங்கவில்லை மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை போன்ற காரணங்களை முன்வைத்து வனத்துறைக்கு ஒப்படைக்க போவதாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை மூலம் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணை காரணமாக இலங்கையிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான மலையக மக்கள் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு எதிர்காலம் கேள்விக்குறியாகி நிற்கின்றனர். இந்த தேயிலை தோட்டங்களை நம்பியே தங்களுடைய வாழ்வாதாரம் உள்ளதால் இலங்கை மலையக மக்கள் பெரும் அதிர்ச்சியில் உள்ளனர்.

உலக சந்தையில் தேயிலை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி, நிறுவனம் இலாபத்தில் இயங்கவில்லை போன்றவை காரணமாக சொல்லப்பட்டாலும் அண்மையில் பழைமை முறைமை தேயிலை ஏற்றுமதியில் உலகில் இந்தியா முதல் நிலை பெற்றுள்ளதாக செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்படி இருக்கையில் இவ்வாறான திடீர் ஏற்பாடுகள் காலத்துக்கு பொருத்தமானதல்ல.

இப்போது வனத்துறைக்கு வழங்க இருக்கும் தேயிலை தோட்டங்களை தோட்ட தொழிலாளர்களுக்கு குத்தகைக்கு வழங்கினால் அவர்களே தேயிலையை பறித்து தங்களின் வாழ்வாதாரத்தை அமைத்து கொள்வார்கள்.

அதே போல இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்த மலையக தமிழ் மக்கள், தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்பில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றனர். திடீரென அவர்களை அந்த பகுதியில் இருந்து குடியிருப்பை விட்டு போக சொல்லவதால் எங்கு செல்வது என்று தெரியாமல் மக்கள் அச்சத்தில் உள்ளனர். இலங்கையில் இருந்து பல வருடங்களுக்கு முன்பு புலம் பெயர்ந்ததால் மீண்டும் எங்கு செல்வது என்று தெரியாமல் தவித்து வருகின்றனர். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தலைமுறைகளாக துணை நின்ற இலங்கை மலையக தோட்ட தொழிலாளர்களை பாதுகாப்பது எமது தார்மிக கடமையாகும்.

இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கோவை சென்றிருந்தபோது கோவை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் பொன். ஜெயசீலன் 31.10.2022 இல் சந்தித்து பேசிய தருணத்தில் Tantea மக்களின் பிரச்சினை தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். பின்னர் சட்டமன்ற உறுப்பினர் ஜெயசீலன் இம் மக்களின் துயர் வாழ்க்கைக்கு தீர்வு பெற்றுத்தருமாறு செந்தில் தொண்டமானுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் இ.தொ.கா. தலைவர் தமிழக முதல்வருடன் பேசியதுடன் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பால்கேவை சந்தித்து பேச்சு நடத்தி மனு கொடுத்துள்ளார். அதன் பின்னர் தமிழ்நாடு அரசியல் இது பேசு பொருளாக்கப்பட்டு இப்பிரச்சினை தொடர்பில ஆய்வு செய்யப்பட்டுள்ளது.இதன் முதல் கட்ட நகர்வு பயணிக்காக கோவை சட்டமன்ற உறுப்பினர் ஜெயசீலன் இ.தொ.கா. தலைவரை இந்தியா வந்து அம்மக்களின் நிலையை நேரில் ஆராயுமாறு கேட்டுக் கொண்டார். அதையடுத்து திடீர் விஜயம் மேற்கொண்டு செந்தில் தொண்டமான் இந்திய சென்ற போது, தமிழ்நாடு காலநிலை மாற்றத்தால் புயல், மழை வெளியில் செல்ல முடியாது, அதையும் பொருட்படுத்தாது நீலகிரி, கோவை, வால்பாறை பகுதிகளுக்கு 14 மணி நேர பயணத்தில் சென்று அம்மக்களை நேருக்குநேர் சந்தித்து கஷ்டங்களை கேட்டறிந்து கொண்டார். ஆயிரக் கணக்கான மக்கள் ஒன்று திரண்டு செந்தில் தொண்டமானை வரவேற்று அவர்களின் அவல வாழ்க்கைக்கு விடிவு தருமாறு கோரினர். அத்தோடு அவர், நடுவட்டம், பாண்டியன் டி டிவிசன், சேரன்பாடி டி டிவிசன், நெல்லியாளம் டி டிவிசன், சொல்லப்பள்ளி நகரம் போன்ற பகுதிகளுக்கு சென்ற நிலைமையை நேரில் அவதானித்துள்ளார். இத்தோட்டங்களில் வேலை செய்யும் மக்கள் ஒரு நாள் பேருக்காக 50கிலோ தேயிலை கொழுந்து பறிக்க வேண்டும். ஒரு நாள் சம்பளம் இந்திய பணத்தில் 350 தொடக்கம் 400 ரூபாய் கொடுக்கப்படுகிறது. 50 கிலோவுக்கு மேல் எடுக்கும் கொழுந்துக்கு ரூபா 3 கொடுக்கப்படுகிறது.









## 25 தொடர் (லயன்)குடியிருப்புகளுக்கு ஒரு மலசல கூடம்...

அத் தோட்டங்களில் 25 வீடுகளை கொண்ட தொடர் (லயன்) குடியிருப்புக்கு ஒரு மலசலகூடமே இருக்கிறது. அதுமட்டுமல்ல பாம்பு மற்றும் விஷ ஜந்துக்களின் கடிக்கும் உள்ளாகின்றனர். ஆனால் அதற்கான மருத்துவ வசதிகள் இல்லை. அவர்களாலே எதும் மருந்துகள் செய்தாலே உண்டு. தன் கண்முன் கண்ட அவலங்களுக்கு எப்படியாவது தீர்வு கண்டுவிட வேண்டுமென்று ஆதங்கம் கொண்ட இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தமிழ்நாட்டிலுள்ள பல அரசியல் தலைவர்களை சந்தித்து இது தொடர்பில் தெளிவுபடுத்தினார். தமிழ் நாடு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவலர் கே.எஸ். அழகிரி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன், தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி, தமிழ்நாடு பி.ஜே.பி. தலைவர் அண்ணாமலை, ம.தி.மு.க. தலைவர் வைகோ, திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கி. வீரமணி, தமிழக சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் இ.பி.எஸ். போன்றோரை சந்தித்து மனுக் கொடுத்துள்ளார். இறுதியாக தமிழக முதல்வர் மு.கா. ஸ்டாலினை சந்தித்து முதல் கட்ட தீர்வையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.










# விக்டோரியா கண் ஆஸ்பத்திரியும் ஸ்கின்னரின் தற்கொலையும்

விக்டோரியா மெமோரியல் கண் மருத்துவமனையானது (Victoria Memorial Eye hospital) அதன் கம்பீரமான கட்டடக்கலையுடன் கொழும்பில் ஒரு முக்கிய அடையாளமாகத் திகழ்கிறது. இது லிப்டன் சுற்றுவட்டத்தைச் சூழ்ந்த கட்டடங்களில் பெரிய கட்டடம். உலகம் முழுவதும் பிரபலமான சிலோன் தேயிலையை நினைவுகூருவதற்காக பெயரிடப்பட்ட சுற்று வட்டமே லிப்டன் சுற்றுவட்டம் என்பதை நாம் அறிவோம். மகப்பேறு மருத்துவ மனையை நடத்தி வந்த பரோபகாரரும் தொழில் முனைவோருமான சார்ள்ஸ் ஹென்றி டி சொய்சாவின் பெயரால் டி சொய்சா சுற்று வட்டம் என்று அழைக்கப்படுகிறது. 1906 இல் நிறுவப்பட்ட விக்டோரியா நினைவு மருத்துவமனைக்கு விக்டோரியா மகாராணியின் வைர விழாவைக் கௌரவிக்கும் வகையில் பெயரிடப்பட்டது.



இந்த சிவப்பு செங்கல் கட்டடமானது காலனித்துவ காலத்தை நினைவு கூரும் முக்கிய கட்டடங்களில் ஒன்று. 1894ஆம் ஆண்டு இலங்கைக்கு குடிபெயர்ந்த ஒரு பிரிட்டிஷ் கட்டடக் கலைஞரான எட்வர்ட் ஸ்கின்னரால் (Edward Skinner) இது வடிவமைக்கப்பட்டது. அதன் கட்டுமான வெளித்தோற்றத்தில் பயன்படுத்தப்பட்ட சிவப்பு செங்கற்கள் பிரமாண்டமானதும் தனித்துவமானதுமான தோற்றத்தை அளிக்கிறது. சிவப்பு செங்கற்களினாலான கட்டட அமைப்புமுறையின் வரலாறானது மத்திய, வடமேற்கு ஐரோப்பாவில் 12ஆம் நூற்றாண்டுக்கும் முந்தையது. லண்டனில் உள்ள பல பிரபலமான 19ஆம் நூற்றாண்டின் மருத்துவமனைகள் பல்கலைக்கழக கல்லூரி மருத்துவமனை மற்றும் மூர்ஃபீல்ட்ஸ் கண் மருத்துவமனை (Moorfields Eye Hospital) போன்றவை சிவப்பு செங்கற்களால் செய்யப்பட்டவை.

கொழும்பில் காலி முகத்திடல் ஹோட்டல் (மீள் நிர்மாணம்), கார்கில்ஸ் கட்டடம், விக்டோரியா மேசோனிக் தேவாலயம், வெஸ்லி கல்லூரி, கோட்டையில் உள்ள லொய்ட்ஸ் (Lloyds) கட்டடம், மற்றும் காலி வீதியில் உள்ள செயின்ட் அன்ட்ரூஸ் ஸ்கொட்ஸ் தேவாலயம் (St. Andrew's Scots Kirk) உள்ளிட்ட பல முக்கிய கட்டடங்களை வடிவமைத்தவர் எட்வர்ட் ஸ்கின்னர். மேற்கத்திய கட்டடக்கலையில் கோதிக் மறுமலர்ச்சி 20 ஆம் நூற்றாண்டு வரை நீடித்திருந்தாலும், எட்வர்ட் ஸ்கின்னர் இந்த கண் மருத்துவமனைக்கு இந்தோசராசெனிக் (IndoSaracenic) வடிவத்தை முடிவு செய்தார். குவிமாடங்களின் வடிவமைப்பும் கட்டுமானமும் முகலாயர் காலத்து கட்டடக்கலையை நினைவூட்டுகிறது. அதுபோல் கதவுகளிலும், ஜன்னல்களின் நேர்த்தியான, அழகான பாலிக்ரோம் (polychrome)செங்கல் வளைவுகள் உள்ளன. கட்டடக்கலை ரீதியாக அது உலகின் சிறந்த காலகட்டத்தின் நினைவைத் தொடர்ந்தும் தக்க வைத்திருக்க முடியும்.[1]

அன்றைய பிரிட்டிஷ் ஆளுநர் சேர் ஜோசப் வெஸ்ட் ரிஜ்வேயின் (Sir Joseph West Ridgeway)மனைவி, லேடி ரிட்ஜ்வே என்று அழைக்கப்பட்ட கரோலினா எலன் (Carolina Ellen), 1903 ஓகஸ்ட் 6 அன்று விக்டோரியா கண் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார். இக்கட்டடத்தைக் கட்டும் யோசனையை முன் வைத்தவரும் லேடி ரிஜ்வே தான். 1902ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி அவர் ஊடகங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் இப்படிப்பட்ட ஒரு ஆஸ்பத்திரியை தமது இராணியின் நினைவாக கட்டுவதற்கு ஆதரவு தரும்படி வேண்டினார். அதன் விளைவாக பல தனவந்தர்களும் பொது மக்களும் நிதியளித்தார்கள். உடனடியாக 30,000 ரூபா சேர்ந்தது. இறுதியில் அது ஒரு லட்சம் வரை உயர்ந்தது. அன்று நாட்டுக் கோட்டை செட்டியார்கள் மாத்திரம் 4000 ரூபாய் இதற்காக வழங்கினார்கள். திருமதி ஜேம்ஸ் பீரிஸ் 5000 ரூபாய் வரை சேகரித்துக் கொடுத்தார்.

இதற்காக நிதி வழங்கிய பலரின் பெயர்ப்பட்டியல் Arnold Wright, எழுதிய "Twentieth Century Impressions of Ceylon" நூலில் காணக்கிடைகிறது. பி.குமாரசுவாமியின் பெயரும் அதில் அடங்கும். அன்று தனவந்தர்களாக இருந்த சேனாநாயக்க குடும்பத்தைச் சேர்ந்த டீ.எஸ்.சேனாநாயக்க இக்கட்டடத்துக்காக வழங்கிய நிதிப் பங்களிப்பின் காரணமாக ஆங்கிலேய ஆளுநர் ரிஜ்வே முதலியார் பட்டம் வழங்கி கௌரவித்தார். பொது மக்களிடம் இருந்து அவர்கள் எதிர்பார்த்ததை விட கிடைத்தது. அரசும் தனது பங்கையும் சேர்த்து கட்டிய கட்டடம் தான் இது. சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னர் மொத்தம் இரண்டரை லட்சம் ரூபாய் இந்த ஆஸ்பத்திரியை உருவாக்கி முடிக்க செலவாகியுள்ளது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பலரின் மிகுந்த நம்பிக்கையுடன் சிறந்த கண் மருத்துமனையாக1906 ஏப்ரல் 2ஆம் திகதி பொதுப்பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.[2] புதிய ஆளுநர் மாற்றப்பட்டிருந்தார் எனவே புதிய ஆளுநரின் மனைவி லேடி எஷ்மோர் (Lady Ashmore) திறந்து வைத்தார். [3]1906 ஆம் ஆண்டில் இது காலனி நாடுகளிலேயே சிறந்ததாகக் கருதப்பட்டது. இது இப்போது இலங்கையின் தேசிய மருத்துவமனையின் ஒரு பகுதியாகும்.[4] பிற்காலத்தில் கண் மருத்துவ சேவைகள் பழைய மருத்துவமனையிலிருந்து எதிர் மூலையில் இருந்த புத்தம் புதிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1962இல் கொழும்பு புதிய தேசிய கண் மருத்துவமனை நிறுவப்பட்டது. பழைய விக்டோரியா நினைவு மருத்துவமனையின் சில பகுதிகள் சிதைக்க அனுமதிக்கப்பட்டாலும், இம்மருத்துவமனை தொடர்ந்தும் சேவை அளித்து வந்தது. சுகாதாரத் துறையில் இடத்திற்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வந்தநிலையில்,1967ஆம் ஆண்டு பிரதமர் டட்லி சேனாநாயக்க விக்டோரியா ஞாபகார்த்த வைத்தியசாலையில் திடீர் விபத்து சேவையை திறந்து வைத்தார். அதனைச் சூழ இருந்த பகுதியானது சின்னபொரளை வரை, கொழும்பின் மருத்துவமனைகளின் மத்திய தளமாக மாறியது. கொழும்பு மட்டுமன்றி இலங்கையின் மூலைமுடுக்கெங்கிலும் இருந்து தரமான மருத்துவ சேவையை நாடிவரும் சாதாரண குடிமக்களின் நம்பிக்கை ஆலயங்களாக இந்த மருத்துவக் காடு திகழ்கிறது. நாளாந்தம் உடல்நலம் வேண்டி, நாடி வரும் லட்சோப லட்சம் பாமர மக்கள் இன்றும் பயனடையும் இடமாக இது மாறியிருக்கிறது.

லிப்டன் சுற்றுவட்டத்தின் இன்னொரு புறத்தில் இன்று இருக்கிற அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனமான "ஒசுசல" கட்டடம் ஒரு காலத்தில் அழகான பீக்கிங் ஹோட்டலாக இருந்தது. இன்று அப்படி ஒன்று இருந்ததை அறிந்தவர்கள் குறைவு.

விக்டோரியன் கட்டடங்களின் பொது மருத்துவமனையானது குறுகிய தாழ்வாரங்களையும், ஒரு கட்டடத்தில் இருந்து இன்னொரு கட்டடத்துக்குச் செல்லும் கூரைபோட்ட பாதைகளும், அவற்றைக் கடந்து வரும் கலவரப்பட்ட சோக மனிதர்களும், நோயாளிகளும், எப்போதும் பல மருந்துகளின் கலவை மணம் பரவிய சூழலும் எவருக்கும் மகிழ்ச்சியைத் தந்து விடாது.

இங்கே பல ஆண்டுகளாக பணிபுரிந்த டொக்டர் நிமால் அமரசேகர இந்த மருத்துவமனை குறித்து எழுதிய விபரங்கள் சுவாரசியமானவை.

"...இரவில், அதன் பெரும்பகுதி இருட்டாகவும், வெளிச்சமின்றியும் சமீப காலம் வரை இருந்தது. இருளில் அவை அச்சுறுத்தும் பாதைகளாக இருந்தன. பெரும்பாலான பழைய கட்டடங்கள் பேய் குடிகொண்டிருக்கும் கட்டடங்களாக உலகளவில் ஒரு விசித்திரமான நம்பிக்கை உள்ளது. அங்கெல்லாம் இரவில் மர்மமான நிகழ்வுகள் நடந்ததாக பல கதைகள் உள்ளன. சிலர் மருத்துவமனையை சூழ பேய் உருவங்கள் உலாவுவதாக நம்பினர். அந்தக் கட்டடத்தில் தூங்கிக் கொண்டிருந்த மருத்துவர்கள் விசித்திரமான சத்தங்களைக் கேட்ட கதைகளை பகிர்ந்திருக்கிறார்கள். மற்றவர்கள் மூடிய கதவுகளின் வழியாக மனித உருவங்கள் தோன்றுவதைப் பார்த்தார்கள். நான் இரத்த வங்கியில் ஒரு மங்கலான அறையில் தூங்கினேன். எனது பணியின்போது எனக்கு கீழே இருந்த விபத்து சேவையிலிருந்து அவ்வப்போது வலியின் அழுகை அல்லது விரக்தியின் அலறல்களைத் தவிர வேறு எதையும் நான் பார்த்ததில்லை அல்லது கேட்டதில்லை...."

விக்டோரியா கண் மருத்துவமனையின் கட்டடக் கலைஞர்கள் மிகவும் நேர்த்தியாகவும், அழகாகவும் அக்கட்டடங்களை உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால் அது இன்று அதன் முக்கியத்துவம் அலட்சியம் செய்யப்பட்ட ஒன்றாக ஆகியிருக்கிறது. அதன்செங்கற்களால்ஆன முகப்பின் பிரமாண்டத்தையும் மகத்துவத்தையும் மறைக்கும் வகையில் பெரிய விளம்பரப் பலகைகளாலும் கதைகளாலும் மூடப்பட்டு காட்சி தருகின்றன. அற்புதமான நுழை வாயில்களும் நேர்த்தியான தாழ்வாரமும் இப்போது பயன்பாட்டில் இல்லை. பயன்பாடு, அவமரியாதை மற்றும் சிதைவு எல்லா இடங்களிலும் தோன்றியது, இதை என்றென்றும் அழித்துவிடலாம் என்று நான் அஞ்சினேன். இலங்கையின் தேசிய வைத்தியசாலையின் ஒரு அங்கமாகவே இந்த வைத்தியசாலை உள்ளது. அவசர விபத்துச் சேவை, அவசர சேவை, தீக்காயங்கள் பிரிவு, அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் சில நரம்பியல் சத்திரசிகிச்சை சேவைகளையும் கொண்டிருப்பதுடன், ஆயிரக்கணக்கான நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறும் வைத்தியசாலை வளாகமாக இன்று விரிந்திருக்கிறது.


கரோலின் சீமாட்டி


ஆளுநர்

புதிய கண் மருத்துவமனை ஒரு பெரிய கொன்கிரீட் தொகுதியாகத் தோன்றினாலும், இது நவீன அமைப்பைக் கொண்ட அதிநவீன மருத்துவமனை மற்றும் அதி நவீன வசதிகளைக் கொண்டது. பெரிய வார்டுகள், சிறந்த வெளிச்சம் மற்றும் சத்திரசிகிச்சை வசதிகளுடன், மருத்துவ நிபுணர்களுக்கு மிகவும் சிறந்த பணிச்சூழலாக இருக்கிறது. விசாலமான காத்திருப்பு அறைகள் மற்றும் வெளிநோயாளர் கிளினிக்குகளுக்காக ஒதுக்கப்பட்ட பெரிய காற்றோட்டமான பகுதிகள் பொதுமக்களுக்கு வசதியாக காணப்படுகிறது. கடந்த காலம் நம் வாழ்வில் எப்போதும் நிலைத்து இருக்கும். நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என்றாலும், இப்போது கூட வண்ணப்பூச்சு வேலைபாடும் சூரிய ஒளியில் அக்கட்டடத்தின் புறத்தோற்றமும் ஒரு தலைசிறந்த படைப்பென அதனை வெளிப்படுத்துகிறது.

### எட்வர்ட் ஸ்கின்னர்
### (15.03.1869 – 26.12.1910)

ஸ்கின்னர் ஒரு தலைசிறந்த கட்டிடக் கலைஞர். 1893ஆம் ஆண்டு அவர் கட்டடக் கலைஞராக உயர்கல்வியைக் கற்று பிரித்தானிய ராஜரீக கட்டடக்கலை அமைப்பில் இணைந்த கையோடு அதே ஆண்டு தனது 24வது வயதில் இலங்கைக்கு குடிபெயர்ந்தார். 1897இல் இருந்து தான் அவர் கொழும்பில் தனது கட்டட வடிவமைப்புகளை தொடங்கினார். அவரது கட்டடக்கலை ஞானமும் வடிவமைப்பும் கொழும்பு நகரத்தின் பாராட்டைப் பெற்றன. கொழும்பின் காலனித்துவ கால கட்டடங்களை நினைவு கொள்ள எஞ்சியிருக்கும் அழகான கட்டடங்கள் பல அவரால் வடிவமைக்கப்பட்டவை. அவரின் அலுவலகம் கொழும்பு கோட்டையில் இருந்தது.

கொழும்பு நகர வீதிகளில் அவர் சைக்கிளில் பயணம் செய்தார். திருமணமாகி சில மாதங்களில் 1910 ஜுலையில் அவர் ஒரு சைக்கிள் விபத்தில் சிக்கினார். அதனால் அவர் மூளையதிர்ச்சியால் அவதிப்பட்டார். அதில் இருந்து அவர் முழுமையாக குணமடையவில்லை. இறுதியில் 1910ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி அவரது உடல் கோட்டையிலுள்ள அவரின் அலுவலகத்தில் தூக்கிட்டு தொங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

(18ஆம் பக்கம் பார்க்க)

LITRO GAS

## முக்கிய அறிவித்தல்

இவ் அறிவிப்பு Litro Gas Lanka Ltd நிர்வாகத்திடமிருந்து விநியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் இலங்கை பொதுமக்களுக்கு LP எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பான சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் மோசடியான நடைமுறைகளைத் தடுக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

Litro Gas Lanka Ltd இன் விநியோக வலையமைப்பில் அங்கம் வகிக்காத சில அநாமதேய தனிநபர்கள் அல்லது அங்கீகரிக்கப்படாத மூன்றாம் தரப்பினர் நிரப்பப்பட்ட Litro Gas சிலிண்டர்களுடன் பரிமாற்ற பிற நிறுவனங்களின் சிலிண்டர்களை ஏற்றுக்கொள்வது எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது.

### விநியோகஸ்தர்களுக்கு

- Litro Gas Lanka Ltd மற்றும் அதன் விநியோக வலையமைப்பில் உள்ளோர் (டீலர்கள், பங்குதாரர்கள் etc) புதிய சிலிண்டர்களுக்கான நுகர்வோர் ஆர்டர்களை நிறைவேற்றும்போது, "லிட்ரோ கேஸ் சிலிண்டர்களை" மட்டுமே ஏற்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- "Litro Gas", "Shell Gas", "Colombo Gas" அல்லது "Lanka Gas" எனும் குறியீடுகளுடன், Litro Gas Lanka Ltd நிறுவனத்திற்கு உரித்தானது என சிலிண்டர்கள் தெளிவாக அடையாளம் காணப்படக் கூடியதாக இருக்க வேண்டும்.
- Litro Gas Lanka Ltd இன் வலையமைப்பில் அங்கம் வகிக்கும் எந்தவொரு விநியோகஸ்தரும் போட்டியிடும் நிறுவனங்களுக்கு உரித்தான சிலிண்டர்களை வைத்திருக்கவோ, கொண்டு செல்லவோ அல்லது பரிமாற்றம் செய்யவோ அனுமதிக்கப்படவில்லை.

### வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான அறிவிப்பு

- எமது விநியோகஸ்தர்கள் மாற்று அடையாளங்களுடன் கூடிய சிலிண்டர்களை ஏற்க அனுமதிக்கப்படாததால், Litro Gas விநியோக மையங்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ள அடையாளங்களுடன் கூடிய வெற்று சிலிண்டர்களை மட்டும் கொண்டு வருவதைஉறுதிசெய்யவும்.

மேலே குறிப்பிட்ட அடையாளங்கள் அற்ற சிலிண்டர்கள் தொடர்பான ஏதேனும் மோசடி மற்றும் மோசடியான பரிவர்த்தனைகளை பின்வரும் தொலைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி மூலம் நிறுவனத்திற்கு அல்லது சட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கிறோம்.

தொலைபேசி எண்: **1311**
மின்னஞ்சல் முகவரி: **csc@litrogas.com**

Litro Gas Lanka Ltd, இவ்வாறான மோசடியான செயற்பாடுகளை தடுக்கும் வகையில் செயற்படுவதுடன், அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்.

உண்மையுடன்,
நிர்வாகம்
**Litro Gas Lanka Ltd: 267, Union Place, Colombo 02, Sri Lanka.**

kings HOSPITAL COLOMBO

## வழங்குனர்களை பதிவுசெய்தல் - 2023

கிங்ஸ் ஹொஸ்பிட்டல் பிரைவேட் லிமிட்டட் 2023 இற்கான வழங்குனர்களாக / ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து கொள்ள விரும்பும் விற்பனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

**Medical**
மருத்துவ உபகரணங்களும், சேவைகளும் / மருத்துவ உபகரணங்களுக்கான உதிரிப்பாகங்கள் / மருத்துவ கருவிகள் / மருத்துவ நுகர்வுப்பொருட்கள் / பல் நுகர்பொருட்கள்/ மருந்து / அழகு சாதனப் பொருட்கள் மற்றும் ஏனையவை

**Food & Beverages**
கடலுணவு / காய்கறி மற்றும் பழவகை / இறைச்சி மற்றும் இறைச்சி சார் உற்பத்திகள் / மளிகைப் பொருட்கள் / பாலுணவு வகை / பதப்படுத்தப்பட்ட உணவுகள்

**Engineering**
ஹார்ட்வெயார் பொருட்கள் / நீர்க்குழாய் சம்பந்தமான பொருத்துதல் மற்றும் கருவிகள். குளியல் உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்பான்கள், குளிரூட்டியும் உதிரிப்பாகங்களும் / மின்னியல் கருவிகள் / மின்விளக்குகள் / மருத்துவம் தொடர்பான பொறியியல் வேலை மற்றும் சாதனங்கள் / மின்சார உபகரணங்கள் / ஏனைய தேவைகளுக்கான உபகரணங்கள்

**Construction**
கட்டிட வேலை / மின்வேலை / நீர்க்குழாய் வேலை / கழிவு நீர்த் தொடர்பான வேலை / கார்பட் இடுதல் மற்றும் தரை செப்பனிடுதல் / அலுமினியம் மற்றும் பகுதி பிரித்தல் / பெயின்டிங் மற்றும் உள்ளக அலங்காரம்

**Furniture**
காரியாலய தளபாடம்/ வைத்தியசாலை தளபாடம் / பிளாஸ்டிக் தளபாடம் / மனை தளபாடம்

**IT , Communication Equipment and related services**
கணினி வன்பொருள் (ஹார்ட்வெயார்), கணினி மென்பொருள் (சொப்ட்வெயார்) தொடர்பாடலுடன் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் கணினிப் பயன்பாடு மற்றும் சேவைகள் / தொடர்பாடல் பயன்பாடு மற்றும் சேவைகள்

**Automobile**
வாகனம் மற்றும் அதன் உதிரிப்பாகங்கள் (டயர் - பற்றறி - எண்ணெய் - மசகெண்ணெய்)வாகனப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு சேவை, இயந்திர திருத்த வேலை, பெயின்டிங், அவ்வப்போதைய சேவை, உள்ளக நவீனமயப்படுத்தல் (குறிப்பாக மருத்துவ அவசர ஊர்தி)

**Housekeeping**
இரசாயனப் பொருட்கள் / தரை விரிப்பு - துப்பரவு செய்யும் சாதனங்கள் - வீட்டுப் பராமரிப்பு சாதனங்கள்

**Printing & Advertising**
அச்சிடுதல் / விளம்பரம் மற்றும் அடையாளக் குறியீடு தொடர்புடைய சேவைகள்

**Stationery**
காகிதாதிகள் சம்பந்தப்பட்டவையும், உபகரணங்களும் (பைண்டிங் இயந்திரம் / லெமினேடிங் இயந்திரம்)

**Textile & Footwear**
சீருடைகள் / துணிவகைகள் / காலணிகள்

**Fire & Safety**
பாதுகாப்பு உபகரணங்கள் / ஏனைய பாவனைப் பொருட்கள் / தீயணைப்பு மற்றும் அது தொடர்புடைய சேவைகள்

**Electrical and Electronic Appliance/ Kitchen Machinery & Equipment's**
மின் - மின்சார உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள் மற்றும் திருத்த வேலை / சமயலறை இயந்திரங்களும், சாதனங்களும் / பாத்திரங்கள் - மட்பாண்டங்கள் மற்றும் கண்ணாடி உபகரணங்கள்

**Plastic & Paper Products**
பிளாஸ்டிக் மற்றும் மீள்பாவனையற்ற தயாரிப்புகள்/ காகித தயாரிப்புகள்

**Support Service**
சக்கர நாற்காலி சேவை - போக்குவரத்துச் சேவை - பாதுகாவலர் சேவை - காவலர் சேவை - பூச்சிகளை கட்டுப்படுத்தல் - மலர் அலங்காரம் - வாடகைச்சேவை

**Other Services / disposable & Supplies**
தரிப்பிட கூம்புகள் விங் போன்றவை மேலே கூறப்படாத பொருட்கள். (தயவுசெய்து குறிப்பிடவும்)

தயவுசெய்து விண்ணப்பத்துடன் பதிவுசெய்வதற்கான நிறுவனத்தின் தஸ்தாவேஜுக்களை (article of association) சமர்ப்பிக்கவும். பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்தையும் அறிவுறுத்தல்களையும் கிங்ஸ் வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். திரும்பப்பெறமுடியாத பதிவுக்கட்டணம் 2500/-.

2022ஆம் ஆண்டு பதிவுசெய்தவர்கள் வழங்குனர்களின் விண்ணப்பத்துடன் மாற்றமடையாத நிலைகொண்ட நிறுவனம் என்பதை உறுதிசெய்யப்பட்ட கடிதத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

முறையாக பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவத்தை கொள்முதல் முகாமையாளர், கிங்ஸ் ஹொஸ்ப்பிட்டல் கொழும்பு, இலக்கம் 18/A, எவர் க்ரீன்பார்க் எவென்யூ, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரிக்கு 2022 டிசம்பர் 23ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கவேண்டும்.

தயவுசெய்து விண்ணப்பக்கடித உறையின் இடதுபக்க மேற்பகுதியில் வழங்குனர்களாக பதிவு 2023 என்று குறிப்பிடவும். பதிவுக்கட்டண பணக்கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டின் பிரதியையும் நிறுவனத்தின் பதிவுப்பிரதி ஒன்றையும் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைக்கவேண்டும். வழங்குனர்கள்/ஒப்பந்தக்காரர்கள் கோரப்பட்டிருக்கும் பதிவு விண்ணப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து விடயங்களையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

கொழும்பு கிங்ஸ் ஹொஸ்பிட்டல் (பிரைவேட் லிமிட்டட்) நிறுவனம் அத்தியாவசிய தேவைகளின்போது பதிவுசெய்யப்படாத நிறுவனங்களை இணைத்துக்கொள்வதற்கான உரிமை பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Manager – Procurement
Kings Hospital Colombo, No. 18/A, Evergreen Park Rd, Narahenpita, Colombo 05.
www.kingshospital.lk

Procurement Department
Tel: 0117 743 743
Ext: (4200/4201) / 0716 339 125

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்



1950களில்

## ஜப்பானுக்கு அடுத்தபடியாக ஆசியாவின் அபிவிருத்தியடைந்த நாடு

# வாய்ப்புகளைத் தவறவிட்ட நாடாக வரலாற்றில் பதியப்படும் இலங்கை

**அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட உரையில் இலங்கையின் அபிவிருத்தி நிலையை ஜப்பான் மற்றும் வியட்நாமுடன் ஒப்பீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் அபிவிருத்தி பற்றிய வரலாற்று ரீதியான விவாதங்களின் போது தவிர்க்க முடியாதவாறு இவ்வாறு இலங்கையை ஆசிய வட்டகையில் உள்ள நாடுகளுடன் ஒப்பீடு செய்து பிரஸ்தாபிப்பது வழமையாக நடைபெறும் ஒன்றுதான், என்றாலும் ஒரு வரவு செலவுத்திட்டத்தில் அது பற்றி ஒரு குறிப்பை வைப்பது இப்போதுதான் நடக்கிறது.**

1950களில் ஜப்பானுக்கு அடுத்தபடியாக ஆசியாவின் அபிவிருத்தியடைந்த நாடாகக் கருதப்பட்ட இலங்கையை வாய்ப்புகளைத் தவறவிட்ட ஒரு நாடாகவே வரலாறு பதிவு செய்கிறது. 1950களில் ஜப்பானின் தலாவருமானம் இலங்கையின் தலாவருமானத்துடன் பாரிய இடைவெளியைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் தற்போது இலங்கையின் தலாவருமானம் 3815 டொலர்களாகவும் ஜப்பானின் தலாவருமானம் 39285 டொலர்களாகும் உள்ளன. கடந்த 75 வருட காலப்பகுதியில் ஜப்பான் பாரிய பொருளாதாரப் பாய்ச்சலை எய்திய வேளை இலங்கை குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டிக்கொண்டிருந்தது. இலங்கையை சிங்கப்பூரின் வளர்ச்சியுடன் ஒப்பிட்டு பெருமூச்சு விட்டுக் கொள்வதே இதுவரை வழக்கமாக இருந்தது. குறிப்பாக இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன சிங்கப்பூர் மாதிரியை பின்பற்ற விரும்பினார். பின்வந்தவர்களும் சிங்கப்பூர் மாதிரியை சிலாகித்தனர். உண்மையில் அண்மைக்கால வரலாற்றை உற்று நோக்குமிடத்து தெற்காசியாவின் வங்காளதேசம் போன்ற வறிய நாடுகள் கூட இலங்கையின் சாதனைகளை முறியடித்து முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஒரு நாடு எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு இலங்கையை உதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்று வங்காளதேசத்தின் தலைவர் ஒருவர் அண்மையில் கூறியிருந்தார். ஒரு நாட்டின் பொருளாதாரத்தை எப்படி விழுத்த வேண்டும் என்பதற்கு இலங்கையை உதாரணமாகக் கொள்ளவேண்டும் என்று இன்னொரு அரசியல்வாதி கருத்து வெளியிட்டிருந்தார். எப்படி இருந்த நான் இப்படி ஆகிவிட்டேன் என்ற சினிமா வசனம் போல எப்படி இருந்த இலங்கை இப்படி ஆகிவிட்டது. ஆனால் இப்படி ஆனமைக்கு இலங்கை மக்களா காரணம் என்ற கேள்வி தவிர்க்க முடியாதவாறு எழுகிறது.

1931 இல் இருந்து தொடர்ச்சியாகவே ஜனநாயகத் தேர்தல் முறைமைகள் ஊடாக தலைவர்களைத் தெரிவு செய்யும் முறைக்கு பழக்கப்பட்டிருந்த இலங்கை மக்களை நீங்கள் உங்கள் அரசியல் பிரதிநிதிகளை பிழையாகத் தெரிவு செய்தமையால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று குற்றம் சாட்டலாம். ஆனால் அரசியல் கட்சிகள் அழுகிய பழங்களை அடுக்கி வைத்துவிட்டு அதில் இருந்த ஒன்றைத் தெரிவு செய்யும் படி கூறினால் வாக்காளர்களுக்கு வேறு வழியில்லை. குறைவாக அழுகிய பழம் எது என்றே தெரிவு செய்ய வேண்டும். ஆகையால் சுதந்திரம் பெற்ற காலப்பகுதி முதல் இற்றை வரை சரியான ஆட்சியாளர்களை தெரிவு செய்யும் நிலை இருந்ததாகக் கூற முடியாது. பிரபல அரசியல் என்பது அரசியல்வாதிகளால் பொதுமக்களை ஏமாற்றி வாக்குச் சேகரிக்கப் பயன்பட்டதே தவிர மக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கூற இயலாது. பொதுமக்களுக்கு மானியங்களை அள்ளிக் கொடுத்ததால் தான் நாடு குட்டிச் சுவரானது என்ற கருத்தும் ஊனமுற்றதாகும். ஏனெனில் நலன்புரி அரசொன்றை ஏற்படுத்துவதே சுதந்திர இலங்கையின் நோக்கம் என்பதை அதன் முதலாவது வரவு செலவுத் திட்ட உரையிலேயே அவதானிக்க முடிந்தது.

ஆனால் வளர்ச்சியை உந்தும் பொருளாதாரக் கொள்கைகளை சம காலத்தில் நடைமுறைப்படுத்தியிருப்பின் ஒவ்வொரு தடவையும் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறபோது புதிது புதிதாக கொள்கைகளை மாற்றாது முன்னைய அரசாங்கம் விட்ட இடத்திலிருந்து முன்னோக்கிச் சென்றிருப்பின், இலங்கைக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இப்போதும் கூட, முன்னைய அரசாங்கம் விட்ட இடத்திலிருந்து முன்னோக்கிச் செல்வதை விடுத்து, மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்கப்போவதாகச் சொல்லுவது வேடிக்கையான ஒன்றாகும். அதற்கு ஏற்படும் காலம், செலவு என்பன ஒருபுறமிருக்க புதிய கொள்கைகள் வகுக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் போது மீண்டும் ஒரு ஆட்சி மாற்றம் வரும். புதிய ஆட்சியாளர்கள் முன்னைய கொள்கைகளைக் குறைகூறி 360 பாகைக் கோணத்தில் திரும்பி வந்த இடத்திற்கே சென்று சேர்வார்கள். அது தான் தொடர்ந்து நடந்து வருகிறது. தேசியக் கொள்கை என்ற ஒன்று இலங்கைக்குக் கிடையாது.

**அரசியல் பிரதிநிதிகளை பிழையாகத் தெரிவு செய்தமையால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று குற்றம் சாட்டலாம். ஆனால் அரசியல் கட்சிகள் அழுகிய பழங்களை அடுக்கி வைத்துவிட்டு அதில் இருந்த ஒன்றைத் தெரிவு செய்யும் படி கூறினால் வாக்காளர்களுக்கு வேறு வழியில்லை. குறைவாக அழுகிய பழம் எது என்றே தெரிவு செய்ய வேண்டும்.**

மறுபுறம் இலஞ்சம் ஊழல் என்பன மிகப்பெரிய சாபக் கேடு. ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வர அவர் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்ய வேண்டும். வெற்றி பெற்றால் செலவு செய்த பணத்தை திரட்டுவது தான் முதன்மை நோக்கமாக இருக்கும். தமது சொந்தப்பணத்தை செலவிட்டு மக்களுக்குச் சேவை செய்யும் அரசியல் தலைவர்களும் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்களது எண்ணிக்கை மிகக்குறைவு. அழுத்தக் குழுக்களும் தனிப்பட்ட இலக்குகளும், குறிக்கோள்களும் அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் தமது அதிகாரங்களை சரியான வழியில் பிரயோகித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்வதைத் தடுக்கின்றன. சிங்கப்பூரின் சிற்பியான லீக்குவான் யூ பிரபலமான தீர்வுகளை அல்லாமல், சரியான தீர்வுகளை எடுத்ததாக வரவு செலவுத்திட்ட உரையில் கூறப்பட்டது. அதே தலைவர் தனது அரசாங்கத்தில் ஊழல்வாதிகளுக்கு இடமில்லை என்பதையும் தனது மிக நெருக்கமான அமைச்சரே பிழை செய்தபோதும் தண்டித்தார், என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஊழலையும் வீண்விரயங்களையும் கட்டுப்படுத்தாமல் தகுதிவாய்ந்தவர்களை தகுதியான இடங்களுக்கு நியமிக்காமல் ஒரு நாட்டை மீட்டெடுக்க முடியாது. பழைய கள்ளை புதிய மொந்தையில் ஊற்றினாலும் புளித்தது புளித்தது தான். திருத்தம் வராது. இவ்வகையில் சிங்கப்பூர், கனடா, நியுசிலாந்து நாடுகளில் அமைச்சரவையில் உள்ளவர்களின் தகுதிகள் பற்றி கவனம் செலுத்தினால் புரியும். வெறுமனே பொதுமக்களுக்கு அள்ளிக் கொடுத்ததால்தான் நாடு கவிழ்ந்தது என்று முடிவு செய்து விட முடியாது. பிழை எங்குள்ளது என்பதை கண்டுபிடிப்பது கடினமான காரியமில்லை. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. அதைக் கண்டுபிடித்தாலும் அதைத் திருத்துவது இலகுவான காரியமில்லை.

பொருளாதாரம் அதலபாதாளத்தில் விழுந்துள்ள நிலையிலும் புதிய அமைச்சுப்பதவிகளை எதிர்பார்க்கும் மக்கள் பிரதிநிதிகள் ஏராளம். மக்களை இடுப்புப் பட்டியை இறுக்கக் கட்டச் சொல்லும் அதேவேளை மக்கள் பிரதிநிதிகள் தாம் முன்மாதிரியாக இருந்து முதலில் தமது இடுப்புப் பட்டிகளைக்கட்டி மக்களுக்கு வழிகாட்டலாமே? செய்வார்களா?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

ஜி-20 மாநாடு

# பொருளாதார ஒத்துழைப்பையும் இராணுவ விரிசலையும் வெளிப்படுத்திய சந்திப்பு

**இரண்டாம் உலகப் போருக்கு பின்னான உலகம் பிராந்திய மட்டத்திலும் பிராந்தியத்தைக் கடந்து உலகளாவிய ரீதியிலும் கூட்டு அணிகளாக இயங்கி வருகிறது. அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ ரீதியில் அத்தகைய அணிகள் கட்டமைக்கப்பட்டு இயங்கி வருகிறதை அவதானிக்க முடிகிறது. உலகம் வலுவான தேசங்களின் கூட்டுப் பாதுகாப்பினாலேயே பாதுகாக்கப்படுகிறது. போரையும் பொருளாதாரத்தையும் கூட்டாகவே மேற்குலகம் எதிர்கொண்டு வருகிறது. அத்தகைய கூட்டுக்கான அரசியல் பொருளாதார கட்டமைப்பே மேற்குலகத்தால் வடிவமைக்கப்பட்டு இயக்கப்படுகிறது. அதனுடன் அது நின்றுவிடாது ஏனைய கீழைத்தேச நாடுகளது கட்டமைப்பை தகர்ப்பதையும் அதனை கூட்டாக எழுச்சியடையவிடாது தடுப்பதனையும் பிரதான அரசியலாக பின்பற்றி வருகிறது. இக்கட்டுரையும் இந்தோனேசியத் தலைநகரான பாலியில் நவம்பர் 15,16 இல் நடைபெற்ற ஜி–20 மாநாட்டின் முக்கியத்துவம் பற்றிய தேடலாக உள்ளது.**

ஜி20 மாநாட்டில் கீழைத்தேச நாடுகளது கூட்டும் அதிகார பலமும் காத்திரமானதாக அமைந்திருந்தது. ஜப்பான், தென் கொரியா, ஆசியான் நாடுகள் மற்றும் சீனா, பிறேசில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுடன் இந்தியாவின் பங்கு அதீதமாக அமைந்திருந்தது. ஏறக்குறைய 20 அமர்வுகளில் 45 இருதரப்பு சந்திப்புக்களை 45 மணித்தியாலத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்டதாக தெரிவருகிறது. சமகால உலக ஒழுங்கின் அரசியல், பொருளாதார, இராணுவ உத்தரவாதப்படுத்தலில் ஜி 20 நாடுகள் முக்கிய செல்வாக்குடைய நாடுகளாக விளங்குகின்றன. இந்தியா உலகளாவிய பொருளாதாரத்தில் பிரதான இடத்தை பெற ஆரம்பித்துள்ளது. எதிர்கால உலக ஒழுங்கில் மேற்குறித்த கீழைத்தேச நாடுகளது பங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும் என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

அது மட்டுமன்றி, அமெரிக்க, சீன தலைவர்களது சந்திப்பு மிக முதன்மையானதாக உரையாடப்பட்டது. அது மட்டுமல்லாது, அச்சந்திப்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஊடகங்களுக்கு வெளிப்படுத்திய தகவல், அம் மாநாட்டை மேலும் வலுப்படுத்தியதாக தெரிகிறது. ஜோ பைடன் தெரிவிக்கும் போது, இரு நாட்டின் தலைவர்களாகிய நாங்கள், பரஸ்பரம் அண்மைய முரண்பாடுகளிலிருந்தும் போட்டித் தன்மையிலிருந்தும் வெளியேவர வேண்டும். அதேநேரம் இரு நாட்டுக்குமான வேறுபாடுகளை முகாமைத்துவம் செய்வதோடு எமது நாடுகளின் நோக்கு நிலையிலிருந்து பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ள வேண்டும், எனவும் எல்லாவற்றையும் கடந்து உலகளாவிய ரீதியில் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் உலக விவகாரங்களில் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். அவ்வாறே சீன ஜனாதிபதியும், எங்கள் இரு நாட்டுக்கும் தேவையான விடயம் சரியான திசையில் பயணிப்பதற்கானதும் உறவினை பலப்படுத்துவதற்கானதுமான இரு நாட்டு உறவுமாகும் எனத் தெரிவித்தார்.

அது மட்டுமல்லாது, சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் புதிய பனிப்போருக்கான தேவையுள்ளதாக நம்பவில்லை எனவும் தைவான் மீது தாக்குதலை மேற்கொள்ளும் உடனடி நோக்கம் எதுவும் சீனாவிடம் உள்ளதாக கருதவில்லை எனவும் ஜோ பைடன் தெரிவித்திருந்தார். இரு தலைவர்களுக்கும் இடையில் மூன்று மணித்தியாலங்கள் நீடித்த உரையாடலில் உக்ரைனில் அணுவாயுதம் பயன்படுத்தப்படுவதை இரு தலைவர்களும் எதிர்ப்பதாக தெரிவித்தனர். சமாதானத்துக்கான சீனாவின் வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்திய ஜின்பிங் குழப்பமான பிரச்சினைக்கு இலகுவான தீர்வு இல்லை என்றார். அவ்வாறே வடகொரியாவின் அணுவாயுத பரிசோதனை பற்றிய உரையாடலை முதன்மைப்படுத்திய இரு தலைவர்களும் இன்னுமொரு அணுவாயுத பரிசோதனையில் வடகொரியா ஈடுபடுவதை சீனா தடுக்க வேண்டும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். இரு தலைவர்களது சந்திப்பின் மூலம் பாலி மாநாடு முதன்மையான இடத்தை பெற்றது எனக்குறிப்பிட முடியும். அதாவது உலக ஒழுங்கில் முதல் இரு இடத்தையும் தக்கவைத்துள்ள இரு நாடுகளதும் தலைவர்களது சந்திப்பு உலகளாவிய ரீதியில் முக்கியத்துவமுடையதாகவே அமைந்திருந்தது. அதனை விரிவாக நோக்குவது அவசியமானது.

முதலாவது, அந்த வரைபுக்குள் பாலியில் நிகழ்ந்த ஜி20 சந்திப்பானது, வடக்கு, தெற்கு நாடுகளின் சக்திவளம், சூழல்பாதுகாப்பு, விவசாயம், சுகாதாரம் மற்றும் டிஜிற்றல் பரிமாற்றம் தொடர்பில் அதிக உரையாடல்களையும் வரைபுகளையும் ஏற்படுத்தியிருந்தது. அத்தகைய வரைபுகளுக்குள்ளாக நாடுகளுக்கிடையிலான பரிமாற்றமும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வும் முன்மொழியப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் பிரிவுகளாக செயல்படாது நெருக்கடிக்கான தீர்வுகளாக செயல்பட்ட தன்மையினைக் காணக் கூடியதாக அமைந்திருந்தது.





இரண்டாவது, ஜி20 ஐ ஒட்டி நிகழ்ந்த உரையாடலில் ஆசியான் அமெரிக்க உரையாடலில் இன்னோர் தளத்தில் பொருளாதார இருப்பினை உணர்த்தியதாக அமைந்திருந்தது. அதாவது நவம்பர் 11 முதல் 13 திகதிகளில் கம்போடியத் தலைநகரில் ஆசியான் மாநாடு தெற்கு நாடுகளின் பொருளாதார வலுவை அடையாளப்படுத்தியதுடன், மேற்குலக நாடுகளின் பொருளாதாரத்தின் இருப்பினையும் தேவைப்பாட்டையும் தந்திருந்தது. ஏறக்குறைய 2023இல் ஆசியான் பொருளாதாரம் 825 மில்லியன் டொலரை கொண்டதாக அமையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் வலுவான அமைப்பாகவும் முரண்பாடுகள் குறைந்ததொன்றாகவும் ஆசியானே காணப்படுகின்றது என்ற அடிப்படையில் அதன் பொருளாதாரம் மதிப்பிடப்படுகிறது. வலுவான ஐரோப்பிய பொருளாதாரத்தின் இயங்குதிறனை நிர்ணயிக்கும் ஐரோப்பிய யூனியனே அதிக முரண்பாடுகளுக்குள் சிக்குண்டுள்ள போது ஆசியான் பலமாகவே செயல்படுகிறது.

மூன்றாவது, தென்வலய நாடுகளில் இந்தியாவும் சீனாவும் பலமான பொருளாதாரத்தை கொண்டிருப்பதாக கணிப்பிடப்படுகின்ற செய்முறை ஒன்றை, ஜி 20 ஏற்படுத்தியிருந்தது. அதில் இந்தியா உலகளாவிய பொருளாதாரத்தில் அதிக பங்களிப்பினை மேற்கொள்ளும் நாடாக மாறிவருகிறது. சீனாவினது வெற்றிடத்தை நிரப்புவதில் இந்தியா முனைப்புக் காட்டுவதாகவும் அதனை மேற்குலகம் ஊக்குவிப்பதாகவும் கருதப்படுகிறது. மோடி, பைடன் சந்திப்பின் முக்கியத்துவத்தையும் உடல் மொழியையும் அவதானிக்கும் ஒவ்வொருவரும் அதனை உணர்ந்து கொள்ள முடியும். உக்ரைன், ரஷ்ய மோதலால் எவ்வாறு சீனாவின் உறுதிப்பாடு வலுவடைகிறதோ அவ்வாறே இந்தியப் பொருளாதாரம் மட்டுமல்ல இராணுவ நோக்கு நிலையையும் இந்தியா கட்டமைக்க முயலுவதாக மதிப்பிடப்படுகிறது. இந்தியாவுடன் பிறேசில், ஆர்ஜெண்டீனா, தென்னாபிரிக்கா போன்றவற்றின் எழுச்சியையும் இம்மாநாட்டில் அவதானிக்க முடிந்தது. ஜப்பான், தென் கொரியா தென்வலய நாடுகளாக புவியியல் அமைப்பில் காணப்பட்டாலும் நடைமுறையில் அவை மேற்குலகத்தை பிரதிபலிப்பவையாகவே காணப்படுகின்றன. அதனால் ஏனைய நாடுகளது நகர்வுகள் பாலியில் நிகழ்ந்த மகாநாட்டில் முதன்மையான தென்வலய நாடுகளின் பங்களிப்பாக மதிப்பிடப்படுகிறது.

நான்காவது, போரும் அணுவாயுத முரண்பாடும் ஏவுகணை தொழில்நுட்பத்தின் பாதிப்புகள் சார்ந்தும் பாலி மாநாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது. குறிப்பாக உக்ரைன், ரஷ்யப் போர் அதில் அணுவாயுப் பாவனைக்கான நகர்வுகள் அமெரிக்கா சீனத் தலைவர்களால் மட்டுமல்ல ஏனைய உலக நாடுகளாலும் கண்டனத்திற்கு உள்ளான விடயமாக அமைந்திருந்தது. ரஷ்யா மீதான கண்டனங்களில் மேற்குலகத் தலைவர்கள் அதிகமான அக்கறை கொண்டிருந்தனர். ரஷ்யாவின் நகர்வுகளால் ஐரோப்பியப் பொருளாதாரம் மட்டுமல்ல ஐரோப்பாவின் ஒற்றுமையும் தகரும் என்ற வாதங்கள் மேலெழ ஆரம்பித்துள்ளன. மேலும், வடகொரியாவின் ஏழாவது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைப் பரிசோதனையானது, மேற்குலகத் தலைவர்களால் அதிகம் விமர்சனத்துக்கு உள்ளானது. வடகொரியாவின் அணுவாயுதங்களை சுமந்து செல்லும் ஏவுகணைத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மேற்குலக நாடுகளின் தலைவர்களால் அங்கீகரிக்க முடியாதிருந்ததையும் அதனை தடுப்பதற்கான விண்ணப்பங்களும் உரையாடலில் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தது.

ஐந்தாவது, சீனாவுடனான தைவான் விவகாரத்தையும் மனித உரிமை தொடர்பிலான விடயத்தையும் மேற்குலக நாடுகளின் தலைவர்கள் மட்டுப்படுத்தி உரையாடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)







கொழும்பு கன்னாரத் தெருவில் இயங்கும் அகில இலங்கை பரத சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நீத்தார் நினைவுத் திருப்பலி 12.11.2022 திகதி சனிக்கிழமை மாலை 6.45க்கு புதுச்செட்டித் தெரு புனித வியாகுல மாதா ஆலயத்தில் இடம்பெற்றது. வருடம்தோறும் நவம்பர் மாதங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்நிகழ்வு அமரத்துவம் அடைந்து விட்ட சங்கத் தலைவர்கள், போஷகர்கள், தர்மகர்த்தாக்கள், முக்கிய பதவி வகித்தவர்கள், உறுப்பினர்களின் உறவுகள் அனைவருக்கும் ஆத்ம இளைப்பாற்றிக்காக முன்னெடுக்கப்பட்ட இரங்கல் திருப்பலியாகும். புனித வியாகுல மாதா ஆலயத்தின் பங்குத்தந்தை பீட்டர் சுபராஜ் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது, இதில் கொழும்பு மாநகர சபையின் சேவையாளர் திருவாளர் ஜோசப் பெர்னாண்டோ வினால் இரவுணவு வழங்கப்பட்டது. அதே நேரத்தில் சாந்தி நிவாஷ, அன்னை தெரசா இல்லத்திற்கு உணவு அன்பளிப்புச் செய்யப்பட்டது. (படங்கள்: மொஹமட் நசார்)

# இசுரு லக்ஷானின் வெற்றிப் பயணம்

இசுரு லக்ஷான் வீரசூரியா மூன்று வயதாக இருந்தபோது, மருத்துவர் ஒருவரை சந்திக்கச் சென்றபோது அந்நியர் ஒருவரை சந்தித்த சந்தர்ப்பம் அவரின் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்தது, இசுருவின் நடத்தையில் உள்ள முரண்பாடுகளை அவரது தாயார் பத்மா குமாரி கவனித்ததை அடுத்து அவருக்கு செவித்திறன் குறைபாடு இருப்பது கண்டறியப் பட்டது.



இசுருவை பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் (WDC) பணியாளர் ஒருவர் பார்க்க நேர்ந்தது., அவருக்கு WDC வழங்கக்கூடிய வேறு வகையான ஆதரவு தேவை என்பதை அவர் உணர்ந்தார்.

WDC ஆனது பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற ஒதுக்கப்பட்ட குழுக்களுக்கு ஆதரவு அளிக்கிறது,மற்றும் அதன் சமூக அடிப்படையிலான மறுவாழ்வு (CBR) திட்டத்தின் மூலம் சிகிச்சை, முறையான சைகை மொழி வகுப்புகள் மற்றும் பிற தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சைகளை வழங்குகிறது. கண்டி மாவட்டத்தில் உள்ள 11 நிலையங்களில் வீட்டு அடிப்படையிலான சிகிச்சைகளும் உள்ளடங்கும். இத்திட்டத்தின் கீழ், விரைவாகக் கற்கும் ஆற்றலைப் பெற்று இருந்த இசுரு, ஐந்து வயதிற்குள் செவித்திறன் குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளியில் ஒருங்கிணைவதற்கு தயார் நிலையில் இருந்தார்.

"நான் மிகவும் இளமையாக இருந்தபோது WDC இல் சேர்ந்தேன், நான் சைகை மொழியைக் கற்றுக் கொண்டேன். எனக்கு பல புதிய நண்பர்கள் கிடைத்தார்கள் எனது சமூக திறன்களை வளர்த்துக் கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமைந்தது," என்கிறார் இசுரு.

அவரது தாயார் தெரிவிக்கையில் , “WDC ஆதரவளித்தமையானது இசுரு கல்வி பொதுத்தராதர சாதாரண தரம் வரை சிறப்புப் பள்ளியில் கல்வி கற்பதற்கு உதவியது. பின்னர் அவர் அரசாங்கத்துக்கு சொந்தமான சிறப்பு தொழிற்பயிற்சி பாடசாலையில் பயின்றார், அங்கு அவர் தோல் தயாரிப்புகளை வடிவமைப்பதில் பயிற்சி பெற்றார்.

இசுரு பேகன் பேரிகைகள் , திறப்பு கோர்வைகள் போன்ற தோல் பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வந்தார், மேலும் அவரும் அவரது தாயாரும் காலணிகள் தயாரிக்கும் நிறுவனத்தில் இணைந்தனர்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் தோல் தயாரிப்பு ஆலோசகர் எம்.கே.ஜி. சமன் லீலாரத்ன மூலம் காலணிகள் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

WDC இன் புனர்வாழ்வு நிலையங்களில் ஒன்றில் நடைபெற்ற இந்த பயிற்சிப்பட்டறையானது , இலங்கையில் உள்ள ஒரு சில பாதணி உற்பத்தியாளர்களால் மட்டுமே பயன்படுத்தப்படும் அச்சுகளைப் பயன்படுத்தாமல் பாதணிகளை வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல் முறையில் கவனம் செலுத்தியது. சமூகப் பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டமாக WDC உடன் இணைந்து, ஹாங்காங்கைத் தலைமையிடமாகக் கொண்ட குழும நிறுவனங்களின் சமூகப் பிரிவான ரிதம் அறவாரியம் நிதியளித்த பல முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும். நிலையான வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்ப சமூகங்களை தயார்ப்படுத்தும் மூலோபாய கூட்டாண்மைகள் மற்றும் மனித மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் உலகெங்கிலும் உள்ள சமூகங்களை மேம்படுத்துவதையும், வாழ்க்கையை மேம்படுத்துவதையும் ரிதம் அறவாரியம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

காலணிகள் தயாரிக்கும் பட்டறையில் பங்கேற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர் , இசுரு பல ஜோடி காலணிகள் மற்றும் பாதணிகளை தயாரித்து விற்பனை செய்தார்.

இசுருவும் அவரது தாயாரும் தங்களுக்கு வாழ்வாதாரத்தை ஈட்ட உதவிய வாய்ப்பிற்காக மிகவும் நன்றியுடையவர்களாக உள்ளனர்.

அ. கனகசூரியர் ...✍



வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட செயலகமும் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய "மன்னெழில்" மலர் வெளியீடும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ. ஸ்ரான்லி டிமெல்லும் வட மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர் இ. வரதீஸ்வரனும், ஆசிரியர் ஹாமித் எம். சுஹைப்புக்கு "மன் கலைத் தென்றல்" பட்டத்தையும் நினைவுச் சின்னத்தையும் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

## உயிர்!

என்னுயிர் பிரிந்து சென்று
என்முகந் தனைநோக் கிற்று!
கண்ணீர்விட் டழுது சற்றுக்
கவலையோ டதுபே சிற்று;

என்னதான் சாதித் தாய்நீ?
இத்தனை கால மாக...!
இன்று உன் நிலைதா னென்ன
எங்குளாய்? எங்கு செல்வாய்?

தோல்விகள் ஏமாற் றங்கள்...
தொடர்துயர் அவமா னங்கள்
கேள்விகள் ஒன்றுக் கும்நீ
சரியான பதிலா யில்லை!

வாழ்வினை முழுமை யாக
வாழாத பைத்தி யம்நீ!
ஆழ்மனஞ் செத்துப் போன
அரைகுறை நடைப்பி ணம்நீ!

உயிரெனைக் கேட்ட போது
ஊமை நான் ஆழ்மௌ னத்தில்!
'உயிலென ஒன்று மில்லா
உருப்படி யற்ற வன்நீ!'

புதையலாம் சொத்தற் றேநீ
புறப்பட்டு விட்டாய்! என்று
இதையெலாம் உயிர்கூ றிற்று!
இப்படி அதுபே சிற்று;

ஈற்றிலே எல்லாம் ஓட்டம்!
இதுகன வுலகத் தோட்டம்! உயிர்க்
காற்றிலே ஆடும் பட்டம்! நூல்
அறுப்பதே அவனின் திட்டம்!

நூற்றிலே கொஞ்சப் பேராம்
நாளைய விருட்ஷ வேராம்!
நேற்று நீ திருந்த வில்லை இன்று
நேரமொன் றுனக்கு இல்லை!

தொழுகிற நாட்க ளெல்லாந்
தொலைத்தநின் னிலையின் றென்ன?
எழுகிற தூக்க மல்ல;
இனியழு தென்ன பண்ண?

தப்படி வைத்த உன்னைச்
சூழவே நிற்ப வர்கள் என்னை
எப்படி மன்னிப் பாரோ?
எவரெவர் மனமெவ் வாறோ?

உன்னுடன் இருந்த வன் நான்!
உன்மனம் அறிந்த வன்நான்!
என்னுடன் இருந்த போது
எத்தனை ஆட்டம் போட்டாய்...?

உன்னுடம் பைநான் விட்டு
ஓடிப்போய் விட்டேன் இன்று
மண்ணறைக் குள்ளே போவாய் பூ
மஞ்சமோ...? தீக்கி டங்கோ...?

நல்லவன் இல்லை யேநீ உன்
நெஞ்சிலே கையை வைத்துச்
சொல்லுவேன் என்ற போது பதில்
சொல்லவோர் வார்த்தை ஏது?
என் மரண வீட்டில்...

"எத்தனை கவிப டைத்தான்!
இனிவரா...!" என்றான் நண்பன்!
ஓ!...
கவிதைக்குள்தான்...
இத்தனை கால மாக
என்னுயிர் இருந்திருக்கு!

(81ஆவது வகவத்தில் கவிஞர் பிறைக்கவி முஸம்மில் தலைமையில் பாடிய கவிதை)



கிண்ணியா அமீர் அலி...

# இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முதலமைச்சர் ஸ்டாலின்

திமுக அரசு ஆட்சிக்கு வந்ததும் 'இலங்கை அகதிகள் முகாம்' என்பதை 'இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்' என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாற்றினார். 'இந்தப் பெயர் மாற்றம் வெறும் பலகை அளவில் மட்டும் நின்றுவிடக்கூடாது' என்று அவர் யோசித்தார்.

அதன் நீட்சியாக, 'மறுவாழ்வு' என்ற வார்த்தைக்கு உண்மையான ஓர் அர்த்தத்தை அவர் கொடுத்திருக்கிறார். ஆம், இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 317 கோடி ரூபாயை முதலமைச்சர் ஸ்டாலின் ஒதுக்கியிருக்கிறார்.

தமிழ்நாடு அரசு ஒதுக்கிய இந்த நிதியின் மூலம், திண்டுக்கல் மாவட்டம் தோட்டனூத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமில் வசித்து வரும் மக்களுக்கு 8 மாதங்களில் 321 வீடுகளை முதலமைச்சர் ஸ்டாலின் கட்டிக் கொடுத்தார். அதற்கான திறப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. அங்கு மேலும் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை அகதிகளின் நலனுக்காக தமிழக அரசு தனியே ஒரு குழுவை உருவாக்கியுள்ளது.



அதன் தலைவராக அமைச்சர் செஞ்சி மஸ்தான் இருக்கிறார். துணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமியும் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமாரும் உள்ளனர்.

இந்தக் குழுவில், மறுவாழ்வுத்துறை ஆணையர், இலங்கைத் தமிழர்களின் வாழ்நிலை குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற பாரிவேலன் மற்றும் இளம்பரிதி, OfERR (Organisation for Eelam Refugees Rehabilitation) என்ற அமைப்பின் எஸ்.சி.சந்திரஹாசன் ஆகியோர் உள்ளனர்.

குழுவில், 'மூத்த பத்திரிகையாளர்' என்ற அடிப்படையில், கோவி.லெனின் நியமிக்கப்பட்டுள்ளார். அவர், இலங்கைத் தமிழ் அகதிகளின் பல்வேறு முகாம்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து, அரசுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

இலங்கைத் தமிழர்களின் மேம்பாட்டுக்காக அரசு எடுத்துள்ள முயற்சிகள் குறித்து கோவி.லெனினிடம் பேசினோம். 'தமிழ்நாட்டில் மொத்தம் 108 இலங்கைத் தமிழர் முகாம்கள் இருக்கின்றன. இவர்கள் அனைவரும் 1983ஆம் ஆண்டில் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் தொடங்கியபோது புலம்பெயர்ந்து தமிழகம் வந்தவர்கள்.

இதில், 30 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருபவர்களும் உள்ளனர். இவர்களுக்கு அரசு சார்பாக சில உதவிகள் கிடைத்து வருகின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை இவர்களைத் தொப்புள் கொடி உறவுகளாகப் பார்க்கிறோம். ஆனால், இந்திய சட்டத்தின் பார்வையில் இவர்கள் சட்டவிரோத குடியேறிகள். அவர்களுக்கு பாஸ்போர்ட் அல்லது விசா என்பதே கிடையாது.

ஐ.நாவின் குடியுரிமைச் சட்டத்தில் இந்தியா கையொப்பமிடவில்லை. ஆகவே, அகதிகளுக்குக் குடியுரிமை அளிப்பதில் சில சட்டச் சிக்கல்கள் உள்ளன. அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் நாம் உதவிகளைச் செய்து வருகிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள முகாம்களில் மட்டும் 70 ஆயிரம் அகதிகள் உள்ளனர். இவர்கள் அரசின் நேரடிக் கணக்குக்குள் வருபவர்கள். வெளியில் தனியாகத் தங்கி உள்ளவர்களைக் கணக்கிட்டால் 30 ஆயிரத்துக்குள் வருவார்கள். அப்படிப் பார்த்தால், ஒரு லட்சம் பேர் வரையில் தமிழ்நாட்டில் உள்ளனர்.

இலங்கை அகதிகளைப் பொறுத்தளவில் அவர்களின் வாழ்வாதாரம் இரண்டுவிதமாக உள்ளது. ராஜீவ்காந்தி மரணத்துக்கு முன் அவர்களை நமது மக்கள் அரவணைத்த விதம் என்பது வேறு. ராஜீவ்காந்தி மரணத்துக்குப் பின் அவர்கள் மீதான பார்வை என்பது வேறு. ராஜீவ் மரணத்தால் இந்த மக்கள் பல்வேறு இன்னலுக்கு ஆளாக வேண்டிய நிலை இருந்தது என்பதே உண்மை.

ஆகவே, அவர்களின் நலன் சார்ந்த திட்டங்கள் என்பது முறைப்படுத்தப்படவில்லை. குடியுரிமையும் இல்லாத, வாக்குரிமையும் இல்லாத இந்த மக்கள் மீது யாருக்கு அக்கறை எழப் போகிறது? ஆனால், முதலமைச்சராக ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு, 'இந்த மக்களின் நலன்கள் காக்கப்பட வேண்டும்' என்பதில் உறுதியாக இருந்தார். முதலில், இலங்கைத் தமிழ் அகதிகளின் அடிப்படை வாழ்வாதாரத்தை மேம்படுத்த விரும்பினார். மேலும், 'அந்த மக்களுக்கு முறையான வாழ்வுரிமை கிடைக்க வேண்டும்' எனவும் ஆசைப்பட்டார். அவர்களுக்கான குடியுரிமை என்பது நீண்டக் காலத் திட்டம். இதையொட்டித்தான், 'இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழு'வை முதலமைச்சர் அமைத்தார்' என்கிறார் லெனின்.





திருச்சி
எம்.கே. ஷாகுல் ஹமீது...✍

தொடர்ந்து பேசிய அவர், 'இந்தக் குழு, இலங்கை அகதிகளின் கல்வி உரிமை, இருப்பிட தரத்தை உயர்த்துவது, குடிநீர் மாற்றும் சாலை வசதி, மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு என அடிப்படைக் கட்டமைப்புகளைக் களஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனைகளைத் தரும். அதன் அடிப்படையில் அம்மக்களுக்கான தேவைகளை அரசு செய்து கொடுக்கும். இந்த முகாம்களில் உள்ள பிள்ளைகள் பொறியியல் கல்வி வரையில் படிக்கலாம். மருத்துவம் மட்டும் படிக்க முடியாது. ஏனெனில், அது ஒன்றிய அரசின் 'இந்திய மெடிக்கல் கவுன்சில்' அமைப்பின் கட்டுப்பாட்டில் வருகிறது. அதில், சில சட்டச் சிக்கல்கள் உள்ளன.

இதற்கு முன்பாக மு.கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் இந்த மக்கள் மருத்துவம் படிப்பதற்கான உரிமை இருந்தது. ஆனால், ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் அது ரத்து செய்யப்பட்டுவிட்டது. இம்முகாம்களில் உள்ள பல இளைஞர்கள் பொறியியல் படித்துள்ளனர். ஆனால், அவர்கள் பெயிண்ட் அடிக்கும் வேலைக்குத்தான் பெரும்பாலும் செல்கிறார்கள். காரணம், படிப்பு இருந்தாலும் தனியார் நிறுவனங்கள் இவர்களைப் பணிக்கு எடுப்பதில் தயக்கம் காட்டுகின்றன. இவர்களுக்குக் குடியுரிமை இல்லாததால் அரசு வேலை கொடுப்பதற்கும் வாய்ப்பில்லை' என்கிறார்.

''இவர்களின் மேம்பாட்டுக்காக முதலமைச்சர் ஸ்டாலின் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?'' என்றோம். 'இவர்களின் நல்வாழ்வுக்காகத் தமிழக அரசு 317 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இந்த நிதியை வைத்து வீடு கட்டித் தருவது, வேலைவாய்ப்பு அளிப்பது போன்றவை செயல்படுத்தப் பட்டுள்ளன. இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக, சென்னையில் வேலைவாய்ப்பு முகாம் ஒன்றையும் நடத்தினோம். அதன்மூலம் தனியார் நிறுவனங்களில் பல இளைஞர்களுக்கு வேலை தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான முதல் நிகழ்வு, கடந்த 2021 ஆம் ஆண்டு வேலூர் மாவட்டம் மேலமொணவூர் பகுதியில் நடைபெற்றது. இதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக பல முகாம்களுக்குச் சென்று நான் ஆய்வு நடத்தி வருகிறேன். அவர்களின் வசிப்பிடம் தரமாக இல்லை. ஒரு கொட்டகையில் மொத்தக் குடும்பமும் வசிக்கின்றது. சில முகாம்களில் 20 குடும்பங்களுக்கு ஒரு கழிப்பறைதான் இருக்கின்றது. அங்கெல்லாம் சுகாதார பாதிப்புகள் அதிகமாகவே உள்ளன.

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## வாழ்வென்பது...!!!

என்.நூர், தர்கா நகர்

பொன்மஞ்சள் கதிர்கள்
பூவுலகை வசப்படுத்த
வண்ண நிறங்களை
வாகாய் அணிந்து
விடியலுக்கான வாழ்த்தில்
விஞ்சி நிற்கும் பூக்கள்...

கீச்.. கீச்.. ஒலிகளும்
கூ... கூ... ஓசைகளும்
வசந்த காலத்தில்
சுகந்தம் கண்டிட
ஒரு படி மேலே
மெல்லிசை கானத்தில் பறவைகள்...

இயற்கையை உள்ளிழுத்து
வியப்பில் பூரித்து
விலைமதிக்க முடியாத
ஓர் உயிரின் நல்வரவிற்காய்
முயன்று நடந்து கொண்டிருக்கும்
பத்து மாத கர்ப்பிணித்தாய்...

கூரையில்லா வீடுகளாய்
பாதையோர படிக்கட்டுகளில்
பிஞ்சுக் குழந்தைகளுடன்
கொஞ்சிக் கொண்டிருக்கும்
போதைக்கு அடிமையானவனின்
பொதி சுமக்கும் மனைவி...

வீதியோர மன்றத்தில்
விளையாட்டுப் பிள்ளைகளாய்
கைப்பேசி இணையங்களுக்குள்
மெய் மறந்து சுகித்திருக்கும்
பலம் கொண்ட
பசுமையான இளைஞர்கள்...

செவ்விதழ் மலர
கண் சிமிட்டும் தாரகையாய்
புள்ளிமானாய்த் துள்ளி
உயிர்ப்பில் துடித்து
வழுக்கிய முதியவருக்கு
விருப்புடன் உதவிய சிறுமி...

ஓ...வாழ்வென்பது
புரிய முடியாத
புதிர்கள் கோர்த்து
சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு
சரிபாதி உணர்வுகளுடன்
சேர்க்கையாகிய சேகரம்தான்...



## உயிர் கொல்லும் டெங்கு

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்

கொட்டும் மழையால்
சிரட்டையும் தேங்கும்
வட்டமிட்டே குடியேறி
ஆட்சியமைக்கும் டெங்கும்
மீட்டிடாத நோயின்
அழிவுக்குப் பங்காகும்
ஈட்டியாய் குத்திடும்
நுளம்பே தீங்காகும்

சிறியோரும் பெரியோரும்
இதற்குத் தெரியாது
குறி வைத்தே
தாக்குவது புரியாது
மாரி காலமே
இனப்பெருக்கதத்திற்கு
உரியது
வாரி அணைத்தாலே
மரணமென்று அறியாது

குப்பை கூழங்களில்
ஆட்சி செய்யும்
தப்பித் தவறினால்
உயிரைக் கொய்யும்
தீர்ப்பை அதுவே
மாற்றிக் கொள்ளும்
வீராப்பாய் பறந்தே
நோய்ப்பரப்பிக் கொல்லும்

வெற்றுப் பாத்திரங்களை
வெட்டியே புதைத்திடுவோம்
வீட்டுச் சூழலை
சுத்தமாய் வைத்திடுவோம்
வாட்டும் நோயிலிருந்து
நம்மைக் காத்திடுவோம்
நாட்டையும் நலமாக்கி
மகிழ்வில் பூத்திடுவோம்

## பெண்மையின் வலி(ரி)கள்

பொத்துவில் அஜ்மல்கான்

சுவர்களுடன் தனது
சுதந்திரங்களை இறுக்கமாக
வைத்துப் போனவள்
நான்

வலிகளுடன் கண்ணீர்
துளிகளும் அதிகமாய்
வரைந்து வைத்துப்
போன பொக்கிஷம்
நான்

வேதனைகள் மூலம்
வியர்வை துடைத்துப்
போன நேரங்கள்தான்
அதிகம் எனக்கு

ஒன்றாய் பிறந்து
ஒன்றுமில்லாத அநாதையாய்
வாழ்ந்து கொண்டிருக்கும்
எனக்கு கற்பில்லாதவளாய்
வாழ்ந்து நடிப்பதே
கஷ்டமாயிருக்கு இன்று

பக்குவமடைந்த பின்
பரிதாபம் கொள்ள
யாருமில்லை காமம்
ஒன்றை தவிர

வழி தவறிப்
போக ஆசையில்லையெனக்கு,
வழி எங்கும்
காமம் பேசி
போகும் மானிடரை
பார்க்கும் போது
மாய்ந்து விடலாமே
என ஆசை
பிறக்கிறது தினமும்
எனக்கு

ஒதுக்கு புரமாயிருக்க
ஒன்றுமில்லை ஓராயிரம்
விழிகள் பார்த்திருப்பதனால்
வழிகள் எதுவுமில்லை

எனக்கான வேதனை
குறையுமா என
எண்ணி தினமும்
நாட்களை கடத்திப்
போகிறேன் நானும்
கற்பில்லாதவள் என்று



## ஏசியாவது பேசடி...!

பொத்துவில் பாவலன் பௌஸான்

மௌன மொழி பேசும்
ஊமைக் கிளி நீயடி,
மௌனம் கலைத்து
மணிக் கணக்காய்!
மச்சானிடம் ஏசியாவது பேசடி!

மலரெடுத்து மஞ்சம் செய்தும்
மச்சான் மனம் உறங்கல்லையே!
மாராப்பில் மூடிய வண்ணம்
ஏசியாவது பேசடி...!
மச்சான் நான்,
தாலாட்டாய் எண்ணி உறங்க!

பாசம் வைத்து
பரிதவிக்கிறேனடி
பாவமென்றேனும்
ஒரு முறை ஏசியாவது பேசடி...!

ஏனடி ஏனடி
என் கண்ணே என் முன்னே
ஏசியாவது பேசடி...!



## மறந்து நடந்திட

அன்புடன் நதுநசி

கசப்பான சில
நிகழ்வுகள் தான்
மனதை தினம்
நோகடித்து கொல்லும்

கடந்து போக
எண்ணும் போது
கனவுகள் போல
மீண்டும் வரும்

நடந்த போது
தவறுகள் எம்மில்
இருந்தது கிடையாது
இருந்தும் கசந்தது

நன்றே நடந்திட
வழி நடந்தும்
பயன் பல பெற்றும்
அவர் வாழ நின்றோம்

உமிழ்ந்த சொல்
எச்சில் போலல்ல
வீழ்ந்தும் அது
தீங்கின்றி கிடக்க

மறந்து மகிழ்ந்து
வாழ்ந்திடல் நன்று
மறந்து நடந்திட
மீண்டும் நடந்தால்?

## உன்பெயர் நிலைக்க...

பூவை சரவணன்

பொங்கு தமிழில் மங்கா மந்திரம்
கங்கை தலையில் சூடிய பரமன்
திங்கள் ஒளியும் சேர்ந்தே ஔிரும்
திருவாசகம், திருமூலர் திருமந்திரம்
தேடிப் பார்த்தால் தேகம் சிலிர்க்கும்

மானக்குறத்தி மணாளன் முருகன்
நாடிப்பிடித்த நற்றமிழ் புகழ்
சந்தக்கவியில் சிந்திய முத்தாம்
அருணகிரியின் பெருமை திகழும்
கற்றணைத்துள்ளம் உவகை கொள்ளும்

எத்தனை எத்தனை இந்துக்களின் இதிகாசங்கள்
தத்துவம் சொல்லும் சைவ நெறிகள்
இத்தனை மேலாய் எத்தனை நூல்கள்
முற்றத்து மல்லிகை முகிழ்ந்து மணக்க
சித்தர்கள் வாழ்வு சிறந்து ஜொலிக்கும்

அறிவுடை மேதைகள் ஆக்கிய பொக்கிஷம்
அளவிட முடியா ஆன்மிகக் கதைகள்
கொட்டிக்கிடக்கும் குவலயம் தன்னில்
அறிவுப்பசியை அடக்கிட முடியாமல்
அலையும் மனிதா உலையில் விழுவாய்

வேகத்துடனே விவேகம் வேண்டும்
விவேகானந்தரின் வேத வாக்கு
காலம் மாறும் கற்பனை விரியும்
நல்லதைத் தேடி நாடியோடு
நானிலத்தில் உன் பெயர் நிலைக்கும்

அற்ப ஆசையில் அரசியலை கல்லாதே
சொற்ப காலத்தில் சூலம் போல் குத்தும்
ஓட ஓட விரட்டியடிக்கும்
தேவை அறிந்து சேவை செய்தால்
ஞாலம் புகழும் நற்பெயர் கிட்டும்

## மழைக்காலம்



ரதிதேவி, மானிப்பாய்

நிலவு குடையில் நனைகிறது
நில்லாது மேகங்கள் உடைகிறது

பிச்சைப் பாத்திரம் போல்
ஏந்தி நின்ற வீதிகள்
நிறைந்து ஓடுகின்றன

ஒரே இரவில்
ஆயிரம் நிலவின்
விம்பங்கள் உதிக்கின்றன
மழை ஒரு மாயக் கடிதத்தை
உடல் மேல் எழுதிச் செல்கிறது

செவிகள் சிலிர்கின்றன
விழிகள் துதிக்கின்றன
அலை அற்ற ஒரு கடல்
ஆகாயம் தூவும் மலர்

மௌனம் கலைந்த இறைவன்
பக்தனோடு சேர்ந்து அழும் நாள்
மழை இரவு

## பெண் அழகு



கிருசன் புளியங்குளம்

புவனத்தின் மத்தியிலே
புத்துயிர்க்கும் ஓர் அழகு

கண் இமைக்கும் நேரத்திலே
கரைத்து இடும் ஓர் சமயம்

விண் நோக்கி பார்க்கவில்லை அவள்
கண் பார்வை நோக்கில்லை

வழி ஓரம் தேடவில்லை என்
விழி ஓரம் தேடி நின்றேன்

## ஏன் சுணக்கம்

தரு. தங்கம்
ரக்குவானை

வாரம் தோரும் நீ...
வளர்பிறையாக வரும்
வார மஞ்சரியே... வணக்கம்
சில நாட்களாக பார்க்கிறேன்
நீ சிங்காரித்து வருவதற்கு...
சுணக்கமாகிறது...
பொருளாதார நெருக்கடியிலும்
பொக்கிஷமாக மணம் வீசும்
வார மஞ்சரியே...
விலை கூடினாலும்
விடாமல் உன்னை
துரத்தி வீறு நடைபோட
வைப்போம்...
சுணங்காமல் வா
வாரமஞ்சரியே...



## பெண்களையும் மதியுங்கள்

என். கே. வேணி
பலாங்கொடை.

மண்ணில் வாழும்
உயிருள்ள பெண்ணின்
உணர்வுகளை
மதிக்காமல்
கொன்று குவித்து
சிறுமைபடுத்தி விட்டு
விண்ணிலே இருக்கும்
வெண்ணிலாவை
பெண்களுக்கு ஒப்பிட்டு
உவமை கூறி
கவிதைகள் புனைந்து
மேதினியிலே புகழ்
சேர்க்கும் கவிஞர்களே
தொலைவில் உள்ள
வெண்ணிலாவை
போல்
அருகில் உள்ள
பெண்களையும்
மதியுங்கள்...
பாவலர்களே...

## இயற்கையே அமைதி கொள்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

படிப்படியாய் சற்று தலை நிமிரும் நேரம்
பட்டென உன் கோரப்பிடியால் எமை
தடுமாற வைக்கிறாய்
எட்டடுக்கு மாளிகையல்ல
இருண்ட சிறு குடில்தான்
அன்றன்று காலந்தள்ள
அரிதாய்த் தேடும் ஆதனங்களை
புசிப்பதற்காய்த்தேடும் உணவுகளை
அனுபவிக்கும் முன்னே
அள்ளிச் செல்கிறாய் அதுமட்டுமா?
இருப்பிடத்தை தரைமட்டமாக்கி
இணைந்து வாழ்ந்த இதயங்களை
இறப்புக்குள்ளாக்கி
இருப்போரை இன்னல்படவைத்து
இதம் காண்கின்றாய்
இயற்கையே நீ அமைதிகொள்
எம்மை நலமாய் வாழச் செய்!



## இளைஞர்களுக்கான 28 வணிக ரீதியிலான

# பயிலுநர் சமையலறைகளின் முதலாவது சமையலறை திறப்பு

இளைஞர்களுக்கு வளர்ந்து வரும் துரித சேவை உணவகங்கள் (QSR) துறையில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், முதலாவது தொழிற்பயிற்சி சமையலறை குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சர்வதேச சிறந்த செயற்பாடுகளுக்கமைய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி முகவர் (USAID) அமைப்பினால் புதிய பாடவிதானம் ஏற்படுத்தப்படுவதுடன், தொழிற்பயிற்சியாளர்களையும், மதிப்பாய்வாளர்களையும் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.




அனைவருக்கும் சம அளவில் வாய்ப்புகள் திட்டத்துக்கு 1.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியளிப்பு Yum! வர்த்தக நாமமையத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அதனூடாக 28 தொழிற்பயிற்சி அதிகார சபை (VTA) மற்றும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நிலையங்களில் வணிக சமையலறைகளை (DTET) நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இரண்டு நிலையங்கள் மாற்றுத்திறன் படைத்த இளைஞர்களை பயிற்றுவிப்பதற்காக அர்ப்பணிக்கப்படும்.

அனைவருக்கும் சம அளவில் வாய்ப்புகள் எனும் தலைப்பில் அமைந்துள்ள இந்த தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை, இலங்கையில் Pizza Hut விற்பனைத் தொடரின் ஏக உரிமையாளராகத் திகழும் Gamma Pizzakraft Lanka, USAID இன் இளைஞர்களின் வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முனைவுக்கான திட்டமான YouLead மற்றும் சேவாலங்கா மையம் ஆகியன இணைந்து முன்னெடுத்துள்ளன. அனைவருக்கும் சம அளவில் வாய்ப்புகள் எனும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, தொழில்நுட்ப மற்றும் தொழில்பயிற்சி கல்வி மற்றும் பயிற்சித் துறையில் (TVET) நிறுவனசார் கொள்ளளவை கட்டியெழுப்ப உதவுவதுடன், வருடாந்தம் 2100 க்கு அதிகமான இளைஞர்களை, QSR தொழிற்துறையில் தொழில் நிலைக்கு அவசியமான சாதனங்கள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றைப் பயிற்றுவித்து தயார்ப்படுத்தும்.

## மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவுக்கு 70 மடிக்கணனிகளை வழங்கிய SEDR

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் நாடு முழுவதும் உள்ள மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு (மத்தியஸ்தம்) 70 மடிக்கணினிகளை வழங்கியது.

ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி வழங்கும் பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) திட்டமானது, நாடு முழுவதும் உள்ள மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் (மத்தியஸ்தம்) நிர்வாக செயல்பாடுகளை மேம்படுத்த 70 மடிக்கணனிகளை வழங்குவதன் மூலம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவிற்கு தனது ஆதரவை விரிவுபடுத்தியது.



நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரியநாத் பெரேரா, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் யாப்பா, மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஆளுனர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான பிரதிநிதிகள் குழுவின் பிரதித் தலைவர் லார்ஸ் பிரெடல், மற்றும் பிரிட்டிஷ் கவுன்சிலின் இலங்கைக்கான பணிப்பாளர் மார்யா ரெஹ்மான் ஆகிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) என்பது ஆசியா நிலையத்துடன் இணைந்து பிரிட்டிஷ் கவுன்சிலால் செயல்படுத்தப்படும் நான்கு வருட நீதிக்கான அணுகல் திட்டமாகும். இந்த யூரோ 7 மில்லியன் திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் நிலைமாற்றம், நல்லிணக்கம் மற்றும் அனைத்து பகுதியினரையும் உள்வாங்கிய ஜனநாயகப் பங்கேற்பு (STRIDE) எனும் முன்முயற்சியின் ஒரு பகுதியாகும்.

SEDR இன் பயன்விளைவுப் பரப்பு 4, தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதன் மூலம் மத்தியஸ்த சபைகளின் நிர்வாகச் செயல்பாட்டை ஆதரிக்கும் செயல்பாட்டை உள்ளடக்கியது. புதிதாக நியமனம் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தரவுகளை தொகுத்து வழங்குவதை இலகுபடுத்தும் நோக்கத்துடன் இது அமைந்துள்ளது.

## ஊழியர்களுக்கு வீட்டுத் தோட்ட திட்டத்தை அறிமுகம் செய்துள்ள UTE



தாம் சேவையாற்றும் சகல சந்தைகளிலும் சிறந்த பொறியியல் சேவைகளை வழங்குநராகத் திகழும் நோக்கத்துக்கமைய தொடர்ந்து இயங்கி வரும் யுனைட்டட் ட்ராக்டர் அன்ட் இக்யுப்மன்ட் (பிரைவட்) லிமிடெட் (UTE), தமது 75 வருட கால வரலாற்றிலிருந்து, தம் ஊழியர்களின் மீது கவனம் செலுத்துவதனூடாக சிறப்பாக இயங்கக் கூடியதாக இருக்கும் என்பதை உணர்ந்துள்ளது.

2022 செப்டெம்பர் 13 ஆம் திகதி ஆரம்பித்திருந்த "சொந்த உணவை பயிரிடுங்கள்" எனும் பயிர்ச் செய்கைத் திட்டத்தினூடாக, ஊழியர்கள் மத்தியில் நலன்புரிச் செயற்பாடுகளை முன்னெடுப்பது, எதிர்காலத்தில் எழக்கூடிய உணவுத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் அவர்களை தயார்நிலையில் வைத்திருப்பதற்கு அவசியமான திறன்களை வழங்குகின்றது. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நிலையை கவனத்தில் கொள்ளும் போது, இந்த நடவடிக்கை UTE ஊழியர்களுக்கு நிலைபேறான வகையில் உணவு உற்பத்தியை மேற்கொள்ள உதவியாக அமைந்திருக்கும். "சொந்த உணவை பயிரிடுங்கள்" திட்டத்தின் அறிமுக நிகழ்வில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இவருடன், அமெரிக்கத் தூதரகம் மற்றும் இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் (AMCHAM) பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

2022 ஜூன் மாதத்தில் வத்தளையில் அமைந்துள்ள UTE தலைமையகத்தில் இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்ட செயற்பாடுகள் UTE ஊழியர்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதன் போது பெருமளவான பகுதி பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தினூடாக பெறப்படும் விளைச்சல், 325 க்கு அதிகமான ஊழியர்கள் மத்தியில் அவர்களின் தேவைகளின் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படும். அதனூடாக அவர்களுக்கு தமது சொந்த முயற்சியினூடாக தமக்கு தேவையான உணவுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## William Angliss; சகல வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் திறந்துவைப்பு



SLIIT பல்கலைக்கழகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள William Angliss Institute கட்டடத்துக்கு புதிதாக இணைக்கப்பட்ட பகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த ஆறு அங்கத்தவர்கள், வில்லியம் அங்லீஸ் இலங்கை நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுடன் சிறப்பு விருந்தினர்கள் பலரும் மேற்படி வைபவத்தில் கலந்து கொண்டனர்.

அவுஸ்திரேலியாவின் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை செயலாளர் திருமதி ஜூடித் ஸ்லெசின் அம்மையார் நாடாவை வெட்டி திறப்பு விழாவை தொடங்கி வைத்தார். சம்பிரதாயபூர்வமாக பால் பொங்கி, மங்கள விளக்கேற்றுவதற்காக சகல விருந்தினர்களும் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள சமையலறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி நிக்கலஸ் ஹன்ட் மற்றும் இலங்கை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அனுக் வீரசிங்க ஆகியோர் உரையாற்றும் போது கட்டடத்தை மேம்படுத்தும் கருத்திட்டத்திற்காக உழைத்த ஒப்பந்தக்காரர்களுக்கும், வழங்குநர்களுக்கும், வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் தலைவர் எரல் வீரசிங்க உள்ளிட்ட நிருவாகத்தினருக்கும் பணியாட்டொகுதியினருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

அதைத் தொடர்ந்து இலங்கை பாணியில் தயாரிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரம் மற்றும் பகல் போசன உபசரிப்பு நிகழ்வு இடம்பெற்றது. புதிய கட்டட வளாகம் இரண்டு சமையலறைகளை கொண்டுள்ளது. (Hot Kitchen & Pastry Kitchen) மேற்படி இரண்டு சமையலறைகளும் நவீன ஐரோப்பிய உபகரணங்களை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 10வது ஆண்டு நிறைவைக் கோலாகலமாக கொண்டாடிய Homelux PVT Ltd



உள்நாட்டு நுகர்வோருக்கு உயர் தரத்துடன் கூடிய சர்வதேசளவில் பிரபலமான நவீனரக சமையலறை உபகரணங்களைத் தருவிக்கும் இலங்கையின் முன்னணி விநியோகஸ்தராக Homelux திகழ்கிறது. 2012 ஆம் ஆண்டு 7 பணியாளர்களுடன் கூடிய விற்பனை நிலையமாக தனது செயற்பாடுகளை ஆரம்பித்த Homelux, இன்று நாடளாவிய ரீதியில் இயங்கும் வணிகமாக தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளதுடன், சர்வதேசளவில் அங்கீகரிக்கப்பட்ட 14 வர்த்தக நாமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 988 க்கும் மேற்பட்ட தயாரிப்புகளை விற்பனை செய்து வருகிறது. Stand mixtures களுக்கு புகழ்பெற்ற அமெரிக்க வர்த்தக நாமமான KitchenAid, உயர்தர சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையலறை உபகரணங்களுக்கு புகழ்பெற்ற துருக்கிய வர்த்தக நாமமான Korkmaz, பிரத்தியேகமான கண்ணாடிப் பொருட்களுக்கான வர்த்தக நாமமான பிரான்சின் O'cuisine, அதிநவீன வடிவமைப்பிற்கான 'Red Dot' விருதினைத் தனதாக்கிய ஜப்பானின் KAI கத்திகள், உலகின் முதல்தர stainless steel சமையலறை உபகரணங்கள் மற்றும் mixer grinder தயாரிப்பாளரான Butterfly போன்ற பலதரப்பட்ட வர்த்தக நாமங்களை இலங்கையிலுள்ள நுகர்வோரும் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை Homelux ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மேற்கூறிய வர்த்தக நாமங்கள் கடந்த 10 ஆண்டு காலமாக Homelux இன் வெற்றிப் பயணத்துக்கு உறுதுணையாக இருந்ததுடன் எதிர்காலத்திலும் தமது பங்காண்மையை விஸ்தரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

Homelux இலங்கையின் முன்னணி வியாபாரக் குழுமமாகிய Avarna Ventures இன் துணை நிறுவனமாகும். Avarna குழுமமானது Rainco, Light & Shade, Blink International, World of Outdoor, Gift Works, Miller Holz போன்ற வெற்றிகரமான வியாபாரங்களை உள்ளடக்கிய பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளை நுகர்வோருக்கு வழங்கி வருகின்றது.

## OKAYA Power உடன் கைகோர்த்துள்ள DSL Energy

திறன் கோட்பாடுடனான மற்றும் நிலைபேண்தகு எரிசக்தி தீர்வுகளுக்கான வளர்ந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, தொடர்ந்து வழிமுறைகளைக் கண்டறிந்து, அவற்றை வழங்கி வருகின்ற மரபின் அடிப்படையில் மற்றுமொரு முக்கிய முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், டக்ளஸ் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் இன் உறுப்பு நிறுவனமான DSL Energy, உலகளவில் உயர்தர பற்றரி தயாரிப்புக்களை வழங்கி வருகின்ற ஒரு முக்கிய வர்த்தகநாமமான இந்தியாவின் ஒகாயாவுடன் (Okaya Power குழுமத்துடன்) கூட்டாண்மையொன்றை சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது.




இந்த கூட்டாண்மையின் மூலம், Okaya Power குழுமத்தின் மிகவும் பெயர்பெற்ற தயாரிப்பு வரிசையின் ஊடாக இலங்கை சந்தைக்கு தனிப்பாவனைக்கான சூரிய உரிசக்தி தீர்வுகளை வழங்குவதை DSL Energy தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் அவற்றின் பற்றரிகள், சூரிய மின்னுற்பத்திக் பலகணிக் கலங்கள் மற்றும் இன்வேர்ட்டர்கள் ஆகியவை அடங்கும். இந்த கூட்டாண்மையின் விளைவாக, இலங்கை சந்தையானது அத்தகைய தயாரிப்புகளுக்கு சிறந்த தயாரிப்பு உத்தரவாதங்களை அனுபவிக்கும். இதற்கு அமைவாக பற்றரிகளுக்கு 3 ஆண்டுகள், இன்வேர்ட்டர்களுக்கு 2 ஆண்டுகள் மற்றும் சூரிய மின்னுற்பத்திப் பலகணிக் கலங்களுக்கு 25 ஆண்டுகள் என உத்தரவாதம் கிடைக்கப்பெறுகின்றது.

நாடளாவிய ரீதியில் உள்ள DSL Energy இன் 400 க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்களின் வலையமைப்புகள் மூலம் விநியோகிக்கப்படுவதுடன், தவணைக் கொடுப்பனவுத் திட்டங்கள், உள்நாட்டிலுள்ள சேவைமையங்கள் வழியாக சிறந்த விற்பனைக்குப் பிந்திய சேவை மற்றும் வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப மாறுபட்ட எரிசக்தி திறன்களுக்கு ஏற்ப தயாரிப்புகளின் கிடைக்கும் தன்மை ஆகியவற்றால் வாடிக்கையாளர்கள் பயனடைவார்கள்.

சூரியன் மிகவும் மதிப்புமிக்க, ஆனால் முழுமையாக பயன்படுத்தப்படாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் ஒன்றாகும் என நாங்கள் நம்புகிறோம். வீடுகள் மற்றும் வணிகங்களுக்கு எரிசக்தியை வழங்குவதிலிருந்து, சூரிய எரிசக்தி ஒட்டுமொத்த தொழில்துறைகளுக்கும் பொருளாதாரங்களுக்கும் எரிசக்தியை வழங்கும் வல்லமை படைத்தது. உற்பத்தித் தரம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை ஆகியவற்றில் DSL மற்றும் Okaya ஆகிய இரண்டுமே ஒரே தத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதால், Okaya வழங்கும் சூழலுக்கு தீங்கிளைக்காத, நம்பகமான மற்றும் நீடித்து உழைக்கும் பற்றரி தயாரிப்புகளுடன் இலங்கையில் சூழலுக்கு தீங்கற்ற எரிசக்தித் துறையை மேம்படுத்துவதற்கு முமயலய உடன் கூட்டுச்சேர்வதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், என்று DSL Energy இன் தலைமை அதிகாரியான நிரஞ்சன் ஜெயசிங்க கருத்து வெளியிட்டார்.

## mRetail கட்டமைப்பை அறிமுகம் செய்துள்ள SLT-MOBITEL

இலங்கையின் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, தனது mRetail தீர்வின் அறிமுகத்தினூடாக, நாட்டின் விற்பனைப் பிரிவில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த முன்வந்துள்ளது.

இந்தக் கட்டமைப்பினூடாக, விற்பனையாளர்களுக்குள் தமது வாடிக்கையாளர்களுக்கு அதிகளவு வெகுமதிகள் நிறைந்த சொப்பிங் அனுபவத்தை டிஜிட்டல் கட்டமைப்பினூடாக பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

வாடிக்கையாளர்களுக்கு இந்த உயர்தர அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ள விற்பனையாளர்களில் ஒன்றாக Edinborough இன் Grandeur பல்பொருள் விற்பனைத் தொடர் அமைந்துள்ளது. புரட்சிகரமான mRetail கட்டமைப்புடன் இணைந்து கொண்ட புதிய விற்பனையாளராக இது அமைந்துள்ளது.

mRetail உடன் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற பாதுகாப்பான கொடுப்பனவுகள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள், mCash ஊடாக பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு போன்றவற்றை மேற்கொள்ள முடியும்.

mRetail கட்டமைப்பில் காணப்படும் சில பிரத்தியேகமான உள்ளம்சங்களில், Cloud செயற்படுத்தப்பட்ட விற்பனை POS இயந்திரங்கள், பிரத்தியேகமான mCash Total Digital Banking Payment Gateway தீர்வுகள், வர்த்தக நாம ஊக்குவிப்புகளுக்காக டிஜிட்டல் காட்சிப்படுத்தல்கள் மற்றும் வாடிக்கையாளர் லோயல்டி கட்டமைப்பு நிர்வாகத் தீர்வுகள் போன்றன அடங்கியுள்ளன.

mRetail செயற்படுத்தப்பட்ட சகல விற்பனையகங்களிலும், SLTMOBITEL இன் Club Magnet வாடிக்கையாளர்களுக்கு இந்த பிரத்தியேக சேவைகளை வழங்கும் வகையில் இந்தச் சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

SLTMOBITEL இணைப்புத்திறன் சேவைகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சுய செயற்படுத்தல் SIM சேவைகளுடன் உடனடியாக இணைப்பை ஏற்படுத்தும் வசதி வழங்கப்படுகின்றது.

மேலும், mRetail கட்டமைப்பின் வலுவை பயன்படுத்த தீர்மானிக்கும் விற்பனையாளர்களுக்கு, பிரிவு அடிப்படையிலான விற்பனை சந்தைப்படுத்தல், mAgents ஊடாக Ecochannelling பல்பொருள் விநியோகம் போன்றவற்றின் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## காப்புறுதி நிறுவனங்களில் முன்னோடியாக திகழும் Co-operative Insurance PLC

1999ஆம் ஆண்டு, இலங்கையில் காப்புறுதி வர்த்தகத்தில் முன்னோடியாக களமிறங்கிய Co-operative Insurance PLC, நகர்ப்புறங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட காப்புறுதிச் சேவையை கிராமப்புற மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளதுடன் தற்போது நாட்டில் குறுகிய காலத்திற்குள் காப்புறுதித் துறையில் அதிகூடிய வளர்ச்சியை பதிவு செய்து காப்புறுதி நிறுவனங்கள் மத்தியில் முன்னோடியாக திகழ்கிறது.

தனது பயணத்தில் மற்றொரு பெருமையான படியை எடுத்துக்கொண்டு, Co_operative Insurance PLC, அதன் அதிகபட்ச சேவையை வழங்கும் நோக்கில், நாட்டின் முன்னணி அரசுக்கு சொந்தமான வங்கியான இலங்கை வங்கியுடன் (வாகனம் மற்றும் தீ) காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை ஒக்டோபர் 27ம் திகதி மேற்கொண்டது.



இது இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கு Co_operative Insurance PLC வழங்கும் காப்புறுதி வசதிகளைப் பெறுவதற்கு இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் லீசிங் வசதிகளைப் பெறுவதற்கான திறனை வழங்குகிறது.

83 வருடங்களுக்கும் மேலாக இலங்கையர்களுக்கு நம்பகமான வங்கி வசதிகளை வழங்கி வரும் இலங்கை வங்கியுடன் தமது வாடிக்கையாளர்களுக்கு காப்புறுதி வசதிகளை வழங்குவதற்கான பிரதான காப்புறுதியாளராக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட முடிந்ததுடன், இது Co_operative Insurance PLC பெற்ற மற்றுமொரு வெற்றியாகும் என நிறுவனத்தின் தலைவர் சுசில் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் இவ்வாறான பொருளாதார சவால்களை எதிர்நோக்கும் போது, கார்கள் மற்றும் வீடுகள் போன்ற சொத்துக்களுக்கான குறைந்த காப்புறுதிப் மாதாந்த கட்டுப்பணத்தால் இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் நன்மையடைவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைவதாக Co_operative Insurance PLC நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உதய குமார தெரிவித்தார்.

சாதாரண பொதுமக்களின் நிலைமையை சரியாக அடையாளம் கண்டுகொண்டுள்ள Co_operative Insurance PLC மற்றும் இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான இலங்கை வங்கியும் இவ்வாறான ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளமை பல இலங்கையர்களின் வங்கி மற்றும் காப்புறுதி விவகாரங்களில் பெரும் அனுகூலத்தைப் பெறுவார்கள் என நம்பலாம். குறிப்பாக இலங்கையில் காப்புறுதித் துறையில் மூன்றாவது பெரிய சேவை வலையமைப்பைக் கொண்டுள்ள Co_operative Insurance PLC மற்றும் இலங்கையின் வங்கித் துறையில் மிகப் பெரிய கிளை வலையமைப்பைக் கொண்ட இலங்கை வங்கியுடனான ஒப்பந்தம் உண்மையிலேயே ஒரு சிறப்பு வெற்றி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது .

# வாரபலன்



20.11.2022 - 26.11.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

உங்கள் ராசிக்கு தொழில் மற்றும் லாபஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வக்கிர நிவர்த்தியாகி இப்பொழுது பலம் பெற்று சென்றிருக்கிறார். இருப்பினும் கார்த்திகை 12ம் திகதி (28/11/2022)வரை செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிவதால் உங்களுடைய எண்ணங்களை செயலாக மாற்ற இயலாது. மனதில் ஒரு பய உணர்ச்சி இருந்து கொண்டே இருக்கும். தொழிலில் லாபத்தை எதிர்பார்க்க முடியாது. ஒருவேளை லாபம் கிடைத்தாலும் அது அடுத்த நிமிடமே விரயமாகும் சூழல் உண்டு. உங்கள் ராசிக்கு விரயாதிபதியான குருபகவான் இப்போது வக்கிர நிவர்த்தியாகிவிட்டார். எனவே சேமிப்பு கரையும். உறவினர்கள் வழியிலும் நண்பர்கள் வழியிலும் செலவு வரலாம். பயணங்கள் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் பிரச்சினைகள் வராமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனம்.குருவின் பார்வையால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்ள எடுத்த முயற்சி பலன் தரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் மனதில் இடம்பெறும் விதம் உங்கள் பணி சிறப்பாக இருக்கும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இந்த மாதத்தில் நடந்தேறும்.

## ரிஷபம்

உங்கள் ராசிக்கு 9,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி இப்போது வக்கிர நிவர்த்தி ஆகி பலன் பெற்று சஞ்சரிக்கிறார். எனவே பாக்கிஸ்தானம் பலம் பெறுகிறது. அதே சமயம் கார்த்திகை 12ஆம் திகதி (28/11/2022) வரை மிதுனத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிகிறது. இதனால் மாதத்தில் முற்பகுதியில் பிரச்சினைகள் அதிகரிக்கத்தான் செய்யும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. சில காரியங்களை செய்துவிட்டு ஏன் செய்தோம் என்று நினைப்பீர்கள். தொழிலுக்காக எடுத்த முயற்சியில் சில தாமதங்கள் ஏற்பட்டாலும் உங்கள் ராசிக்கு சனி யோகம் செய்யும் கிரகம் என்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கை கூடிவிடும். குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகி லாபஸ்தானத்தில் பலம் பெற்று சென்றிருக்கிறார். உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகை கிரகமாக இருந்தாலும் லாபாதிபதியாக இருப்பதாலும் பொருளாதார பற்றாக்குறை அகலும். இழப்புகளை ஈடு செய்ய புதிய வழி பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் மனதில் இடம் பெறுவீர்கள். கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 8, 9 ஆகிய இடங்களில் அதிபதியான சனி வக்கிர நிவர்த்தியாகி பலம் பெற்றுவிட்டார். எனவே அட்டமத்து சனியால் எண்ணற்ற பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். அளவு கடந்த அன்பு செலுத்தியவர்கள் கூட எதிரியாகும் சூழ்நிலை உருவாகும். நல்ல ஆலோசனைகளை கேட்டு அதன்படி செயல்பட முன் வந்தாலும் மனம் செயல்பட விடாது. விரக்தியும் வேதனையும் அதிகரிக்கும். இருப்பினும் ராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய் கார்த்திகை 12ம் திகதி (28/11/2022) வரை சனியை பார்ப்பதால் தைரியமும் தன்னம்பிக்கையும் வெற்றியைத் தேடித் தரும்.

## கடகம்

உங்கள் ராசிக்கு 7,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் வக்கிர நிவர்த்தியாக இப்பொழுது பலம் பெற்று சத்தமஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். சனிக்கு மற்றும் ஒரு பெயர் 'மந்தன் '. மந்த கதியில் இயங்குபவர் அவர். உங்கள் ராசியை பார்ப்பதால் உங்களுக்கு மந்த நிலை உருவாகும். திடீரென வீறு கொண்டு எழுந்து செயல்படுவீர்கள். பாதி செயல்படும் பொழுதே உற்சாகமும் தன்னம்பிக்கையும் இழந்து உட்கார்ந்து விடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியிலும் குடும்ப உறுப்பினர்கள் மூலமும் பிரச்சினைகள் வந்து அலைமோதும். எதிர்மறை சிந்தனைகளை தவிர்ப்பது நல்லது. உங்கள் ராசிக்கு 6,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் 9ம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியை பார்க்கிறார். வக்கிர நிவர்த்தியாகிப் பார்ப்பதால் பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய திருப்பங்கள் உருவாகும். பண்புமிக்க நண்பர்களின் பழக்கத்தால் சில காரியங்கள் முடிவடையும். மாற்று மருத்துவம் உடல் நலத்தை சீராக்கும். பணிபுரியும் இடத்தில் உங்கள் மேல் ஏற்றப்பட்ட வீண் பழிகள் அகலும். உத்தியோகத்தை பொறுத்து தற்காலிக பணியில் அமர்ந்தவர்கள் நிரந்தர பணியாளராக வாய்ப்பு உண்டு.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 6,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி, வக்கிர நிவர்த்தியாகி பலம் பெற்று இப்பொழுது சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தனி முயற்சி பலன் தரும். தடைகள் தானாக விலகும். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பு இனிய விதம் அமையும். வாழ்க்கைத் துணைக்கு வேலை வாய்ப்பு கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். இதுவரை பணி நிரந்தரமாகவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அதற்கான வாய்ப்பு வந்து சேரும். கடந்த காலத்தில் நடைபெறாத சில காரியங்கள் துரிதமாக நடைபெறும். இழந்த பதவியை மீண்டும் பெறுவீர்கள். உங்கள் ராசிக்கு 5,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு அஷ்டம ஸ்தானத்தில் வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுகிறார். 8க்கு அதிபதி பலம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல என்றாலும் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 2,4,12 ஆகிய இடங்களில் பதிவதால் அதன் விளைவாக நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். அந்த மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். தட்டுப்பாடுகள் தானாக விலகும்.

## கன்னி

உங்கள் ராசிக்கு 5 ,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்கிர நிவர்த்தியாகி பலம் பெற்று பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். அவர்களின் எதிர்கால நலன் கருதி நீங்கள் தீட்டிய திட்டங்கள் ஒவ்வொன்றாக வெற்றி பெறும். திருமணம் போன்றவற்றில் இருந்த தடைகள் நீங்கும். தன்னிச்சையாக செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கலாம். உங்கள் ராசிக்கு ஏழுக்கு அதிபதியான ஒரு வக்கிர நிவர்த்தியாகி பலம் பெற்றுவிட்டார். அவரது நேரடி பார்வை உங்கள் ராசியில் பதிவதால் நிகழ்கால தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைத்தீர்கள். கல்யாண முயற்சிகள் கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். இடம் வாங்குவது வீடு வாங்குவது போன்றவற்றில் ஈடுபட்டு சுப விரயங்களைச் செய்ய முன் வருவீர்கள். பொதுவாக ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

## துலாம்

உங்கள் ராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் வக்கிர நிவர்த்தியாகி பலம் பெற்று சஞ்சரிப்பதால் சனி வலிமை அடைகிறது. அட்டமத்து சனியில் பாதி பங்கு வலிமை கொண்டது சனியாகும். எனவே ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டும். அடிக்கடி சிறு சிறு உபாதைகள் வந்து கொண்டே இருக்கும். சீரோடும் சிறப்போடும் வாழ நினைத்தாலும் செயல்படுவதில் தடைகள் ஏற்படும். பிறருக்கு செய்யும் நன்மை கூட அவர்களுக்கு தீமையாக தெரியும். பணி புரியும் இடத்தில் பணப்பொறுப்பில் இருப்பவர்கள் மிகுந்த கவனத்தோடு இருப்பது நல்லது. உங்கள் ராசிக்கு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வக்கிர நிவர்த்தியாகி 6ம் இடத்தில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார். 6ல் குரு இருந்தாலும் ஊரில் பகைவரும் என்பார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பகை உணர்வு அதிகரிக்கும் நேரம் என்பதால் இந்த காலகட்டத்தில் பொறுமையையும் நிதானத்தையும் கடைப்பிடிப்பது நல்லது. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் மீது குறை சொல்ல வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்காது.

## விருச்சிகம்

உங்கள் ராசிக்கு 3 ,4 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. சகாயஸ்தானம் மற்றும் சுகஸ்தானத்தை அதிபதியான அவர் தற்சமயம் வக்கிர நிவர்த்தியாக பலம் பெற்றுவிட்டார். எனவே வெற்றிக்குரிய தகவல்கள் வீடு வந்து சேரும். உடல் நலம் சீராக உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். புனித பயணங்கள் அதிகரிக்கும். உடன்பிறப்புகளும் உடன் இருப்பவர்களும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார். தனவரவும் தாராளமாக வந்து கொண்டே இருக்கும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். உங்கள் ராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. தனஸ்தானம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான குரு வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுவதால் அற்புதமான பலன்கள் வந்து சேரும். குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவால் மிகுந்த யோகம் உண்டு. குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கேற்ப ஏராளமான நல்ல வாய்ப்புகள் இல்லம்தேடி வரப்போகிறது. புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரும். புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு பொது வாழ்வில் ஈடுபட்டவர்களுக்கு பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம்.

## தனுசு

உங்கள் ராசிக்கு 2,3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி அவர் வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுகிறார். எனவே குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். கொடுக்கல் வாங்கல்கள் சீராக இருக்கும் சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பாகப்பிரிவினைகள் சமூகமாக முடியும். நீண்ட நாட்களாக நடைபெற்ற பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையலாம். குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் நிறைவேறும். உங்கள் ராசிநாதன் ஆகவும் சுகஸ்தானத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குருபகவான். அவர் இம்மாதம் வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுவதால் உடல் நலம் சீராகும். ரண சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்ன மருத்துவர்கள் உங்கள் நோயை சாதாரண சிகிச்சையாக குணப்படுத்தி விடுவார்கள். தொழில் வளம் சிறப்பாக அமையும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வரவேண்டிய பாக்கிகள் வசூல் ஆகி மனதில் மகிழ்ச்சியை கொடுக்கும். பகைவர்கள் உறவாக மாறுவர். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும்.

## மகரம்

உங்கள் ராசிக்கு அதிபதியாகவும் தனாதிபதியாகவும் விளங்கும் சனி பகவான் வக்கிர நிவர்த்தியாகி உங்கள் ராசியிலையே சஞ்சரிக்கிறார். ஏழரை சனியில் ஜென்ம சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. ஏழரை சனியின் நடுப்பகுதி இப்பொழுது நடைபெறுவதால் எதையும் சிந்தித்து செயல்படுவது நல்லது. குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் உடல் நலக் குறைபாடு ஏற்படலாம். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்களால் சில பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். வரவு செலவுகளில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. இல்லையேல் ஏமாற்றங்களை சந்திப்பீர்கள். உறவினர்கள் உங்கள் கருத்துக்களை ஏற்க மறுப்பர். உங்கள் ராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் இம்மாதம் வக்கிர நிவர்த்தியாக சகாயஸ்தானத்தில் பலம் பெறுகிறார். விரயாதிபதியாகவும் குரு விளங்குவதால் இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்களும் இடமாற்றங்களும் விரும்பத்தகாத விதத்தில் வரலாம். உடன்பிறப்புகள் உங்களை விட்டு விலகும் சூழ்நிலை உண்டு. குடும்ப ரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்வதன் மூலம் முன்னேற்ற பாதையில் சறுக்கல்கள் ஏற்படும். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ள மாட்டார்கள்.

## கும்பம்

உங்கள் ராசிக்கு அதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி. அவர் இப்பொழுது விரய ஸ்தானத்தில் பலம் பெற்று இருக்கிறார். எனவே விரயங்கள் கூடுதலாக தான் இருக்கும். குடும்பச் சுமையும் அதிகரிக்கும். இது போன்ற நேரங்களில் சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது. தோல் மற்றும் வயிறு சம்பந்தப்பட்ட நோய் தோன்றி மறையும். தொழில் தொடர்பாக எடுக்கும் முயற்சிகளில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன் வருவீர்கள். உங்கள் ராசிக்கு இரண்டு 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு அவர் பக்க நிவர்த்தியாகி தனஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். குடும்பம் முன்னேற்றம் திருப்தி தரும். தொழில் ரீதியாக எடுத்த புதிய முயற்சிக்கு மாற்றினத்தவர் ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால கனவை நனவாக்குவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலிடத்தில் ஆதரவு கூடுதலாக கிடைக்கும். சலுகைகளை பெற்று சந்தோஷம் அடைவீர்கள் புதிய திருப்பங்கள் பலவற்றையும் சந்திக்கும் விதத்தில் கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது.

## மீனம்

உங்கள் ராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி, அதாவது விரயாதிபதியாகவும் விளங்குபவர் அவர் லாப ஸ்தானத்தில் பலம் பெறும் இந்த நேரத்தில் தொழிலில் லாபம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். புதிய பங்குதாரர்கள் வந்து இணைந்து வருமானம் உயர வழி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அரசு வேலைக்காக முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அது கிடைக்கும். இந்த இக்கட்டான சூழ்நிலையில் எந்த முடிவும் எடுக்க இயலாது. அதே நேரத்தில் அனுபவஸ்தர்களின் ஆலோசனை கை கொடுக்கும். உங்கள் ராசிக்கும் 10ம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான குரு, வக்கிர நிவர்த்தி ஆனதால் இதுவரை சிக்கனத்தை கடைப்பிடித்து வந்த நீங்கள் இனி செலவிற்கு அஞ்ச மாட்டீர்கள். தக்க தருணத்தில் நண்பர்கள் கை கொடுத்து உதவுவார்கள். தடைகளும் தாமதங்களும் விலகி ஓடும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் உடன் பிறந்தவர்கள் பகை மாறும். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பொருளாதாரத்தில் மித மிஞ்சிய நிலையும் குருவின் சஞ்சாரத்தால் கிடைக்கும்.

---

இளமை ஊஞ்சலாடும் விறுவிறுப்பான தொடர்

# இனியவனே என்று பாடி வந்தேன்!





ஜனரஞ்சக எழுத்தாளர்
**மொழிவாணன்**

**"ஏன்டா** காலையில நல்லாதானேடா இருந்தே....?" அவன் அருகில் வந்தபடியே கேட்டான் பிரேம்.

"இல்லடா மேலுக்கு கொஞ்சம் சரியில்லடா...!"

சிரித்தபடியே அவன் காதைப் பிடித்து திருகி விட்டான்.

"என்ன போன தானே...?"

'ஆம்' என்பதைப்போல் மேலும் கீழுமாகத் தலையை ஆட்டினான் ஜீவகன்.

"ஆனாலும் அவள்

"என்னது...?" புரியாமல் புருவங்களை உயர்த்தினாள் பார்வதி, "ஆமம்மா... மதனகாம நோய்க்கு மொதெல்ல வராது...!" சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தான் பிரேம்.

"டேய் பைத்தியம் வெளயாடாம பேசாம

சேர்ந்து,

குலுங்கிச் சிரித்தான் பிரேம்.

"ஏன்டா உனக்கு பைத்தியமாடா புடிச்சிருக்கு... கராஜ்ஜ்ல இருக்கிற அழுக்கு படிந்த அந்த உடுப்போட அந்த குட்டிய பார்க்கப் போயிருக்கியே ம்... நல்லவேல அவ வரல்ல அவ வந்து அந்த டிரஸ்ல உன்னைய பார்த்திருந்தா நீ அன்றாடக் கஞ்சீன்னு அவ புரிஞ்சிகொண்டிருப்பாடா.... ஒன்ன மனசுல வெச்சிக்கோ கஞ்சிக்குவழி இல்லாட்டியும் காதலிக்கிற பொண்ணு முன்னாடி கோடீஸ்வரன் மாதிரி நடந்துக்கனும்டா....!"

"நான் அங்க நின்னதை பார்த்தியாடா...?"

"ம்... பார்த்தேன்... 'ஊ' போடத்தான் பார்த்தேன்... அப்போ நான் பஸ்சில் இருந்தேன்.. அதுதான் பேசாமல் இருந்தேன்...!"

"ம்... வெண்பா இன்னிக்கு வர இல்லடா!"

"கவலைப்படாதடா நாளைக்கு கண்டிப்பா வருவா... ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் பிரைவட்ல கிளாஸ் நடக்கும்!"

"ஓ... அப்படியா... அப்போ நாளைக்கு கண்

"என்ன இன்னிக்கி காலையிலேயே எழும்பிட்டீங்க போல...?"

தேன் குரலைத் தெளித்தாள் தீபிகா...

"சும்மா தோனிச்சி...!"

ஜீவகன் பதில் சொன்ன அதே நேரம்,

விழித்தெழுந்த பிரேம்,

ஜன்னல் வலையில் தொங்கிக் கொண்டிருந்த தீபிகாவையும்,

ஜீவகனையும் மாறிமாறிப் பார்த்தான்.

"என்ன இது... கறுப்பு இளவரசி காளையர்கள் இருக்கும் அறைக்குள் காலையிலேயே எட்டிப் பார்த்துக் கொண்டு...?" என்று கிண்டலாகக் கேட்டான்.

"அலோ... நான் உங்களைப் பார்க்கவரல்ல... நான் வந்தது ஜீவகனைப் பார்ப்பதற்கு... ஆமா...!" என்று ஒருவித பாவனையுடன் சொன்னாள் தீபிகா.

அவள் இப்படிச் சொன்னதும் பிரேம் படாரென்று திரும்பி ஜீவகனைப் பார்த்தான்.

**(இனியவன் வருவான்)**

# காதலில் விழுவது ஒரு சுகம் அதனால் குளிர்ந்து போகுமே அகம்!



"மேலுக்கா மனசுக்கா?" அவன் இப்படிக் கேட்டதும், பரபரப்படைந்த அவன், படாரென்று நிமிர்ந்து,

ஜீவகனைப் பார்த்தான்?

"டேய்... உண்மையைச் சொல்லுடா... இன்னிக்கு காலையில மவுன்ட மேரி பக்கம் அந்த குட்டிய பார்க்கப் போன தானே...?"

வியப்புடன் அவனை ஜீவகன் பார்த்தபோது,

வந்திருக்க மாட்டாளே... அப்படித்தானே...?"

'இல்லை' என்பதைப் போல் இடது வலது பக்கமாகத் தலையை அசைத்தான் ஜீவகன்.

"ம்...நெனச்சேன்...!" என்று சொல்லிவிட்டு, எழுந்து சென்று சாரத்தை எடுத்து, கால் சட்டையை மாற்றிக் கொண்டான்.

தான் காலையில் வெண்பாவைப் பார்க்கப்போன விஷயம் எப்படி தெரியவந்தது என்று வியந்து போயிருந்த நேரத்தில்,

மீண்டும் அறைக்குள் நுழைந்தாள் பார்வதி.

"அம்மா... இவனுக்கு எந்தவித நோயும் இல்லம்மா... இவனுக்கு இப்ப ஸ்திரியால பிரச்சினை!" அறைக்குள் நுழைந்த அம்மாவைப் பார்த்ததும், சிரித்த படியே சொன்னான் பிரேம்.

இருடா... அந்த புள்ளய பேசாம இருக்கவிடு... இதோ பாருட இன்னிக்கி நீ... பாய விரித்து தரையில படுத்துக்கோ... அவனுக்கு ஒடம்புக்கு முடியாத இருக்கு... அவன கட்டில்ல படுக்க விடு!" கொத்தமல்லி தண்ணீர் கிளாசை மேசை மீது வைத்து.

"ஜீவா இதை கொஞ்சம் கொஞ்சம் சூடாவே குடி... குடிச்சிட்டு நல்லா போர்த்தி படுத்துக்கோ!"

என்று சொல்லி விட்டு, அறையை விட்டு வெளியேறினாள் பார்வதி.

ஜீவகனைப் பார்த்து,

நக்கலாக சிரித்த படியே

அவன் முதுகில் இலேசாக ஓர் இடி இடித்தான் பிரேம்!

"டேய் இத பார்டா சீக்கிரமா உன்னோட இந்த மதன காமநோய சொகமாக்கிக்கோ... இல்லாட்டி என்னைய கீழேயே படுக்கச் சொல்லிடு வாங்க அம்மா...!"

"அவன் சொன்னதைக் கேட்டு விட்டு,

மெல்லச் சிரித்தான் ஜீவகன் அவனுடன்

டிப்பா வெண்பா வருவா தானேடா...?" ஒருவித பதற்றத்துடன் கேட்டான் ஜீவகன்.

"ம்... வருவாடா... வருவா...?"

பிரேம் இப்படிச் சொன்னதும், ஜீவகனின் முகத்தில் ஏற்பட்ட பூரிப்பைப் பார்த்து விட்டு,

கனவுலகில் அவன் மிதக்கட்டுமே என்ற முடிவுடனே, டவளையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினான் பிரேம்.

★★★

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து விட்டான ஜீவகன்.

பிரேம் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான்.

கைகளால் முகத்தைத் துடைத்துக் கொண்டு,

எழுந்திருக்க முயற்சி செய்த போது,

"உஸ்... உஸ்..."

இதழ்கள் ஓசை பாடும், ஓசை வந்தது.

திரும்பிப் பார்த்தான்

அங்கே,

ஜன்னல் கதவைத் திறந்து கொண்டு,

புன்னகை பூத்த முகத்துடன்,

தீபிகா நின்றிருந்தாள்.

## இனியவனே என்று பாடி வந்தவனுக்கு ஒரு மடல்

வாணர் குலத்தில் வந்தியத்தேவன்
மொழிவாணர் எழுத்தில் வந்தான் 'இனியவன்'
வாரா வாரம் காத்திருக்க வைக்கும்
காரியம் இனி வாரமலரின் பக்கம்..

'இனியவனே என்று பாடி வந்தேன்' – கதை
இளமையாய் பலரையும் உணர வைக்கும்..
இனிய காதலை உரைத்து நிற்கும் – பல
இளைய இதயங்களைக் கவர்ந்திழுக்கும்..

அடுத்தது என்ன என்று எதிர்பார்த்து..
அடுத்த பகுதிக்காய் நாள் பார்த்து..
சிரித்து மகிழ்ந்து இருகரம் ஏந்தி..
படித்து முடித்தும் ஆவல் குறையவில்லை..

தொடரட்டும் இனியவன் வாரம் தோறும்..
மலரட்டும் நேசங்கள் இதயம் தோறும்..
குறையட்டும் பலரினதும் மனதின் பாரம்
வாழட்டும் வாசகர் மனங்கள் தோறும்..

ஹுமைரா அல் அமீன்
பதுளை

# திருவள்ளுவத்தில் ஆலோசனையும் வழிகாட்டலும் ( Counseling and Guidance)





திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன்

27

ஒரு நிறுவனமொன்றில் வேலை செய்யும் ஊழியர்களுக்கான ஆலோசனையும் அவர்களின் முன்னேற்றத்துக்கான வழிகாட்டலும் முகாமைத்துவத்தால் செய்யப்படவேண்டிய மிகமுக்கிய நடவடிக்கையாகும். இது மிகவும் திறந்த மனதுடனும் நன்கு திட்டமிடப்பட்ட முறையிலும் செய்யப் படவேண்டும். எவ்வாறு ஒரு ஊழியர் தனது கடின உழைப்பின் மூலம் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கின்றாரோ, அதுபோல் நிறுவனத்தின் முகாமைத்துவமானது நிறுவனத்தில் இருக்கின்ற அனைத்து வளங்களையும் சாத்தியமான அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்தி தமது ஊழியர்கள் முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இம்முகாமைத்துவக் கருத்தை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார்.

**“இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்க முடையார்வாய்ச் சொல்”.**(குறள் 415)

வழுக்கல் உடைய சேற்றுநிலத்தில் நடப்பதற்கு ஒருவருக்கு ஊன்றுகோல் உதவுவது போல் ஒழுக்கம் உடையவர்களின் அறிவுரை அல்லது அவர்களின் வாய்ச் சொற்கள் ஒருவர் வாழ்க்கையில் முன்னேறி நடப்பதற்கு அவருக்கு உதவும் என்கிறார் திருவள்ளுவர். வழுக்கல் உடைய இடத்தை நன்கு வலிமை உடையவர்கள் கூட எளிதாகவும் இயல்பாகவும் கடக்கமுடியாது. அவர்களுக்கு பற்றிக் கொள்வதற்கு ஊன்றுகோல் இருந்தால் மட்டுமே வழுக்கி விழுந்துவிடாமல், கடந்து செல்ல முடியும். எவ்வாறு வழுக்கல் நிலத்தில் நடப்பதற்கு ஒருவருக்கு ஊன்றுகோல் உதவுகிறதோ அதேபோன்று நிறுவனமொன்றின் முகாமைத்துவமானது தனது ஊழியர்களுக்கு அவர்கள் முன்னேறுவதற்குரிய சரியான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கூறி வழி காட்ட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

இங்கே இன்னுமொரு கருத்தினைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். அதாவது ஊழியர்களுக்கு அறிவுரை நல்குகின்ற முகாமையாளர்களிடம் திருவள்ளுவர் ஒழுக்கத்தையும் எதிர்பார்க்கிறார் எனத் தெரிகிறது. ஒழுக்கமுடையமுகாமையாளர்களின் வாய்ச்சொல் மிகவும் தூய்மையானதாக இருக்கும் அவர்களினாலேயே சிறப்பான வழிகாட்டுதல்களைத் தமது ஊழியர்களுக்கு வழங்கமுடியும் என்பது திருவள்ளுவரின் எண்ணம் . இதனை

**“ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய**
**வழுக்கியும் வாயால் சொலல்”** (குறள் 139 )

என்ற ஈரடியிலும் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். அதாவது தீங்கு விளைவிக்கும் வழிகாட்டுதல்களை அதாவது தீய சொற்களைத் தவறியும் தம்வாயாற் சொல்லுதல் ஒழுக்கம் உடைய முகாமையாளர்களுக்கு இயலாது என்கிறார். அதாவது வழிகாட்டுதல்களைச் சொல்கின்ற முகாமையாளர் ஒழுக்கமுள்ளவராக இருந்தால் அவர் சொல் கேட்கத்தக்கது என்று ஒரு நம்பிக்கை ஊழியர்களிடம் ஏற்பட்டு அவர்கள் அவரது சொல்லினைக் கேட்டு தாம் முன்னேறும் வழிவகைகளைப் பற்றிச் சிந்திப்பார்கள். இதன்மூலம் நிறுவனத்திற்கு நன்மை ஏற்படும். முகாமையாளர்கள் ஒருவரது முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளையும் சரியான வழி காட்டல்களையும் துறை சார்ந்தவர்களின் கருத்துக்களையும் செவிமடுப்பதன் மூலம் அல்லது கருத்தில் கொள்வதன் மூலமே சரியான முறையில் செய்ய முடியும். எனவே ஆலோசனை சொல்ல முற்படும் அல்லது வழி காட்ட முற்படும் முகாமையாளர்கள் இவ்வுண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூற முற்படும் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் அக்கருத்துக்களை விளக்குகின்றார்.

**“செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளம் கொளல்”.**( குறள் 677)

ஒரு செயலைச் செய்கின்றவன் அல்லது ஒரு செயலில் ஈடுபடுகிறவன் முதலில் செய்ய வேண்டியது என்னவெனில் அச்செயல் குறித்து முழுமையாக உணர்ந்தவனின் அல்லது அதனை நன்கறிந்தவனது அல்லது அத்தொழிலின் நுட்பமெல்லாம் உள்ளபடி அறிந்தவனின் கருத்தினை அறிந்து அக் கருத்தைத் தான் ஏற்றுக் கொள்வதாகும் என்கிறார் திருவள்ளுவர். எனவே நிறுவனமொன்றின் முகாமைத்துவமானது ஊழியர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டல்களை செய்வதற்கு முன் துறைசார் நிபுணர்களுடைய கருத்துக்களை அறியவேண்டும் என்று வலியுறுத்துகின்றார் திருவள்ளுவர்.

இங்கே திருவள்ளுவர் ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு வழிகாட்டுவதற்கு பட்டறிவு கொண்டவரின் அனுபவத்தைக் கேட்டறிந்து பயன்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்குகின்றார். இதனையே

**“தெரிந்த இனத்தோடு தேர்ந்துஎண்ணிச்**
**செய்வார்க்கு அரும்பொருள் யாதொன்றும் இல்”** (குறள் – 462)

என்ற ஈரடியிலும் விளக்குகின்றார். அதாவது முகாமையாளர் ஒரு செயலைத் தெரிந்து செய்யும் திறமையாளர்களிடம் கலந்து ஆலோசனை செய்து, பின்னர் தானும் ஆராய்ந்து அதன் பின் ஒரு செயலைச் செய்வாராயின் அவரால் எந்தச் செயலினையும் செவ்வனே செய்ய முடியும் என்பது திருவள்ளுவரின் கருத்து. உதாரணமாக ஏற்றுமதி, இறக்குமதி தொழில் நிறுவனத்தின் முகாமையாளர் ஒருவர் தனது ஊழியர்களுக்கு ஆலோசனை சொல்ல விரும்பின் ஏற்றுமதி, இறக்குமதியுடன் தொடர்புடைய வங்கிகள் வழங்கும் சிறப்புக் கருவிகள் (Letter of Credit, Shipping Guarantee etc), அந்நியச் செலவாணி (Foreign Exchange) முகாமைத்துவம் ஆகியவற்றில் முன்னறிவு பெற்றவரிடம் ஆலோசனை கேட்டல் நன்மையாக அமையும்.முகாமையாளர்கள் தமது ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்கமுன் அவர்களின் எண்ணங்களைக் குறிப்பால் அறிவது மிக முக்கியமாகும். ஊழியர்களின் உள்ளக்கருத்தை வார்த்தைகளின்றி பார்வை வழியாகவே புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றலை முகாமையாளர்கள் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய ஆற்றல் முகாமையாளருக்கும் ஊழியர்களுக்கும் இடையேயான நட்புறவை வலுப்படுத்த உதவுகின்றது. உண்மையில் ஊழியர் ஒருவருடைய மனத்தில் மிகுந்துள்ள உணர்ச்சியை அவர் முகம் காட்டிவிடும். அதனை முகாமையாளர் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் ஊழியருக்கு என்ன வகையான ஆலோசனை தேவை அதனை எப்போது எவ்வாறு வழங்கமுடியும் என்பது பற்றி முகாமையாளரினால் தீர்மானிக்க முடியும். இக்கருத்துக்களைத் திருவள்ளுவர் கேல்வரும் ஈரடிகளில் சிறப்பாக்க விளக்குகின்றார் .

**‘குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்’** (குறள் 703)

அதாவது முகம் கண் இவற்றின் குறிப்புக்களால் ஊழியரின் உள்ளக் குறிப்பை உணர வல்லவராக முகாமையாளர் இருக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். தொழிலாளர்களுடன் திறம்பட நட்புறவைப் பேண அவர்களுக்கு ஆலோசனை வழங்க அவர்களின் மனநிலையை எந்நேரமும் கண்காணித்தல் அவசியமாகிறது. எனவேதான் எவ்வளவு ஊதியம் கொடுத்தாவது ஊழியர்களின் முகக்குறிப்பிலிருந்தே அவர்களுடைய உள்ளக் கருத்தை அறியக்கூடிய முகமையாளர்களை நிறுவனங்கள் பணியில் அமர்த்திக் கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறார் திருவள்ளுவர்.

ஒருவரின் உள்ள ஓட்டத்தைப் புரிந்து கொள்ளுதல் குறிப்பறிதல் எனப்படும். நிறுவனத்தில் ஊழியர்களுக்கு மனத்தில் உள்ள எல்லாவற்றையும் சொல்லால் விளக்கிப் பேசமுடியாத சூழலும் எழும். பேச முடிந்தாலும் சில சூழ்நிலைகள் அப்படிப் பேச இடந்தராது. இத்தகைய சூழ்நிலைகளில் ஊழியர்களின் மனக் கருத்துக்களையும் அறியக்கூடிய ஆற்றல் முகாமையாளருக்கு அமைந்திருத்தல் பெரிதும் நன்மை தரும் என்பது திருவள்ளுவரின் விளக்கம். அத்தகையவர்களால்த்தான் ஊழியர்களுக்கு சிறப்பாக வழிகாட்டவும் ஆலோசனை வழங்கவும் முடியும் .





## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகார சபை
## முதலீட்டு முன்மொழிவுகளுக்கான அழைப்பு (RFP)
### முதலீட்டு முன்மொழிவு கோரல் ஆவணங்களை வழங்குதல் மற்றும் சமர்ப்பிப்பதற்கான காலத்தை நீடித்தல்

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2022-09-25ஆம் திகதிய ‘‘தினகரன் வாரமஞ்சரி’’ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. இதன் பிரகாரம் ஆவணங்கள் வழங்குதல், சமர்ப்பித்தல் மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத் திகதிகள் பின்வரும் வகையில் நீடிக்கப்பட்டுள்ளன. குறித்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

| | பல மாடி அபிவிருத்தி செயற்றிட்டம் குருநாகல் | EXPERT CITY - IIIஆம் படிநிலை, பழைய திரிபொலி சதுக்க காணி, கொழும்பு-10. |
|---|---|---|
| ஆவணங்கள் வழங்கும் இறுதி நாள் | 2023-01-17ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை | 2023-01-17ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை |
| முதலீட்டுப் முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் | 2023-02-06ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை | 2023-02-07ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை |
| விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் | 2023-01-09 | 2023-01-10 |

**தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணக்கக் குழு,**
**17ஆம் மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,**
**‘சுஹுருபாய’, பத்தரமுல்ல.**



OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk



(தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு)
### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## பெறுகை அறிவித்தல்

### புதிய BACKUP முகாமைத்துவ திர்வினை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் காண்பித்தல் மற்றும் பராமரித்தல்

மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைக்காக 2022-12-13ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை விலைமனுதாரா்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவா் அழைக்கின்றாா்.

ஆா்வமுள்ள தரப்பினா் விலைமனு ஆவணங்களில் வேண்டப்பட்டுள்ள நிதி முன்மொழிவுகள் மற்றும் ஏனைய தகவல்களை (விலைக்கோரல் பிணை முறி, தகுதித்தன்மை, அனுபவம், வளங்கள், மற்றும் வா்த்தக தேவைப்பாடுகள் முதலானவை) அவா்களின் விலைமனுக்களுடன் சமா்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனா்.

மீளளிக்கப்படாத 15,000.00 ரூபா கட்டணத்தை 2022-11-21ஆம் திகதி முதல் 2022-12-12ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் செலுத்தி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் நிறுவனத்தின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப் பிரதி மற்றும் புகைப்படப் பிரதியொன்றையும் சமா்ப்பித்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளும் படிவங்களிலேயே விலைமனுக்களைச் சமா்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுதாரா்கள் நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாதம் என்ற வடிவத்தில் 100,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றையும் மற்றும் சித்திகரமான விலைமனுதாரா் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 (2022-12-13 - 2023.03.13) நாட்கள் செல்லுபடியாகும் வகையில் விலைக்கோரல் மதிப்பில் 10% இற்குச் சமமான செயல்திறன் உத்தரவாதமொன்றையும் வழங்குதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி மற்றும் செயல்திறன் உத்தரவாதம் இரண்டையும் இலங்கையில் செயற்படும் உரிமம்பெற்ற வா்த்தக வங்கியொன்றில் “தலைவா் - இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்” என்ற பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நிதியியல் முன்மொழிவுகள் மற்றும் ஏனைய துணை ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘புதிய **BACKUP** முகாமைத்துவ தீர்வை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரித்தல் - PR/02/12-11” எனக் குறிப்பிட்டு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, பெறுகைப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

பிறை கிடைக்கும் விலைமனுக்கள் ஏறறுக்கொள்ளப்பட மாட்டாது. கிடைக்கப்பெற்றுள்ள சகல விலைக்கோரல்களும் இதே முகவரியில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரா்கள் அல்லது அவா்களின் பிரதிநிதிகளின் கலந்துகொள்ளலாம்.

எந்தக் காரணத்தைக் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரித்தல் தொடா்பிலான நேரடியான அல்லது மறைமுகமான எவ்விதமான செலவையும் மீள்செலுத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இது தொடா்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தீா்மானமே இறுதித் தீா்மானமாகும்.

**தலைவர் / திணைக்கள கொள்முதல் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/ தொலைநகல்:**
**011-2880550/ 2880564/ 2887585**

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.**



### சுகாதார அமைச்சு
### அரச மருந்தாக்கல்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)
## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்
### அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனத்திற்காக மூலப் பொருட்களை களஞ்சியப்படுத்தும் பாவனைக்காக சந்தைப்படுத்தல் திணைக்கள அலுவலக இடப்பரப்பை இடமாற்றுவதற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு/ குத்தகைக்கு பெற்றுக் கொள்ளல்

**Tender Reference: SPMC/MM//12/2022 – Closing on 6.12.2022 at 1400 hrs.**

சந்தைப்படுத்தல் திணைக்களத்தை இடமாற்றுவதற்காகவும் மருந்தாக்கல் மூலப் பொருட்கள்/ பொதியிடும் பொருட்கள், பூர்த்தி செய்யப்பட்ட பண்டங்கள் களஞ்சியசாலை மற்றும் விநியோக களஞ்சியசாலையாக பாவிப்பதற்காகவும் கட்டிடமொன்றை வாடகைக்கு/குத்தகைக்கு பெறுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் கோரப்படுகின்றன. எனவே, ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுவதுடன் பின்வரும் கட்டாயமான தேவைப்பாடுகளையுடையவர்கள் இதற்கமைவாக விலைமனுக்கோரலை சமர்ப்பிக்கலாம்.

**கட்டாயமான தேவைப்பாடுகள்:**
- ❖ மொத்த இடப்பரப்பானது (அலுவலகம் மற்றும் களஞ்சியசாலை) அண்ணளவாக 7000 இலிருந்து 10000 சதுர அடியாகவிருத்தல வேண்டும்.
- ❖ தற்போதுள்ள உற்பத்தி செய்யப்படும் பொறித்தொகுதியிலிருந்து அமைவிடமானது 3 கி.மீ. ஆரத்திலிருத்தல் வேண்டும்.
- ❖ களஞ்சியசாலையானது நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ❖ அகலமான அணுகுவழியும் கொள்கலன் வண்டிகளின் (20 அடி மற்றும் 40அடி) இடப்பரப்பினுள் உட்செல்லல் ஆகியவற்றிற்கான வசதியும் நெருக்கமில்லாத நிலமனையிலும் அமைந்திருத்தல் வேண்டும்.
- ❖ களஞ்சியசாலையை சுற்றிவர சுவர்/வேலியும் பூட்டு போடுவதற்கான கேட்டும் இருத்தல் வேண்டும்.
- ❖ களஞ்சியசாலையின் கூரையின் உயரம் 15 அடிக்கு அல்லது மேற்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
- ❖ களஞ்சியசாலையில் கூரையானது சீலிங் ஒன்றை அல்லது கொங்கிறீட் தட்டைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ❖ கட்டிடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் வளிச்சீராக்கல் வசதியிருத்தல் வேண்டும்.
- ❖ காணி மற்றும் களஞ்சியசாலையும் வெள்ள ஆபத்துக்கள் இல்லாமலும் சேற்று நிலமாகவிருத்தல் ஆகாது.
- ❖ காணியை சுற்றிவர அல்லது காணிக்கு மேலாக உயரமுத்த மின்சார கம்பிகள் இருத்தல் ஆகாது.
- ❖ பண்டங்களை ஏற்றல் மற்றும் இறக்கல் ஆகியவற்றிற்கான வசதி.
- ❖ களஞ்சியசாலையினுள் முள்தூக்கியானது இடத்திற்கிடம் செல்லும் வசதி.
- ❖ தீ அணைப்புக் கருவிகள் முறையாக நிறுவப்பட்டிருத்தல்.
- ❖ இந்த கட்டிடமானது போதுமானளவு காற்றோட்டத்தையும் வெளிச்சத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

களஞ்சியசாலையானது பின்வரும் விருப்பத்திற்குரிய வசதிகளை கொண்டிருந்தால், அவைகளை தயவு செய்து உங்கள் முன்மொழிவில் தனியாக குறிப்பிடவும். மதிப்பீட்டின் போது அவ்வாறான விருப்பத்திற்குரிய வசதிகள் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**விருப்பத்திற்குரிய வசதிகள்:**
- ❖ முறையான தட்டுகள் நிறுவப்பட்ட அமைப்பு (ஒரு தட்டிற்கான பாரம் - 1000கிகி/ அடுக்குத் தட்டு)
- ❖ Backup power system
- ❖ CCTV system
- ❖ பாதுகாவலர் அறை
- ❖ பதவி அலுவலர்களுக்கான உணவகம் மற்றும் அலம்பக வசதி
- ❖ மாடிக் கட்டிடத்திற்கான மின்தூக்கி

இந்த அமைப்பானது மருந்தாக்கல் மூலப் பொருட்கள் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகளை களஞ்சியப்படுத்தவும் சந்தைப்படுத்தல் திணைக்கள அலுவலக இடப்பரப்பிற்காகவும் பயன்படுத்தப்படும்.

இதற்கமைவாக, வளமுள்ள விலைமனுதாரர் சுயமாக தயாரிக்கப்பட்ட விலைமனுக்கோரலை 2022.12.06 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலான, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வரும் தலையங்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.

**“Rent/Lease a building for Warehouse and Office” – Reference: SPMC/MM/12/2022 and Closing on 06.12.2022 at 1400 hrs.**

2637574 , 2635353 மற்றும் 2636966 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக அரச மருந்தாக்கல்கள் உற்பத்தி கூட்டுத்தாபன திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**பெறுகைக் குழுத் தலைவர்,**
**அரச மருந்தாக்கல்கள் உற்பத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலான, இலங்கை.**
**தொலைநகல்** : (00)94-11-2634771
**இணையதளம்** : **www.spmclanka.lk**
**தொலைபேசி** : (00)94-11-2635353/ **(00) 94-11-2637574/(00)94-11-2623298.**
**மின்னஞ்சல்** : **spmclanka@sltnet.lk**

# தொல்லியல் திணைக்களம்

## சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்வதற்கான கேள்வி கோரல் – 2023

கொழும்பு-07, சேர் மார்கஸ் பெர்னான்டோ மாவத்தையில், 0.4191 ஹெக்டயர் தரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள 04 மாடிகளைக் கொண்ட தொல்லியல் திணைக்கள கட்டிடத்திற்காக 2023.01.01 முதல் ஒரு வருடத்திற்குள் சுததிகரிப்புச் சேவையை நடத்திச் செல்வதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்களிடமிருந்து மாத்திரம் தொல்லியல் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் 2022.12.19ம் திகதி பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

I. வியாபார பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல்
II. அரச துறை/ தனியார்துறையில் குறைந்தபட்சம் 05 வருடம் குறித்த துறையில் திருப்திகரமான அனுபவத்தைப் பெற்றிருத்தல்
III. குறைந்தபட்சம் 20 தொழிலாளர்களைக் கொண்ட தொழிலாளர் குழு இருத்தல். (கடந்த 12 மாதத்திற்குள் அவர்கள் சார்பாக ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் பொறுப்பு நிதிக்கு பங்களிப்புத் தொகையை செலுத்தியமையை உறுதி செய்யும் ஆவணங்களின் உறுதி செய்த பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (ஈ.பீ.எ.்ப். பிரே.நி.ஆ' மாதிரி)
IV. சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தும் மின்சார மற்றும் ஏனைய உபகரணங்கள் (தரை துடைப்பான், தூசு அகற்றும் இயந்திரம் போன்றன) நிறுவனத்திடம் இருப்பது.
(கவனிக்கவும்:- விண்ணப்பத்துடன் மேற்படி இல. I முதல் III வரை தகைமைகளைக் காட்டும் குறித்த சான்றிதழ்களின் போட்டோப் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1. 2022.11.21 முதல் 2022.12.19 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை கொழும்பு-07, சேர் மார்கஸ் பெர்னான்டோ மாவத்த, தொல்லியல் திணைக்கள கட்டிடத்தின் 01ஆம் மாடியில் கணக்குப் பிரிவில் குறித்த கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்தாமலேயே பரீட்சித்துப் பார்க்கலாம்.
2. 2022.12.19 பிற்பகல் 2.00 இற்கு முன்பு கணக்குப் பிரிவிலிருந்து கேள்விதாரர்களின் கடிதத் தலைப்புடனான கடிதமொன்றை எழுத்து மூலம் வேண்டி பெற்றுக்கொள்ளும் மாதிரிப் பத்திரங்களில் மாத்திரம் கேள்விகளை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ் மாதிரிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ. 5,000.00 தொகையை இத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
பஜாஜ் AAW சிறந்த நிலையில் தனிப்பாவனையில் பாவிக்கப்பட்ட திரீவீலர். 722/ 22, கிராமோதாகம, ஒருவல, அத்துருகிரிய. தொ. பே. 0773480 414, 0759480414. 070776

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

அம்பதென்ன நகர் மத்தியில் 17 பேர்ச்சஸ் நிலம் மற்றும் கட்டிடம் அதிக விலைக்கு உடனடியாக விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 0776003686. 070943

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

18 - 40 வயதிற்கிடைப்பட்ட சுப்பர் மார்க்கெட் அறிவுடைய விற்பனை உதவியாளர் ஆண்/ பெண் மற்றும் சுப்பவைசர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம். நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 0773544403. 069378

### 311 வெற்றிடங்கள் தகவல் தொழில்நுட்பம்

கம்பஹா இதிகொல்ல சுப்பர் மார்க்கெட் இற்கு 18 - 30 வயதிற்கிடைப்பட்ட சா/ தர தோற்றியுள்ள கணனி தரவு செயற்பாட்டாளர்கள் தேவை. (சேவைக்கு தேவையான பயிற்சி வ ழங்கப்படும்) நிவ் வீரசி ரி சுப்பர், இதிகொல்ல, க ம்பஹா. 077 3544403. 069360

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

அனுபவமுள்ள கனரக வாகன சாரதிகள் தேவை. 35 - 55 வயதிற்கு இடைப்பட்ட தூரப் பிரதேசங்கள் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிடம் உண்டு. நி வ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 0773544403. 069363

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பணிப்பெண்கள், வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. 35 வயதிற்கு குறைவானவர்கள். சிறந்த சம்பளம். வேலை நிபந்தனைகள். தொடர்பு 75/ 1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு06. அழை யுங்கள் 2591169, 0777542447, 0755091379. 067425

பராமரி ப்பாளர் மொரட்டுவையில் தங்கி யிருந்து வயோதிப ஆண் ஒருவரை பராமரிப்பதற்கு உதவியாளர் தேவை. தொடர்பு கொள்ளவும் சதுரங்க 0702246895, துலீகா 0766844234, கியாரா 0773380595. 070793

### 325 தொழில்துறை பொது

கம்பஹா இதிகொல்ல சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு 18 - 30 வயதிற்கிடைப்பட்ட அடிப்படை கணனி அறிவுடைய ஆண்/ பெண் காசாளர்கள் தேவை. கம்பஹாவுக்கு அருகில் விரும்பத்தக்கது. நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 0773544403. 069358

கொழும்பு பிரசி த்த பாடசாலையொன்றின் விளையாட்டரங்கை சுத்திகரிப்பதற்கு ஊழியர்கள் தேவை. சம்பளம் ரூபா 40, 000/ = மற்றும் மேலதிக கொடு ப்பனவுகள். 0704421590. 070671

0718653778 பாதுகாப்பு வெற்றிடங்கள். தெஹிவளை, வெள்ளவத்தை, யூனி யன் பிளேஸ், மொரட்டுவ, கல்கிசை, சபும ல்கந்த , கோனபொல, பண்டாரகம ஹொரண, பிலியந்தல, பேலியகொட, தொட்டலங்க, வத்தளை, ராஜகிரிய, நிட்டம்புவ, நவால, கடுவளை, மாலபே, ரணால, கொழும்பு 0718053780. மொரட்டுவ 0706991637, சபுமல்கந்த/ ஹொரண 0718379981, வ த்தளை 0 718 65 3 799, ராஜ கிரி ய 0 71 2 12523 8, அலு வல க ம் 0704040899, 0768171053, 0706655331. 070799




## பொது

### 427 டியூஷன்

A/ L இரசாயனவியல் (தமிழ் மொ ழி மூலம்) 30 வருட இரசா யனவியல் விடைத்தாள் மதிப்பீட்டு அனுபவமுள்ள ஆசிரியரால் மேல் மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மொழி மூலம் 2023, 2024ஆம் ஆண்டு பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அலகு 1 முதல் 14 வரையிலான சகல அலகுகளுக்கும் கூடுதலான பயிற்சி வினாக்களுடன் வீடு வந்து தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும். 0763038809. 070618

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

களுபோவில வைத்தியசாலை வீதியினை முகப்பினை கொண்ட 9.5P காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு 0774271404. 070616

கொள்ளுப்பிட்டி முஹந்திரம் வீதியில் 3 அறைகள் மற்றும் 2 குளியலறைகளுடன் இரு மாடி கட்டிடம் விற்பனைக்கு. (பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு பின்புறமாக) 0775262362 (சஞ்சித). 068946

நீர்கொழும்பு நகர எல்லையிலிருந்து நீர்கொழும்பு கொழும்பு வீதிக்கு மிக அருகில் அனைத்து ஒப்புதல்களுடன் 6.00p மின்சாரம், குழாய் நீருடன் கூடிய பல மனைகள் விற்ப னைக்கு உள்ளன. 0706923115, 0706923116. 070948

### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

வாத்துவ, பண்டாரகம பாதையில் தெல்து வே எகவிற்கு அருகில் மதிலால் சூழப்பட்ட 10 பேர்ச் இரண்டு துண்டுகள். அசேல 0773480414, 0759480414, 070772

### 631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

வெலிகாமம் கொலேகண்டையில் 10 போ்ச்சஸ் காணி விற்பனைக்கு உண்டு. 0764050794, 0777954722. 070617

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

கொட்டாவ, யோத மாவத்த இரண்டு அ றைகள், உணவு அறை, குளியலறையுடன் தனிக் காணி யில் முழுமையான வீடு வாடகைக்கு உண்டு. 0712052386, 006582614500 (வட்ஸ்அப்). 071074

## வாரமஞ்சரி திருமண சேவைகள்


### மணமகள்

முஸ்லிம் கௌரவமான மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோர் ஆங்கிலத்தில் உயர் கல்வி கற்ற 29 வயதுடைய அழகான மகளுக்கு சகல தகைமைகளும் கொண்ட நற்குணமுடைய மணமகன் தேவை. C/o: public191919@gmail.com B190124


# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845
















வாரமஞ்சரி திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

















# படித்ததும் பகர்வதும் 119





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### உடல் நலம் பேண்!

ஒவ்வொருவரும் தம் குடும்பத்தவர்களுக்கு கொடுக்கக்கூடிய மிகச் சிறந்த பரிசு அவர்களது "உடல் நலம்" என்றால் எவராலும் மறுக்க முடியாது. உடல் நலமாக இருப்போரால் மட்டுமே தமது குடும்பத்தவர்களுக்கு பாரமில்லாதவராகவும், உதவுபவராகவும், உபத்திரவம் செய்யாதவராகவும் இருக்க முடியும்.

ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவருக்கு அல்லது குடும்பத் தலைவிக்கு ஏதேனும் வகையில் உடல்நலம் குன்றினால் முழுக் குடும்பமுமே அவருக்காக கவலைப்பட்டு, கஷ்டப்பட்டு, கண்ணீர்விட்டு, கலங்கி துயரப்படும் நிலைமையே ஏற்படுகிறது. இதனால் முழுக் குடும்பமுமே கவலையில் மூழ்குகிறது. மகிழ்ச்சியும், குதூகலமும் அக்குடும்பத்தை விட்டும் தூரமாகிறது.



குடும்பத்தில் எவருக்கேனும் உடல் நலம் குன்றி நோய் ஏற்பட்டால் நோய்ப் பராமரிப்பு, அவரது பாதுகாப்பு, நோயாளியைப் பேணுதல், அவருக்கு பணிவிடை செய்தல் போன்ற இன்னோரன்ன வேலைகளை உடல்நலம் குன்றாத ஏனையவர்கள் அவர்களுக்கு செய்ய வேண்டி ஏற்படுகிறது. இது குடும்ப உறவுகளில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகும். மேலும் உடல்நலம் குன்றி நோய்வாய்ப் பட்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் இத்தகைய சிரமங்கள் மேலும் பல மடங்கு அதிகரிக்கும். செலவுகளும் சிரமங்களும் எதிர்பாராத அளவில் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாக ஆகிவிடும்.

நோய்வாய்ப் பட்டவரும் தனது அன்றாட நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள முடியாமலும், தாம் செய்யும் தொழிலை தொடர இயலாதவராகவும், அன்றாட செயற்பாடுகளைச் செய்ய முடியாதவராகவும் ஆகிவிடுகிறார். இதனால் உடலளவில் மட்டுமன்றி மனதளவிலும் அவர் பாதிப்புக்குள்ளாகிறார். இத்தகைய சோதனையான நிகழ்வுகளை தவிர்த்துக் கொள்வதற்காக ஒவ்வொருவரும் பூரண தேகாரோக்கியத்துடனும், உடல் நலத்துடனும் இருந்திட முயற்சித்தல் வேண்டும். இதுவே தனக்கும் தனது குடும்பத்தவர்களுக்கும் ஒருவர் செய்யும் நல்லுபகாரமாகவும் அவர்களுக்கு வழங்கும் சிறந்த பரிசாகவும் அமையும்.

தம் உடல்நலம் பேணி தேகாரோக்கியத்துடன் வாழ வயது வேறுபாடின்றி எல்லோரும் முயற்சிக்க வேண்டும். இதற்காக போதிய நடைப்பயிற்சி, அவசியமான உடற்பயிற்சி, போதியளவு தூக்கம், அவசிய அளவில் ஓய்வு, உரிய நேரத்தில் உரிய அளவில் உணவு உட்கொள்ளல், மருந்து வகைகளை பாவிப்போர் உரிய நேரத்தில் உரிய அளவில் அவற்றை பயன்படுத்துதல், மற்றவர்களுடன் சிரித்து கலகலப்பாக பேசுதல், எப்போதும் தேவையற்ற விடயங்களை சிந்தித்து வருந்துவதை தவிர்த்து சந்தோசமாக இருக்க முயற்சித்தல் போன்ற இலகுவான விடயங்களை அன்றாடம் சரியான முறையில் பின்பற்றுவதன் மூலம் தேகாரோக்கியத்தோடு வாழ முயற்சித்தல் வேண்டும். இதுவே நமக்கு நாமே செய்து கொள்ளும் நன்மையாகவும் நம் குடும்பத்தாருக்கு நாம் வழங்குகின்ற நற்பரிசாகவும் அமைந்திட முடியும்.

## நெஞ்சுக்கு நீதி


ஆரோக்கியம் அனைத்திலும் சிறந்தது நீயறி
அதைப்பெற அன்றாடம் அறிவாய் செயற்படு
வைராக்கியம் கொண்டே உடல்நலம் பேணிடு
வாழ்வினிலே துயர் அகன்றேதான்மகிழ்திடு

## புது வரவு

### நீதிமுரசு 2022

72வது அகவையில் அடியெடுத்து வைத்துள்ள, இலங்கை சட்ட கல்லூரி சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் வருடாந்த வெளியீடான 'நீதி முரசு' அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் சட்ட மாணவி அர்ஷதா சுபைரை இதழாசிரியராகக் கொண்டு வெளியிட்டுள்ள நீதிமுரசு 2022 கனதியான அட்டையுடன் காத்திரமான ஆக்கங்களை உள்ளடக்கியதாக மிக சிறப்பாக பிரசுரமாகியுள்ளது.

256 பக்கங்களைக் கொண்ட நீதிமுரசில் 26 பக்கங்கள் வர்ணப் பக்கங்களாக வெளியாகியுள்ளன. கருத்தாழமிக்க கைவண்ணம் கொண்ட கவர்ச்சியான அட்டைப்படம், மன்றத்தின் செயலாளர் மர்ஷதா மக்கியினால் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அட்டைப்பட விளக்கமும் தனியாக இடம் பெற்றுள்ளது.இந்த 54வது நீதிமுரசு, சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1975ஆம் ஆண்டின் தலைவராக இருந்தவரும், முன்னாள் பெரும் பொருளாளருமான மறைந்த சிரேஷ்ட சட்டத்தரணி ஜி ராஜகுலேந்திராவுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டு அவருக்கு கௌரவமளித்துள்ளமை சிறப்பம்சமாகும்.




ஆங்கிலத்தில் ஐந்து கட்டுரைகள், தமிழில் 13 கட்டுரைகள், ஒரு சிறுகதை, ஒரு கவிதை என பல்வேறுபட்ட ஆக்கங்கள் இந்நீதிமுரசை அலங்கரித்துள்ளன. படங்களுடன் கூடிய, சட்ட கல்லூரி சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் செயற்பாடுகள், வெற்றியாளர்களின் பெயர்ப்பட்டியல், கடந்த கால நிருவாகிகளின் பெயர்ப்பட்டியல் என்பனவும் இடம்பெற்றிருப்பதால், இலங்கை சட்டக் கல்லூரி சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் வரலாற்றுப் பதிவு ஆவணமாகவும் இதனை கருத முடியும். சிரேஷ்ட சட்டத்தரணிகள், சட்ட மாணவர்கள், துறைசார் வல்லுனர்களின் ஆய்வுபூர்வமான கட்டுரைகள் குறிப்பாக சட்ட மாணவர்களுக்கும், பொதுவாக வாசிக்கும் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

பொருளாதார பிரச்சினைகள் உட்பட பலவிதமான சிரமங்களுக்கு மத்தியிலும் பெரும் பணம் செலவிட்டு இந்த நீதிமுரசு இதழை சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ள நடப்பு வருட இலங்கை சட்டக் கல்லூரி சட்ட மாணவர் தமிழ் மன்ற நிர்வாக உறுப்பினர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

## பேசும் கவிதை

### தொலைந்து போனவர்கள்

விடிந்ததென்பாய் நீ அனுதினமும் – வான்
வெளுப்பது உனது விடியலில்லை
முடிந்ததென்பாய் ஒரு காரியத்தை – இங்கு
முடிதல் என்பது எதற்குமில்ல
மணந்தேன் என்பாய் சடங்குகளும் – வெறும்
மாலை சூட்டலும் மணமில்லை
இணைந்தேன் என்பாய் உடற்பசியால் – உடல்
இரப்பதும் கொடுப்பதும் இணைப்பல்ல.
கற்றேன் என்பாய் கற்றாயா? – வெறும்
காகிதம் தின்பது கல்வியில்லை
பெற்றேன் என்பாய் எதைப்பெற்றாய்? – வெறும்
பிள்ளைகள் பெறுவது பெறுவதல்
குளித்தேன் என்பாய் யுகயுகமாய் – நீ
கொண்ட அழுக்கோ போகவில்லை
அளித்தேன் என்பாய் உண்மையிலே – நீ
அளித்த தெதுவும் உனதல்ல
உடை அணிந்தேன் எனச் சொல்லுகிறாய் – வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் – ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய
தின்றேன் என்பாய் அணுஅணுவாய் – உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் – பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்
ஆட்டத்தில் உன்னை இழந்து விட்டாய் – உன்
அசலைச் சந்தையில் விற்றுவிட்டாய்
கூட்டத்தில் எங்கோ தொலைந்துவிட்டாய் – உனைக்
கூப்பிடும் குரலுக்கும் செவிடானாய்
'நான்' என்பாய் அது நீயில்லை – வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
'ஏன்'? என்பாய் இது கேள்வியில்லை – அந்த
ஏன் எனும் ஒளியில் உனைத் தேடு?
கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான்

## சிந்தனை செய் மனமே

### குரங்கும் மனிதனும்!

அடர்ந்த காட்டுக்குள் ஒரு மனிதன் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது பசியோடு இருந்த சிங்கம் ஒன்று அவனைத் துரத்தி வந்தது. ஓடி வந்த மனிதன் அங்கிருந்த ஒரு மரத்தில் ஏறிக் கொண்டான்.

அந்த மரத்தில் இருந்த ஒரு குரங்கு, "சிங்கத்திற்கு மரம் ஏறத் தெரியாது. தைரியமாக இருங்கள். சிங்கம் சென்றதும் தகவல் தருகிறேன். நீங்கள் இறங்கிச் செல்லலாம்" என்று ஆறுதல் கூறியது.

சிறிது நேரத்தில் அந்த குரங்கு உறங்கி விட்டது. கீழே இருந்த சிங்கம் அந்த மனிதனை பார்த்து, "குரங்கை கீழே தள்ளி விடு. நான் உன்னை விட்டு விடுகிறேன்" என்று கூறியது.



அந்த மனிதனும் உடனே குரங்கை கீழே தள்ளி விட்டான். குரங்கு கீழே விழுந்தது. சிங்கம் குரங்கிடம் சிரித்துக் கொண்டே, "மனிதன் எப்போதும் நன்றி கெட்டவன். உதவி செய்த உனக்கே துரோகம் செய்து விட்டான். உன்னை நான் கொல்ல மாட்டேன். நீ மரத்தின் மேல் ஏறி அவனை கீழே தள்ளி விடு" என்று கூறியது.

குரங்கு மரத்தில் ஏறி அந்த மனிதனை கீழே தள்ளிவிடவில்லை. மாறாக சிங்கத்தைப் பார்த்து, "நம்பி வந்தவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ய நான் ஒன்றும் மனிதன் அல்ல". என்று பெருமிதமாக கூறிவிட்டு பாய்ந்தோடியது.

## நலமே வாழ்வோம்

### பாலுறவு ஊக்க மருந்து



இலங்கையில் பாலுறவு ஊக்க மருந்து பாவனையினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மரணப் பரிசோதகர் இரேஷா தேஷானி சமரவீர தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துகளை பயன்படுத்தல், அவற்றை தவறான அளவில் உட்கொள்ளுதல், மருத்துவ ஆலோசனையின்றி இத்தகைய மருந்துகளைப் பயன்படுத்துதல் போன்றனவே இத்தகைய இறப்புகளுக்கு முக்கியக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

20 முதல் 25 வயது வரையானவர்களும், 40 முதல் 45 வயது வரையானவர்களும் இவ்வாறு அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பல இளைஞர்கள் இந்த பாலுறவு ஊக்க மருந்தினை பரிசோதனையாகப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய விடயங்கள் தொடர்பான சம்பவங்கள் மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று பதிவாகின்றன. இது உண்மையில் அதிக எண்ணிக்கை, எனவே நாங்கள் இது குறித்து விசேடமாக கவனம் செலுத்த வேண்டும். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காண வேண்டிய காட்சியொன்று



இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்ப் (WhatsApp): 0777314207



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 27

மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா தி. ஞானசேகரன்

# ஈழத்தின் முன்னணி விமர்சகராக விளங்கிய கே.எஸ்.சிவகுமாரன்

"இலங்கையின் விமர்சனத்துறையில் கே. எஸ்.சிவகுமாரனுக்குத் தனியிடம் உண்டு. தமது மதிப்புரைகள் மூலமும், விமர்சனக் குறிப்புகள் மூலமும் தமக்கெனத் தனியான ஆளுமையை அவர் உருவாக்கியுள்ளார். தம்மளவில் தனித்துவமாக இயங்கும் இவர், தம்மை ஒரு பத்தி எழுத்தாளராகவே கருதிக் கொள்கிறார். ஆயினும், இவரது, கலை இலக்கியத்துறைப் பங்களிப்புகள் கவனத்துக் குரியவையாகும். தமிழ் இலக்கியப் போக்கினை ஆங்கிலம் மூலம் பிறமொழி வாசகர்களுக்கு தெரிவிக்கும் சிறந்த பணியையும் அவர் செய்து வருகிறார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சு, மின்னியக்க ஊடகங்களின் வாயிலாகச் சிவகுமாரன் அளப்பாரிய பணிகளை ஆற்றி வருகிறார்" எனக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் துரைமனோகரன் (நூல்:இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி 1997 பக். 195_196).

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய,கே.எஸ். சிவகுமாரன் திறனாய்வு, பத்தியெழுத்து, ஆக்க இலக்கியம், பத்திரிகை ஆசிரியர், நூலாசிரியர், மொழிபெயர்ப்பாளர், ஆங்கிலஆசிரியர் எனப் பல்துறைகளில் இயங்கியவர்.

மட்டக்களப்பு புளியந்தீவிலுள்ள சிங்களவாடி என்று முன்னர் அழைக்கப்பட்ட பகுதியில் கைலாயர் செல்லநயினார் தங்கத்திரவியம் தம்பதிக்கு 01.10.1936இல் மூத்தமகனாகப் பிறந்தவர் சிவகுமாரன். தாய், தந்தையரது பூர்வீகம் யாழ்ப்பாணம் என அறியமுடிகிறது. சிவகுமாரன் தனதுஆரம்பக் கல்வியை ஆனைப்பந்தி ஆர். கே.எம்.பாடசாலையில் பெற்றார்.

அதன்பின்னர் மட்டக்களப்பில் உள்ள சென் மேரிஸ் கல்லூரியிலும் தொடர்ந்து மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் அதன் பின்னர் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலும் கற்றார். 1953இல் கொழும்புவாசியாகிய சிவகுமாரன் கொழும்பு இரத்மலானை இந்துக்கல்லூரியில் கற்று எஸ்.எஸ்.சி. சோதனையில் சித்திபெற்றார். அதன்பின்னர் மருதானை சென்ற் ஜோசப் கல்லூரியில் கற்று எச். எஸ். சி. சித்தியடைந்தார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொண்டு பி.ஏ. பட்டம் பெற்ற இவர்,தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஏம். ஏ. ஆங்கில இலக்கியம் சிறப்புப் பட்டமும் பெற்றார். இந்தியாவிலுள்ள பூனே திரைப்படக் கல்லூரியில் திரைப்பட இரசனைத் திறனாய்வுப் பயிற்சியை 1990இல் மேற்கொண்டு சான்றிதழ் பெற்றவர்.

சிவகுமாரன் டெயிலிநியூஸ், தி ஐலன்ட், வீரகேசரி, நவமணி ஆகிய பத்திரிகைகளில் உயர் பதவிகளில் ஆசிரியபீடங்களில் இயங்கியவர். நவமணி பத்திரிகையின் ஸ்தாபக பிரதம ஆசிரியர்.

இலங்கை, ஓமான், இந்தியா ஆகிய நாடுகளில் பணியாற்றி தமிழ் ஆங்கிலம் ஆகியமொழிகளில் இலக்கியம், சினிமா போன்ற துறைகளில் திறனாய்வுக் கட்டுரைகளை எழுதியவர். கொழும்பில் மூன்று சர்வதேசப் பாடசாலைகளிலும் அமெரிக்கா, மாலைதீவு, ஓமான் ஆகிய நாடுகளிலுள்ள பாடசாலைகளிலும் ஆங்கிலஆசிரியராகப் பணியாற்றினார். வெளிநாடுகளில் ஆங்கில இலக்கியம் கற்பித்தவர்.

வானொலி, தொலைக்காட்சிஆகிய ஊடகங்களில் இவர் பங்களிப்புச் செய்துள்ளார். வானொலியில் வர்த்தக, தேசியசேவைகளில் பகுதிநேர அறிவிப்பாளராக, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பணியாற்றியவர்.

வானொலி செய்திப் பிரிவில் தமிழ் செய்தி ஆசிரியர், செய்திவாசிப்பாளர், ஆங்கில செய்தி வாசிப்பாளர்,தொலைக்காட்சியில் முதலாவது தமிழ் செய்தி பிரதித் தொகுப்பாளர், ஊர்கோலம் முதலாவதுஅளிக்கையாளர் ஆங்கிலசேவையில் The Arts magazine என்ற வாராந்த நிகழ்ச்சியைத் தொகுத்து தயாரித்தளித்த முதலாவது தமிழர்.

1966ஆம் ஆண்டில் இவர் புஷ்பாவை திருமணம் முடித்தார். இவர்களுக்கு ரகுராம், அனந்தராம் ஆகிய இரு புதல்வர்கள். சிவகுமாரன் தம்பதிக்கு நான்கு பேரப்பிள்ளைகள்.


சிவகுமாரன் எழுதிய நூல்களாக,(1) Aspects of Culture in Sri Lanka(1989), (2) Tamil Writing in Sri Lanka (1964), (3) அசையும் படிமங்கள், (4) அண்மைக்கால ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள் பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும் 04, (5) இந்திய, இலங்கை இலக்கியம் ஒரு கண்ணோட்டம் (2005), (6) இருமை (7) ஈழத்து எழுத்தாளர்கள் ஒரு விரிவான பார்வை (2009), (8) ஈழத்து தமிழ் நாவல்களிற் சில திறனாய்வுக் குறிப்புகள், பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுகளும் 06, (9)ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒருபன்முகப் பார்வை (1962_1979), (10) ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகப் பார்வை (1980_1998), (11) ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள்: திறனாய்வு பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுகளும் 03, (12) ஒரு திறனாய்வாளரின் இலக்கியப் பார்வை.(2008), (13) காலக் கண்ணாடியில் ஒருகலை இலக்கியப் பார்வை (2020), (14) கே.எஸ்.சிவகுமாரன் ஏடுகளில் திறனாய்வு/மதிப்பீடுகள் சில, (15) கைலாசபதியும் நானும், (16) சினமா! சினமா! ஓர் உலகவலம், (2006), (17) சிவகுமாரன் கதைகள், (18) சொன்னாற்போல 1 (19) சொன்னாற்போல 2, (20) சொன்னாற்போல 3(2008), (21) திறனாய்வு என்றால் என்ன?(2004), (22) திறனாய்வுப் பார்வைகள் பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும் 01, (23) பண்டைய கிரேக்க முதன்மையாளர்கள் (24) பிறமொழிச் சிறுகதைகள் சில, (25) மரபுவழித் திறனாய்வும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும் பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும் 07, (26) மூன்று நூற்றாண்டுகளின் முன்னோடிச் சிந்தனைகள் பத்தி எழுத்துக்களும் பல் திரட்டுக்களும் 05, (27) கலை இலக்கியப் பார்வைகள் (2014), (28) திரைப்படத் துறையில் (கட்டுரைத் தொகுப்பு 2020), (29) கலை, இலக்கியத் திறனாய்வு, (30) ஈழத்து இலக்கியம் (நூல்களின் அறிமுகம்) (1998) (31) ஈழத்துத் சிறுகதைத் தொகுப்புகள் (திறனாய்வு), (32)அண்மைக் கால ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புகள் (திறனாய்வு) (1999), (33) ஈழத்துத் தமிழ் நாவல்களிற் சில (திறனாய்வு), உட்பட 42 நூல்களை இவர் எழுதியுள்ளார்.

உலக இலக்கியக் களஞ்சியங்கள் இரண்டில் இலங்கை இலக்கியம் பற்றி இவர் எழுதிய சிலக ட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

கலை இலக்கியத் திறனாய்வு என்ற இவரது நூல் தமிழக திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் வாசிப்புத் துணை நூலாகப் பரிந்துரைக்கப்பட்டது.





இவர் Asian Films நடத்திய திரைப்பட வகுப்புகளில் விரிவுரையாளராகவும் இருந் துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் Translation Studies Department இல் வருகை தரு விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

சிவகுமாரனே தமிழில் பத்திஎழுத்து என்னும் பிரயோகத்தை அறிமுகப்படுத்தியவர் எகை குறிப்பிட்டுள்ளார் எழுத்தாளர் முருகபூபதி (ஞானம்131, அட்டைப்பட அதிதி கட்டுரை)

இவரது பணிகளைப் பாராட்டிபல நிறுவனங்கள் கௌரவித்துள்ளன.

Press Institute, College of Journalism ஆகியன இவரை 2008ஆம் ஆண்டின் சிறந்தஆங்கிலப் பத்தி எழுத்தாளராகப் பாராட்டி பரிசளித்தது.

கனடாவின் தமிழர் தகவல் ஏடு இவரைப் பாராட்டிக் கேடயம் வழங்கியது. இலங்கை வட, கிழக்கு மாகாணஆளுனர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

அமெரிக்காவில் இவர் ஆங்கிலத்தில் எழுதிய Subliminal Assault என்ற கவிதைக்கு, The Poetry of America விருது வழங்கிக் கௌரவித்தது.

இலங்கை தணிக்கை சபையின் ஓர் அங்கத்தவராகவும் இவர் இருந்துள்ளார்.

இவர், Film Critics and Journalists Assosiation என்ற அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர்.

இந்தியாவின் அனைத்துலக திரைப்படவிழாக்களிலும்,கேரள அனைத்துலக விழாக்களிலும் அழைப்பின் பேரில் ஆண்டுதோறும் 1991ஆம் ஆண்டுமுதல் கலந்துகொண்டவர்.

கே. எஸ்.சிவகுமாரனின் பணிகளைப் பாராட்டி மல்லிகை செப்டெம்பர் 1988 இதமும்,ஞானம் சஞ்சிகை ஏப்ரல் 2011 இதழும், கனடா காலம் ஜனவரி 2021 இதழும் இவரை அட்டைப்பட அதிதியாக கௌரவித்து கட்டுரைகள் எழுதியுள்ளன. ஜீவநதிகே. எஸ்.சிவகுமாரன் பவளவிழாச் சிறப்பிதழை ஐப்பசி 2011இல் வெளியிட்டுகௌரவித்தது.

யாழ்.சர்வதேச திரைப்படத் திருவிழா 2020இல் இவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. சிவகுமாரன் இலங்கை கலாசார அமைச்சினால் தேசத்தின் கண், விருதுவழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இலங்கை அரசின் 2020ஆம் ஆண்டுக்கான சாகித்திய ரத்தினா உயர் இலக்கிய விருதினை கே. எஸ்.சிவகுமாரன் பெற்றார்.கே. எஸ் சிவகுமாரன் 15.09.2022 அன்று அமரரானார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 38

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | 05 |
| | 06 | 07 | | 08 | |
| 09 | | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | | 16 | 17 | |
| | 18 | 19 | | | 20 |
| 21 | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ......................................................
வகுப்பு ......................................................
தொலைபேசி இல ......................................................
பாடசாலை பெயர் ......................................................
வதிவிட முகவரி ......................................................
......................................................
.............................. ..........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) தொடர்ச்சியான மழை பெய்கின்ற காலப்பகுதியை இவ்வாறு கூறலாம்.
(3) உலகில் வாழும் நம் அனைவருக்கும் முதல் தெய்வம்.
(6) வறிய நிலையில் உள்ளவரைக் குறிக்கும் பொதுப்பாற் சொல்.
(10) தற்போசணி உயிரங்கி இது. மனிதனுக்கும், பிராணிகளுக்கும் உணவு வழங்குவதுடன் மாத்திரமன்றி, புவியின் வெப்பநிலையைப் பேணுவதிலும் பங்களிப்பு வழங்கும் உயிரங்கி.
(14) மழையிலோ அல்லது வெயில் வேளையிலோ நாம் வெளியில் செல்ல வேண்டுமானால் மறக்காமல் நம்முடன் எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்.(தலைகீழான சொல்)
(16) கடலோரம் எப்போதும் ஓயாமல் அடித்துக் கொண்டேயிருக்கும். (தலைகீழான சொல்)
(18) எமது புவியைச் சூழ்ந்து காணப்படுகின்றது. கண்களால் காண முடியாத சடப்பொருள். அசைந்தால் மட்டுமே உணர முடியும்.
(21) இளைஞனையும், ஆண்மாட்டையும் குறிக்கும் சொல்.
(23) உலகெங்கும் ஏராளமான மக்களால் உணவாகக் கொள்ளப்படுகின்ற தானியம். இத்தானியத்தின் மாவில் ஏராளமான உணவுப்பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. எமது நாட்டில் இத்தானியம் விளைவதில்லை. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்றது.

### மேலிருந்து கீழ்

(2) குளம், ஆறு, வாவி போன்று இதுவும் ஒரு நீர்நிலை ஆகும். (தலைகீழான சொல்)
(4) ஒலி, பாம்பு ஆகியவற்றைக் குறிக்கின்ற சொல். (தலைகீழான சொல்)
(7) பெரும்பாலும் கடற்கரையோரங்களில் வளர்கின்ற தாவரம் இது. மணல்தரையில் தாவரம் உறுதியாக நிற்பதற்காக மிண்டிவேர்கள் கொண்ட தாவரம். (தலைகீழான சொல்)
(9) மழை பெய்யாத வரட்சியான காலப்பகுதியைக் குறிக்கும் சொல்.
(11) மீன்பிடி உபகரணங்களில் ஒன்று இது.
(15) நாம் தேநீர் அருந்துகின்ற சிறு கோப்பையைக் குறிக்கும் சொல்.
(20) கிளியின் ஒலிமரபு 'பேசும்' என்பது போல இந்தப் பறவையின் ஒலிமரபும் இதுதான். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 37

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. அல்லி 04. நா 06. அகம்
09. ஆங்கிலம் 19. கனா 21. விண்மீன்

**மேலிருந்து கீழ்**
02. செங்கல் 04. நாகம் 06. அலகு
16. மேகம் 17. செவி 18. மீன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 36

### பாராட்டு பெறுவோர்

**1. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வி
337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. எம்.எம்.எம். அஜ்மல்**
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை.
இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**3. வை. டிலோசிக்கா**
தரம் 09B, பண்டாரவளை, தமிழ் மத்திய கல்லூரி,
இல. 36, கல்வல பதன, பூனாகல வீதி, பண்டாரவளை.

**4. உதயகுமார் கஜானி**
தரம் 02, மட். கமு/ கணேசா வித்தியாலயம்,
பிள்ளையார் கோயில் வீதி, மாவடிவேம்பு - 1.

**5. ஹகீமா ஹாரிஸ்**
தரம் 03, அல் ஹஸனியா ம.வித்தியாலயம்,
இல. 53, இந்திரிலிகொட, மக்கொன.

**6. லுக்மான் மின்ஹாஜ்**
தரம் 07C, மா/ ஸாஹிரா தேசிய பாடசாலை,
வறக்காமுற, உக்குவெல.

**7. எம்.ஏ. அனீகா**
தரம் 06, அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலை,
இல. D 123/4, பள்ளிப்போருவ, ஹெம்மாதக.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 38
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :
பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர் ஆகுதல்
மாணார்க் கரிது

தெளிவுரை :
மனத்தால் பொருந்தாதவர்கள் நல்ல பல நூல்களைக் கற்றபோதும் மனந்திருந்தி நல்ல நண்பர் ஆவது அரிது.

## இவ்வார மழலை



தஷ்மின்யா
மகேஷ் / சசிகலா,
களுத்துறை.

# மண் வாசனை

மண் வாசனை என்பது மழைநீரான உலர்ந்த மண் மீது விழும்போது ஏற்படும் வாசனையாகும். காய்ந்த மண் மீது மழைத் துளி படும்போது ஏற்படும் வேதிவினையால் அந்த வாசனை ஏற்படுகிறது.

மண்ணில் வாழும் இழை பக்டீரியாக்கள் என்கிற நுண்ணுயிர்கள் வெளியிடும் சியோச்மின் என்னும் சேர்மத்தால் அந்த வாசனை ஏற்படுகிறது. தங்கள் இனத்தைப் பெருக்கும் நோக்குடன் காய்ந்த மண்ணில் இவை தங்கள் வித்துகளை வெளியிடுகின்றன.

மழை பெய்யும்போது மண்ணில் வேகமாக விழும் நீர் துளிகளால் அவ்வித்துக்கள் மண்ணிலிருந்து சிதறி, இன விருத்திக்காக காற்றில் பயணிக்கின்றன. அவற்றிள் சில நம் மூக்கை வந்தடைகின்றன. நாம் சுவாசிக்காத வித்துகள் மீண்டும் ஈரமான மண்ணில் விழுந்து பக்டீரிய இழைகளாக மாறிவிடுகின்றன. மழை பெய்வதற்கு முன் வேறு ஒரு வாசனை வரும். அது ஓசோனின் வாசனையாகும். இடி மின்னலுடன் மழை வரும்போது ஏற்படும் மின்சாரம் ஒக்சிஜன், நைட்ரஜன் மூலக்கூறுகளை பிளக்கும். அவை இணைந்து நைட்ரிக் ஒக்சைடாக மாறுகின்றன. அது வளி மண்டலத்திலுள்ள மற்ற வேதிப்பொருள்களுடன் இணைந்து ஓசோனை உருவாக்குகிறது.

அது நமது நாசியை அடைவதால், மழை வருவதை முன்கூட்டியே உணர முடிகிறது.

மிகச்சிறிய அளவாக இருந்தாலும் மனித மூக்கானது அதை சரியாக இனம் கண்டு விடும். அதற்கான காரணம், மழைக்கு பின்னரான வாழ்க்கை தான் மனிதர்களின் வாழ்வை தீர்மானிக்கும் சக்தி கொண்டது. மழை இல்லையேல் மனித வாழ்க்கை இல்லை. ஆகவே, மனித இனம் இதை மறக்காமல் நினைவில் வைத்திருப்பதால் மழைக்கு பின்னரான மனத்தினை உடனே உணர முடிகின்றது.



## ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம்?

ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று ஓர் இளைஞர் நண்பர்களிடம் கேட்டார். சிலர் சினிமாவுக்குப் போகச் சொன்னார்கள். சிலர் நண்பர்களுடன் செலவிடச் சொன்னார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு யோசனை வந்தது. பிறகு நேர நிர்வாகவியல் நிபுணரை அழைத்து ஆலோசனை கேட்டார் அந்த இளைஞர். புத்தகம் படி, நல்ல காரியங்கள் செய் என்றெல்லாம் தான் சொல்லப்போகிறார் என்பது இளைஞரின் எதிர்பார்ப்பு. நேர நிர்வாகவியல் நிபுணர் மிக நிதானமாகச் சொன்னார் "உன் ஓய்வு நேரத்தை மற்றவர்கள் தவறாகப் பயன்படுத்தாமல் பார்த்துக் கொள். அதுவே பயனுள்ள நேரங்களைத் தொடங்கி வைக்கும்" என்று.

## தண்டவாளம் துருப் பிடிக்குமா?

தண்டவாளம் துருப் பிடிக்கும். மற்ற இரும்புக் கலவையைவிட தண்டவாளத்தின் இரும்புக் கலவை துருப் பிடிக்க எடுத்துக்கொள்ளும் காலம் அதிகம். கார்பன், சிலிகன், பொஸ்பரஸ், சல்பர், தேனிரும்பு உள்ளிட்டவை 1,700 டிகிரி செல்சியஸ் வரை வெப்பப்படுத்தப்பட்டு உருக்கி தண்டவாள இரும்பு செய்யப்படுகிறது.

கார்பன் அதிகரிப்பால், தண்டவாளத்தின் கடினத்தன்மை அதிகரித்து இது வெப்பத்தில் விரிவடையும் இயல்பில் நெகிழ்வுத் தன்மை குறைவதே அதன் காரணம்.




தண்டவாள இரும்பு துருப் பிடிக்கவில்லை என்று நாங்கள் நினைக்கக் காரணம், அதன் மேற்பகுதியின் பளபளப்பு மட்டுமே! அதன் பளபளப்புக்குக் காரணம் அடிக்கடி பயன்படுத்தப்படுவது ஆகும்.

இரும்பானது துருப்பிடிக்க அதன் மீதான உயிர்வளியின் (ஒக்சிசன்) வேதிவினை நிகழவேண்டும். இப்படி அடிக்கடி பயன்படுத்தப்பட்டால் அந்த வேதிவினை தடுக்கப்பட்டு துருப் பிடித்தல் தவிர்க்கப்படுகிறது.

இரும்பு துருப் பிடித்தல் என்பது இரும்பு கெட்டுப் போவதல்ல. மாறாக, இரும்பானது இயற்கையோடு இணைய முற்படுவதாகும்.

# காந்தி வழங்கிய அஹிம்சை தண்டனை



இந்திய சுதந்திரத்திற்காக அஹிம்சை வழியில் போராடிய மகாத்மா காந்தி, அடிக்கடி ஆங்கிலேயரினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒரு முறை காந்தி அவர்கள் சிறையில் இருந்து விடுதலையாகி வெளியே வரும்போது அங்கிருந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவருக்கு தன் கைகளினாலேயே செய்திருந்த ஒரு சோடி செருப்பை அன்பளிப்பாக கொடுத்தார். சிறைச்சாலை அதிகாரியும் அதனை அன்புடன் பெற்றுக் கொண்டார். மகாத்மா காந்தியை மகிழ்விக்க எண்ணி, அந்த செருப்பை அப்போதே அணிந்து பார்த்தார்.

"இந்த செருப்பு என் காலுக்கு சரியாக இருக்கிறதே! உங்களுக்கு என் காலின் அளவு எப்படி தெரிந்தது? எனக் கேட்டார். அதற்கு காந்தி அவர்கள், "என்னை சிறைச்சாலைக்கு கொண்டு வந்த, முதல் நாளே நீங்கள் உங்கள் 'பூட்ஸ்' காலால் என் நெஞ்சை மிதித்தீர்களே! நினைவு இருக்கிறதா? அப்போது தான் நான் உங்கள் காலின் அளவை என் நெஞ்சில் பதித்துக் கொண்டேன்" என்றதும் சிறைச்சாலை அதிகாரி வெட்கித்துப் போனார்.

**"இன்னர் செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல்"**

**என். மொஹமட் லாபீர்,**
பதுளை

## வாரம் ஒரு பெரியார்

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமிழுக்கும், சைவசமயத்துக்கும் தன் வாழ் நாளில் அரும்பெரும் தொண்டாற்றியவர். ஒரு பெண் தனித்து நின்று சாதிக்க முடியாதது என்பதை தனது உலகளாவிய நற்பணிகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார்.

அப்பாக்குட்டி – தையற்பிள்ளை தம்பதியினருக்கு இரண்டாவது பிள்ளையாக தங்கம்மா 1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் திகதி பிறந்தார்.

பொருட் செல்வத்திலும் பார்க்க அருட் செல்வமே அதிகம் இவரிடம் இருப்பதாக சோதிடர் கணிப்பிட்டுச் சொன்னார். தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் இவருக்கு ஏடு தொடக்கப்பட்டது.



இவர் மல்லாகம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 1929 ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார்.

"பெண் பிள்ளைதானே, தபால் தந்தி வாசிக்கக்கூடிய அறிவு இருந்தால் போதும்" என்று பெண்களின் உயர் கல்விக்கு தடை போடும் காலம் அது. அன்றைய காலகட்டத்தில் தங்கம்மாவின் அறிவுக் கூர்மையை நன்கு உணர்ந்த பெற்றோர் அவரை உயர் கல்வி கற்கவென, 1935 ஆம் ஆண்டு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலத்தில் சேர்த்தனர்.

படிப்பில் கெட்டித்தனமிக்க தங்கம்மா, போட்டிகள், பரீட்சைகள் என அனைத்திலும் முதலிடம் பெற்றார். 1941 ஆம் ஆண்டு இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து கொண்டார்.

ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு 1945 ஆம் ஆண்டு தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தற்காலிக ஆசிரியராக பணிபுரிந்தார். பின்னர் மட்டக்களப்பு புனித சிசீலியா ஆங்கிலப் பாடசாலைக்கு நிரந்தர ஆசிரியராக நியமனம் பெற்றுச் சென்றார்.

1949 ஆம் ஆண்டு கொழும்பு மருதானை பாத்திமா பெண்கள் பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க அங்கு சென்று 11 ஆண்டுகள் ஆசிரியப்பணியை மேற்கொண்டார்.

கொழும்பில் பல இடங்களில் இவர் சமயச் சொற்பொழிவினை நிகழ்த்தினார். இதனால் இவரின் தனித்துவம் வாய்ந்த நாவன்மை கொழும்புத் தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

ஈழத்துத் தனிப் பெருமையில் நாட்டமுள்ள இவர் எழுதிய "ஈழத்துப் பிரபந்தங்கள்" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை 1954 ஆம் ஆண்டு ஆரிய திராவிட பாசாவிருத்திச் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சென்னை சைவசித்தாந்த சங்கம் நடத்திய சைவப் புலவர் தேர்வில் சித்தியடைந்து 1958 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது பெண் சைவப் புலவரானார்.

1958 இல் கொழும்பில் நடந்த இனக்கலவரத்தினால் யாழ்ப்பாணத்திற்கு வந்தார். தாய், தந்தையின் பிரிவுத் துயர் இவரை வாட்டிய போது அதை மறப்பதற்காக திருவாசகத்தை ஒரு வருடமாக இரவு பகலாகப் படித்தார். இதனால் திருவாசகம் இவருக்கு மிகுந்த பரீட்சயமாயிற்று.

"பேசப்படும் பேச்சின் பொருளை ஒழுங்குபடுத்தி கால நேரத்தை உணர்ந்து கட்டுப்பட்டு, யாழ்ப்பாணத் தமிழில் ஓரெழுத்தையும் சிதைக்காது, விழுங்காது பேசும் திறமை சிவத்தமிழ்ச் செல்விக்கு உண்டு என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பாராட்டினார்.

1965 ஆம் ஆண்டு முதல் சிவத்தமிழ் செல்வியின் தமிழ்தூதுப் பயணம் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் என பல நாடுகளுக்குப் பயணிக்கத் தொடங்கியது.

1973 ஆம் ஆண்டு திருவாவடு துறை ஆதீனத்தில் நடைபெற்ற மங்கையர் மாநாட்டில் தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை தாங்கினார். தமிழ் நாடு ஆதீனத்தின் மாநாடு ஒன்றில் ஈழத்துப் பெண் ஒருவர் தலைமை தாங்கிய பெருமை இவரையே சாரும்.

1970 ஆம் ஆண்டு 'ஈழத்து சிதம்பரம்' என்று இந்தியர்களால் அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் ஆதீனம் இவருக்கு 'சிவத்தமிழ் செல்வி' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இப்பட்டமே இவரின் பெயருடன் ஐக்கியமாகி விட்டது.

தங்கம்மா அப்பாக்குட்டி 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி தனது 83 ஆவது வயதில் இவ்வுலகை விட்டுச் சென்றார்.







ஆர். ஆதேஷ்
தரம் 07, கேம்பிரிட்ஜ் பாடசாலை, கொழும்பு.



பி. அக்ஷித் யாதவ்
தரம் 07, கேம்பிரிட்ஜ் பாடசாலை, கொழும்பு.



ஆர். சதுர்ஷி
தரம் 10, புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம்.



ஜே. ஜெரமாயா ஈதன்
தரம் 07A, விச்சர்லி சர்வதேச பாடசாலை

# விளையாட்டு



# FIFA உலகக் கிண்ணம் ஆரம்பம்



## இலக்கங்களில் உலகக் கிண்ணம்

**20:** 1930இல் உலகக் கிண்ண கால்பந்து போட்டி ஆரம்பித்தது தொடக்கம் இதுவரை 20 உலகக் கிண்ண தொடர்கள் நடைபெற்றுள்ளன.

**32:** இம்முறை உலகக் கிண்ணத்தில் 32 அணிகள் பங்கேற்கின்றன.

**80:** உலகக் கிண்ணத்தில் ஆடும் 80ஆவது நாடாக கட்டார் பதிவாகிறது.

**8:** உலகக் கிண்ணத்தை இதுவரை எட்டு நாடுகள் தான் வென்றுள்ளன. பிரேசில் அதிகபட்சமாக ஐந்து முறை கைப்பற்றியிருப்பதோடு ஜெர்மனி மற்றும் இத்தாலி நான்கு முறை வென்றுள்ளன.

**80,000:** கட்டார் உலகக் கிண்ண இறுதிப் போட்டி நடைபெறும் லுசைல் அரங்கில் 80,000 ரசிகர்கள் பார்வையிட முடியும்.

**2.6:** 2018 ரஷ்ய உலகக் கிண்ணத்தில் போட்டி ஒன்றில் சராசரியாக புகுத்தப்பட்ட கோல்கள் எண்ணிக்கை 2.6

**6:** போட்டியை நடத்தும் நாடு இதுவரை ஆறு முறை உலகக் கிண்ணத்தை வென்றுள்ளது.

**27.7:** இம்முறை உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் அணிகளில் ஆர்ஜன்டீன அணியே மூத்தது. அந்த அணி விரர்களின் சராசரி வயது 27.7.

**24.5:** கட்டார் உலகக் கிண்ணத்தில் இளமையான அணி அமெரிக்கா. அந்த அணி வீரர்களின் சராசரி வயது 24.5.

**5 பில்லியன்:** இம்முறை உலகக் கிண்ணத்தை உலக மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் பார்ப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**334,000:** மக்கள் தொகை கொண்ட அயர்லாந்து உலகக் கிண்ணத்திற்கு (2018) இதுவரை தகுதி பெற்ற மிகச் சிறிய நாடு.

**13:** ஒற்றை உலகக் கிண்ண தொடரில் அதிக கோல் பெற்ற அணி என்ற சாதனை பிரான்ஸிடம் உள்ளது. 1958இல் அது மொத்தம் 13 கோல்கள் புகுத்தியது.

**56:** உருகுவேயின் ஜோஸ் படிஸ்டா 1986இல் ஸ்கொட்லாந்துக்கு எதிரான போட்டியில் 56 ஆவது விநாடியிலேயே வெளியேற்றப்பட்டார். இதுவே விரைவான சிவப்பு அட்டை பெற்ற உலகக் கிண்ண சாதனையாகும்.

**16:** அதிக உலகக் கிண்ண கோல்களை பெற்ற ஒற்றை வீரர் என்ற சாதனை ஜெர்மனியின் மிரொஸ்லாவ் கிளோசிடம் உள்ளது. அவர் 2002 தொடக்கம் 2014 வரை நான்கு உலகக் கிண்ண தொடர்களில் மொத்தம் 16 கோல்களை பெற்றார்.

**11,581:** சதுர கிளோமீற்றர் பரப்பளவு கொண்டது கட்டார். இது நியூயோர்க் பெருநகர அளவு மாத்திரமே. அதாவது உலகக் கிண்ணத்தை நடத்தும் மிகச்சிறிய நாடு கட்டார்தான்.

**44 மில்லியன் டொலர்:** கட்டார் உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி இத்தனை தொகை பரிசை பெறும்.



## குழுக்கள்

| | |
|---|---|
| A | கட்டார், ஈக்வடோர், செனகல், நெதர்லாந்து |
| B | இங்கிலாந்து, ஈரான், அமெரிக்கா, வேல்ஸ் |
| C | ஆர்ஜன்டீனா, சவூதி அரேபியா, மெக்சிகோ, போலந்து |
| D | பிரான்ஸ், அவுஸ்திரேலியா, டென்மார்க், துனீசியா |
| E | ஸ்பெயின், கொஸ்டாரிகா, ஜெர்மனி, ஜப்பான், |
| F | பெல்ஜியம், கனடா, மொரோக்கோ, குரோசியா |
| G | பிரேசில், செர்பியா, சுவிட்ஸர்லாந்து, கெமரூன் |
| H | போர்த்துக்கல், கானா, உருகுவாய், தென் கொரியா |

## போட்டி அட்டவணை (குழு நிலை)

| திகதி | அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| நவம்பர் 20 | கட்டார் Vs ஈக்வடோர் | அல் பைத் | இரவு 9.30 |
| நவம்பர் 21 | இங்கிலாந்து Vs ஈரான் | கலீபா ச.அ. | பி.ப. 6.30 |
| நவம்பர் 21 | செனகல் Vs நெதர்லாந்து | அல் துமாமா | இரவு 9.30 |
| நவம்பர் 22 | அமெரிக்கா Vs வேல்ஸ் | அல் ரையான் | மு.ப. 12.30 |
| நவம்பர் 22 | ஆர்ஜன்டீனா Vs சவூதி | லுசைல் | பி.ப. 3.30 |
| நவம்பர் 22 | டென்மார்க் Vs துனீசியா | கல்வி நகர் | பி.ப. 6.30 |
| நவம்பர் 22 | மெக்சிகோ Vs போலந்து | அரங்கு 974 | இரவு 9.30 |
| நவம்பர் 23 | பிரான்ஸ் Vs ஆஸி. | அல் ஜனூப் | மு.ப. 12.30 |
| நவம்பர் 23 | மொரோக்கோ Vs குரோசியா | அல் பைத் | பி.ப. 3.30 |
| நவம்பர் 23 | ஜெர்மனி Vs ஜப்பான் | கலீபா ச.அ. | பி.ப. 6.30 |
| நவம்பர் 23 | ஸ்பெயின் Vs கொஸ்டாரிகா | அல் துமாமா | இரவு 9.30 |
| நவம்பர் 24 | பெல்ஜியம் Vs கனடா | அல் ரையான் | மு.ப. 12.30 |
| நவம்பர் 24 | சுவிட்சர்லாந்து Vs கெமரூன் | அல் ஜனூப் | பி.ப. 3.30 |
| நவம்பர் 24 | உருகுவாய் Vs தென்கொரியா | கல்வி நகர் | பி.ப. 6.30 |
| நவம்பர் 24 | போர்த்துக்கல் Vs கானா | அரங்கு 974 | இரவு 9.30 |
| நவம்பர் 25 | பிரேசில் Vs செர்பியா | லுசைல் | மு.ப. 12.30 |
| நவம்பர் 25 | வேல்ஸ் Vs ஈரான் | அல் ரையான் | பி.ப. 3.30 |
| நவம்பர் 25 | கட்டார் Vs செனகல் | அல் துமாமா | பி.ப. 6.30 |
| நவம்பர் 25 | நெதர்லாந்து Vs ஈக்வடோர் | கலீபா ச.அ. | இரவு 9.30 |
| நவம்பர் 26 | இங்கிலாந்து Vs அமெரிக்கா | அல் பைத் | மு.ப. 12.30 |
| நவம்பர் 26 | துனீசியா Vs ஆஸி. | அல் ஜனூப் | பி.ப. 3.30 |
| நவம்பர் 26 | போலந்து Vs சவூதி | கல்வி நகர் | பி.ப. 6.30 |
| நவம்பர் 26 | பிரான்ஸ் Vs டென்மார்க் | அரங்கு 974 | இரவு 9.30 |
| நவம்பர் 27 | ஆர்ஜன்டீனா Vs மெக்சிகோ | லுசைல் | மு.ப. 12.30 |
| நவம்பர் 27 | ஜப்பான் Vs கொஸ்டாரிகா | அல் ரையான் | பி.ப. 3.30 |
| நவம்பர் 27 | பெல்ஜியம் Vs மொரோக்கோ | அல் துமாமா | பி.ப. 6.30 |
| நவம்பர் 27 | குரோசியா Vs கனடா | கலீபா ச.அ. | இரவு 9.30 |
| நவம்பர் 28 | ஸ்பெயின் Vs ஜெர்மனி | அல் பைத் | மு.ப. 12.30 |
| நவம்பர் 28 | கெமரூன் Vs செர்பியா | அல் ஜனூப் | பி.ப. 3.30 |
| நவம்பர் 28 | தென் கொரியா Vs கானா | கல்வி நகர் | பி.ப. 6.30 |
| நவம்பர் 28 | பிரேசில் Vs சுவிட்சர்லாந்து | அரங்கு 974 | பி.ப. 9.30 |
| நவம்பர் 29 | போர்த்துக்கல் Vs உருகுவாய் | லுசைல் | மு.ப. 12.30 |
| நவம்பர் 29 | ஈக்வடோர் Vs செனகல் | கலீபா ச.அ. | இரவு 8.30 |
| நவம்பர் 29 | நெதர்லாந்து Vs கட்டார் | அல் பைத் | இரவு 8.30 |
| நவம்பர் 30 | அமெரிக்கா Vs ஈரான் | அல் துமாமா | மு.ப. 12.30 |
| நவம்பர் 30 | வேல்ஸ் Vs இங்கிலாந்து | அல் ரையான் | மு.ப. 12.30 |
| நவம்பர் 30 | ஆஸி. Vs டென்மார்க் | அல் ஜனூப் | இரவு 8.30 |
| நவம்பர் 30 | துனீசியா Vs பிரான்ஸ் | கல்வி நகர் | இரவு 8.30 |
| டிசம்பர் 01 | போலந்து Vs ஆர்ஜன்டீனா | அரங்கு 974 | மு.ப. 12.30 |
| டிசம்பர் 01 | சவூதி Vs மெக்சிகோ | லுசைல் | மு.ப. 12.30 |
| டிசம்பர் 01 | கனடா Vs மொரோக்கோ | அல் துமைர் | இரவு 8.30 |
| டிசம்பர் 01 | குரோசியா Vs பெல்ஜியம் | அல் ரையான் | இரவு 8.30 |
| டிசம்பர் 02 | கொஸ்டாரிகா Vs ஜெர்மனி | அல் பைத் | மு.ப. 12.30 |
| டிசம்பர் 02 | ஜப்பான் Vs ஸ்பெயின் | கலீபா ச.அ. | மு.ப. 12.30 |
| டிசம்பர் 02 | கானா Vs உருகுவாய் | அல் ஜனூப் | இரவு 8.30 |
| டிசம்பர் 02 | தெ.கொரியா Vs போர்த்துக்கல் | கல்வி நகர் | இரவு 8.30 |
| டிசம்பர் 03 | கெமரூன் Vs பிரேசில் | லுசைல் | மு.ப. 12.30 |
| டிசம்பர் 03 | செர்பியா Vs சுவிட்சர்லாந்து | அரங்கு 974 | மு.ப. 12.30 |

32 அணிகள், 64 போட்டிகள், 29 நாட்களுடன் பிஃபா உலகக் கிண்ண கால்பந்து போட்டி கட்டாரில் இன்று (20) ஆரம்பமாகிறது.

மத்திய கிழக்கில் முதலாவது உலகக் கிண்ணம் 2002இல் ஜப்பான் மற்றும் தென் கொரியா நடத்திய பின் ஒட்டுமொத்த ஆசியாவில் நடக்கும் முதல் உலகக் கிண்ணம் என்று இம்முறை உலகக் கிண்ணத்திற்கு மேலும் சிறப்புகள் உண்டு.

பாலைவனங்களில் மைதானங்கள், ஆடம்பர அரங்குகள் என்று கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேல் கட்டார் இந்த உலகக் கிண்ணத்திற்கு தயாராகியது. அதன் உச்ச நிகழ்வு இன்று தொடக்கம் ஆரம்பமாகிறது.

என்றாலும் 2010 ஆம் ஆண்டு கட்டார் உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கான போட்டியில் வென்றது தொடக்கம் அது ஏகப்பட்ட சர்ச்சைகளையும் முட்டுக்கட்டைகளையும் சந்தித்தது. போட்டியை நடத்தும் கால அட்டவணை தொடக்கம் மைதானங்கள் கட்டுவது வரை தொட்டதற்கெல்லாம் தப்புச் சொல்ல கூட்டம் ஒன்று இருந்து வந்தது.

வழக்கமாக உலகக் கிண்ண கால்பந்து போட்டி மே, ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் நடைபெறுகின்றபோதும் கட்டாரின் சூட்டை சமாளிப்பதற்கு முதல் முறையாக குளிர்காலத்தில் நடைபெறுகிறது. அதுவும் ஐரோப்பிய கழக போட்டிகளுக்கு இடையே நடைபெறுவதால் அந்தப் போட்டிகளை பாதியில் நிறுத்திவிட்டே வீரர்கள் உலகக் கிண்ணத்தில் விளையாட வந்திருக்கிறார்கள்.

இந்தக் குட்டி நாடு உலகக் கிண்ணத்தை நடத்தும் போட்டியில் வென்றதில் ஊழல் இருந்தது என்று ஒரு குற்றச்சாட்டு, மைதானங்களை கட்டும்போது புலம்பெயர் தொழிலாளர்களை மதிக்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு, போதாக்குறைக்கு மனித உரிமை குற்றச்சாட்டுகள் என்று கட்டாருக்கு எதிரான பிரசாரங்கள் நின்றபாடில்லை.

கடைசியில் பிஃபா தலைவர் கியானி இன்பென்டினோ, போட்டியில் பங்கேற்கும் அணிகள் போட்டியில் மாத்திரம் கவனம் செலுத்தும்படி கூற வேண்டியதாயிற்று.

உலகக் கிண்ணத்திற்கு 32 அணிகள் விளையாடியபோதும் போட்டியை நடத்தும் கட்டார் தவிர்த்து ஏனைய அனைத்து அணிகளும் தகுதிகாண் போட்டிகளில் தேர்வு பெற்றே உலகக் கிண்ணத்தில் ஆட வந்திருக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக நடக்கும் தகுதிகாண் போட்டிகளில் உலகெங்கும் 211 அணிகள் பங்கேற்றன.

இம்முறை உலகக் கிண்ணம், ஆரம்ப சுற்று, 16 அணிகள் சுற்று, காலிறுதிப் போட்டி, அரையிறுதிப் போட்டி மற்றும் இறுதிப் போட்டி என்ற அட்டவணைப்படி நடைபெறுகிறது. இதன்படி பார்த்தால் உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமானால் ஓர் அணி மொத்தம் ஆறு போட்டிகளில் ஆட வேண்டி இருக்கும்.

நான்கு அணிகள் கொண்ட எட்டுக் குழுக்களாக ஆரம்ப சுற்றுப் போட்டிகள் நடைபெறும். ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் 16 அணிகள் சுற்றுக்கு முன்னேறும். அது தொடக்கம் நொக் அவுட் தான். வென்றால் உள்ளே தோற்றால் வெளியே என காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி என்று வெற்றி பெற்றால் கிண்ணத்தை கைப்பற்றிவிடலாம்.

உலகக் கிண்ண இறுதிப் போட்டி கட்டாரின் தேசிய தினமான டிசம்பர் 18 ஆம் திகதி லுசைல் அரங்கில் இலங்கை நேரப்படி இரவு 8.30க்கு ஆரம்பமாகும்.

வெற்றி வாய்ப்பு என்று பார்த்தால் எப்போதும் போல் அதிகமானவர்கள் பார்வை பிரேசில் பக்கம் திரும்பும். என்றாலும் அந்த அணி கடைசியான உலகக் கிண்ணத்தை வென்று 20 ஆண்டுகள் (2002) ஆகிவிட்டது. நெய்மார், வின்சியஸ் ஜூனியர் மற்றும் ரபின்ஹா ஆகிய மூவரையும் சுற்றித் தான் பிரேசிலின் உலகக் கிண்ண வாய்ப்பு இருக்கப்போகிறது.

என்றாலும் அனைத்து பக்கங்களிலும் ஒரு வலுவான அணியாக உலகக் கிண்ணத்தை வெல்ல முழு தகுதியுடனேயே பிரேசில் களமிறங்குகிறது.

உலகின் முன்னணி வீரர் லயனல் மெஸ்ஸியின் ஆர்ஜன்டீன அணியும் பிரேசிலுக்கு ஒப்பாக வலுவானதாக களம் காணப்போகிறது. கடைசியாக நடந்த கோப்பா அமெரிக்கா கிண்ணத்தை வென்ற ஆர்ஜன்டீனா அண்மைக் காலத்தில் அசைக்க முடியாத அணியாக மாறியிருக்கிறது.

35 வயதான மெஸ்ஸிக்கு இது கடைசி உலகக் கிண்ணமாக இருக்கும். உலகக் கிண்ணத்தை வெல்லும் அவரது கனவு பலிக்க இது கச்சிதமான நேரமாக இருக்கும்.






ஐரோப்பா பக்கம் பார்த்தால் முந்தைய மூன்று உலகக் கிண்ணங்களையும் வென்ற பிரான்ஸ் (2018), ஜெர்மனி (2014) மற்றும் ஸ்பெயின் (2010) மீது அதிகம் கவனம் செலுத்தலாம்.

இங்கிலாந்து, நெதர்லாந்து, குரோசியா, பெல்ஜியம், போர்த்துக்கல் மற்றும் உருகுவே அனைத்தும் நட்சத்திர வீரர்களைக் கொண்ட வலுவான அணிகள். ஆனால் அணியில் சரியான கலவை இல்லை. இங்கிலாந்து சம்பிரதாயமான ஆட்டத்தை ஆடுகிறது. பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தின் தற்காப்பு சற்று தடுமாற்றம் கொண்டது. குரோசியா (லுகா மொட்ரிக்), போர்த்துக்கல் (கிறிஸ்டியானோ ரொனால்டோ) மற்றும் உருகுவாய் (லுவிஸ் சுவராஸ்) நட்சத்திர வீரர்களை நம்பி ஆடுகின்றன.

கணிசமான அணிகள் உலகக் கிண்ணத்திற்கு முன்னேறியதே பெரியது என்ற நினைப்புடன் ஆடுகின்றன. குறிப்பாக ஆபிரிக்க, ஆசிய மற்றும் வட அமெரிக்க நாடுகளை குறிப்பிடலாம். செனகல் அதிர்ச்சி கொடுக்கக் கூடும் என்றபோதும் நட்சத்திர வீரர் சாடியோ மானே காயத்தால் கடைசி நேரத்தில் விலகி இருப்பது அந்த அணிக்குப் பெரும் பின்னடைவு.

எப்படி இருந்தபோதும் அடுத்து 29 நாட்களுக்கு உலகக் கிண்ண பரபரப்பு, எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்களுக்கு பஞ்சமிருக்காது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 நவம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை
Big Bossல்
கொஞ்சும் தமிழால்
நெஞ்சம் கவரும்
யாழ். ஜனனி

# ஐசாக் நியூட்டனின் பாராளுமன்ற உரை



ஐசாக் நியூட்டனை செல்வாக்கு மிக்க விஞ்ஞானி, கணிதவியலாளர், தத்துவஞானி என்று புகழ்ந்து தள்ளலாம். இது மட்டுமல்ல அவர் அரசியல்வாதியாகக் கூட இருந்திருக்கிறார். 1689 மற்றும் 1690 காலப்பகுதியில் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழுத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கொஞ்சம் காலம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்.

இப்போது போலல்ல அந்தக் காலத்தில் பாராளுமன்றத்திற்கு முழு அதிகாரம் இருக்காவிட்டாலும் அரசரைத் தாண்டி தன்னாலான அளவு சமூகத் தொண்டுகளைச் செய்திருக்கிறது. நியூட்டன் அரசியல்வாதியாக என்ன செய்தார் என்று எந்தப் பதிவும் இல்லை, ஆனால் ஒரு தடவை பாராளுமன்றத்தில் பேசி இருக்கிறார்! பெரிதாக எதிர்பார்க்க வேண்டாம், "குளிராக இருக்கிறது, அந்த ஜன்னலை மூடுங்கள்" என்று யாரையோ பார்த்துக் கூறியது தான் நியுட்டன் பேசிய உரையாக பதிவாகி இருக்கிறது.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# சஹாரா ஒரு பசுமை பூமி

பனி யுகம் முடிவில் கி.மு 8000 தொடக்கம் 6000 வரை சஹாரா பாலைவனம் பசுமை பூமியாக இருந்தது. அப்போது புல்வெளிகள், மரங்கள் என்று பச்சை பசேல் என்று இருக்கும். மனிதர்கள் அதிகம் வாழ்ந்தார்கள்.

என்றாலும் இன்று சஹாரா என்பது உலகின் மிகப்பெரிய பாலைவனம். வெட்டவெளி பூமி என்று பார்த்தால் அன்டார்டிகா மற்றும் ஆர்டிக்கிற்கு அடுத்து உலகின் மூன்றாவது மிகப் பெரிய பாலைவனம் இது. பாறைகள் மற்றும் புழுதி மணல் என்று சாஹாரா பாலைவனம் என்பது 3.6 மில்லியன் சதுர மைல் அளவு கொண்டது.

என்றாலும் சஹாரா என்பது எப்போதும் இப்படியே இருக்காது, அது ஒவ்வொரு 20,000 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் பசுமை பூமியாக மாறும். பூமியின் அச்சுக்கு அமைய இந்த மாற்றம் நிகழும்.

விண்வெளியில் பூமியின் அச்சு நிலையானது அல்ல. அது ஒரு வட்டத்தில் தள்ளாடுகிறது. இது சில பருவங்களில் வட ஆபிரிக்கா சூரியனுக்கு நெருக்கமாக வருவதோடு மற்றைய பருவத்தில் விலகிச் செல்கிறது.

சூரியன் நெருக்கமாக வரும்போது மழை அடிக்கடி நிகழும் அது சஹாரா பாலைவனமாக இருப்பதை நிறுத்திவடும்.



அட்லாண்டிக் பெருங்கடலில் ஆழமாகப் படிந்திருக்கும் ஆபிரிக்காவில் இருந்து வீசும் காற்றில் உள்ள தூசியை ஆராய்ந்தபோதே இந்த முடிவு தெரியவந்திருக்கிறது.

நிலம் வரண்டிருக்கும்போத அதிக தூசி இருப்பதோடு அதுவே புல் வெளியில் குறைந்த அளவே தூசி இருக்கும். இந்த நிலை சஹாராவில் மாறி வருகிறது. எனவே காலச் சுழற்சியில் சஹாராவும் ஒருநாள் சிக்கிக் கொள்ளும்.

# சுவீடனுக்கே பூச்சாண்டி காட்டிய ஸ்டூர் பார்வால்



சுவீடனின் மிகப் பயங்கர தொடர் கொலையாளி என்று புகழ் பெற்றவர் ஸ்டூர் பார்வால். 30க்கும் அதிகமான கொலைகள் செய்ததாகவும் நரமாமிசம் சாப்பிட்டதாகவும் பயங்கரக் கதைகளை சொன்னார். பொலிஸாரும் அதனை உண்மை என நம்பிவிட்டார்கள். சுவீடன் மக்களுக்கு பார்வால் என்றாலே நடுக்கம் வந்துவிடும் அளவுக்கு ஒவ்வொரு கொலைகளின் கதைகளும் பயங்கரமானது.

இதில் எட்டுக் கொலைகளில் பார்வால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு சிறைக்கும் அனுப்பப்பட்டார். 1994 தொடக்கம் 2001 வரையில் எட்டு நீதிமன்றங்களில் அவரது கொலைகள் நிரூபிக்கப்பட்டன. பார்வாலின் கதைகள் சுவீடனில் பரபரப்புச் செய்திகளாக இருந்தன.

இத்தனைக்கும் பார்வால் ஒரு மனநோயாளி, மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் போதுதான் கொலைகள் பற்றி கதைகள் அளந்தார். எந்தக் கொலைக்கு போதிய ஆதாரங்கள் கூட இல்லை.

எல்லாமே அண்டப் புழுகல் என்று 2008இல் அவரே ஒப்புக்கொண்டார். 2013 ஆம் ஆண்டு தான் அவர் மருத்துவமனையில் இருந்தே வெளியே வந்தார். சுவீடன் நாட்டு மக்கள் அனைவரதும் தலையில் மிளகாய் அரைத்த ஒரே ஆசாமி என்றால் அது ஸ்டூர் பார்வால் தான்.

# எதுவும் தடையில்லை



ஜிம் தோர்ப் அமெரிக்க தடகள வீரர். ஐக்கிய அமெரிக்காவுக்காக ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற முதல் பூர்வக்குடி இவர் தான். ஆனால் 1912 ஒலிம்பிக் போட்டியில் அவர் பங்கேற்கும் நாளைப் பார்த்து யாரோ அவரது காலணிகளை திருடிச் சென்று விட்டார்கள்.

என்ன செய்வது என்று தெரியாமல் குப்பைத் தொட்டியை தேடினால் அங்கே பொருத்தமில்லாத இரு பாதணிகள் தெரிந்தன. அதுவும் பெரிய பாதணிகள். காலில் போட்டால் கழன்று வருகின்றன.

அதனை சரிசெய்ய பல காலுறைகளை அணித்தார். பின்னர் அந்தப் பாதணிகளை போட்டுக்கொண்டு இரு தடகளப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களையும் வென்றார்.



# உயிரைப் பறிக்கும் குளிர்

பூமியிலேயே எம்மால் உயிர்வாழ முடியாத இடங்களும் இருக்கத் தான் செய்கின்றன. சராசரியாக மைனஸ் 1 டிகிரி பாரன்ஹீட் குளிர் கூட தாங்க முடியாதது.

போர்வையின்றி இருந்தால் உயிர் போகும் சாத்தியமும் இருக்கிறது. மைனஸ் 144 டிகிரி பாரன்ஹீட் குளிர் என்றால் எப்படி இருக்கும். இந்த பூமியிலேயே அப்படியான குளிர் பதிவாகி இருக்கிறது. இதுவரை பதிவான ஆகக் குளிரான காலநிலை இதுதான். அன்டார்டிகாவில் 2004 மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த பயங்கர குளிர் பதிவாகி இருக்கிறது. இந்த குளிரில் ஒருசில மூச்சுகளை விட்டால் போதும், உங்களது நுரையீரலில் இரத்தக் கசிவைத் தூண்டி உயிரைப் பறித்துவிடும்.



# உயிர்களை ஆட்டி படைக்கும் பேய்கள்!

(கடந்த வாரத் தொடர்)

தற்செயலாக நடந்தாலும் டெண்டி கண்டுபிடித்தார் என்று தான் சொல்ல வேண்டும். ஓரளவிற்கு, அவரது பொழுதுபோக்கு வேலியால் அவருக்கு உதவியது. பேயை சந்தித்த சிறிது நேரம் கழித்து, விஞ்ஞானி தனது வாளை வீட்டிற்கு எடுத்துச் சென்று வரவிருக்கும் போட்டிக்குத் தயார் செய்தார். திடீரென்று ஒரு வைஸில் கட்டப்பட்ட பிளேடு, யாரோ அதைத் தொடுவது போல் மேலும் மேலும் வலுவாக அதிரத் தொடங்கியன.

வேறு யாராவது அப்படி நினைத்திருக்கலாம். இருப்பினும், இந்த உண்மை அதிர்வு அதிர்வுகளைப் பற்றி சிந்திக்க விஞ்ஞானியைத் தூண்டியது, அவை ஒலி அலைகளால் ஏற்படும் அதிர்வுகளைப் போலவே இருக்கும். உதாரணமாக, உரத்த இசையின் போது, அலுமாரியில் உள்ள உணவுகள் சத்தம் போட ஆரம்பிக்கும். இருப்பினும், விந்தை போதும், ஆய்வகத்தில் அமைதி நிலவியது. விஞ்ஞானி உடனடியாக சிறப்பு உபகரணங்களின் உதவியுடன் ஒலி பின்னணியை அளந்தார். இங்கே அறையில் ஒரு நம்பமுடியாத சத்தம் இருந்தது என்று மாறியது, ஆனால் அலைகள் குறைந்த அதிர்வெண் கொண்டதால் அது கேட்கவில்லை, இது கேட்க முடியாது.



மேலும் அது சாதாரண அகச்சிவப்பு. ஒலியின் மூலத்திற்கான ஒரு சிறிய தேடலுக்குப் பிறகு, அவர் அதைக் கண்டுபிடித்தார், அது சமீபத்தில் நிறுவப்பட்ட ஏர் கண்டிஷனிங் விசிறி. விஞ்ஞானி அதை அணைத்த பிறகு, "ஆவி" மறைந்து, வாள் அதிர்வதை நிறுத்தியது.

இன்ஃப்ராசவுண்ட் என்பது கணிசமான எண்ணிக்கையிலான ஆச்சரியங்களைக் கொண்ட ஒரு விஷயம் என்று சொல்வதும் மதிப்பு.

பல தசாப்தங்களாக, மாலுமிகள் "பறக்கும் டச்சுக்காரர்களின்" மர்மத்தால் வேட்டையாடப் பட்டார்கள் கப்பல்கள் ஒரு குழு இல்லாமல் கடலில் அலைந்து திரிந்தன. ஆனால் அதே நேரத்தில், கப்பல்கள் சரியான வரிசையில் இருந்தன, ஆனால் மாலுமிகள் எங்கே சென்றார்கள்? கடைசி "பறக்கும் டச்சுக்காரர்" ஒரு சிறந்த ஸ்கூனர் "மரியா செலஸ்டே", இது ஒருமுறை கடலில் மற்றொரு கப்பலால் கவனிக்கப்பட்டது.



பேய்கள் ஸ்கூனரை அணுகுகின்றனவா, பின்னர் கப்பலில் இறங்குகின்றனவா, மற்ற கப்பலின் மாலுமிகளால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை: கப்பலின் காலியில் இன்னும் சூடான உணவு இருந்தது, கேப்டன் பயன்படுத்திய மை இதழில் இன்னும் உலரவில்லை, அங்கேயும் யாரும் இல்லை.

அனைத்தும் காணாமல் போய்விட்டன. பல ஆண்டுகளாக, இந்த கதை இறுதியாக அவிழ்க்கப்படும் வரை மக்களை வேட்டையாடியது. அது மாறியது போல், குற்றவாளி இன்ஃப்ராசவுண்ட், இது 7 ஹெர்ட்ஸ் அதிர்வெண் கொண்டது, இது சில நிபந்தனைகளின் கீழ், கடல் அலைகளால் நேரடியாக உருவாக்கப்படுகிறது.

மனிதர்களில், இந்த ஒலி கற்பனை செய்ய முடியாத திகில் உணர்வை ஏற்படுத்தும். பெரும்பாலும் மக்கள் பைத்தியம் பிடிக்கலாம் மற்றும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள கடலில் தூக்கி எறியப்படுகிறார்கள்.

இன்ஃப்ராசவுண்டிற்கும் அவரது கனவுக்கும் தொடர்பு உள்ளதா என்பதைக் கண்டறிய விஞ்ஞானி முடிவு செய்தார். ஆய்வகத்தில் இன்ஃப்ராசவுண்டின் அதிர்வெண்ணின் அளவீடு 18.98 ஹெர்ட்ஸ் கொடுத்தது, இது நடைமுறையில் மனித கண் பார்வை எதிரொலிக்கத் தொடங்கும் போது அதிர்வெண்ணுடன் ஒத்துள்ளது. இதன் அடிப்படையில், ஒலி அலைகள் டெண்டியின் கண் இமைகள் அதிர்வுகளை ஏற்படுத்தியன, இதனால் காட்சி மாயை ஏற்பட்டது, அதாவது உண்மையில் இல்லாத ஒரு உருவத்தைப் பார்த்தார்.

சாதாரண நிலைமைகளின் கீழ், குறைந்த அதிர்வெண் கொண்ட அலைகள் அடிக்கடி உருவாகலாம் என்பதை மேலும் ஆராய்ச்சி நிரூபித்தது.

எடுத்துக்காட்டாக, கோபுரங்கள் அல்லது புகைபோக்கிகள் மீது மோதும் காற்றின் வலுவான காற்றுகளால் இன்ஃப்ராசவுண்ட் உருவாக்கப்படலாம். பெரும்பாலும், இத்தகைய ஒலி அலைகள் நேரடி சுரங்கப்பாதை வடிவங்களைக் கொண்ட நீண்ட தாழ்வாரங்களில் ஒலிக்கலாம். இந்த காரணத்திற்காக, பழைய அரண்மனைகளில் இருக்கும் துல்லியமான வகையான தாழ்வாரங்களில் மக்கள் அடிக்கடி பேய்களை சந்திக்கிறார்கள் என்பதில் தற்செயலான எதுவும் இல்லை.

விக் டெண்டி தனது ஆராய்ச்சி முடிவுகளை சொசைட்டி ஃபார் பிசிகல் ரிசர்ச் சேர்ந்த அறிவியல் இதழ் ஒன்றில் வெளியிட்டார். இந்த சமூகம் 1822 இல் நிறுவப்பட்டது மற்றும் சித்த மருத்துவம் மற்றும் இயற்கை அறிவியலில் பிரிட்டிஷ் நிபுணர்களை ஒன்றிணைக்கிறது. அமானுஷ்ய நிகழ்வுகளுக்கு நியாயமான விளக்கத்தைக் கண்டுபிடிப்பதே இந்தச் சமூகத்தின் பணி. எனவே, "பேய் வேட்டை" வல்லுநர்கள் மிகுந்த ஆர்வத்துடன் டெண்டியின் யோசனைகளை ஆதரித்ததில் ஆச்சரியப்பட வேண்டாம். எனவே, டோனி கார்னெல் என்ற மிகவும் பிரபலமான சித்த மருத்துவ நிபுணர்களில் ஒருவர், இந்த யோசனைகளுக்கு நன்றி, கணிசமான எண்ணிக்கையிலான மர்மமான நிகழ்வுகளை விளக்க முடியும் என்று நம்புகிறார்.

நாம் மற்ற விஞ்ஞானிகளைப் பற்றி பேசினால், அவர்கள் இந்த கோட்பாட்டை கேள்விக்குள்ளாக்குகிறார்கள். மனித உடலில் அகச்சிவப்பு அலைகளின் தாக்கத்தை நேரடியாக ஆய்வு செய்யும் இயற்பியலாளர்கள், சோதனைகளில் நேரடியாக ஈடுபடுபவர்கள் கணிசமான சோர்வு, காதுகள் அல்லது கண்களில் அதிக அழுத்தம் இருப்பதாக புகார் கூறுகின்றனர், ஆனால் மாயத்தோற்றங்கள், குறிப்பாக பேய்களின் வடிவத்தில், எதுவும் இல்லை.

அவை கவனிக்கப்பட்டன.. ஓட்டுநர்களுக்கு முற்றிலும் ஒப்டிகல் மாயை இல்லை, மேலும் கார் அதிக வேகத்தில் காற்று எதிர்ப்பைக் கடக்கும் தருணத்தில், கேபினுக்குள் உள்ள இன்ஃப்ராசவுண்டின் அளவு மிக அதிகமாக உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.நாங்கள் சொன்னது போல், பேய்களைப் பற்றி நிறைய கோட்பாடுகள் உள்ளன.

உதாரணமாக, மாஸ்கோ பொலிடெக்னிக் அருங்காட்சியகத்தின் தகவல் தொழில்நுட்பத் துறையின் தலைவரான விளாடிமிர் விட்விட்ஸ்கியின் கோட்பாட்டை எடுத்துக் கொள்வோம். (தொடரும்)

# யாழில் தமிழ் சங்கு கலை இலக்கிய விருது விழா





















தமிழ் சங்கு கலை இலக்கிய விருது விழா அண்மையில் யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. கலை இலக்கிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலர் க. மகேசன், புரவலர் ஹாசிம் உமர், சிறப்பு விருந்தினர்களாக தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், ஊடக ஆளுமை ஏ.பி. மதனவாசன், திரைப்பட இயக்குனர் ஈழவாணி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். பூவரசி வெளியீட்டின் 'சிறுவர் உரிமைகள்' எனும் நூல் வெளியீட்டு விழாவும், ஈழவாணியின் இயக்கத்தில் வெளிவரவுள்ள 'மூக்குத்தி பூக்கள்' திரைப்படத்தின் முன்னோட்டமும் வெளியிடப்பட்டன.

**(படங்கள்: யாழ்.விசேட நிருபர்)**

# வவுனியாவில் சிறப்பாக நடைபெற்ற மூன்று நூல்களின் வெளியீட்டுவிழா







வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் இளையதம்பி தருமபாலன் தொகுத்த மூன்று நூல்கள் அண்மையில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டன. தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராசா கலந்துகொண்டார். வரவேற்புரையினை திருமதி சி.குமாரதேவியும் வாழ்த்துரையினை சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்களும் நூல்களின் அறிமுகத்தை கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமாரும் நிகழ்த்த வேப்பங்குளம் ஞானவைரவர் ஆலய அறங்காவலர் பொ.நாகேந்திரம் நூல்களின் முதற்பிரதிகளைப் பெற்றுக்கொண்டார். இங்கு (சைவசமய ஆலய வழிபாட்டு அமுதம்) எஸ்.எஸ்.வாசன், (நாயன்மார்களின் வரலாறும் வழிபாடும்)கி.உதயகுமார், (திருவாசகம்) திருமதி. அனுஷா மதியழகன் ஆகியோர் உரையாற்றினர். ஏற்புரையினையும் நன்றியுரையினையும் நூல்களினாசிரியர் இ.தர்மபாலன் நிகழ்த்தினார்.



ஏன் நிச்சயதார்த்தை பாத்ரூமில் வைச்சிக்கலாம்னு சொல்லுறீங்க?

பெண்ணை பாடச் சொல்லுவீங்க... பெண்ணுக்கு பாத்ரூமிலதான் பாட வரும்...அதுதான்.



என்னங்க இன்னிக்கு என்னோட சமையல்! சாப்பிட வாங்க.
கொஞ்சம் இரு சாமி கும்பிட்டு வந்திடுறன்



என் மனைவிக்கு ஞாபக மறதி அதிகம்
ஏன் என்ன செஞ்சாங்க

நேத்து அவ அடிச்சிட்டு இன்னைக்கு தலையில என்ன காயம் ன்னு கேட்கிறா



மன்னா துரோகிகள் எம்மை கழுத்தறுத்து விட்டார்கள்.
என்ன சொல்லுகிறீர்கள் அமைச்சரே

நான் கொண்டு வந்த கொடியில் யாரோ சிவப்பு வண்ணம் பூசி விட்டார்கள்.






இங்க வாடகைக்கு வீடு கிடைக்குமா?
மனைவியோட வேணுமா...? மனைவி இல்லாம் வேணுமா?



தம்பி உனக்கு வெண்டிக்கா பிடிக்குமா, கத்திரிக்கா பிடிக்குமா, முருங்கக்கா பிடிக்குமா?

எனக்கு அனுஷ்கா தான் பிடிக்கும்.



டொக்டர் Gas புரோப்ளத்துக்கு போய் எனக்கு ஒப்ரேசன் பண்ண சொல்லுறீங்களே...?

என்ன பண்ணுறது எனக்கு Cash ப்ராப்ளம்...



இந்த வயசில விவாகரத்து நோட்டீஸ் விடுவேன்னு மிரட்டுறீயே, உனக்காக நல்லா இருக்கா?

நீங்க மட்டும் அறுபதாம் கல்யாணத்துக்கு சீர்வரிசை கேக்கிறது நல்லவா இருக்கு?



டொக்டர் என் பையன் ஒரு ரூபாயை முழுங்கிட்டான்

இதுக்கே இப்படி கவலைப்படுறீங்களே....ஏன் பையன் என் சொத்தையே முழுங்கிட்டான்.



சிங்கப்பூர் சாரி என்று சொல்லுறீங்க இலங்கை லேபள் ஒட்டி இருக்கே.?

சொரி மெடம் அவசரத்துல பையன் மாத்தி ஒட்டியிருப்பான்



நடிகையோட கட்சி என்பது சரியாத்தான் இருக்கு.
எப்படி சொல்றே?

மகளிர் அணி தலைவி பதவிக்கு மேக்கப் டெஸ்ட் நடத்துறாங்களே?



அம்மி மிதிச்சு, அருந்தி பாக்கச் சொன்னா மாப்பிள்ள ஏன் பக்கத்தில நிற்கிற பொண்ண இந்தப் பார்வை பாக்கிறார்?

அந்த பொண்ணு பெயர் அருந்ததியாம்...அதுதான்

# கவிதைகளை கண்களை போல் பாதுகாக்கின்றேன்!

## கவிஞர் அருளானந்தம் பிரகாஷ்

**காதல், வாழ்க்கை, இயற்கை, நட்பு, அம்மா, பிரிவு, அரசியல், அழகு, வலி போன்ற சுமார் 500 இற்கும் மேற்பட்ட தலைப்பில் ஆழமான கருத்துகள் செறிந்த கவிதைகளை இவர் எழுதி வருகிறார். இவரது கவிதைகள் வாராந்தம் வெளிவரும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகி வருகின்றது, இவரின் கவிதைகள் சில இணையதளங்களிலும் வெளிவந்த வண்ணமுள்ளன. தொடர்ந்து கவிதை எழுதும் அருளானந்தம் பிரகாஷை நேர்காணல் செய்த போது.......**





**வணக்கம் முதலில் உங்களை பற்றி கூறுங்கள்...**

எனது பெயர் பிரகாஷ் எனது பிறப்பிடம் நுவரெலியா மாவட்டத்தில் கந்தப்பளை பிரிவிற்கு உட்பட்ட சிறிய கிராம தேயிலை மலை தோட்டத்தில் வசிக்கின்றேன். எனது பெற்றோர்கள் அருளானந்தம், யோகேஷ்வரி எனது ஆரம்ப கல்வியை கந்தபளை தமிழ் வித்தியாலயத்திலும், உயர் நிலை கல்வியை நுவரெலியா புனித சவேரியார் கல்லூரியிலும் கற்றேன் இப்போது நான் நுவரெலியா பிரதான நகரில் சிறு தொழில் செய்து வருகின்றேன்.

தற்போது எனது குடும்பத்தவர்களுடன் நுவரெலியா ஹாலிஎலிய பகுதியில் வாழ்ந்து வருகின்றேன்.

**கவிதைத்துறையில் உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது ?**

சிறு வயதில் இருந்தே ஆர்வம் இருந்தது. வானொலியில் கவிதை கேட்பது, பத்திரிகையில் வரும் கவிதைகளை வாசிப்பது, பாடசாலை காலங்களில் எனது பாடக்கொப்பிகளின் பின் பக்கத்தில் கவிதைகள் எழுதி வைத்திருப்பது ஆகியவை மூலம் ஆர்வம் ஏற்பட்டது. ஒரு தடவை எங்கள் தமிழ் ஆசிரியர் குபேரன் என் பாட கொப்பியில் இருந்த கவிதையை வாசித்து என்னை பாராட்டி இன்னும் நீ கவிதை எழுது என்று ஆர்வம் காட்டினார். அதுவே என்னை பத்திரிகைகளில் எழுதத் தூண்டியது, மேலும் நான் எழுதும் கவிதைகளுக்கு கிடைக்கும் சாதகமான விமர்சனங்களே என்னைத் தொடர்ந்து கவிதை எழுதத் தூண்டியது எனலாம்.

**இத்துறையில் தொடர்ந்து பயணிக்க நீங்கள் வேறு எவ்வாறான முயற்சி எடுத்து வருகின்றீர்கள்?**

வாரம் வாரம் 5 பத்திரிகைகளுக்கு கவிதை எழுதுகிறேன். வானொலிக்கும் கவிதை அனுப்புகிறேன். எனது கவிதை புத்தகமாக வெளியிட முயற்சி செய்கின்றேன். ஆனால் தற்போது நாட்டில் உள்ள பொருளாதார சிக்கல்கள் காரணமாக சில பத்திரிகைகள் அச்சிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இருந்தும் நான் கவிதை எழுதுவதை எனது உயிருள்ளவரை நிறுத்தப் போவதில்லை ஆக எழுதிய கவிதைளை கண்களை போல் பாதுகாக்கின்றேன்

**உங்களுக்கும் கவிதைக்கும் இடையிலான தொடர்பு எத்தகையது ?**

நான் எழுதும் கவிதைகளை நண்பன் எனலாம். காரணம் எந்நேரமும் எனக்கு ஆறுதல் தரும். என்னை சுற்றியுள்ள அனைத்துமே எனக்கு கவிதை தலைப்பாக நினைக்கிறேன். கவிதைக்கும் எனக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்புள்ளது.

சோர்ந்து மனமுடைந்து வேதனைப்படும் போதும் எனக்கு மருந்து கவிதைதான்.

எனது பேனைக்கும் கொப்பிக்கும் இடையில் உள்ள உறவைப் போல எனக்கும் கவிதைக்குமான தொடர்பு மிக நெருங்கியது.

**தொடர்ந்து கவிதை எழுதி நீங்கள் பெற்றுக்கொண்ட கௌரவங்கள் , விருதுகள் ?**

பாடசாலை காலங்களில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் அதிகமான சான்றிதழ்கள் சிறந்த கவிதைக்கான நினைவு சின்னங்கள் வழங்கப்பட்டன.

விருதுகள் எதுவும் கிட்டியதில்லை. ஆசிரியர் நண்பர்களின் பாராட்டு எனக்கு கிடைத்த பரிசு என்று நான் கருதுகிறேன்.

**உங்கள் கவிதைகள் அடங்கிய நூல்கள் எதுவும் உண்டா?**

ஆம். 25 பக்கங்கள் கொண்ட "மலையக சாரல்" என்ற பெயரில் கவிதை தொகுப்பு விரைவில் வெளிவரவுள்ளது.

இதற்கான வேலைத்திட்டங்கள் 100% இற்கு 50% சதவிகிதம் முடிவு பெற்றுள்ளது. இதற்கான வெளியீட்டு நிகழ்வொன்றைநுவரெலியா நகர மண்டபத்தில் நடத்தவும் திட்டமிட்டுள்ளேன்

**தொடர்ந்து கவிதை எழுத உங்களை தூண்டியது எது ?**

எனது நண்பன் நிதர்ஷன் அவனுக்கா கவிதைகள் எழுத சொல்லி அதிகமாக தூண்டுவான் நான் எழுதும் கவிதைகளை எனக்கு சாதகமாக அழகாக விமர்சனம் செய்வது கவிதை எழுத தூண்டுதலாக இருந்தது என்னலாம் மற்றும் எப்போதும் எனது அன்பான மனைவி ரோகிணி அனைத்து நேரங்களிலும், வெற்றியிலும் பாராட்டி ஊக்கம் தருவதும் தூண்டுதலாக உள்ளது .

> நான் எழுதும் கவிதைகளை நண்பன் எனலாம் காரணம் எந்நேரமும் எனக்கு ஆறுதல் தரும். என்னை சுற்றியுள்ள அனைத்தையும் கவிதை தலைப்பாக நினைக்கிறேன். கவிதைக்கும். எனக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்புள்ளது. சோர்ந்து மனமுடைந்து வேதனைப்படும் போதும் எனக்கு மருந்து கவிதைதான்.

**பாடசாலை காலத்தில் கவிதை, எழுத்துத்துறை மீதான ஆர்வம் எந்த மட்டத்தில் இருந்தது ?**

பாடசாலை காலங்களில் பல்வேறு வகையான கலை, கலாசார நிகழ்ச்சிகளின் போதும், மத்திய மாகாண தமிழ்த்தினப் போட்டிகளின்போது பாடசாலைக்கிடையில் கவிதையில் கிடைத்த வெற்றி என்னை தொடர்ந்து ஊக்குவித்தது , மற்றும் எனது நண்பர்கள் சில தலைப்புகள் கொடுத்து கவிதை எழுத தூண்டுவார்கள் அது எனக்கும் கவிதைக்கும் உள்ள ஈர்ப்பையும் ஊக்குவிப்பையும் உண்டாக்கியது எனலாம் .

**நீங்கள் எமது வாசகர்களுக்கு கூறுவது என்ன ?**

என்னை பொறுத்த வகையில் எல்லோரும் பல்வேறு துறையிலும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். எனினும், இளையவர்கள் மத்தியில் கவித்துறையில் ஆர்வம் மந்தநிலையில் உள்ளதை பார்க்க முடிகின்றது.

இதனை மாற்றியமைக்க சிறு வயதில் இருந்து செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் இதற்கு பாடசாலை காலம் சிறந்தது எனலாம், கவிதை எழுதும் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களது வளர்ச்சிக்கும் வாய்ப்பு வழங்கி உறுதுணையாக நிற்க வேண்டியது அனைவரதும் கடமையாகும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நேர்கண்டவர்
செ.திவாகரன் ...
நானுஓயா, டெஸ்போட்

# கொஞ்சும் தமிழால் நெஞ்சம் கவரும் ஜனனி





சிறிய வயதில் இருந்தே ஜனனிக்கு சினிமா மீது ஆசை. கல்லூரி படிப்பை முடித்த பிறகு, சினிமாவில் வாய்ப்பு தேடியுள்ளார். ஆனால் கிடைக்கவில்லை.

விஜய் டிவியில் பிக்பொஸ் நிகழ்ச்சி கடந்த 2017 முதல் ஒளிபரப்பாகி வருகிறது. இதுவரை 5 சீசன்கள் நடந்து முடிந்துள்ளன. ஒவ்வொரு சீசனுமே எப்போதுமே டிஆர்பி ரேட்டிங்கில் முதலிடத்தை பெறத் தவறுவதில்லை. குறிப்பாக வார நாட்களில் கமல்ஹாசன் தொகுத்து வழங்குவதை பார்க்கவே தமிழகத்தில் ஒரு பெருங்கூட்டமே உள்ளது.

முக்கியமாக பிக்பொஸ் நிகழ்ச்சி, அதில் பங்கேற்கும் போட்டியாளர்களுக்கு மட்டுமல்லாமல், பல பல யூடியூபர்களுக்கும், மீம் கிரியேட்டர்களுக்கும் இலவசமாக கன்டென்ட் கொடுத்து அவர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்தி வருகிறது.

அந்தவகையில் பிக்பொஸ் சீசன் 6, அக்டோபர் 9ஆம் திகதி தொடங்கியது. அதில் தனது கொஞ்சும் இலங்கைத் தமிழால் ஆரம்பத்திலே பல ரசிகர்களை கவர்ந்தவர் ஜனனி குணசீலன்.

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பிறந்த ஜனனிக்கு இப்போது 21 வயதாகிறது.

சிறிய வயதில் இருந்தே ஜனனிக்கு சினிமா மீது ஆசை. கல்லூரி படிப்பை முடித்த பிறகு, சினிமாவில் வாய்ப்பு தேடியுள்ளார். ஆனால் கிடைக்கவில்லை. பிறகு, ஊடகத் துறையில் செய்தி வாசிப்பாளராக தனது பயணத்தை தொடங்கி உள்ளார்.

இலங்கையின் ஐபிசி தமிழ் டிவி சேனலின் உணவு மற்றும் ஆரோக்கியம் சம்பந்தமான பல நிகழ்ச்சிகளை ஜனனி தொகுத்து வழங்கினார். ஸ்ரீலங்கா, கெப்பிட்டல் டிவியில் விஜே ஆகவும் இருந்திருக்கிறார். மொடலிங் மீது ஆர்வம் கொண்ட ஜனனி, இதுவரை 10க்கும் மேற்பட்ட விளம்பரங்களில் நடித்து உள்ளார்.

ஜனனிக்கு பாரம்பரிய உடை அணிவது பிடிக்கும்.

அதேபோல் கிளாசிக்கல் டான்சிலும் இவருக்கு அதீத விருப்பம். இப்படி மல்டி டேலண்டட் ஆக இருக்கும் ஜனனி ஒரு யூடியூபர், வளர்ந்து வரும் இன்ஃபுளுயன்சரும் கூட.













# செயல் விளைவால் முடிவுகள் எடுத்து நட

நடந்தவை எல்லாம்
தவறு என்று சொல்ல
காலம் அதையும் பார்
பதிவு செய்து கொள்ளும்.

வரலாற்றில் உன் தவறு
நன்றே தெரியும் அறிவாயா?
வெள்ளிடை மலையாக தான்
உண்மைகள் அறியும் உலகு.

நெருக்காத வரை அது
நொருங்காது உண்மை அறி.
துன்புறுத்தாத வரை நாயும்
வளர்த்த வரை கடிக்காது.

பிடிக்கும் வரை வரும்
நித்தம் தான் வெறுப்பு.
பொறுப்பு இல்லாத போது
பொறுமை தனை மீற வைக்கும்.

நல்லவர் எல்லாம்
நீண்ட நேரம் இருக்கார்.
பொறுமையோடு தினமிங்கே!
எல்லை மீறிப் போகலாம்.

நெறி மாறி நடந்து
கொடுத்த துயர் திரும்பினால்
கொடுத்ததை எல்லாம் மீள
பெற்றிடும் நிலை வந்திடும்.

விதைத்த விதை நாளை
காயாகி வந்தால் விதையாகும்.
வலிகளிங்கே மாறிடாது
மீண்டு வந்தால் தாங்குமா?

திருந்திடும் வழிகள் நீ
கண்டுமங்கே அடைப்பதோ?
திமிர் கொண்டு பாய்ந்து
துயர் கொடுத்து சிரிப்பாயோ?

வளமாக வாழ்ந்த நிலம்
கலைத்து சிதைப்பதால்
சிரிப்பு எப்படி கொள்வாரோ?
உன் நிலம் என பார் புரியும்.

மறைந்தவை மீண்டும்
நினைவில் வருவதை
தடுத்திட நினைப்பதேனோ?
உணர்வை கொல்வாயோ?

உரிமைகள் மறுத்து
உறுமிக் கொள்வதால்
என்னதான் நடந்திடும்.
உன் எண்ணப்படி சொல்.

தடயங்களை அழித்து
ஆனந்தம் கொண்டால்
பகைமை வந்து ஒரு நாள்
ஆடும் பார் தாண்டவம்.

எல்லா வழியும் அடைக்க
எல்லைகள் நகர்ந்து போகும்.
நின்று பேசிடும் நேரம்
கடந்து விட்டால் இழந்து போகும்.

மனிதர் என்று நீ
வாழ வந்தால் பார்
மனிதம் என்ற உணர்வும்
கூட வேண்டும் கேள்.

கொடுத்து உண்டு வாழும்
வழியும் இருக்கும் போது
கெடுத்து உண்டு வாழும்
நிலையும் ஏனோ வேண்டும்.

நன்மை செய்து கடந்தால்
தீமை கண்டு கொதித்தால்
வெறுத்திடும் நிலையும்
இல்லை என்றும் பார்.

உன்னை நீ நேசித்தால்
உன்னில் நீ நம்பிக்கை
கொண்டு நடந்து விட்டால்
தவறுகளை தடுத்திடுவாய்.

அடுத்தவர் மனதின்
உணர்வை கண்டு
மதிப்பதா மிதிப்பதா
என்று கொள்வாய் முடிவு.

எல்லாம் இங்கே பார்
செயல் விளைவுகள் வழியே!
முடிவுகள் கொண்டு நட.
மகிழ்ந்திடும் சூழல் வந்திடும்.

அன்புடன் நதுநசி

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**ஆர் .எம்.புஹாரி.**
**புத்தளம்**

கேள்வி: ஒரு படத்திற்கு பாடல் எழுதவந்த கவிஞர் வாலியிடம்" இந்த படத்திற்கு வித்தியாசமான ஒரு பாடலை எழுதினால் எனது கழுத்தில் உள்ள மாலையையும் விரலில் உள்ள மோதிரத்தையும் கழற்றி தருவேன் என்று இசை அமைப் பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி சொன்னாராமே உண்மையா...அப்படி எழுதப்பட்ட பாடல் எது என்று தெரியுமா?.

பதில்:உண்மைதான்.'தெவத் தாய்'என்ற படத்திற்கு பாடல் எழுதுவதற்கு எம்.ஜி.ஆர்.கவிஞர் வாலிக்கு வாய்ப்பு கொடுத்திருந் தார்.

அந்த படத்திற்கு வாலி பாடல் எழுத வந்தபோது தான் நீங்கள் சொன்ன துபோல் வாலயிடம் எம். எஸ்.வி.சொன்னார்.அந்த சவாலை ஏற்றுக்கொண்ட வலியும் சில நிமிடங்களி லேயே பாடலை எழுதி அவரி டம் கொடுத்தார்.

பாடல் வரிகளைப் பார்த்ததும் அசந்து போய் விட்டார் எம.எஸ். வி.உண்மையில் அந்த பாடல் வரிகள் எல்லாம் வித்தியாசமா கவே இருந்தது.உடனே மாலை யையும் மோதிரத்தையும் கழற்றி வாலியிடம் கொடுத்து விட்ட அவரைப் பாராட்டினார்.ஆனாலும் வாலி அவற்றை ஏற்றுக் கொள்ள வில்லை."அதை நீங்களே வவத் துக் கொள்ளுங்கள்!" என்று சொன்னாராம்.அப்படி வித்தியா சமாக எழுதப்பட்ட பாடல் எது தெரியுமா?

"நான் காற்று வாங்க போனேன்!
"ஒரு கவிதை வாங்கி வந்தேன்!
அதை கேட்டு வாங்கி போனாள்
அந்த
கன்னி என்னவானாள்!

**ஆர்.ராஜன்**
**கலஹா.**

கேள்வி: எம்.எஸ். விஸ்வநாதனும் ஆர். ராமமூர்த்தியும் இணைந்து இறுதியாக இசை அமைத்த திரைப்படம் எது?

பதில்:மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் இணைந்து நடித்த 'ஆயிரத்தில் ஒருவன்' திரைப் படம்தான் அவர்கள் இருவரும் இணைந்து இறுதியாக இசை அமைத்த திரைப்படம்.



**எம்.மாகிரட்**
**எலபடகம.**

கேள்வி: லொஸ்லியா இயக்குநராகப் போகிறாராம்... உண்மையா..?

பதில்: பிக்பொஸ் நிகழ்ச்சியில் போட்டி யாளராக பங்குபற்றி சின்னத்திரை ரசிகர்களை தன்னுடைய வசீகரமான புன்னகையால் கவர்ந்திருப்பவர் லொஸ்லியா. அதேபோல் 'பிரண்ட்ஷிப்' எனும் படத்தின்மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். வேறு சில படங்களிலும் நடந்துவரும் லொஸ்லியா, சமூக வலைதளம் பக்கங்களில் தொடர்ச்சியாக தன்னுடைய கவர்ச்சியான படங்களைப் பதிவிட்டு ரசிகர்களை உற்சாகபடுத்தி வருகிறார். தற்போது அவர் இயக்குநராக ஒரு படத்தில் பணியாற்றி வருவதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. இது தொடர்பாக விசாரிக்கையில்,

"இயக்குநர் சத்திய மூர்த்தி இயக்கத்தில் தயாரகிவரும் பெயரிடப்படாத படத்தில் அவர் திரைப் படத்தை இயக்கும் இயக்குநர் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்" எனத் தெரிந்தது. இது தொடர்பாக லொஸ்லியா கூறும்போது

"இந்த திரைப்படத்தில் நான் எனது நண்பர்களுடன் சேர்ந்து அமானுஷ்ய சம்பவங்களை நேரடியாக படமாக்க விரும்பும் கதாபாத்திரத்தில் நடிதிருக்கிறேன் இந்தப்படத்தின் என்னுடன் நடிகர் பிரானேஷ் நடிகை அவந்திகா ஆகியோர் நடிக்கிறார்கள். இந்தப் படத்தில் மாற்றுத் திறனாளியாக நடிகை ஷாஷ்வி நடித்திருக்கிறார். கதைப்படி அவர் மர்மமான முறையில் இறந்து விடுகிறார். ஆனால் அவருடன் பொருத்தப்பட்ட செயற்கைக் கையில் அவரது ஆன்மா அடைக்கலமாகிறது. இதற்கு பிறகு என்ன நடக்கிறது என்பதுதான் சுவாரஸ்யமான திரைக்கதை. இதனை இயக்குநர் விவரித்த விதம் நன்றாக இருந்தது. இந்த படத்தில்தான் நான் இயக்குநராக நடிக்கிறேன். தவிர நிஜத்தில் நான் படத்தை இயக்க வில்லை. அந்தத் தகுதி இன்னும் எனக்கு வரவில்லை"என்றார் லொஸ்லியா.





**ஆர்.சதீஷ்.**
**வெள்ளத்தை.**

கேள்வி: 'தல' அஜித் சினிமா உலகை விட்டு விலகி விட்டாரமே ...உண்மையா...?

பதில்: அப்படித்தான் ஒரு வதந்தி பரவியது. ஆனால் விசாரித்துப் பார்த்ததில் ஒரு விபரம் புரிந்தது.

அதாவது...தன்னுடைய ஒவ்வொரு பட த்திற்கான படப்பிடிப்பும் முழுமையாக முடிவடைந்த பிறகு அஜித் இரண்டு மூன்று வாரங்கள் ஓய்வெடுத்துக்கொள்வது வழக்கம்.

ஆனால் இந்தமுறை 18 மாதங்கள் ஓய் வெடுத்துக் கொள்வதற்கு முடிவு செய்திருக்கிறாராம்... இதனால் எந்த தயாரிப்பாளருக்கும் அவர் கால்ஷிட் கொடுக்க வில்லையாம்.

இதை தவறாகப் புரிந்து கொண்ட சில தயாரிப்பாளர்கள் "தல அஜித் சினிமா உலகில் இருந்து விலகுவதற்கு முடிவு செய்திருக்கிறார் "என்று ஒரு தகவலை கசிய விட்டிருக்கிறார்கள். இதுதான் நடந்திருக்கிறது.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# மம்முட்டி – ஜோதிகா 'காதல் தி கோர்'




**மலையாள** நடிகர் மம்முட்டி ஜோதிகா இணைந்து நடிக்கும் 'காதல் தி கோர்' படத்தின் முதல் பார்வை வெளியாகியுள்ளது.

கடந்த 2021ம் ஆண்டு ஜனவரி15ம் தேதி அமேசான் ப்ரைம் ஓடிடி தளத்தில் வெளியான மலையாள படம் 'தி கிரேட் இந்தியன் கிச்சன்'. விமர்சன ரீதியாக வரவேற்பை பெற்ற இப்படத்தை இயக்குநர் ஜியோ பேபி இயக்கியிருந்தார். இந்தப் படத்தைத் தொடர்ந்து அவர் இயக்கும் புதிய படம் 'காதல் தி கோர்'. நடிகர் மம்முட்டியுடன் நடிகை ஜோதிகா இப்படத்தில் இணைந்து நடிக்கிறார்.

பல ஆண்டு இடைவெளிக்குப் பிறகு நடிகை ஜோதிகா மீண்டும் மலையாள படம் ஒன்றில் நடிப்பது அவரது ரசிகர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. மம்முட்டி தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு கேரள மாநிலம் கொச்சி கோலஞ்சேரி ப்ரூக்சைட் கிளப்பில் நடந்து வருகிறது.

அண்மையில் படபிடிப்பு செட்டுக்கு விருந்தினராக சென்ற நடிகர் சூர்யா படபிடிப்பு குழுவினருடன் ஷுட்டிங் ஸ்பாட்டில் பிரியாணி சாபிட்டுவிட்டு புறப்பட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது.

# வாத்தி




**பிரபல** தெலுங்கு இயக்குனர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் நடிகர் தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் 'வாத்தி'. பிரபல தயாரிப்பாளர் நாக வம்சி தயாரித்து வரும் இப்படம், நேரடியாக தெலுங்கிலும் வெளியாகவுள்ளது. இப்படத்திற்கு தெலுங்கில் 'சார்' என்றும், தமிழில் 'வாத்தி' என்றும் தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது.

சம்யுக்தா மேனன் கதாநாயகியாக நடிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். சமீபத்தில் வெளியான இப்படத்தின் போஸ்டர் மற்றும் டீசர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. இதைத்தொடர்ந்து, இந்தப் படத்தின் முதல் பாடல் 'வா வாத்தி' வருகிற நவம்பர் 10ம் திகதி வெளியாகும் என படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்திருந்தது. இந்நிலையில் அறிவித்தபடி 'வாத்தி' திரைப்படத்தின் முதல் பாடலான 'வா வாத்தி' பாடலின் லிரிக்கல் வீடியோவை படக்குழு வெளியிட்டது. இந்த பாடலை நடிகர் தனுஷ் எழுத பாடகர் ஸ்வேதா மோகன் பாடியுள்ளார்.

காதல் பாடலாக உருவாகியுள்ள இப்பாடல் இணையத்தில் பலராலும் பகிரப்பட்டு வருகிறது. 'வாத்தி' திரைப்படம் வருகிற டிசம்பர் 2ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உடல் பராமரிப்பு குறித்து நடிகை பூனம் பஜ்வா



சேவல், தெனாவட்டு, கச்சேரி ஆரம்பம், போன்ற பல திரைப்படங்களில் நடித்தவர் பூனம் பஜ்வா. தற்போது குருமூர்த்தி என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில் நடிகை பூனம் பஜ்வா அளித்த சிறப்பு பேட்டியை இங்கு காணலாம்

● ***உங்களுடைய தவறான வீடியோ ஒன்று வெளியானது. அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?***

போட்டோ மார்ஃபிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி என் புகைப்படத்தை தவறாகப் பயன்படுத்தி உள்ளார்கள். இதனால் 2 நாட்கள் மிகவும் சங்கடப்பட்டேன். ஆனால் பின் அதை செய்பவர்கள் தான் அதற்காக வருத்தப்படவேண்டும். அந்த வீடியோவில் இருப்பது நான் இல்லை என்று நான் யாருக்கும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. இது குறித்து இன்ஸ்டாகிராம் நிறுவனத்திடம் புகார் அளித்தேன். அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து அந்த புகைப்படங்களை நீக்கி உள்ளனர். எனக்கு மட்டுமில்ல பல நடிகர்களுக்கு இது போன்ற அனுபவங்கள் உள்ளது என்றார்.

● ***உடலை பராமரிப்பது குறித்து நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?***

நடிகர், நடிகைகளைப் பொறுத்தவரையில் உடல் அமைப்பை பராமரிப்பதில் மிகவும் கவனமாக இருப்பார்கள். நானும் எப்பொழுதும் கொஞ்சம் பப்ளியாகத்தான் இருந்துள்ளேன். இதைவிட அதிக பப்ளியாக மாறாமல் இருக்க முயற்சி செய்கிறேன். தனியாக நான் எந்த உடற்பயிற்சியையோ, காஸ்மெட்டிக் பொருட்களையோ ரசிகர்களுக்கு பரிந்துரைக்க மாட்டேன். ஆனால், யோகா செய்யுங்கள் அது உங்களை மேலும் அழகாக்கும். காஸ்மெடிக் பொருட்கள் செய்யாத மேஜிக்கை யோகா செய்யும். சிறிது நேரம் பிராணயாமமும், சூர்ய நமஸ்காரமும் தினமும் செய்கிறேன். இது தான் என்னுடைய ரகசியம் என்றார்.

# அத வீட்டுலதான் கேட்கணும் - ரகுல் ப்ரீத் சிங்



**தமிழில்,** 'தடையறத் தாக்க', 'தீரன் அதிகாரம் ஒன்று', 'தேவ்', 'என்ஜிகே' உள்பட சில படங்களில் நடித்திருப்பவர் ரகுல் ப்ரீத் சிங். இவர், சிவகார்த்திகேயனுடன் நடித்துள்ள 'அயலான்' விரைவில் வெளியாக இருக்கிறது. கமல்ஹாசனுடன் 'இந்தியன் 2' படத்திலும் நடிக்கிறார். இந்தியிலும் நடித்து வரும் அவர், தயாரிப்பாளர் ஜாக்கி பக்னானியை காதலித்து வருகிறார். விரைவில் திருமணம் செய்துகொள்ள இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், "திருமணம் எப்போது?" என்று அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ரகுல், "அதை எங்க வீட்டுலதான் கேட்கணும். அவங்களும் அதையேதான் கேட்கிறாங்க" என்றார்.

# 'தி கேரளா ஸ்டோரி' படத்திற்கு தடை விதிக்க கோரி புகார்



**நடிகர்** சிம்புவின் 'இது நம்ம ஆளு' படத்தில் குத்துப்பாடலுக்கு நடனம் ஆடியவர், நடிகை அடா சர்மா. அதனை தொடர்ந்து தமிழில் 'சார்லி சாப்ளின் 2' என்ற படத்திலும் நடித்திருக்கிறார்.

இவர் தற்போது , 'தி கேரளா ஸ்டோரி' என்ற இந்திப் படத்தில் நடித்து வருகிறார்.இப்படத்தை சுதிப்தோ சென் இயக்கியுள்ளார். இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அந்த படத்தின் டீஸர் வெளியாகி பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. டீஸரில் பர்தா அணிந்து தோன்றும் அடா சர்மா, 'என் பெயர் ஷாலினி உன்னி கிருஷ்ணன். நான் செவிலியராக சேவை செய்ய விரும்பினேன். இப்போது பாத்திமாவாக மதமாற்றம் செய்யப்பட்டு ஆப்கானிஸ்தான் சிறையில், ஐஎஸ் தீவிரவாதியாக முத்திரை குத்தப்பட்டு உள்ளேன். என்னுடன் 32 ஆயிரம் பெண்கள் மதமாற்றம் செய்யப்பட்டு சிரியா மற்றும் ஏமன் பாலைவனங்களில் புதைக்கப்பட்டுள்ளனர்.கேரளாவில், சாதாரணப் பெண்களை தீவிரவாதிகளாக மாற்றும் இந்தக் கொடிய விளையாட்டை தடுக்க யாருமில்லையா? இது என் கதை. 32 ஆயிரம் பெண்களின் கதை' என்று அவர் கூறுகிறார்.



இந்த டீசரில் பொய்யான தகவல்களை உண்மை போல் கூறியுள்ளதாகவும், கேரளாவை தவறாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது என்றும் பத்திரிகையாளர் பி.ஆர். அரவிந்தாக்ஷன் என்பவர் புகார் செய்துள்ளார். மேலும் இப்படத்தை தடை செய்ய வேண்டும் என்று தணிக்கை குழுவிடமும் புகார் அளித்துள்ளார்.


# முதல் நாளில் ரூ.6.32 கோடி வசூலித்த 'யசோதா'



**சமந்தா** நடிப்பில் நேற்று (நவ.11) திரையரங்குகளில் வெளியான 'யசோதா' திரைப்படம் முதல் நாளில் ரூ.6.32 கோடியை வசூலித்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹரி ஹரீஷ் இயக்கத்தில் நடிகை சமந்தா நடித்துள்ள திரைப்படம் 'யசோதா'. பான் இந்தியா முறையில் வெளியான இப்படத்திற்கு மணிஷர்மா இசையமைத்துள்ளார். வரலட்சுமி சரத்குமார், உன்னி முகுந்தன், ராவ் ரமேஷ், முரளி சர்மா, சம்பத் ராஜ் உள்ளிட்டோர் நடித்துள்ள இப்படம் நேற்று (நவம்பர் 11) திரையரங்குகளில் வெளியானது. கலவையான விமர்சனங்களைப்பெற்று வரும் 'யசோதா' வாடகைத்தாய் குறித்து பேசுகிறது. இந்தப் படத்திற்காக நடிகை சமந்தா ஹாலிவுட் சண்டைப் பயிற்சியாளருடன் பயிற்சி எடுக்கும் வீடியோ வெளியாகி வைரலானது.

இந்நிலையில், 40 கோடி ரூபாய் பட்ஜெட்டில் உருவான இப்படம் முதல்நாள ரூ.6.32 கோடி வரை வசூலித்துள்ளதாக படத்தின் தயாரிப்பு நிறுவனம் ட்விட்டர் பக்கத்தில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.



# பல வண்ண டிசைன்களில் புடவைக்கு ஏற்ற பிளவுஸ்!

ஒரே மாதிரியான பிளவுஸ் டிசைன்ஸ் போட யாருக்கு தான் பிடிக்கும். ஒவ்வொரு புடவைக்கும் அதற்கு தகுந்த மாதிரியான பிளவுஸ் டிசைன்களில் போடத்தான் பெண்கள் விரும்புவார்கள். ஆனால் அதனை எப்படி தேர்வு செய்வது என்று குழம்பி விடுவார்கள்

**வலை பிளவுஸ்:** இந்த பிளவுஸ்கள் வலைகள் இருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதனுடன் பாரம்பரியமான வடிவமும் சேர்த்து அமைக்கப்படும். இதில் அதிக எம்ப்ரைண்டரிங் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்த வகையான பிளவுஸ்கள் மிகவும் அழகாக இருக்கும். படர்ந்த தோள்களை உடைய பெண்கள் இதனை தேர்வு செய்யலாம்.

**திருமண பல்லக்கி டிசைன்:** இந்த பிளவுஸ் மூடிய கழுத்து பகுதியோடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது திருமணத்திற்கு ஏற்ற ஒரு வகையாகும். மேலும் இதில் பல எம்ப்ரைடரின் டிசைன்கள் போடப்பட்டிருக்கும். இது மிகவும் அழகான பிளவுஸ் டிசைன்.

**பப் கைகள் கொண்ட பிளவுஸ்:** இந்த வகை பிளவுஸ்கள் பழைய டிசைனாக இருந்தாலும், இன்று இது இளம் வயது பெண்களிடையே பிரபலமாகி வருகின்றது. இவை பார்ப்பதற்கு இளமையான தோற்றத்தை தரும்.

**கைகளில் அதிக வேலைபாடுகள் கொண்ட பிளவுஸ்:** இந்த வகை டிசைன்களில், குறிப்பாக கை பகுதியில் அதிக வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். இவை பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். மேலும் பிளவுஸ்சுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இது ஒரு சிறப்பான தேர்வாக இருக்கும்.

**முட்டிக்கை நீளம் உள்ள பிளவுஸ்:** இந்த வகை பிளவுஸ்கள் 20 30 ஆண்டுகளுக்கு முன் அதிக பிரபலமாக இருந்தது. ஆனால், இன்று இது மீண்டும் பல பெண்களால் விரும்பப்பட்டு, மூகூர்த்த பட்டு புடவைக்கு ஏற்றதாக வடிவமைக்கப்பட்டு அணியப்படுகின்றது. இது நல்ல ஆடம்பரமான தோற்றத்தை தரும்.



# அதுதான் குழந்தை

குழந்தைகளை பரிவோடு பார்த்து பார்த்து வளர்ப்பதில் அம்மக்களின் பங்கு முக்கிய அங்கமாக உள்ளது. தாயின் அன்பு கிடைக்காத குழந்தைகள் முழுமையடைவதில்லை. பேசக்கூட தெரியாத குழந்தையின் அழுகுரலில் எது பசி எது வலி என்பதை ஒரு பிரியமுள்ள தாய் உடனடியாக உணர்கிறாள். இது அவளுக்கு மட்டுமே கிடைத்த தனிப்பட்ட சக்தி.


ஒரு குழந்தை வெறும் குழந்தை மட்டும்தானா. இல்லை. நல்ல மனிதனாக அது வளர வேண்டும் என்றால் அம்மாவின் பங்கு இங்கே அவசியம் தேவை. நீங்கள் ஒரு குழந்தைக்கு தாயாக போகிறீர்கள் அல்லது குழந்தைகளின் தாயாக இருக்கிறீர்கள் என்றால் இந்த பதிவு குழந்தைகளோடு சேர்ந்து நீங்களும் வளர உதவியாக அமையும்,

உங்கள் குழந்தையை அருகில் இருக்கும் வளரும் குழந்தைகளோடு ஒப்பிடாதீர்கள். அதற்கு பதிலாக உங்கள் குழந்தை கொண்டுள்ள நல்ல குணங்களை பாராட்டுங்கள். தவறு செய்கையில் அது தவறு என்பதை அதன் மொழியில் புரிய வையுங்கள்

குழந்தைகள் தவறு செய்ததை நீங்கள் அறிந்தால் நிச்சயம் கண்டிக்க வேண்டும். கண்டு கொள்ளாமல் இருக்க கூடாது. கண்டிப்பு என்பது அதற்கு புரியும் வகையில் கண்டிக்க வேண்டும். அம்மா ஏன் நம்மோடு பேசவில்லை என்பதை அவர்கள் உணர்வது அவசியம்.

இன்றைய தலைமுறைக்கு பிடிவாத குணம் அதிகம் ஆகிவிட்டது. ஒரு பொருளை விரும்பி விட்டால் வாங்கி தந்தே ஆக வேண்டும் என்பார்கள். அந்த நேரங்களில் நீங்கள் அதன் விருப்பத்தை தள்ளி போட வேண்டும். வாங்கி தர மாட்டேன் என்று நீங்களும் பிடிவாதம் பிடிக்காமல் அடுத்த வாரம் வாங்கி தரேன் என்று கூறுங்கள். அந்த நிமிடம் அமைதியாக கேட்கும். அடுத்த நாளே அதை பற்றி மறந்தும் போகும். அதுதான் குழந்தை.





# முகத்தில் எண்ணெய் வழிவதால் பிரச்சினையா

முகத்தில் எண்ணெய் வழிவதால் பொது இடங்களுக்கு செல்லும் போது அவஸ்தைப்படுபவர்களில் நீங்களும் ஒருவரா. இனிமேல் உங்களுக்கு அந்த பிரச்னை இருக்காது.

சுற்றுச்சூழல், உணவுப் பழக்கவழக்கங்கள், மனஅழுத்தம் போன்றவை இதற்கு முக்கிய காரணங்களாக கருதப்படுகிறது. மேலும் பலரும் எண்ணெய் வழிவதை தடுக்க பல்வேறு முகப்பூச்சுக்களை வாங்கி பயன்படுத்துகின்றனர். இவை உண்மையில் சருமம் தொடர்புடைய நோய்களை ஏற்படுத்தும் என்பதே உண்மை.

சரி... முகத்தில் எண்ணெய் வழிவதில் இருந்து இலகுவில் எவ்வாறு விடுபடலாம் என்பது பற்றி தெரிந்து கொள்ளுங்கள். முகத்தில் எண்ணெய் வழியாமல் இருக்க கடைந்த மோரை எடுத்து கொள்ளுங்கள், அவற்றை முகம் மற்றும் கழுத்து பகுதியில் தடவ வேண்டும்.

15 நிமிடம் வரை காத்திருந்த பின்பு வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவினால் முகத்தில் வழியும் எண்ணெய் மறைந்து விடும்.

முகத்தில் எண்ணெய் வழியாமல் இருக்க 1/2 கப் தயிருடன், 1 தே.கரண்டி மஞ்சள் தூள், 1 தே.கரண்டி தேன், 1 தே.கரண்டி எலுமிச்சை சாறு ஆகியவற்றை சேர்த்து நன்கு கலந்து, முகம், கழுத்து, கை, கால்களில் தடவி நன்கு காய வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

இதனால் சருமத்தில் சுரக்கும் அதிகப்படியான எண்ணெய் பசை கட்டுப்படுத்தப்பட்டு, சிறந்த தோற்றத்தைக் கொடுக்கும். இந்த முறையை தொடர்ந்து செய்து வர எண்ணெய் பசை நீங்கும்



# ஆளுமைகளை கௌரவிக்கும் சிவஜோதி ஞாபகார்த்த விருது வழங்கும் விழா

உளடகவியலாளரும் சமூக சேவையாளருமான வ.சிவஜோதியின 51ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 'உறுதிகொண்ட நெஞ்சினாள்' நூல் வெளியீடும் சிவஜோதி ஞாபகார்த்த விருது வழங்கும் விழாவும் இன்று 20.11.2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி திருநகரில் உள்ள லிற்றில் எய்ட் அரங்கில் நடைபெற இருக்கின்றது. லிற்றில் எய்ட் நிறுவனத்தின செயலாளரும் ஆசிரியருமான ப.தயாளன் இந்நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார்.

இந்நிகழ்வு இரண்டு அமர்வுகளாக இடம்பெறவுள்ளது. முதலாவது அமர்வில் லிற்றல் எய்ட் மாணவர்கள் தமிழ் வாழ்த்து பாட, லிற்றில் எய்ட் மாணவி இ. குகப்பிரியா வரவேற்பரையாற்றுவார். முத்துக்குமார குருக்கள் சிவஸ்ரீ மகேஷ்வரநாத சர்மா (பிரதம குரு மீனாட்சி அம்மன் கோயில் ஜெயந்திநகர், கிளிநொச்சி), (பொறுப்பமைய குரு கருணாநிலையம்) எஸ்.கே.டானியல் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள். கிழக்கு மாகாணத்தின் சிரேஷ்ட கலை கலாசார அலுவலர், வி.குணபாலா தலைமையுரை யாற்றுவார். எழுத்தாளர் சி.கருணாகரன் சிறப்புரையாற்றுவார். லிற்றில் எய்ட் மாணவி செல்வி கிறிஸ்ரியனா அஞ்சலிப்பா வழங்க சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரக்குமார் சிவஜோதியின் நினைவுப் பகிர்வை வழங்குவார்.

அமர்வு இரண்டு

செல்வி வர்ஷனா வரதராசா தலைமையுரையாற்றுவார், செல்வி விராஜினி கயாத்திரி இராஜேந்திரன் வெளியீட்டுரையாற்றுவார், முதற் பிரதியை செல்வி அபிலாஷா தேவராஜா பெற்றுக் கொள்வார். உறுதி கொண்ட நெஞ்சினாள் பிரதிபலிக்கும் பெண்ணியம் என்ற தலைப்பில் செல்வி மாதவி உமாசுத சர்மாவும், உறுதிகொண்ட நெஞ்சினாள் பேசும் பெண் கல்வியும் அதன் இன்றைய நிலையும் என்ற தலைப்பில் செல்வி மயூரகா ஸ்ரீகந்தராசாவும், உறுதிகொண்ட நெஞ்சினாள்களின் பெண்கள் தொடர்பான சமூகப் பார்வை என்ற தலைப்பில் நிவேதா சிவராஜா ஆகியோர் உரையாற்றுவார்கள்.



தொடர்ந்து வ.சிவஜோதியின் ஞாபகார்த்த நினைவு விருது வழங்கப்படவுள்ளது. ஏற்புரையை திருமதி ஹ.சிவஜோதி வழங்கவுள்ளார். நன்றியுரையை சி.வயீத்தீஸ்வரன் வழங்குவார்.

எம் தமிழ் சமூக்தில் முன்னுதாரணமான 'உறுதிகொண்ட நெஞ்சினர்'

தமிழர்களின் பூர்வீக பூமியான வடக்கு, கிழக்கு, மலையகப் பிரதேசங்களிலேயே தமிழர்களின் நிலை மோசமடைந்து வருகிறது. இதற்கும் நாங்கள் மற்றையவர்களின் மீது பழியைப்போட்டுக்கொண்டு தப்பிக்கொள்ள முடியாது. எம்மத்தியில் உள்ள உறுதிகொண்ட நெஞ்சினரை அடையாளம் கண்டு அவர்களை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். அதன் மூலம் சமூகத்தில் உள்ள இளையவர்கள் அவர்களைப் பார்த்து பெருமைகொண்டு அவர்கள் போன்ற, அவர்களைக் கடந்த ஆளுமைகளாக வேண்டும். அதனை நோக்காகக் கொண்டு தான் சந்தித்த பத்து முக்கிய பெண் ஆளுமைகளை ஆவணப்படுத்தி உள்ளார் ஹம்சகௌரி சிவஜோதி. 'உறுதிகொண்ட நெஞ்சினாள் ..' என்ற தலைப்பில் பத்து பெண் ஆளுமைகளை ஆவணப்படுத்திய இந்நூல் உள்ளது.

இப்பெண் ஆளுமைகள் பல்துறைசார்ந்த பன்முக ஆளுமைகள். பெண்ணியம் (செல்வி திருச்சந்திரன்), கல்வி (ஜெயா மாணிக்கவாசகர், சசிகலா குகமூர்த்தி, வலன்ரீனா இளங்கோவன்), இலக்கியம் (தாமரைச்செல்வி,), பொறியியல்துறை (பிரேமளா சிவசேகரம்), கலைத் துறை (பார்வதி சிவபாதம், வலன்ரீனா இளங்கோவன்),அரசியல், கலை, இலக்கியம் (கலாலக்ஷ்மி தேவராஜா), விளையாட்டுத் துறை (அகிலத்திருநாயகி சிறிசெயானந்தபவன்) இவர்களோடு பொது வாழ்வில் அரசியலில் ஈடுபட்டு இனவெறியர்களை நேருக்கு நேர் எதிர் கொண்டு போராடியவர் நாகம்மா செல்லமுத்து. இவர்கள் யாரும் சமூகத்தில் இருந்து அந்நியப்பட்டு வாழவில்லை. தங்களையும் சமூகத்தில் ஒருவராகப் பிணைத்துக்கொண்டு தங்களது நாளாந்த வாழ்வியலோடு சமூகத்திற்கான சேவையை வழங்கி வந்தனர் அல்லது வழங்கி வருகின்றனர்.

இன்று இளம் தமிழ் சமூகம் தன்னுடைய தனித்துவத்தை இழந்து போதைப்பொருள் பாவனை, இளவயதுத் திருமணங்கள், கல்வியில் நாட்டமின்மை, சமூக விழிப்புணர்வின்மை போன்ற காரணிகளினால் மிகவும் பின்தள்ளப்பட்டு வருகின்றனர். அதற்குத் தமிழ் சமூகத்தில் முன்னுதாரணங்கள் அருகி வருவதும் ஒரு காரணமாக உள்ளது. நேர்மையற்ற, விவேகமற்ற, சில சமயங்களில் ஒழுக்கமுமற்ற அரசியல்வாதிகளே சமூகத்தினால் பரவாலக அறியப்பட்டவர்களாக உள்ளனர். நேர்மையும் விவேகமும் ஒழுக்கமுடைய தன்னலமற்ற சமூக சேவையாளர்கள் இலைமறை காய்களாகவே உள்ளனர். 'உறுதிகொண்ட நெஞ்சினாள்..' இவ்வாறானவர்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து தமிழ் சமூகத்திற்கு நம்பிக்கையளிக்கின்றது.

இவ்வாறான சமூகம் சார்ந்த நூல்களும் எம்முன்னுள்ள ஆளுமைகளும் வெளிக்கொணரப்பட வேண்டும். நவம்பர் 20 கிளிநொச்சி திருநகரில் காலை 10 மணிமுதல் 12:00 மணிவரை நடைபெறும். இந்நூல் வெளியீட்டில் சமூக அக்கறை கொண்டவர்கள் கலந்து கொண்டு இந்த ஆளுமைகளை கௌரவிப்பது மிக அவசியம்.




## செந்தூர மழலைச் செல்வங்கள்



Asam
Akkaraipattu



Anafa
Irrakkamam



Fathima Iffath
Reeha



நஸ்ஹா ஸைனப்
(நவ்ராஜ் - றிஸ்னியா)



Leena Nimshard Negambo
07/11/2017

## மண் பொம்மைகள்

முதலில் ஒரு பொம்மையாகத்தான்
கையில் வைத்திருந்தான்
அதனிடம் குருதிவாடையில்லாதது
மிகவும் பிடித்திருந்தது இவனுக்கு

ஜடைகள் பின்னியிருந்ததில்
காய்ந்த சருகுப்பூக்களை எடுத்து
சுழற்றுகிறான்
அழுத்திப்பிடித்ததில் நெற்றியிலிருந்த
கிழிசலின் வழியே சிறுபஞ்சு எட்டி நிற்கிறது

அதனின் ஆடைகளேறிய அழுக்கில்
துர்நாற்றமில்லை
முட்டிக்காலில் ஒரு நாயின் பற்கள்
பதிவாயிருந்தது அவ்வளவே

முதுகிலிருந்து விலா எலும்பு வரை
உடைந்திருப்பதில்
கிழிசலிட்ட பச்சை கலர் ரிப்பனொன்றை
உடலின் முழுதும்
சுற்றியணைக்கிறான்

வெயில் கூசச்செய்யுகிற கண்களை
கைநிழலில் மறைத்தவனின் மூளைக்குள் இன்னமும்
அந்த பெண் பாவையை
தன் பிறப்பாகவே கையில் வைத்து
அணைத்துக்கொண்டிருப்பதை

போவோர் வருவோர் பார்த்துக்கொண்டிருக்கட்டும்
எளியோர்கள் கிடத்தப்படுகிற குப்பைத்தொட்டிகளுக்குள்
எல்லா மண்பொம்மைகளும் ஒருநாள் வந்து விழும்

அஸ்மியா நிஸாம்
அக்குறணை

## வழிகாட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்





## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## நிறம் தீட்டுங்கள்



## பன்மையை எழுதுக

| | | |
|---|---|---|
| மீன் | - | ______ |
| பேனா | - | ______ |
| சொல் | - | ______ |
| வாகனம் | - | ______ |
| நாள் | - | ______ |
| பொம்மை | - | ______ |
| புத்தகம் | - | ______ |
| வாக்கியம் | - | ______ |
| மலை | - | ______ |
| கதை | - | ______ |
| பறவை | - | ______ |
| தேனீ | - | ______ |
| பூ | - | ______ |

## இடைவெளியை நிரப்புங்கள்


அ ஆ இ ஈ




____ ம்மா



____ மை



____ லை



______

நான் ரொம்ப பிஸி...



# மத நல்லிணக்க செயற்பாடுகளில் முன் நிற்கும் "மஹ்மூது ஆலிம்"

**1974 இல் மார்க்க கல்வியை காலி அல் மக்கியா அரபுக் கல்லூரியிலும் பின்னர் மூதூர் நத்வதுல் உலமா அரபுக்கல்லூரியிலும் கற்று 'நத்வி' என்ற பட்டத்துடன் மௌலவியாக வெளியேறினார். இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இமாமாக கடமையைச் செய்தவர்.**

சிரித்த முகம், அன்பான பேச்சு யாரைக் கண்டாலும் ஸலாம் உரைக்கும் உளப்பாங்கு கொண்ட ஒருவர் 'மஹ்மூது ஆலிம் ' அவரை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக நேர் காணலுக்காக சந்தித்தபோது; பல்வேறு தகவல்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

முகம்மது தமீம் மஹ்மூது ஆலிம்.

பெரியகிண்ணியாவில் பிறந்து வளர்ந்து சின்னக்கிண்ணியாவில் திருமணம் முடித்தார். உலகக் கல்வி,மார்க்கக் கல்வி இரண்டையும் கற்றவர்.

1974 இல் மார்க்க கல்வியை காலி அல் மக்கியா அரபுக் கல்லூரியிலும் பின்னர் மூதூர் நத்வதுல் உலமா அரபுக்கல்லூரியிலும் கற்று 'நத்வி' என்ற பட்டத்துடன் மௌலவியாக வெளியேறினார்.

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இமாமாக கடமையைச் செய்தவர். குறிப்பாக நிகவெவ கொரவ பொத்தான ஜும்ஆ பள்ளிவாயல், அட்ராவ பள்ளி வாயல், உடுதெனிய மாரஸ்ஸல பள்ளிவாயல், கண்டி யகலதன்ன பள்ளிவாயல், 1983 இல் கிண்ணியா மத்திய பள்ளி வாயல் போன்ற இடங்களில் இமாமாக கடமை செய்துள்ளார்.

1984 இல் மௌலவி ஆசிரியர் நியமனம் தி/ கல்லடி வெட்டுவான் புகாரி நகர் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் இவருக்கு கிடைத்தது. அரபு,இஸ்லாம் போன்ற பாடங்களை கற்பித்தார்.

ஆசிரியர் பயிற்சிக்காக 1987 1988 வரையில் அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சியினை முடித்து வான் எல புஹாரி, கந்தளாய் அத்தாரீக் வித்தியாலயம்,அல் ஹிரா மகா வித்தியாலயம், அல் அக்ஸா கல்லூரி, இறுதியாக அல் அதான் வித்தியாலயம் இப்பாடசாலையில்

இருந்தே 2016ஆம் ஆண்டு ஏழாம் மாதம் இருபதாம் திகதி ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வும் பெற்றார்.

மௌலவியாக கடமை செய்யும் காலத்திலே இவருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தால் ஓதிக் கொடுக்கும் பணியை நிறுத்தவில்லை. றகுமானியா மத்ரஸா ,கந்தளாய் அத்தாரீக் மத்ரஸா, சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியிலும் அரபு கற்பித்து வந்தார்.

கிண்ணியாவின் பல்வேறு பாடசாலைகளில் கடமை செய்தார். இவர் தனது ஓய்வு பெறுகின்ற வேளையில் இறுதியாக ஆசிரியப் பணியின் போது மாணவர்கள் மத்தியில் ஒரு தந்தையாக, நண்பனாக, இரக்கத்திடம் உறைவிடம் தாய்தானே அந்தளவிற்கு பழகியவர்

அத்தோடு சக ஆசிரியர்களின் நன்மதிப்பை பெற்றவராக மஹ்மூது ஆலிம் விளங்கினார்.

மார்க்க கல்விக்காக சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியில் கடமையாற்றி அக்கல்லூரியின் ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து சுமையாவின் வளர்ச்சிக்கு பாடுபட்ட ஆரம்ப கால உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது .

சமூக செயற்பாடுகளில் முக்கிய பங்களிப்புச் செய்கின்ற ஒருவர் அந்த வகையில் ஜம்மிய்யத்துல் உலமா சபை உறுப்பினராக,பள்ளிவாயல் சம்மேளன

நேர்காணல்
ஏ எம் கஸ்புள்ளா...

உறுப்பினராக சூராசபை உறுப்பினராகவும் மத நல்லிணக்க செயற்பாடுகளில் இன்னும் தன்னை அர்ப்பணித்து வருகிறார். அதன் பல்வேறு நிகழ்வுகளில் மதகுரு என்ற வகையில் கலந்து சிறப்பித்து வருகிறார்.

கொரோனா காலங்களில் கிண்ணியா பிரதேச செயலகத்தின் கொரோனா கட்டுப் பாட்டு குழுவினருடன் இணைந்து பிரதேச மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் களச் செயற்பாடுகளில் முன் நின்றார்.

முஸ்லிம்களின் ஜனஸா நல்லடக்கம் செய்யும் விடயங்களில் என்றும் உதவி செய்வதில் அவரைக் காணலாம்.

திருகோணமலையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தினர் வழங்கிய இப்தார் நிகழ்விலும் கலந்து கொண்டு அவர்களுடன் அன்பான உறவுகளை ஆக்கிக் கொண்டவர்.

பலராலும் விரும்பக் கூடிய சமூக செயற்பாடுகளில் ஒரு இளைஞரைப் போல முன்நின்று செய்யும் ஆளுமையுடைய அவருக்கு அல்லாஹ் இன்னும் நல்ல ஆரோக்கியத்தை வழங்கிட பிரார்த்திப்போம்!







தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

## ஔவன் கவிதை

### சொல் / கல் /கறை

முனைப்பிறுகும் சொற்களை
அவர்கள் ஏந்தித் திரிந்தார்கள்


தொண்டையில் இறுகி
வெளிப்படா ஒற்றைச் சொல்லை
வெளியெடுத்திட முடியா
என் அவஸ்தையை எவரும் அறியார்
எவரும் புரியார்

சாந்தியின்
முகங்கொண்டதொரு ரூபம்
என்னில் மிதக்கிறது

என்றாலும்
என் செவிகளில் குருதி பாய
அவர்கள் அடித்துப் போட்ட
ஆயிரம் கற்களில் கறை படிந்திற்று
வேர் நீண்ட காலடிச் சுவட்டில்
மென் ரத்தமூற்றி வளர்த்த செடி
மனமூறி சினமூறி முள் முற்றி
பல்லாயிரம் காதுகளில் சிதைத்திடலா

முடியாதென்னால்
அவர்கள் கொண்டதையும்
சொற்கற்களில் தோயும் கறையை
எந்த மொழி கொண்டு

கழுவிடுவர்
சாந்தியின்
முகங்கொண்டதொரு ரூபம்
என்னில் உறைகிறது




## மனுசால்

முல்லை முஸ்ரிபா



# இருடி; கவிதைகளின் வருடி




கவிதைகள் வாழ்தலின் கண அனுபவங்கள். கண உணர்வுகளின் கூட்டுத் திரட்சியாகி நம்மை உந்தும் ஒருவித தருணம் அல்லது அகத்துடிப்புத் தான் கவிதை.

கவிதை சொல்லிகள் தமக்கான அனுபவங்களை, ரூபங்களை, ரூபங்களை, நுட்பங்களையெல்லாம் சொல் எனும் மந்திரக்கோலில் வெளிப்படுத்தும் ஒருவித உயிர்ப் பண்பு கவிதை.

ஜே.பிரோஸ்கான் என்கிற ரூடவ்ழத்துக் கவி சொல்லி கவிதைப் பனுவல்கள் பலவற்றால் தன் கவிதை மனத்தை முன்னிறுத்துபவர். இவ்வாண்டு பேனா பதிப்பாக முனைப்புறும் இருடி லார்க் பாஸ்கரனின் முகப்போடு துளிர்த்திருக்கிறது. கவிதை சொல்லியெனும் கஞ்சாக்காரன் குறித்து ஏ. நஸ்புள்ளா அணிந்துரைக்கிறார்.

ஆத்மார்த்தி பின்னட்டையில் பிரோஸ்கானை எழுதுகிறார். தன்னை ஒரு மாற்று எடுத்துரைப்பு வடிவமாக இருடி சொல்கிறது. கஞ்சாக்காரன் முதல் நைந்து போன டைரிக் குறிப்பு வரையான ஐம்பத்து நான்கு கவிதைப் பிரதிகளின் கூட்டு இருடி.

ஜே.பிரோஸ்கான் ஏலவே இதுவும் பிந்திய இரவின் கனவு தான் (2009), தீ குளிக்கும் ஆண் மரம் (2012), ஒரு சென்றி மீற்றர் சிரிப்பு பத்து செகன்ட் கோபம் (2013), என் எல்லா நரம்புகளிலும் (2013), ஆண்வேசி (2014), காக்கைச் சிறகினிலே நந்தலாலா (2015), மீன்கள் செத்த நதி (2015), என் முதுகுப் புறம் ஒரு மரங்கொத்தி (2016), நாக்கு (2017), எனத் தொடர்ந்த பனுவல்களைத் தந்தவர்.

இந்தப் பனுவல்களிலிருந்து இருடி மாற்று எடுத்துரைப்பு முறையை முன்னெடுப்பதாக உரைக்கும் ஜே.பிரோஸ்கான் எத்தகைய மாற்றுகளை முன்னெடுக்கிறாரென்பது நீண்ட வாசிப்புக்கும் ஆய்வுக்குமுரியது.

கவிதைகளில் ஒருவித எளிமை படர்ந்திருப்பினும் அதனூடாக ஆழமான உட்பொருளை முன்னிறுத்தும் முயல்வில் பிரோஸ்கான் ஈடுபட்டுள்ளமை தெளிவாகிறது. கவிதை சாதாரண நிகழ்வுகளின் வாழ்வனுபவ வெளியை நம்முன் விரிக்கிறது.

இந்த சாதாரணத்தின் மீது கவிதையை நிறுத்துவது கவிஞனின் பணி அல்லது கவிதா ஏக்கம் அல்லது கவிதைச் சாமர்த்தியம். இத்தகைய சாமர்த்தியம் வாய்க்கப் பெற்ற ஒரு கவிதா பயணி இவர்.

கவிஞன் எளிதில் பட்டாம்பூச்சியாகி விடுவான். பறப்பு அவனுக்குள் ஒரு உணர்வோட்டம்தான். இந்தக் கவிஞனும் பட்டாம்பூச்சியாகிப் பறக்கிறேன்'' என்கிறான். தனது தனிமை அரூபத்தின் தருணங்களை

ரூபப்படுத்துவதூடாக அவர் வரையும் காட்சி எங்கள் மனசில் அல்லது இதனோடொத்த இன்னுமொரு அனுபவத்தில் ஒட்டிக் கொள்கிறது. இந்த அனுபவ ஓட்டம் கவிதையின் இடப்பெயர்ச்சி அல்லது உணர்வுத் தொற்றலுமாகி நிற்கிறது.

பட்டாம்பூச்சி தனிமையைக் கொல்லும் அல்லது தனிமை எனும் உள்ளிலிருந்து வெளிமையை கட்டமைக்கும் படிமமாகிவிடுகிறது. ரூசூ39;எனது உடல்களை ஓவியங்களாய் தனது வட்டங்களைக் கொண்டு நிறம் தீட்டி விட்டு என்னைப் பற்றி சரி சொல்கிறது பட்டாம்பூச்சி'' என்றுணர்கிற கவியின் தனிமை வெளி அரூபமாகிறது.

பெரோஸ்கான் கவிதைகளுக்கும் இத்தகைய உணர்மாற்றச் சுருளொன்று இயங்கிக் கொண்டிருக்கிறது இருடியாக.

சிலபோது இருள்மையாக சிலபோது ஒளிர்மையாக.

இருடி ஒரு புது வரவு.




மூன்றாம் மாடியிலிருந்து மெல்ல நகர்ந்த கேமரா மேடையின் மத்தியில் இருட்டியிருந்த பகுதியை நோக்கி பல் பெருகிய கணம்தான் ஒளிப்பொட்டொன்று அவ்விடம் வீழ்ந்தது.

பெருத்த மௌனம் உடைத்தொரு குரல் ஒளிப்பொட்டில் தெறித்தது. குரல் சொன்னது "மௌனம்" என்பது தோல்வியல்ல. மௌனம் என்பது இழந்தவற்றின் கூட்டுக்குரல்'' அந்த உறுதியான குரலைத் தொடர்ந்து

நிறையக் குரல்கள் சிதறினளு ஒலியும் எதிரொலியுமாக மேடை அதிர்ந்தது.

அவையில் மௌனமுடைந்து கரகோஷம் கேட்டது. மூன்றாம் மத்திய பகுதியில் 19 வது வரியில் 48 வது இருக்கையில் நிமிர்ந்து அமர்ந்தாள் ஒருத்தி.

ஒளிப் பொட்டு வீழ்ந்த மேடை மத்தியில் சலனப்படமாக அசைவு. பின்னணிக் குரலில் உயர்ந்தெழும் தெளிந்த கவிதையின் தடம் "விலங்கிட்ட மௌனம் உடையும்... உடைந்த சொற்களின் ஆழச் சூடெழுந்து சுடும்.

சுட்டு வீழ்த்தும்... சொற்களில் உஷ்ணம் வழியும்...'' கவிதையின் நிகழ் வடிவமாய் ஒருருவின் அசைவு; அசையாமை; விழியெறிந்த பார்வைளு கண்களில் மிதக்கும் கனவு.

நிமிர்ந்து 48ஆம் இருக்கையிலிருந்தெழும் பெரு மூச்சுக்காற்று மேடை நோக்கிப் பாய்வதாக அவள் உணர்கிறாள்.

சபை விழிகள் மொய்த்த மேடை. ஒற்றைக்குரலாய்க் கவிதை நிகழ்த்து கலையாய் காட்சி விரிவு. மீண்டும் கேமரா மத்தியில் சூம் கொள்கிறது.

உதிர்ந்த சருகிலைகள் காய்ந்த மரங்களின் வரிசையிடை சரசரக்கும் காலடியோசை ஒற்றைக்காலடி....

இரட்டைக் காலடி.... இன்னும் காலடிகள். காலடியோசையின் தாளத்துக்கேற்ப கவிதையின் நயம் அதன் குரலின் கம்பீரம் அழகு அல்லது கனவு நுரைத்த சொற்கள் அவளது தனித்த காதல் புகுந்து நெஞ்சைப் பிழிந்தன.

அவளுக்கு கவிதை ஏன் பிடித்தது. அவள் எப்போது கவிதையானாள். அவள் எவ்வாறு கவிதையின் அர்த்தத்தை மொழிபெயர்க்கத் தொடங்கினாள். அவளுக்கு இப்போது கவிதை முகமானது.

மேடையில் காட்சி மாறியது. ஒளி வர்ணங்காட்டுவதும், இடம் மாறுவதுமாய் இருந்தது. ஒலிக்கலவை உணர்வெல்லைகளை அசைத்த வண்ணம் காட்சியீர்ப்புக் கொடுத்தது. கவிதை இடையிடை ஓய்வும்; பின் மெலிதாய்ப் பேசுவதும் , உரத்தரற்றுவதும், பிறகு நிதானித்து நிற்பதுமாக நகர்ந்தது.

48ஆம் இலக்க இருக்கையில் இன்னும் உஷ்ணம் குறையாத மூச்சுக்காற்று. இதுவும் அந்த நிகழ்த்துகைக்கு ஏற்றதான இசைவும் அசைவும்தான்.

காலடிகளின் காட்சி மாறியது. எனினும் அவற்றின் வேர் நீண்ட காலடிகளை அவள் மீட்டத் தொடங்கினாள். புராதன புத்தகத்தின் பழைய பக்கம்; , பல பல பக்கங்களில்; புரண்டன ஒவ்வொன்றின் பின்னாலான கதைகள்,

கதைக்குள் கதைகள், விரி கதைகள் , உபகதைகள், கதையற்ற கதைகள். 2020 ஆம் பக்கத்தில் முகக்கவசம் அணிந்துகொண்டு

காட்சி. இப்போது மேடையில் முகக்கவசங்கள் கோடிகோடியாய் அலையத் தொடங்கின.

கவசங்களுக்குப் பின்னாலிருக்கும் கதையை அவளும் கதைய் தையாய் எழுதி முடித்திருந்தாள். அதே சாயல் கதை இப்போது மேடையில். "எவராலானது, எவராலானது , எவற்றாலானது , ஏன்'' பின்னணியில் கேட்கும

கவிதையின் குரலைத் தொடர்ந்து, கோரஸ் பதில்கள், பதில்களை, நிகழ்த்தும் மேடைக்காட்சி, ஒளி மங்கி

பெருக்கும் காட்சியை உயிரூட்டியது. அவள் அணிந்திருந்த முகக்கவசத்துக்குள் பெருமூச்சு சூடானது. புராதன புத்தகத்தின் 2021, 2022 ஆம் பக்கங்களில் ஆதிக் கட்டுரையொன்றின் தொடர்ச்சியை

வாசிக்கிறாள் அவள். அவள் வாசிக்க... வாசிக்க... மேடையில் அதனையொத்த நாடகம் அரங்கேறுகிறது.


நடிப்பாளர்கள் எல்லோரும் ஏலவே தெரிந்தவர்களென்பதால், அவளுக்கு நெருக்கமாகிறது மேடை. ஆச்சரியம் என்னவென்றால் நாடகத்துக்கு நாடகம் நடிப்பாளர்கள் தமது பாத்திரங்களை வேஷங்களை அழகாக லாவண்யமாக மாற்றிக் கொள்வதுதான்.அவள்கண்ணிமைப்பதற்குள் காட்சி மாற்றம். அதற்கேற்ப நிறவொளிகளின் ஒத்திசைவு. சற்றைக்குள் கறுப்பு நிறத்தின் பரவல், பின்னணியில் உணர்வுக்கு குரல்கள், பசியின் குரல்கள்; , தூரத்தே ஒத்திசைவான பல குரல்கள்.

அவை சாதாரண மக்களின் உணர்வுக் குரல்கள். ஆனால் காட்சிகளுக்கும் குரலுக்கும் சம்மந்தம் இல்லாதது போல் மேடைக்காட்சி அமைகிறது.

அவள் கடிகாரத்தைப் பார்க்கிறாள். நடுநிசியின் பொழுது. நிசிகளை மேடை அகற்றுமா என்பது அவளுக் குத் தெரியாது.

அவளுக்குத் தெரிந்ததெல்லாம் அவள் எழுதிக்கொண்டிருக்கும் "முறி'' நெடு நாவலை எப்படி முடிப்பதென்றுதான்.

**பொன்மீரா**



## முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

இந்தியாவில் முதன்முதலாக பொதுத்தேர்தல் 1952ஆம் ஆண்டு நடைபெற்றது. தந்தை பெரியார் தனது இயக்கத்தை சமூக இயக்கமாகவே நடத்தியது போல அறிஞர் அண்ணாவும் திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) தேர்தலில் பங்கேற்காது என்று அறிவித்தார்.

ஆனால் திராவிட முன்னேற்ற கழகத்தின் கொள்கைகளுக்கு ஆதரவளித்த அரசியல் கட்சிகளுக்கு அண்ணா ஆதரவு தெரிவித்தார். அத்தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் ஆதரித்த 45 வேட்பாளர்களில் 40 பேர் வெற்றி பெற்றனர். சென்னை மாகாணத்தை பொறுத்தவரை காங்கிரஸ் சார்பில் இராஜாஜி முதலமைச்சராக பொறுப்பேற்றார்.

1953இல் அறிஞர் அண்ணா மூன்று நிகழ்ச்சிகளை கருத்தில் கொண்டு மும்முனை போராட்டம் ஒன்றை தொடங்கினார்.

இந்தியாவில் மொழி வாரியாக மாநிலம் பிரிக்கப்பட்ட போது சித்தூர் மாவட்டத்தை ஏன் சென்னை மாகாணத்துடன் இணைக்கவில்லை என்ற காரணத்தை வைத்து தி.மு.க.வினர் போராட்டம் நடத்தினர். அப்போது இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு தி.மு.க.வினரை முட்டாள்கள் என்று கூறினார்.

தி.மு.க. வினரின் மும்முனை போராட்டங்களாக முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு தி.மு.க. வினரை முட்டாள்கள் என்று கூறியதை கண்டிக்கும் கண்டன போராட்டம். திருச்சி மாவட்டத்திலுள்ள "கல்லக்குடி" எனும் ஊர் "டால்மியாபுரம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மும்முனை போராட்டத்தில் இரண்டாவதாக "டால்மியாபுரம்" என்னும் பெயரை மீண்டும் "கல்லக்குடி" என்று மாற்றுவதற்கான போராட்டம்.

சென்னை மாகாண முதலமைச்சர் ராஜாஜி "குலக்கல்வித் திட்டம்" என்னும் கல்வி முறையை அமுல்படுத்தினார். இத் திட்டத்தின்படி பல வகுப்பினர் பாடசாலைகளில் கல்வி கற்றுக்கொண்டு மீதி நேரத்தில் குலத்தொழிலில் ஈடுபட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

மும்முனை போராட்டத்தில் மூன்றாவதாக ராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தல் ஆகிய மூன்று காரணங்களுக்காகவும் மும்முனை போராட்டம் நடாத்தியபோது தி.மு.க.வினர் பலர் கைது செய்யப்பட்டனர். அண்ணாவுக்கு மூன்று மாதங்கள் சிறைத்தண்டனையும் கிடைத்தது.

பெரியார் நீதிக் கட்சியை திராவிடர் கழகமாக மாற்றிய பின் தேர்தலில் பங்கேற்காமல் வெறும் சமூக சீர்திருத்த இயக்கமாகவே நடத்தி வந்தார். ஆனால் தி.மு.க.வினர் தேர்தலில் பங்கேற்பதா? வேண்டாமா என ஆராய்ந்தனர். 1952 இல் தி.மு.க.வினர் பொதுத் தேர்தலில் பங்கேற்கவில்லை. ஆனால் தி.மு.க.வினர் ஆதரித்த பல அரசியல் கட்சி வேட்பாளர்கள் அத் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

1956 இல் தி.மு.க.வின் மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றது. மே மாதம் 17 முதல் 20 ஆம் திகதி வரை நான்கு நாட்கள் மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது. மாநாட்டில் 1957இல் நடைபெறவிருக்கும் தேர்தலில் தி.மு.க. பங்கேற்க வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்விக்கு மக்களே பதில் சொல்லட்டும் என்று அண்ணா கருத்து தெரிவித்தார்.

மேடையில் சிவப்பு கறுப்பு நிறத்திலான இரண்டு பெட்டிகள் கொண்டுவரப்பட்டன.

தி.மு.க. தேர்தலில் போட்டியிடலாம் என்று விருப்பம் கொண்டவர்கள் தங்களுடைய வாக்குகளை சிவப்பு பெட்டியில் போடவேண்டும். போட்டியிடத் தேவையில்லை என்று கருதுபவர்கள் தங்கள் வாக்குகளை கறுப்புப் பெட்டியில் போட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

கடும்மழை காரணமாக பலர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அறுபதாயிரம் பேர் வரையில் வாக்களித்தனர் . ஐம்பத்து ஏழாயிரம் பேர் தி.மு.க. தேர்தலில் பங்கேற்க வேண்டும் என்று வாக்களித்திருந்தனர். மூவாயிரம் பேர் மட்டுமே தேர்தலில் பங்கேற்க வேண்டாம். என்று வாக்களித்திருந்தனர். எனவே தி. மு. க தேர்தலில் போட்டியிடுவது உறுதியானது.

பெரியாரின் திராவிடர் கழகத்தின் முக்கிய கொள்கைளில் ஒன்று கடவுள் மறுப்பு. பெரியார் மேடைகளில் நாத்திகம் பற்றியே பேசி வந்தார். ஆனால் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய பிறகு அண்ணா நாத்திக கருத்துக்களை பேசுவதில்லை.



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்






# "சொர்க்கம்" வந்து 52 ஆண்டுகள்

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 142வது இமாலய வெற்றிப்படமான "சொர்க்கம்" திரைக்கு வந்து இவ்வாண்டுடன் 52 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

சொர்க்கம், 1970 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும்.

டி. ஆர். ராமண்ணா இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் சிவாஜி கே.ஆர். விஜயா, முத்துராமன்,நாகேஷ், பாலாஜி,சச்சு, எம்.ஆர். ஆர்.வாசு, ராஜ்ஸ்ரீ, விஜயநிர்மலா, ராஜவேல், மனோகர், "என்னத்தே" கன்னையா. கரிக்கோல் ராஜ், கல்லாப்பெட்டி சிங்காரம் ,வீரராகவன் மற்றும் பலரும் நடித்திருந்தனர்.

எம். எஸ். விஸ்வநாதன் இசையமைத்த இப்படத்தின் பாடல்களை கவிஞர் கண்ணதாசனும் ஆலங்குடி சோமுவும் எழுதியுள்ளார்கள். இப்படத்தில் கவிஞர் ஆலங்குடி சோமுவின் வரிகளில் இடம்பெற்ற "பொன்மகள் வந்தாள்" பாடல் காட்சிகள் அந்நாளில் பல லட்சங்கள் செலவு செய்து எடுக்கப்பட்டதாகும். தற்போதைய பெறுமதி பல கோடிகள். நீல நிறத்தில் பல வண்ண ரத்தினக்கற்கள் பதித்த கோர்ட் சூட்டுடன் சிவாஜி கணேசன் கவர்ச்சி நடிகை விஜயநிர்மலாவுடன் ஆடும் நடனம்.

இப்படத்தில் பிரமாதமாக அமைந்தது. இக்காட்சியில் ஆரம்பத்தில் போலி ரூபாய் நோட்டுகளை உருவாக்கி படமாக்கினார் இயக்குனர் டி.ஆர். ராமண்ணா.

தணிக்கைக் குழு இதை ஏற்க மறுக்கவே, மீண்டும் அசல் ரூபாய் நேட்டுக்களைக் கொண்டு படப்பிடிப்பு செய்யப்பட்டது. "ஒரு முத்தாரத்தில் முப்பது முத்து"பாடல் காட்சியில் சிவாஜி கணேசன் வெள்ளை நிற கோர்ட், கறுப்பு நிற பேண்ட்டுடன் குடி போதையில் கையில் சிகரட்டுடன் கண்கள்.

சிவக்க ஸ்டைலாக அமர்ந்தும், நடந்தும் வரும் கட்டம் படு அட்டகாசம். அக்காட்சியில் "நீல வானம் மெல்ல மெல்ல சிவந்து போனதே" என கே ஆர். விஜயா கண்ணதாசனின் பொருத்தமான வரிகளுக்கு ஏற்ப நடித்த கட்டம் அருமை . "சொர்க்கம்" படத்தில் இடம்பெற்ற "ஜூலியஸ் ஸீஸர்" ஓரங்க நாடகம் அபாரம். புரூட்டஸ் ஸீஸரை கத்தியால் குத்திய பின் ஸீஸராக துடிதுடித்து இறக்கும் காட்சியில் சிவாஜி கணேசன் நடித்த நடிப்பு அபாரம். எம்.ஆர்.ஆர்.வாசுவும், சச்சுவும் புரியும் நகைச்சுவை அருமை. "எங்கிருந்தோ வந்தாள்" படமும், "சொர்க்கம்" படமும் ஒரு தினத்தன்று வெளியாகி இரண்டு படங்களும் நூறு நாட்கள் கடந்து ஓடி சாதனை படைத்து வெள்ளிவிழா கண்டன.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...**
கம்பளை



நாட்டின் பல பாகங்களிலும் 'ஆசிரியர் தின'' நிகழ்வுகளை ஒழுங்குசெய்து ஆசிரியர்களை பாராட்டி விருதுகள் வழங்கி கௌரவித்துவரும் இவ்வேளை முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகளையும் பாராட்டி அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று அண்மையில் அக்கரைபற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அக்கரைபற்று முன்பள்ளி பாடசாலைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று பிரதேச செயலகமும் வலயக்கல்வி பணிமனையும் ஒருங்கிணைந்து 'எப்டா' என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்த இந்நிகழ்வில் அக்கரைபற்று பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றி ஆறு(106) முன்பள்ளி ஆசிரியைகள் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்ஷேய்க் ரீ.எம். மொகமட் அன்சார் மற்றும் அதிதிகளோடு சேர்ந்து எடுத்துக் கொண்ட படம்.

(படம்: எம்.எ.பகுர்டீன் அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவின் ஏற்பாட்டில் மாகாண பாடசாலைகள் கலந்து கொண்ட மீலாதுன் நபி விழா கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகாவித்தியலயத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு கஸீதா பாடினர். (இவர்கள் சீனன்கோட்டை ஹழரா ஜெமாஅத்தின் ஆசிகுர் ரஸூல் கஸீதா குழுவினர் என்பது குறிப்பிடத்தக்கது.)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.